பூ மலரின் பாதையில்...

என்.சீதாலெட்சுமி



பூ மலரின் பாதையில்...

என்.சீதாலெட்சுமி

என்.சீதாலெட்சுமி

பதிப்புரை

அருணோதயம் ஆரம்பம் முதல் ஏராளமான இலக்கிய நூல்கள், வரலாற்று நூல்கள், பொது அறிவு நூல்கள், சட்ட நூல்கள், சிறுவர் நூல்கள் என வெளியிட்டிருக்கிறோம்.

ஆனால் இன்று அற்புதமான நாவல்களை படிப்பவர்கள் வாழ்க்கையிலே பண்பும் அன்பும் கடமை உணர்வும் சேர வாழக்கூடிய பக்குவத்தை உண்டாக்கக் கூடிய கருத்துக்களை மனதிலே பதிய வைத்து வாழ்வை செம்மைப் படுத்தக் கூடிய நாவல்களை தொடர்ந்து வெளியிட்டு மக்களின் - குறிப்பாக பெண்களின் மகத்தான பாராட்டுக்களை வரவேற்பைப் பெற்று வருகிறோம்.

இது தொடர இது போன்ற நல்ல நாவல்கள் மேலும் மேலும் வெளிவர ஆதரவு தந்து உதவுங்கள்.

இந்த வகையிலே இந்த நாவல் மிகவும் குறிப்பிடத் தக்கதாக, சிறப்பானதாக இருக்கும்.

படித்து மகிழுங்கள். கருத்தை எழுதுங்கள்.

- அருணோதயம் அருணன்

பூ மலரின் பாதையில்



1

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம்
மாமலரால் நோக்குண்டாம்
மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார்திருமேனி தும்பிக்கையான்பாதம்
தப்பாமல் சார்வார்தமக்கு"

முற்று முதல் கடவுளான விநாயகப் பெருமானைத் துதி பாடி, தனது காலை வேளை பூஜையைத் தொடங்கிய சிகப்பி ஆச்சிக்கு, இரண்டாவது வரியிலேயே தொண்டை மிதமாய் கமறிவிட்டது.

''ஆத்தா... உமையா...'' என அவரது குரல் காற்றோடு கலக்கும் முன்னரே.

''இந்தாங்க அயித்த... வெண்ணீ'' என ஒரு குவளைத் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்தார் அவரது மருமகள் உமையாள் ஆச்சி. (திருமணம் முடிந்த பெண்களை ''ஆச்சி'' என்றழைப்பது செட்டிநாட்டுப் பழக்கம். கூடுதலாய், ஆச்சி என்றால் சகோதரி என்ற அர்த்தமும் உண்டு)

அந்த அன்புச் செய்கையில் மனம் குளிர்ந்து, கண்களில் மெச்சுதலைக் கொண்டு வந்த சிகப்பி ஆச்சி, மௌனமாய் ஓர் பாராட்டு விழா எடுத்து முடித்தார்.

மெல்லிய புன்னகையுடன் நகர்ந்து சென்ற மருமகளின் மேல் ஓர் கண்ணும், தன் முன்னே வீற்றிருந்த பிள்ளையார்பட்டி பிள்ளையாரப்பனின் திருமுகத்தில் ஓர் கண்ணும் வைத்து ''சமத்தி... வாவரசியா நூறு வருஷம் வாழணும்'' என மகனுக்கும் மருமகளுக்கும் சேர்த்து ஒரே பிரார்த்தனையை முன் வைத்தார், சாந்தி கல்யாணம் செய்து கொண்டு வாழ்வரசியாய் வாழும் சிகப்பி ஆச்சி! (வாவரசி என்றால் சுமங்கலி)

செய்யும் செயல்களில் அசாத்திய நேர்த்தியை எதிர் பார்க்கும் இவரது வாயிலிருந்து மிக அரிதாய் வெளி வரும் ''சமத்தி'' என்ற அடைமொழியை முதலில் பெற்ற பெருமையும் உமையாளையே சாரும்!

அந்தப் பெருமையைத் தான் தாய்க்கு இட்டுத் தந்த பெருமை - நமது கதாநாயகி ''சிகப்பி என்ற சௌந்தர்யா''வை சென்றடையும் என்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்று!

''சமத்தி''க்கும், ''சமத்தே இல்லாத சிகப்பி''க்கும் என்ன சம்பந்தம் என்று சின்ன சிகப்பியின் தம்பியப்பன் சக்தி வைரவனைப் போல் கேள்வி கேட்பவர்களுக்கு.. இதோ அதற்கான விளக்கம்.

''சமத்தி... என்ன பெத்தா? தலைச்சம் பொண்ணு பெத்தா...'' என்ற செட்டிநாட்டு சொலவடைக்கு ஏற்ப, உமையாளின் வயிற்றில் முதலில் உதித்த முத்து - பெண் முத்தாய் போய் அவரைச் சமத்தி ஆக்கியிருந்தது!!

மருமகளை வாயார ''சமத்தி'' என்று புகழும் சிகப்பி ஆச்சி - ''வடிகட்டின மக்காய்'' இருக்கும் கதை உங்களுக்குத் தெரியுமா?

பின்னே, உமையாளைப் போல் அவருக்குத் தலைச்சம் பெண்ணென்ன? பெண்ணே இல்லையே? அவர்களது பரந்து விரிந்த சொத்திற்கு ஒரே வாரிசாய்ப் போன சொக்கலிங்கத்தை மட்டும் மகனாய் கொண்ட அவரை ''மக்கென்று'' தானே கூற வேண்டும்?!

ஆனால், மக்கிற்கு மகனாகவும் சமத்திக்கு கணவனாகவும் இருக்கும் சொக்கலிங்கம் செட்டியார் இரு பக்கத்திலும் சாயாமல், கெத்தாக சம நிலையில் நிற்பதால் தானோ என்னவோ, தனது வங்கி பணியில் பேரும் புகழும் சூடியிருக்கிறார்!

உலகளவில் இயங்கும் ஓர் வங்கி ஒன்றில், பெரிய பதவி ஒன்றில் இருந்தாலும், தாய்க்கு மட்டுமல்லாது தனது தந்தைக்கும் அடங்கிப் போகும் அவரது குணத்திற்கு மெருகூட்டுவது போல் உமையாளின் குணமும் அதை ஒத்தே அமைந்துவிட, வாழ்க்கை தெளிந்த நீரோடையாய் சென்றது!

அதற்காக, பொறுமையும் மென்மையும் மேன்மையும் தன்மையும் வாய்ந்த இத்தம்பதியருக்குப் பிறந்த இரு சிங்கக் குட்டிகளும் இவர்களைப் போலவே இருப்பர் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம்!

இதோ துள்ளி வரும் ஆண் சிங்கத்தைத் தொடர்ந்து (தூக்கி) வரும் பெண் சிங்கத்தைப் பார்த்தே, அவர்களின் குணங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

''டேய் சேறு.. என்னோட பெண் டிரைவ்வைத் தாடா எருமை...'' என அன்பு மொழி பேசியவாறே தூக்கினாள் சிகப்பி.

''சக்தி'' என்ற தன் பெயரை ''சகதி'' என்று கூப்பிட்டாலே கண்களில் அனலைக் கொண்டு வரும் வைரவன், அதை மேலும் கொலை செய்து ''சேறு'' என்றழைக்கும் தமக்கையைப் பார்த்து,

''சோப்பு டப்பா.. சோப்பு டப்பா!'' எனக் குதூகலித்து மகிழ்ந்தவனின் குரலில் இருந்தது அப்பட்டமான கடுப்பு!!

என்னை சோப்பு டப்பா கூப்பிடாதேடா... எருமை.. கருப்பு எருமை... எருமை மாடு.. கருப்பு எருமைமாடு...'' என அவனிடம் ஆரம்பித்து, தன் தந்தை வழி பாட்டனாரிடம் பேசத் துவங்கினாள், சிகப்பி!

''ஐயாயாயாயா... உங்களுக்கு உங்க பொண்டாட்டி மேல வண்டி.. வண்டியா லவ் இருக்க வேண்டியது தான். அதுக்காக, எதுக்குய்யா அவங்க பேரை எனக்கு வச்சீங்க?''

''இருந்தாலும், அவ்வளவுவுவுவு கருப்பா இருக்க உங்க வீட்டு ஆச்சியோட பேரை.. தங்கச் சிலை மாதிரி மின்னுற... எனக்கு!? எம்புட்டு பெரிய தப்பு!''

சிகப்பி பேசிக் கொண்டே போக, ''ஏய் ஓக.. தங்கச் சிலை.. வைர மலைன்னு உளறிட்டு திரியாதடி... எவனாவது அங்கங்க கிள்ளி எடுத்திட்டுப் போயிட்டப் போறான்!'' - இப்போது இடைப் புகுந்தது அவளை விட இரண்டு வயதே இளையவனான வைரவனே தான்!

''போடா... என்னைப் பார்த்துப் பொறாமை படறதே உனக்கு ஃபுல் டைம் ஜாப் ஆகிடுச்சு!'' என அவனை ஓரசில் விட்டு, மேட்டருக்கு வந்தாள் சிகப்பி.

''ம்ம்ம். பாயின்டுக்கு வருவோம்! ஏன் சிகப்பி? எதற்கு சிகப்பி? எப்படி சிகப்பி? எனக்கு விளக்கம் சொல்லுங்கள் திருவாளர் பெரிய வைரவன் செட்டியார் அவர்களே!'' என அவளது அம்பு, தந்தையைப் பெற்றவரையே குறி வைத்திருந்தது.

இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், இந்த அன்பு/அம்பு தாக்குதல் இன்றென்று இல்லாமல் என்றென்றும் தொடரும் ஓர் யுத்தம் என்பதே!

அதற்குப் பதிலாய், ''சொன்னத் தினையா மினைப் போய் தானே ஆத்தா... ''சிவப்பி''ன்னு பேரு வச்சேன். உள்ளது போல இருக்கவுகளே (கொஞ்சம் கமாரா இருப்பவர்களே) ''சிவப்பி''ன்னு பேர் வச்சிருக்கையில... உனக்கென்னத்தா, வைரத்தில் இழைக்க வேண்டிய பொன்னு மேனி!'' என சிலாகித்தார், அறுபத்தியெட்டு வயதான வைரவன் செட்டியார்.

இந்த உரையாடலைப் பார்த்து, சிகப்பிக்கு அவளது பெயரைப் பிடிக்காதோ என்று எண்ணிவிட வேண்டாம்! அந்தப் பெயர் மேல் அவள் கொண்ட பிடித்தத்தினால் தான் தினம்-தினம் இந்த உரையாடல் நடைபெறுகிறது!

அதற்காக, பொறுமையும் மென்மையும் மேன்மையும் தன்மையும் வாய்ந்த இத்தம்பதியருக்குப் பிறந்த இரு சிங்கக் குட்டிகளும் இவர்களைப் போலவே இருப்பர் என்று யாரும் மனப்பால் குடிக்க வேண்டாம்!

இதோ துள்ளி வரும் ஆண் சிங்கத்தைத் தொடர்ந்து (துரத்தி) வரும் பெண் சிங்கத்தைப் பார்த்தே, அவர்களின் குணங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

''டேய் சேறு.. என்னோட பெண் டிரைவ்வைத் தாடா எருமை...'' என அன்பு மொழி பேசியவாறே துரத்தினாள் சிகப்பி.

''சக்தி'' என்ற தன் பெயரை ''சகதி'' என்று கூப்பிட் டாலே கண்களில் அனலைக் கொண்டு வரும் வைரவன், அதை மேலும் கொலை செய்து ''சேறு'' என்றழைக்கும் தமக்கையைப் பார்த்து,

''சோப்பு டப்பா.. சோப்பு டப்பா!'' எனக் குதூகலித்து மகிழ்ந்தவனின் குரலில் இருந்தது அப்பட்டமான கடுப்பு!!

என்னை சோப்பு டப்பா கூப்பிடாதேடா... எருமை.. கருப்பு எருமை... எருமை மாடு.. கருப்பு எருமைமாடு...'' என அவனிடம் ஆரம்பித்து, தன் தந்தை வழி பாட்ட னாரிடம் பேசத் துவங்கினாள், சிகப்பி!

''ஐயாயாயாயா... உங்களுக்கு உங்க பொண்டாட்டி மேல வண்டி.. வண்டியா லவ் இருக்க வேண்டியது தான். அதுக் காக, எதுக்குய்யா அவங்க பேரை எனக்கு வச்சீங்க?''

''இருந்தாலும், அவ்வளவுவுவுவுவு கருப்பா இருக்க உங்க வீட்டு ஆச்சியோட பேரை.. தங்கச் சிலை மாதிரி மின்னுற... எனக்கு!? எம்புட்டு பெரிய தப்பு!''

சிகப்பி பேசிக் கொண்டே போக, ''ஹே லூசு.. தங்கச் சிலை.. வைர மலைன்னு உளறிட்டு திரியாதடி... எவ னாவது அங்கங்க கிள்ளி எடுத்திட்டுப் போய்டப் போறான்!'' - இப்போது இடைப் புகுந்தது அவளை விட இரண்டு வயதே இளையவனான வைரவனே தான்!

''போடா... என்னைப் பார்த்துப் பொறாமை படறதே உனக்கு ஃபுல் டைம் ஜாப் ஆகிடுச்சு!'' என அவனை லூசில் விட்டு, மேட்டருக்கு வந்தாள் சிகப்பி.

''ஹ்ம்ம். பாயிண்டுக்கு வருவோம்! ஏன் சிகப்பி? எதற்கு சிகப்பி? எப்படி சிகப்பி? எனக்கு விளக்கம் சொல் லுங்கள் திருவாளர். பெரிய வைரவன் செட்டியார் அவர் களே!'' என அவளது அம்பு, தந்தையைப் பெற்றவரையே குறி வைத்திருந்தது.

இதில் குறிப்பிட வேண்டியது என்னவென்றால், இந்த அன்பு/அம்பு தாக்குதல் இன்றென்று இல்லாமல் என்றென்றும் தொடரும் ஓர் யுத்தம் என்பதே!

அதற்குப் பதிலாய், ''சொர்ணச் சிலையா மின்னப் போய் தானே ஆத்தா... ''சிவப்பி''ன்னு பேரு வச்சேன். உள்ளது போல இருக்கவுகளே (கொஞ்சம் சுமாரா இருப்பவர்களே) ''சிவப்பி''ன்னு பேர் வச்சிருக்கையில... உனக்கென்னத்தா, வைரத்தில் இழைக்க வேண்டிய பொன்னு மேனி!'' என சிலாகித்தார், அறுபத்தியெட்டு வயதான வைரவன் செட்டியார்.

இந்த உரையாடலைப் பார்த்து, சிகப்பிக்கு அவளது பெயரைப் பிடிக்காதோ என்று எண்ணிவிட வேண்டாம்! அந்தப் பெயர் மேல் அவள் கொண்ட பிடித்தத்தினால் தான் தினம்-தினம் இந்த உரையாடல் நடைபெறுகிறது!

அதற்கு உதாரணமாய் ''அப்படிங்கிறீங்க!'' எனத் தன் பாட்டனாரைப் பார்த்துக் கேட்டவள், ஒரு முறைக்கு இரு முறையாக தன்னையே ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துக் கொண்டு.

''அப்படியே தான்!'' என்ற முடிவுக்கு அவளாகவே வந்து சேர்ந்த போது, அவளது ஐயாவின் கன்னத்தில் அவளது உதடுகள் பச்சென ஓர் முத்தத்தை வைத்து முடித்திருந்தது.

குலம் தழைக்கவும் பெரியவர்களின் பெயர்கள் மறையாதிருக்கவும் வீட்டுப் பெரியவர்களின் பெயர் களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டியிருந்த சொக்க லிங்கம் - மாமனார் மாமியார் பெயரைச் சொல்லிப் பிள்ளைகளை அழைக்க முடியாத சங்கடத்தை மனைவி அடையக் கூடாது என்ற எண்ணத்தில், வீட்டில் அழைக் கும் பெயர்களாக ''சௌந்தர்யா'' / ''சக்தி'' என்ற பெயர் களைத் தேர்ந்தெடுத்து இருந்தார்.

அதுவுமே, அவர் வழிபடும் ''சௌந்தரநாயகி அம் பாளின்'' பெயரைத் தொட்டுத் தான்!

மனைவியின் சங்கடத்தை உணர்ந்து மாற்று ஏற் பாடை மாற்றி பெயர்களைத் தேர்ந்தெடுத்த போதும், அவற்றை பள்ளி மற்றும் கல்லூரியில் கொடுக்கவோ, பதிவேட்டில் பதிவு செய்யவோ அவருக்குத் துளியும் விருப்பம் இருக்கவில்லை.

அப்படிப்பட்டவரையே, சிகப்பியின் ''பெயர் கோளாறு'' புரட்டிப்போட ''காலேஜ்-ல வேணும்னா... உன் பெயரை ''சௌந்தர்யா''ன்னு மாத்திக் கொடுக்கலாமா சிவப்பி!'' எனக் கேட்டே விட்டார் அவர்.

ஆனால், மகளோ ''ம்ஹூம்! எனக்கு ''சிகப்பி''ங்கிற பேர் ரொம்பப் பிடிச்சிருக்கு. வித்தியாசமா.. எல் லோரையும் ஒரு தடவை திரும்பிப் பார்க்க வைக்கிற மாதிரி... இது என்னோட அடையாளம்பா... சும்மா ''கமலா.. விமலா... சாந்தி இப்படி ஆயிரத்தில் ஒருத்தியா இல்லாம, நான் தனியா தெரியணும்! பேர்-ல மட்டு மில்ல... எல்லாத்திலும்!'' எனத் தெளிவாய் பேசி மறுத்து விட்டாள்.

அப்புறம் தான், தந்தைக்குப் புரிந்தது - அவள் செய் யும் ''பெயர் கோளாறு'' நாடகம், அவளது ஐயா - அப்பத்தாவை மகிழ்வித்து, அவர்கள் பேசும் பெருமை யில் அவள் குளிர் காய்வதற்கென்று!

அதனால், அவரும் சரி அவரது மனதின் ஸ்கேன் காப்பியான உமையாளும் சரி ஒரு சிரிப்புடன் நிறுத்திக் கொள்ள, பொறியியல் முதலாமாண்டு படித்துக் கொண்டிருக்கும் சக்தி தான் துள்ளி எழுவான்.

அதுவும், சிகப்பி என்ற தமக்கையின் அழகான பெயரை ''சிவப்பி...'', ''சோப்பி...'', ''சோப்பு..'', ''சோப்பு டப்பா..'', ''சோப்பிக்கண்ணு...'', ''சொப்பு சாமான்'' என விதவிதமாய் கிண்டல் செய்வதில் அவனுக்கு நிகர் அவனே தான்!

வயதான தன் மாமனாரின் தோளைக் கட்டிக் கொண்டு தொங்கிய மகளை விலக்கி நிறுத்திய உமையாள், ''அம்மான், பலகாரம் சூடா இருக்குது. சாப்பிட வாங்க!'' என்றார் மென் குரலில். (அம்மான் என்றால் மாமா)

''சரியாத்தா!'' என அவர் முன்னே நகர, அவரைத் தள்ளிக் கொண்டு உமையாளின் உபயங்கள் இரண்டும் சாப்பாட்டு மேஜைக்குப் பறந்திருந்தனர்.

அதற்கு உதாரணமாய் "அப்படிங்கிறீங்க!" எனத் தன் பட்டாளத்தைப் பார்த்துக் கேட்டவள், ஒரு முறைக்கு இரு முறையாக தன்னையே ஒரு சுற்றுச் சுற்றிப் பார்த்துக் கொண்டு,

"அப்படியே தான்!" என்ற முடிவுக்கு அவளாகவே வந்து சேர்ந்த போது, அவளது நுரையீரல் கனலத்தில் அவளது உதடுகள் பச்சென ஓர் முத்தத்தை வைத்து முடித்திருந்தது.

குலம் தழைக்கவும் பெரியவர்களின் பெயர்கள் மறையாதிருக்கவும் வீட்டுப் பெரியவர்களின் பெயர் களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டியிருந்த சொக்க லிங்கம் - மாலைச் மாயியர் பெயரைச் சொல்லிப் பிள்ளைகளை அழைக்க முடியாத சங்கடத்தை மனைவி அடையக் கூடாது என்ற எண்ணத்தில், வீட்டில் அழைக் கும் பெயர்களாக "சொந்தாயா" / "சக்தி" என்ற பெயர் களைத் தேர்ந்தெடுத்து இருந்தார்.

அதுவுமே, அவர் வழிபடும் "சொந்தாநாயகி அம் பாளின்" பெயரைத் தொட்டுத் தான்!

மனைவியின் சங்கடத்தை உணர்ந்து மாற்று ஏற் பாடை மாற்றி பெயர்களைத் தேர்ந்தெடுத்த போதும், அவற்றை பள்ளி மற்றும் கல்லூரியில் கொடுக்கவோ, பதிவேட்டில் பதிவு செய்யவோ அவருக்குத் துளியும் விருப்பம் இருக்கவில்லை.

அப்படிப்பட்டவரையே, சிவப்பியின் "பெயர் கோளாறு" புராணம் "காலேஜ்-ல வேணும்னா... உன் பேரை "சொந்தாயா"னு மாத்திக் கொடுக்கலாமா சிவப்பி?" எனக் கேட்டே விட்டார் அவர்.

ஆனால், மகளோ "அதுமில்ல எனக்கு "சிவப்பி"ங்கிற பேர் சொல்லப் பிடிச்சிருக்கு. விதியேன்னா... என் கோளாறும் ஒரு நாடகம் திரும்பிப் பார்க்க வைக்கிற மாதிரி... இது என்னோட அடையாளம்ப்பா... கண்ண "காலம் வினை... சந்தி இப்படி ஆயிரத்தில் ஒருத்தியா இல்லாம, நான் தனியா தெரியணும்! பேர்-ல மட்டு மில்ல... எல்லாத்திலும்!" எனத் தெளிவாய் பேசி முடித்து விட்டாள்.

அப்போதும் தான், தந்தைக்குப் புரிந்தது - அவள் செய் யும் "பெயர் கோளாறு" நாடகம், அவளது நுரை அப்பத்தாவை மகிழ்வித்து, அவர்கள் பேசும் பெருமை யில் அவள் குளிர் காய்வதற்கென்று!

அதனால், அவரும் சரி அவரது மனதின் மகேஸ்வ கப்பியான உமையாளும் சரி ஒரு சிரிப்புடன் நிறுத்தி கொள்ள, பொறியியல் முதலாமாண்டு படித்துக் கொண்டிருக்கும் சக்தி தான் துள்ளி எழுவாள்.

அதுவும், சிவப்பி என்ற தமக்கையின் அழகான பெயரை "சிவப்பி..", "சோப்பி..", "சோப்பு", "சோப்பு டப்பா", "சோப்புக்கண்ணு..", "சோப்பு சாமான்" என விதவிதமாய் கிண்டல் செய்வதில் அவளுக்கு நிகர் அவளே தான்!

வயதான தன் மாமனாரின் தோளைக் கட்டிக் கொண்டு தொங்கிய மகளை விலக்கி நிறுத்திய உமையாள், "அம்மாள், பலகாரம் சூடா இருக்குது சாப்பிட வாங்க" என்றார் மென் குரலில். (அம்மாள் என்றால் மாமி)

"சரியாத்தா!" என அவர் முன்னே நகர, அவரைத் தள்ளிக் கொண்டு உமையாளின் உபயங்கள் இரண்டும் சாப்பாட்டு மேஜைக்குப் பறந்திருந்தன.

ஜெட் வேகத்தில் அவர்கள் பறப்பதற்கு, உமையாளின் கைமணத்தைக் கைகாட்ட முடியாமல், இரண்டு சிங்கங்களும் அப்பத்தாவின் வெள்ளிக் கிண்ணிக்கு அல்பமாய் அடித்துக் கொண்டிருந்தனர்.

இவர்கள் அடித்துக் கொண்டு நாறுவதைப் பார்த்து, வைரவன் செட்டியார் இரண்டு வெள்ளித் தட்டுகள் செய்து வைத்தபோதும், அவர்கள் இருவருக்கும் அப்பத்தாவின் வெள்ளிக் கிண்ணியின் மீது ஓர் அபரீத மோகம்!

உருண்டு திரண்டு அரை கிலோ வெள்ளியில், தூக்கி அடித்தால் எதிரியின் மண்டையை இரண்டாய் பிளக்கும் அளவு கனமான அந்த வெள்ளிக் கிண்ணியில் அப்பத்தாள் சாப்பிடும் அழகைப் பார்த்து மயங்கித் தான் போயிருந்தனர் அவர்கள்!

''அடிச்சுக்காம... உட்காருங்க! சௌந்து.. நேத்து ராத்திரி நீ அதில சாப்பிட்டே இல்லை. இன்னைக்கு தம்பி சாப்பிடட்டும்'' என ஒருவாறாக பஞ்சாயத்து முடிய, தம்பியைக் கண்ணால் எரித்துவிட்டு, ஐயாவின் பக்கம் போய் அமர்ந்தாள் சிகப்பி.

அந்த நேரம், பூஜை முடிந்து உணவறைக்கு வந்து சேர்ந்த சிகப்பி ஆச்சி, ''ஏன்த்தா சோப்பி, பேரன்கிட்ட... ஏதோ கேட்டுக்கிட்டு இருந்தியே? அத வாங்கிட்டியா? அப்புறம் பள்ளிக்கூடத்துக்குப் போவையில், அவனை வாயோயாம வசவு பாடுவ'' எனப் பேத்திக்குமில்லாமல், பேரனுக்குமில்லாமல் நடுவே புகுந்து சாமர்த்தியமாய் கோல் அடித்தார்!

அவரடித்த பந்தை லாவகமாய் தன் பக்கம் திருப்பிய சிகப்பி ''டேய், என்னோட பென் டிரைவ்வைக் கொடுடா.

என்னோட ப்ராஜெக்ட் முழுசும் அதில தான்டா இருக்கு... அது இல்லைன்னா, ப்ராஜெக்ட் வைவா-ல முட்டை மார்க் தான்டா போடுவாங்க.. தாடா.. டேய்.. டேய் தம்பி! ப்ளீஸ்'' எனத் தன் பங்கிற்கு, அதை மெல்லிதாய் எட்டிவிட்டாள்.

நகை வடிவமைப்பில் மூன்றாமாண்டு படிக்கும் மாணவிக்கு, தன் திறமையை முழுதாய் வெளிக் கொணரும் இறுதி ப்ராஜெக்ட் எவ்வளவு முக்கியம் என்று தெரியாதா? அதனால் தான் இந்தக் கொஞ்சல்... கெஞ்சல்... காலில் விழுதல் எல்லாம்.

''கெஞ்சினால் மிஞ்சுவேன்... மிஞ்சினாலும் மிஞ்சுவேன்'' எனக் கங்கணம் கட்டிக் கொண்டிருந்த சக்தியோ - ''ப்ராஜெக்ட்-டைக் காட்டினாலும் முட்டை மார்க் தான்... காட்டலைன்னாலும் முட்டை மார்க் தான். எதுக்கு வீணா... காட்டிட்டு! ஃப்ரீயா விடுக்கா!'' என்று கூறிச் சிரிக்க, அங்கே மீண்டும் ஓர் யுத்தம் உதயமானது.

இப்போது அதற்குப் பஞ்சாயத்து செய்த பெருமை சொக்கலிங்கத்திற்குப் போய் சேர, அவரது வார்த்தையில் பிள்ளைகள் இருவரும் கப்-சிப் என்று அடங்கி, உணவே குறியென்று தட்டிற்குள் தலையை விட்டிருந்தனர்.

எப்போதுமே அப்படித் தான்!

பிள்ளைகள் இருவருமே ஐயா-அப்பத்தாவின் செல்லங்கள். கூடுதலாய், உமையாளின் கண்டிப்பை விட அவரது பாசமே பிரதானமாய் அமைந்துவிட, அவர்களை இழுத்துப் பிடிப்பது சொக்கலிங்கம் மட்டுமே!

வாய் வார்த்தையாய் இல்லாமல் கண்களில் அவர் காட்டும் கண்டிப்பிலேயே அடங்கிவிடும் பிள்ளை

கணக்கு. அவர் சிம்ம சொப்பனம் என்றெல்லாம் சொல்லிவிட முடியாது! பயம் கலந்த மரியாதை அவ் வளவே!

மூன்றாண்டுகள் முன்பு வரை துபாயில் (அதாவது கண்காணாத தொலைவில் இருந்தபோதும்) இருந்த போதும் தந்தையிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தாலே எழுந்து நின்றும் பேசும் அளவிற்கு சொக்க லிங்கத்தின் மரியாதை இருந்தமையால், வெளிநாட்டில் தங்களது இளமைக் காலத்தின் பெரும்பகுதியைக் கழித்திருந்தபோதும் பிள்ளைகள் இருவரும் தந்தையின் கண் அசைவில் அடங்கும் பூனைக் குட்டிகளாகவே இருந்தனர்!

இப்போதும், தந்தையின் ''போதும் பேச்சு! சாப் பிட்டு.. காலேஜ் கிளம்பிற வழியைப் பாருங்க. சிவப்பி... இன்னைக்கு எனக்குப் பெருங்குடி பக்கம் ஒரு வேலை யிருக்கு. அதனால், நானே உன்னை காலேஜ்-ல விட்டு டுறேன்'' என்ற வார்த்தைகளில் அதன் பின்னர் அமை தியே நிலவியது.

தேவையற்று பத்து நிமிடமாய் நிலவிய அமை தியைப் பார்த்து பொறாமை கொண்டது போல், வீட்டின் அழைப்பு மணி அடிக்க, உள்ளே வந்தார் அவர்களது பங்காளி வீட்டுச் செட்டியார் நாச்சியப்பன்.

தங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்திராத மனிதனை ''வாங்கண்ணே! ரொம்ப நாள் ஆச்சே... பார்த்து! சாப் பிடுங்க!'' என மனதார வரவேற்று, வீட்டரசியாய் உமை யாள் உபசரிக்க, அங்கே வரவேற்பு என்ற போர்வையில் பெரியவர்களிடையே சிறு சலசலப்பு எழுந்து அடங் கியது.

ஒரு சில வருடங்கள் கழித்துப் பார்க்கும் ஊர் காரர் களிடையே நடக்கும் பேச்சு வார்த்தை எழுந்து அடங்க, அதன் நடுவே தட்டிலேயே கவனமாய் இருந்த பிள்ளை களின் முதுகில் மெல்ல தட்டி, ''வாங்கன்னு கேளுங்க!'' என முணுமுணுத்தார் உமையாள்.

ஏற்கனவே, தன் பிள்ளைகளுக்கு செட்டிய வீட்டுப் பழக்கவழக்கங்களில் பல தெரியவில்லை என்பது சொக்கலிங்கத்தின் வருத்தங்களுள் ஒன்று என்பதை அறிந்திருந்த உமையாளுக்கு ''வீட்டுக்கு வந்தவங்களை வாயார ''வாங்க''ன்னு கேட்கக் கூடத் தெரியலையே? துபாய்-ல இருந்ததில் அவங்களை நாம ஒழுங்கா வளர்க்கவில்லையோ?'' என்ற கவலையும் சேர்த்து கணவன் படக் கூடாதே என்ற முன்னெச்சரிக்கை.

தாயாரின் எச்சரிக்கை பார்வையைச் சந்தித்ததும் தான், சூடாய் தட்டில் விழுந்த இட்லியில் மட்டுமே குறியாய் இருந்தது நினைவு வந்து ''வாங்க பெரியப்பா. நல்லா இருக்கீங்களா?'' என முதலில் சுதாரித்தாள் சிகப்பி.

''நல்லா இருக்கேன், ஆத்தா!'' என்ற நாச்சியப்பனின் பார்வை அவள் மீது ஒரு நிமிடத்திற்கும் மேலாய் படிந்து மீளவே, அவரை விநோதமாய் பார்த்திருந்தாள் இளை யவள்.

''என்ன விஷயம்? சாப்பிட்ட வேகத்தில், கன்னத்தில் ஏதாவது ஒட்டிட்டு இருக்கோ?'' எனத் தன் கன்னத்தை அவள் தட்டிவிட்ட சமயம்.

''தங்கச்சிக்கு என்னண்ணே வயசாகுது?'' என்றார் அவர்.

''லூசாப்பாநீ? எங்கப்பாவுக்குத் தான் தங்கச்சியே இல்லையே... அப்புறம் எங்க அவங்களுக்கு வயசா

குறது? ஒருவேளை... வீடு மாறி வந்துட்டாரோ? இருந்தாலும் எதுக்கு தங்கச்சியைக் கேட்கிறார்? ஒருவேளை, இவர் கல்யாணம் செய்துக்கவா? எப்பவும் பெண் பிள்ளைகள் அத்தையோட ஜாடையில தான் இருப்பாங்கன்னு சொல்வாங்களே? அதனால தான்... நம்மையே குறுகுறுன்னு பார்த்தாரோ? ஹய்யோ... தங்கச்சி இல்லைன்னு தெரிஞ்சா... இவருக்கு செம ஏமாற்றமா இருக்குமில்ல'' எனத் தன் கற்பனையை மின்னல் வேகத்தில் தட்டிவிட்ட சிகப்பிக்கு, அவர் தன்னைத் தான் ''தங்கச்சி'' என்கிறார் என்பது புரியவில்லை!!



2

சிகப்பியின் கற்பனைக் குதிரைக்கு மேலும் ஃபுல் கொடுத்து, உற்சாகமாய் ஓட வைப்பது போல் ''இப்பத்தாண்ணே, இருபத்தொன்னு தொடங்கியிருக்கு!'' என்றார் சொக்கலிங்கம்.

''ஆஹா, நமக்குத் தெரியாம அப்பாக்கு இருபத்தொரு வயசில தங்கச்சியா? பெரிய வைரவன் செட்டிடிடிடி...'' எனக் கடிபட்டன சிகப்பியின் பற்கள்.

இதனூடே, அப்பத்தாளின் மீது பரிதாபம் வேறு!

கூடவே, ''நான் இருக்கேன், அப்பத்தா'' என்ற சூளுரையும் சேர்ந்து கொள்ள, சிகப்பியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

கோபம், எரிச்சல், பரிதாபம் ஆகியவற்றின் ஊடே ''இந்த அப்பத்தா என்ன... ஈன்னு இளிச்சுட்டு அவரோட வாயைப் பார்த்திட்டு இருக்காங்க? கையில் போட்டிருக்க வளையலை எடுத்து அடிச்சாலே, அவரோட நெத்தில நாலு இன்ச்-க்கு தழும்பு வந்திரும்... சரியான பத்தினி தெய்வம்'' என அப்பத்தாவின் ஆர்வமான முகத்தைப் பார்த்து, கண்ட கண்ட வன்முறைகளும் நினைவிற்கு வந்து சேர்ந்தன.

அதற்குள், ''இருபத்தொன்னா? இப்ப பேச ஆரம்பிச்சா தானே அண்ணே, ஒரு வருஷத்துக்குள்ள முடியும். என்ன நான் சொல்றது?'' என்றார் வந்தவர்.

''பேசறதா? யார்கிட்ட? இவங்க எதையுமே முழுசா பேச மாட்டாங்களா? சொல்றதை சொல்லிட்டு...'' என்ன நான் சொல்றது''ன்னு லூசு மாதிரி கேட்கிறாரே? ஒரு வேளை... இவர் லூசு தானோ??''

''ம்ஹூம்... இருக்காது! அப்படியிருந்தா... ஐயா அவரைக் கம்பாலேயே அடிச்சுத் துரத்தி இருப்பாங்களே!''

''ஆனாலும் என்ன கெத்தா உட்கார்ந்திருக்கார்... இந்த பெரிய வைரவன்! எங்க அப்பத்தா... வெள்ளை மனசு கொண்ட கறுப்பு தங்கம்! அவங்களை விட்டுட்டு... டூ பாட்... டூ பாட்...''

''ஹய்யோ... தெய்வமே! இவரும் அப்பாவை ''அண்ணன்''ங்கிறார், அப்பாவும் இவரை ''அண்ணன்''ங்கிறாங்க. அம்மாவும் இவரை ''அண்ணன்''ங்கிறாங்க. ஏன் இந்தச் சின்னப் புள்ளையை இந்தப் பாடு படுத்துறீங்க?'' என சிகப்பிக்குக் கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.

தனது சந்தேகத்தை யாராவது தீர்த்து வைக்கமாட்டார்களா? என்ற நப்பாசையுடன் சுற்று முற்றும் பார்த்த வளுக்குத் தனது இளவலே, சரியான ஆள் என்று பட்டான்.

அப்பத்தாவின் கிண்ணியிலிருக்கும் இட்லியை மட்டுமல்லாது அதிலிருக்கும் வெள்ளியையும் உண்டு விடுபவள் போல், அதிலேயே குறியாக இருந்தவனின் புறம் சாய்ந்து ''டேய்... சேறு!'' என அவள் அழைத்தது தான் தாமதம்.

''வேணாம்... நா எதில சாப்பிடுறேன்னு பார்த்துப் பேசு!'' என கொலைகாரக் கூட்டத்தின் பெரிய பாஸ் ரேஞ்சில் அவன் மிரட்ட, சிகப்பிக்கு எரிச்சலாய் வந்தது.

''எவ்வளவு முக்கியமான டவுட் கேட்கிறேன்.... இவன் என்னடா என்றால்... சரியான சக்தி.. எருமை மாடு.. கறுப்பு எருமை மாடு'' என அவனை வழக்கம் போல் வைத போதும், சூழ்நிலையின் அவசரம் புரிந்து தணிந்தாள்.

''சாரிடா, சக்தி!'' என உடனே தணிந்த தமக்கையை விநோதமாய் பார்த்த வைரவனுக்கு உள்ளுக்குள் உதறல்.

இவ்வளவு தூரம் தழைகிறாள் என்றால் உள்குத்து ஏதும் வைத்திருக்கிறாளோ? இவளை நம்ப முடியாது... அசந்த நேரத்தில், என் தட்டை எடுத்து என்னையே அடித்துவிடுவாள்! ச்சை... அவளைப் பத்தித் தெரிந்திருந்தும், இந்தக் கிண்ணியை ஞாபகப்படுத்தின என் மூளையை மீயூசியத்தில் தான் வைக்கணும் - என உதறல் கோட்டை கட்டிய மனதைக் கட்டுப்படுத்திக் கொண்டு ''என்ன'' என்றான் மெல்ல.

''இல்ல... இப்ப வந்திருக்காரே பெரியப்பா... அவர் நமக்கு பெரியப்பாவா? மாமாவா?'' என்றாள், தன் ஆப்பிள் சைஸ் கண்களை திராட்சை அளவிற்குச் சுருக்க முயன்று.

அவளது கேள்வியில் எழுந்த குழப்பத்தை, முக பாவனையில் தெரிந்த மாற்றம் புறம் தள்ளிவிட, சக்திக்கு சிரிப்பு தானாய் வந்து சேர்ந்தது!

''ஏன்டா சிரிக்கிறே? எருமை மாடு... க...'' என்ற வாக்கியத்தை அவள் முடிக்கும் முன்னர்,

''இல்ல, யானை முட்டை மாதிரி இருக்க உன் கண்ணை.. கோழி முட்டை மாதிரி நீ சுருக்கிறதைப் பார்த்தா... எனக்கு ஒரே சிப்பு சிப்பா வருது'' என்ற வம்பை ஆரம்பித்தான்.

அந்த வம்பிற்கு எதிர் வம்பளக்கும் அளவிற்குச் செல்லாமல், சிகப்பியின் மூளை ''யானை முட்டை'' என்பதிலேயே வேலை நிறுத்தம் செய்யத் துவங்கியது.

''யானை... முட்டையா போடும்? குட்டி தானே போடும்? +2-ல காமர்ஸ் எடுத்துப் படிச்சதில், நமக்கு சயின்ஸ் சுத்தமா மறந்து போச்சோ? அய்யயோ!'' எனத் தன் மூளையின் செயல்திறனை சோதனைக்கு உள்ளாக்கிக் கொண்டிருந்தவள், அதை விட்டு நடப்புக்கு வந்தாள்.

''சொல்லுடா சக்தி! அம்மாவும் அவரை ''அண்ணா''ன்னு கூப்பிடுறாங்க. அப்பாவும் அவரை ''அண்ணா''ன்னு கூப்பிடுறாங்க. எப்படிடா அவரு... ரெண்டு பேருக்கும் அண்ணனாக முடியும்!'' எனச் சிறுபிள்ளையின் ஆர்வத்துடனும், பிடிவாதத்துடனும் வந்து விழுந்தது சிகப்பியின் கேள்வி.

''அது தெரிஞ்சா... நா ஏன் உனக்கு ''தம்பி''யா இருக்கேன்? ''அண்ணனா'' மாறியிருக்க மாட்டேன்?!'' எனத் தனக்கும் தெரியவில்லை என்பதை மிக மிக தெளிவாவே கூறினான் தம்பி!

''சீ... தூ... ஒடிப்போ!'' என அவனைக் கண்களால் எரித்துவிட்டு நிமிர்ந்தவளுக்கு, நிஜமாகவே மண்டையை வெடித்தது.

அதை உணராமல் ''ஆமாண்ணே! ஆத்தாவும் இதையே தான் சொல்லிட்டு இருக்காக... பார்க்க ஆரம்பிக்க வேண்டியது தான்'' என்றார் சொக்கலிங்கம்.

அவர் பேசியது பத்தாது என்று ''முதல்ல, நம்ம சீனு கிட்ட காட்டி... வியாழ நோக்கம் வந்திடுச்சான்னு விசாரிப்போம். அப்புறம்.. மேக்கொண்டு பேசலாம்'' என்றார் பெரிய வைரவன்.

''வியாழ நோக்கமா? அப்படின்னா? ஹூ இஸ் தட் சீனு?! ஹூ இஸ் தட் வியாழன்!????'' - இப்போது சிகப்பிக்கு மண்டைக்குள் சனி நூறு மீட்டர் வேகத்தில் ஓடினார்.

டென்னிஸ் வீரர்கள் போல் மூன்று ஆண்களும் சிகப்பியின் வாழ்க்கையை லாவகமாய் விளையாடிக் கொண்டிருக்க, சிகப்பியோ டென்னிஸைக் கண்டு களிக்கும் ரசிகையைப் போல் கண்களை அதிவேகமாய் சுழற்றிக் கொண்டிருந்தாள்.

அவளது கவனத்தைக் கலைக்கும் வண்ணம், முதுகில் ஓர் அடி விழுந்து ''வெறுந்தட்டைப் பார்த்திட்டு... என்ன பராக்கு! எழுந்திரு... போய் கையைக் கழுவு'' என்ற அறிவுரையும் உமையாளிடமிருந்து உதயமானது.

தாயின் சொல்லை அச்சரம் பிசகாமல் செய்து முடித்து, சிகப்பி வெளியே வந்த போது ''பெரியப்பாவும் அல்லாது மாமாவும் அல்லாத பெரியவர்'' கிளம்பிச் சென்றிருக்க, சிகப்பியின் குறி பெரிய வைரவன் மீது திரும்பியது.

ஆனால், தந்தையைக் காக்கும் தலைமகனென ''சிகப்பி! சீக்கிரம் வா...'' என மகளை விரட்டி, வீட்டை விட்டு அழைத்துச் சென்றார், சொக்கலிங்கம்.

கல்லூரிக்குக் கிளம்பும் முன்னர், ஐயா - அப்பத்தாவிடம் தாஜா பண்ணி, அன்றைய பாக்கெட் மணிக்கு சொகுசான சில்லரை சேர்த்துவிடும் பேத்தி, இன்று பேரிக்காய் திருடிய பேக்கு மாதிரி முழித்துக் கொண்டே வெளியே செல்ல, பெரியவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

அதைக் கவனித்துவிட்ட மருமகளோ, மாமியாரைக் காக்கும் மலைமகளென ''ஐயா - அப்பத்தாட்ட போயிட்டு வாரேன்னு சொல்லிக்க'' என்றார் மகளிடம்.

''சிங்கப்பூருக்கா போறேன்?'' எனச் சலித்துக் கொள்ளும் அளவிற்கு மகளின் மனதில் கேள்விகள் இருக்கின்றன என்று உணராத தாயாரின் பார்வை, மிக தீர்க்கமாய் விழவே ''வரேன் அப்பத்தா. வரேன் ஐயா'' என்றதோடு வெளியேறினாள் சின்னவள்.

''சின்னவ முகமே சரியில்லையே! கல்யாணம் பேசுறது பிடிக்கலையோ?'' என சிகப்பி ஆச்சியும்,

''இன்னும் குருத்து கனிஞ்சு காயே விடல.. கொஞ்சம் பொறுத்துப் பார்ப்போம்!'' என வைரவன் செட்டியாரும் பேசியது காதில் விழாது போய், சிகப்பி தன் தெளி

வில்லாத முகத்துடன் தந்தையின் ஹயுண்டாய் 120-யின் முன்புறம் ஏறினாள்.

சென்னை - பள்ளிக்கரணை அருகிலிருக்கும் அவர் களது வீட்டிலிருந்து கிளம்பி, ஐந்து நிமிடத் தூரத்தி லிருக்கும் காமாட்சி மருத்துவமனை வரையிலும் மக ளிடமிருந்து பேச்சு சத்தம் ஏதும் வராமல் போகவே, ''என் னடா? பயங்கர யோசனையில இருக்க மாதிரி இருக்கு'' என்றார் சொக்கலிங்கம், வாஞ்சையாக.

பெண்ணின் திருமணம் பற்றிய பேச்செழுந்ததில் மகளை வெகு சீக்கிரம் பிரியப் போகிறோம் என்ற வருத் தமும், கூடவே என் மகளுக்குத் திருமண வயதாகி விட்டது என்ற பூரிப்பும் சொக்கலிங்கத்தின் மனதை ஒருங்கே நிரப்பியிருந்தன.

தந்தையின் கனிந்த குரலில் ஒரு கணம் தடுமாறி யவள் ''அது... அது.. அப்பா!'' என்றாள் தயக்கத்துடன்.

''என்னடா? அப்பாக்கிட்ட ஏதாவது கேட்கணுமா? கேளம்மா...'' - ''இப்போதைக்குத் திருமணம் வேண் டாம்'' என எல்லா பெண்களும் சொல்வதைப் போலவே மகளும் கூறப் போகிறாள் என்ற எதிர்பார்ப்பு அவருக்கு!

''அது... இப்போ வந்தாரே...''

''ஹ்ம்ம்... ''வந்தாங்களே''ன்னு சொல்லு.''

''ம்ம்.. சரி.. இப்போ வந்தாங்களே.. அந்த பெரி யப்பா... அவங்க பெரியப்பாவா? இல்ல மாமாவா?'' - இப்போது சிரிப்பது தந்தையின் முறையானது.

''என்னப்பா இது? நான் என்ன தப்பா கேட்டுட்டேன்.. சக்தியும் சிரிச்சான்.. நீங்களும் சிரிக்கிறீங்க?! ப்ச்!''

''அவங்க ஆயா வீட்டு ஆளுங்க இல்ல. நம்ம பக்கத்து பங்காளி! அதனால, பெரியப்பா தான்!'' என்றார் சொக்க லிங்கம் விளக்கமாக.

''ஹ்ம்ம்... ம்ஹூம்.. ஹ்ம்ம்... ம்ஹூம்...'' என ஆமோ திப்பும், மறுப்புமாய் மாறி மாறி வந்த மகளின் பதிலில்,

''நம்ம வீட்டு பங்காளி எல்லோரையும்... அம்மா ''அண்ணன்''ன்னு தான் சிகப்பி கூப்பிடுவா. சரியா? இதுக்குப் போய்.. எதுக்கு இப்படி குழப்பிக்கிறே?'' என் றார் சொக்கலிங்கம் தெளிவாக.

''ம்ம். சரி! ஆனா, எனக்கு அது மட்டும் டவுட் இல்லை... நிறைய இருக்கு...'' என மகள் விரித்தக் கை, தந்தையின் கண்ணைக் குத்திவிட, அங்கே சற்று நேரம் அமளி துமளியாக இருந்தது.

''அடேங்கப்பா! உன்னோட நிறைய டவுட்-க்கு என் கிட்டே பதில் இருக்குமான்னு தெரியாது... ஆனாலும் கேளு'' - சிறு இடைவேளையின் பின்னர் மகளைத் தூண்டினார் தந்தை.

''ஹ்ம்ம். முதல் கேள்வி... அவரு.. சாரி சாரி அவங்க யாரையோ தங்கச்சி தங்கச்சின்னு சொல்லிட்டு இருந் தாங்களே? யாரு அது? உங்களுக்குத் தங்கச்சி இருக்காங் களா? எங்ககிட்ட சொல்லவே இல்லையே!'' - சிகப்பி யின் முகத்தில் அற்புதமான ஓர் கேள்வியைக் கேட்டு விட்டத் திருப்தி!

ஆனால், அவளது தகப்பனாரோ வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு, கண்ணில் நீர் வரச் சிரித்தார்.

சிகப்பியின் முகத்திலிருந்த திருப்தி முழுதாய் மறைந்து, மெல்லியதாய் கோபம் எட்டிப் பார்த்து.

முடிவில் சிறு துளியென கண்ணீர் வந்துவிடவே, தந்தைக்கு உருகிவிட்டது.

''என்னடாம்மா! சின்னக் குழந்தை மாதிரி...'' என அவர் மகளின் கன்னத்தில் தட்ட.

''எதுக்கு சிரிக்கிறீங்க? எனக்குத் தெரியலைன்னு தானே கேட்டேன்... தெரிஞ்சுட்டே சும்மா சின்னப் பிள்ளை மாதிரி கேட்டேன்னு நினைச்சீங்களா? என்னைப் பார்த்தா லூசு மாதிரியா இருக்கு? நான் என்ன கேட்டாலும் சிரிக்கிறீங்க... ப்ச் போங்கப்பா...'' எனக் கோபம் கொண்டாள் பெண்.

அவளுக்குப் புரியாத ஒன்றை எப்பாடு பட்டாலும் தெரிந்து கொண்டு விடும் வேகம் கொண்ட பெண்ணின் மனதை உணர்ந்தவர் போல், சிரிப்பை நிறுத்தி விட்டு மகளின் கைகளைத் தன் கைகளுக்கு எடுத்துக் கொண்டு பேச ஆரம்பித்தார் சொக்கலிங்கம்.

அவரது அந்தச் செய்கை - சிகப்பியை முழுவதுமாக திகைப்பில் ஆழ்த்தியது எனலாம்!

வேலைக்கும்/கல்லூரிக்கும் நேரமாகிவிட்ட இந்தக் காலை நேரத்தில், வண்டியை அவர் ஓரமாக நிறுத்தியதே சிகப்பிக்கு வியப்பு என்கையில், எப்போதும் வார்த்தைகளை மட்டுமல்லாது பாசத்தையும் அளந்து பேசும் தந்தை தன் கையை எடுத்துக் கொண்டு வாஞ்சையாக பேசத் துவங்குவது பெரும் திகைப்பை உண்டாக்கியது!

அதை மேலும் கூட்டுவது போல், ''அவங்க... உன்னைத் தான் தங்கச்சின்னு சொன்னாங்க. நம்மதில, பொண்ணுங்களுக்கு கல்யாண வயசு வந்துட்டாலே...

வீட்டாளுங்க தவிர மத்த எல்லாரும் ''தங்கச்சி''ன்னு தான் சொல்வாங்க'' என்றார் சொக்கலிங்கம்.

அவரது அந்த பதிலில், சிகப்பியின் கேள்விகள் அனைத்திற்கும் விடை கிடைத்துவிட, ''கல்யாணமா?'' என்றதிலே உறைந்து நின்றாள், சின்ன சிகப்பி சௌந்தர்யா!!

மகளின் நிலை கண்டு ''என்ன சிகப்பி.. அவ்வளவு அதிர்ச்சி? உனக்கும் இருபத்தொரு வயசாகிடுச்சே... கல்யாணத்துக்குப் பார்க்கணுமே!'' என சாதாரணமாய் பேசியவர், சட்டென உடல் விறைத்து,

''யாரையாவது லவ் பண்றியா?'' என்றார் இறுகிய குரலில்.

அந்தக் குரலே, ''காதல்'' என்ற ஒன்றை என்னால் ஒத்துக் கொள்ளவே முடியாது. அப்படியேதும் செய்திருந்தால், அதை மறந்துவிடு'' என்ற எச்சரிக்கையைத் தாங்கி இருந்தது.



3

''கல்யாணமா?'' என்பதிலேயே உறைந்து போயிருந்த சௌந்தர்யா ''காதலா?'' என்றதும் ஸ்தம்பித்து விட்டாள்.

அந்த நேரம் பார்த்து, ராகேஷ் கொடுத்த ''ஐ லவ் யு'' கார்டு, பிரபாகரன் கொடுத்த ஒற்றை சிகப்பு ரோஜா,

மணிவண்ணன் கொடுத்த ஸ்ட்ராபெர்ரி கேக், பிரவீன் கொடுத்த சாக்லேட் ப்ரௌனி - காதலில் ஆரம்பித்து கபளீகரம் செய்தது வரை மூளைக்குள் அணிவகுத்து நின்றன.

ஆனால், தந்தையின் கடுகடுத்த முகம் மூளைக்குள் மட்டுமல்லாது அதன் செல்கள் அனைத்திலுள்ளும் புகுந்து பேயாட்டம் ஆடியதில் சட்டென சதாரித்தாள் மகள்.

''ம்ஹூம். நான் லவ் பண்ற அளவுக்கு.. எங்க காலேஜ்-ல யாருமே இல்லைப்பா'' என அப்போதும் சிலிர்த்தது ஆச்சியின் பெருமிதக் குரல்!

அதில், சொக்கலிங்கத்தின் இறுக்கம் சென்ன வெயிலில் வைத்த ஐஸாக உருகி ஓடிவிடவே, அங்கே சிரிப்பு அலையென படர்ந்தது.

அப்போதும், ''இனிமேலும் யாரும் வரவேண்டாம், சிவப்பி!'' என்றார் சொக்கலிங்கம் கண்டிப்பாக.

''ஏம்பா? லவ் பண்றது என்னமோ... ஒனமா வீட்டுக் குள்ள நுழையற பயங்கரவாதச் செயல் மாதிரி பேசுறீங்க?'' என்றபோது சிகப்பியின் குரலில் ஓர் ஆராய்தலே தொக்கி நின்றது.

''நீ.. யாரையும் லவ் பண்றியா சிவப்பி?'' - மீண்டும் கடுமையாய் வெளியேறின சொக்கலிங்கத்தின் வார்த்தைகள்.

''அட இல்லைப்பா. உங்க ஆஸ்தான தெய்வம் - சொந்தநாயகி அம்பாள் மேல சத்தியமா இல்லை. போதுமா?''

''ஆனா, எனக்கு சீரன் சொல்லுங்க... உங்களுக்கு என் ''லவ்'' பிடிக்கலை.''

எதையுமே ''ஏன்?'', ''எதற்கு?'', ''எப்படி?'' என்று ஆராயும் மகளின் குணம் தலை தூக்கியிருப்பதை அவர் உணரும் முன்னரே,

''நேத்தா... உங்களுக்கு யாராவது தங்கச்சி இருந்து... அவங்க நம்ம வீட்டு டிரைவரை லவ் பண்ணி... உங்களுக்கும் ஐயாவுக்கு பெரிய அவமானத்தை ஏற்படுத்திட்டுப் போயிட்டாங்களா?''

''இப்போ... அவங்க பெரிய பணக்காரங்களை ஆகியிருப்பாங்களோ? ஒரு வேளை... அவங்களுக்கு ஒரே ஒரு பையன் இருக்காளோ? அவனைத் தான் நான் லவ் பண்ணனுமா?'' - எனத் தனது மற்றொரு குணமான - கற்பனைக் குதிரைக்கு சீவுல் கொடுப்பதை அழகுக்குக் கொண்டு வந்தாள் சிவப்பி.

இப்போது, சொக்கலிங்கத்தால் சிரிப்பை சற்றும் அடக்கவே முடியவில்லை.

''டி, சிவப்பி! எங்க இருந்து... எங்க போய்ட்டே ஆனாலும்... அநியாயத்திற்கு கற்பனை ஆகாதுடா!'' என்றவர்,

''நீ நினைக்கிற மாதிரி எதுவுமே இல்லை... நம்ம வீட்டு மகாலெட்சுமியை செட்டிய வீட்டுப் பக்கம் கல்யாணம் செய்து கொடுக்காம, வேற இடத்தில கல்யாணம் செய்துக் கொடுத்தா... அது அல்வாவை கொலைவம் இல்லையம்மா!''

''மகாலெட்சுமியா? நம்ம வீட்டில யாருக்குமே அந்தப் பேர் இல்லையே? ஒருவேளை... 'சிவப்பி'ன்னு அப்பத்தா பேரை வச்ச மாதிரி... ''மகாலெட்சுமி''ன்னு யாராவது பாட்டி பேரை வச்சுட்டாங்களா? ஆனாலும்,

இத்தனை பேர் வைக்கக் கூடாதுப்பா. இப்பப் பாருங்க... எனக்கே என் பேர் என்னன்னு தெரியாம போச்சு.''

பெரிதாய் சலித்துக் கொண்ட பெண்ணின் தலையில் தட்டி ''நான் பொத்தாம் பொதுவா ''பொண்ணுங்களை சொன்னேன்'' என்றவருக்கு நிஜமாகவே மூச்சு வாங்கியது.

''கட்டிக்கப் போறவனை இவளது கேள்வியும்... அதைவிடவும் வேகமாய் ஓடும் இவளது கற்பனையுமே கொன்று விடும் போலவே'' என வருங்கால மருமகனுக்காக பரிதாபப் பட்டுக் கொண்டே, வண்டியை எடுத்தார் பெரியவர்.

மீண்டும் ''கல்யாணம்'' என்ற உறைபனிக்கு பயணித்து, உறைந்து போய் அமர்ந்திருந்த பெண்ணை அவளது கல்லூரியில் இறக்கிவிட்ட சொக்கலிங்கம்,

மகள் வண்டியை விட்டு இறங்கும்போது ''சிகப்பி... உனக்குக் கல்யாணத்தில இஷ்டமில்லையா கண்ணம்மா? முகமே சரியில்லையே!'' என்றார் வாஞ்சையாக.

''அது அப்பா! இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமாபா? ரொம்ப குட்டிப் பொண்ணா... மனையில இருந்தா உங்களை சைல்ட் மேரேஜ் ஆக்ட்-ல பிடிச்சிட்டுப் போய்டுவாங்களோன்னு பயமா இருக்கு!'' என்ற சிகப்பியின் இயல்பான குறும்பு நிலை திரும்பியிருந்தது.

எப்படி என்கிறீர்களா? அதுதான் வண்டியை விட்டு இரண்டடி தள்ளி நிற்கிறாளே! அதுவும் கல்லூரி வளாகத்தினுள்! சொக்கலிங்கத்தால் இந்த சூழ்நிலையில் அடிக்க முடியாதே! வாட் அன் ஐடியா சார் ஜி!

''ரொம்ப வாய் ஜாஸ்தி ஆகிடுச்சு! இந்தக் குட்டிச் சாத்தானை யாருமே... சின்னப் பொண்ணுன்னு சொல்ல மாட்டாங்க! அப்பத்தாவுக்கு அப்பத்தா மாதிரி வாய் பேசுதே... இதை இன்னும் கல்யாணம் செய்து கொடுக்கலையான்னு தான் கேட்பாங்க'' என மகளை மிரட்டிய சொக்கு சார்,

''இதுக்காகவே, வேகமா வரன் பார்க்கிறேன்'' எனச் சிரித்துவிட்டுச் சென்றார்.

தந்தையின் சிரிப்பை விளையாட்டாய் எடுத்துக் கொண்ட சிகப்பிக்கு, அடுத்து வந்த நாட்களில் தங்கள் வீட்டு அரசவையில் நடந்த ரகசிய திட்டங்கள் ஏதும் தெரியவில்லை.

அடுத்த வார இறுதிவரை ''மாமாவும் அல்லாத பெரியப்பாவும் அல்லாத பெரியவர்'' கொளுத்திப் போட்ட கல்யாண வெடி வெடிக்காமல் போனதில், அது நமத்துப் போன பட்டாசு என்ற நிலைக்கு ஆயாசமாய் வந்து விட்டிருந்தாள் சின்னச் சிகப்பி!

''ஹே, என்னை என்ன உன்னை மாதிரி வாழைப்பழம் இல்லாத வாழைப்பழத் தோலுன்னு நினைச்சியா? வரேன் பாரு... உன்னை வழுக்கி விழ வைக்க'' என வான் பிளக்கும் வெடியாய் வெடித்தது... ச்சே கால் வழுக்கும் பழமாய் பழுத்தது திருமணப் பேச்சு!

ஓர் நாள் மாலை சிகப்பி வீடு திரும்பையில் ''நம்ம பங்காளில ஒரு பொம்பளை புள்ள வீட்டுக் கல்யாணம்! நாங்க எல்லாரும் கோட்டையூர் போயிட்டு வந்திடுறோம். பத்திரமா இருந்துக்கோங்க'' என்ற அறிவிப்போடு, காரில் சாமான்களை ஏற்றிக் கொண்டிருந்தார் உமையாள்.

''ஹையா கல்யாணமா? சூப்பர்ரா சாப்பாடு போடு வாங்க இல்ல... என்னையும் கூட்டிட்டுப் போங்கம்மா... ப்ளீஸ் ப்ளீஸ்! பந்தி-ல உட்கார்ந்து வெள்ளைப் பணியாரம், கந்தரப்பம், பீஸ் அல்வா, பால் பணியாரம் எல்லாம் சாப்பிட்டு... ரொம்ப நாளாச்சு'' சப்புக் கொட்டியது சிகப்பியே தான்!

''தின்னிப் பண்டாரம்! அம்மா... தான் தினம் தினம் ஏதாவது பலகாரம் செய்து தராங்களே? அப்புறம் என்ன...'' இப்போது இடைப்புகுந்தது சக்தியே தான்!

''போடா... அம்மா ப்ளீஸ் மா.''

''இது பங்காளி வீட்டுக் கல்யாணம்... அதுவும் பொம்பளைப் புள்ள வீட்டுக் கல்யாணம்... அதுக்குப் போய், உன்னைக் கூட்டிப்போக முடியாது. தம்பியைக் கூட கூட்டிப்போகலாம்... அதுக்கே, அப்பா வேணாம்ன்னுட்டாங்க. இதில நீ வேற...'' ஓங்கி விழுந்தது உமையாளின் அதட்டல்.

''அவங்களும் பொம்பளைப் புள்ள... நானும் பொம்பளைப் புள்ள... நான் வந்தா என்னவாம்? டூ மச்!'' என சலித்துக் கொண்டவள்,

''அப்பத்தா, நான் இந்த எருமை மாடோட தனியா இருக்கமாட்டேன்... அம்மா மட்டும் போகட்டும்... நீங்களும் ஐயாவும் இருங்க'' என அப்பத்தாவிடம் செல்லம் கொஞ்ச ஆரம்பித்தாள்.

''இல்லத்தா! சீனு கிட்ட உன் ஜாதகத்தைக் காட்டி... வியாழநோக்கம் வந்திடுச்சான்னு கேட்கத் தான் நானும் ஐயாவும் போறோம். இல்லைன்னா, உனக்குத் துணையா இங்கனவே இருந்திருப்பேன்! என் தங்கமில்ல... மூணு

நாளுல வந்திடுறோம். குடிக்கையா இருந்துக்கோங்க!'' எனத் தன் பங்கிற்கு, சின்ன சிகப்பியின் தலையில் பெரிய கல்லாய் போட்டார் பெரிய சிகப்பி.

இதுவே, பாறாங்கல்லாய் உருமாறி, பெரியவர்கள் கிளம்பிச் சென்ற மூன்று நாட்களும் சக்தியின் காதை - ''சிகப்பியின் கல்யாணம் வேண்டாம்'' என்ற புலம்பலால் நிரம்பியிருக்கையில், நான்காம் நாள் காலையில் வந்து சேர்ந்த பெரிய சிகப்பி ஆச்சியின் முகத்தில் தெரிந்த ஆயிரம் விளக்குப் போட்ட பிரகாசமும், ''உனக்கு வியாழ நோக்கம்... உச்சத்தில் இருக்காம்! இப்ப கலியாணத்திற்குப் பார்த்தா... ரொம்ப சீக்கிரமே முடிஞ்சிடுமாம். இந்த வருஷம் வேண்டாம்ன்னு தள்ளிப்போட்டா... அடுத்து மூணு வருஷத்துக்கு காத்துக்கிடக்கணுமாம்! உம் படிப்பும் முடியிற தருவாய்க்கு வந்திருச்சு... அதான் கடைசி பரீட்சை எழுதிட்டியே? சீக்கிரம், கல்யாணத்துக்குப் பார்க்க வேண்டியது தான்!'' என்ற சந்தோஷமும், பலத்த இடியாய் தலையில் இறங்கியது.

''இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்!'' எனத் தனித்திருந்த சிகப்பியின் கூட்டணிக்கு ஒரே ஒரு ஆதரவாளராய் இருந்த வைரவன் செட்டியாரும், அந்தர் பல்டி ஆகாச பல்டியாக பறந்து ஆச்சியின் கட்சிக்குத் தாவியிருந்ததுதான் இன்னமும் சோகத்தைக் கொடுத்தது.

''ஆமாத்தா! சீனு சொன்னா... சரியா இருக்கும்! எங்க காலத்துக்குள்ள... உன்னை ஒரு நல்ல இடத்தில செய்துட்டா, மனசு சந்தோஷமா இருக்கும்!'' என அவர் பங்கிற்கு சிகப்பியை எரிச்சல் படுத்தினார்.

பரிதாபமாய் முழித்துக் கொண்டிருந்த தமக்கையை மேலும் வெறுப்பேற்றுவது போல் ''மணமகளே

மருமகளே போ போ! எங்கள் வீடு விளங்க... எங்கள் வீட்டை விட்டுப் போ போ!'' என்று பாடிவிட,

சிகப்பியின் கண்களில் நீர் சுரந்துவிட்டது.

அவளது கண்ணீர் தம்பியையே உருக்கிவிட்டது எனும்போது, பெரியவர்கள் எம்மாத்திரம்?

''என்ன சக்தி இது? எதில கிண்டல் கேலின்னு இல்ல'' எனப் பரிந்து வந்த அம்மாவை உதறியவள்,

''போங்கம்மா! யாரும் என்கிட்டப் பேச வேண்டாம்... உங்க எல்லோருக்கும் என்னை இந்த வீட்டில இருந்து அனுப்புறதில தான் சந்தோசம்... போங்க... யாரும் என் கூடப் பேச வேணாம்'' என அழுதவாறே, வீட்டின் பின்புறம் சென்று மறைந்தாள் இளையவள்,

அரைமணிநேரம் சென்ற பின்னர், தனக்குப் பிடித்த பவளமல்லி செடியின் கீழே அமர்ந்திருந்தவளின் அருகே வந்தமர்ந்தார் பெரிய வைரவன்.

''சிவப்பி! என் கண்ணு... இங்க பாரேன்... ஐயாவைப் பாரு!''

''கல்யாணம் செய்துக் கொடுக்கிறதால... உன்னைய இந்த வீட்டில இருந்து அனுப்பி வைக்கிறோம்ன்னு இல்லைத்தா!''

''கல்யாணமாகி... உன் ஆம்படையான் வீட்டுக்குப் போனதுக்கு அப்புறம் தான் நம்ம உறவே பலப்படும் தெரியுமா?''

''எந்த ஒரு பொண்ணுக்கும்... பொறந்த வீடுங்கிறது கிணத்தில இருக்க தண்ணீ மாதிரி ஆத்தா. உள்ள இருக்கறது பாதுகாப்பா தான் இருக்கும். ஆனா, உள்ள

இருக்க நீரு அம்மனுக்கு அபிஷேகமா போனா தானே அதுக்கு மதிப்பு?''

''நீ கல்யாணம் முடிஞ்சு வாவரசியா ஒரு வீட்டில வாழ்றது தான் ஆத்தா... எனக்கும் உன் அப்பச்சிக்கும் பெருமை!''

''கல்யாணம்ங்கிறது ஒரு உறவை முறிக்கிற சேதி இல்லத்தா... இன்னொரு உறவை பலமா சேர்த்துக்கிற நல்ல சங்கதி! அது எவ்வளவுக்கு எவ்வளவு நல்லபடியா இறுகுதோ... அம்புட்டு நல்லது!'' நீண்டு கொண்டே போன அவரது பேச்சு,

''உனக்குப் பிடிக்காத இடத்தில உன்னை செய்ய மாட்டோம், ஆத்தா! மனசைப் போட்டு அலட்டிக்காம, உள்ள வா'' என்ற உறுதியுடன் முடிந்தது.

அவர் கொடுத்த உறுதியில் அசட்டுத் தைரியம் பிறக்க, ''நம்மை மீறி எதுவும் நடக்காது'' என்ற தெனாவெட்டுடன் நடமாடினாள் சிகப்பி!

அதே தெனாவெட்டுடன், ''நம்ம செவுட்டு நாச்சியப்பன் செட்டியார் மகளை... காரைக்குடி லட்டு செட்டியார் வீட்டில செஞ்சாங்க தெரியுமா? அவுக பையன் ஒருத்தன் - அமெரிக்கா-ல இருக்கானாம். நல்ல படிப்பு... நிறைஞ்ச சம்பளம்... பார்ப்போமா?'' என அந்தப் பெரியப்பா வந்து சொல்லவிட்டுப் போன செய்தியை

''அய்யோ, செவிட்டு நாச்சியப்பனா? அவரே செவுடு... அவர் பேரன் கண்டிப்பா டபுள் செவுடா தான் இருப்பான். நான் மாட்டேன்பா'' என கழுத்தை ஸ்டைல்லாக ஒடித்து மறுத்தது சின்னக் கழுதை.

அடுத்ததாய், ஓர் பையனின் போட்டோவைக் கொடுத்து ''ஜாதகம் எல்லாம் பொருந்தி வருது... அவங்க

ஆத்தாவும் அப்பச்சியும் கூட ரொம்ப நல்ல மாதிரியாம். இந்தப் பையனைப் பார்ப்போமா?'' எனக் கேட்டதற்கு,

''அய்யே, இவன் என்ன ஒரு வேளைக்கு பதினேழு பூரி தின்பான் போல... நோ... நோ ரிஜக்டட்!'' எனத் திண்ணமாய் கணக்குப் போட்டு, முதல் பார்வையிலேயே மறுத்தாள் பெண்ணரசி.

''என்னத்தா... கொஞ்சம் சேர்ந்தாப்புல இருக்காரு... அதுக்குப் போயி'' பையனுக்குப் பரிந்து வந்த பெரியவர்களிடம்,

''ம்ஹூம்.. அவன் குண்டுங்கிற விஷயத்தை என்னதான் நீங்க நாகரீகமா சொன்னாலும்... நான் மாட்டேன்பா'' என அடமாய் மறுத்தது இளம் கன்று.

அடுத்ததாய் ''இவனுக்கு மூக்கு கொஞ்சம் ஓவர் சைஸ்சா இல்லை?''

''இவனோட பேர் எனக்குப் பிடிக்கலை... சர்வேஷ்ன்னு... நம்ம ஊரு பேரு மாதிரியே இல்லை! ஐ டோன்ட் லைக் ஹிம்!''

''இவனோட முழியே சரியில்ல. அவங்க அம்மா பண்ணின வெள்ளைப் பணியாரத்தை... வெளிய தூக்கிப் போட்டுட்டு, எங்க அகப்பட்டுடுவோமோன்னு பயந்த மாதிரியே போஸ் கொடுத்திருக்கான்.''

''ஹய்யே, இவன் சாப்ட்வேர் எஞ்சினியரா... வேணவே வேணாம்!''

''ஹ்ம்ம்... இவன் ஒரே ஒரு டிகிரி தான் படிச்சிருக்கான். சோ... ஐ அம் சேயிங் நோ!'' என மிக மிக நீளமாய் தொடர்ந்தது பட்டியல்.

இதுவே தொடர்ந்து ஆறு மாதங்களும் தொடர, சொக்கலிங்கத்திற்கு ஒரு வகை பயம் மனதில் அப்பிக் கொண்டது.

''என்ன ஆத்தா! இப்படி வர ஜாதகத்தை எல்லாம்... நூறு நொட்டை சொல்லிக் கழிச்சிட்டே இருந்தா என்ன பண்றது? புரிஞ்சுக்க மாட்டேங்கிறாளே'' எனத் தாயாரிடம் அவர் வருத்தம் கொள்ள,

''இல்ல தம்பி! சிவப்பிக்குப் பிடிச்ச மாதிரி நாம இன்னும் மாப்பிள்ளை பார்க்கலை போல. சிவப்பி எப்பவுமே... பிடிக்கும்ன்னா பிடிக்கும்ன்னு பட்டுன்னு ஒத்துக்கும்... அதே மாதிரி, பிடிக்கலைன்னா அதை சம்மதிக்கவே வைக்க முடியாது. இருக்கிறது ஒத்தப் பொண்ணு! பொறுத்து செய்வோம்... தம்பி!'' என சமாதானம் செய்த சிகப்பி ஆச்சிக்கு, அடுத்த ஒரு மாதத்திற்குள் தன் பேத்தியின் சம்மதம் கிடைத்துவிடும் என்றே தோன்றியது.

அவரது மனக்குரலுக்கு ஏற்ப, சில நாட்களில் வந்த ஒரு ஜாதகம் பொருந்திவர, அதனுடன் வந்திருந்த புகைப்படத்தை எடுத்துக் கொண்டு பேத்தியிடம் சென்றார்.

''இந்த போட்டோ படத்தைப் பாரு ஆத்தா! பேரு கருப்பையா! உருவி விட்டாப்ல இருந்தாலும்... பார்க்க லட்சணமா இருக்காக... உனக்குப் பிடிச்சிருந்தா பார்க்கலாம்'' என்றவரின் பேச்சை சிகப்பி தங்கச்சி கவனித்ததாகவே இல்லை.

''என்ன காரணம் சொல்லி மறுக்கலாம்'' என எண்ணிய மனதில் ''கருப்பையா'' என்ற பெயர் லேசாய்

நெருட, மெல்ல புகைப்படத்தை வாங்கியவளின் கண்கள் நிலை குத்திப் போயின!



4

கையிலிருந்த புகைப்படத்திலிருந்து உதிர்ந்த சிரிப்பில் சட்டென சிலப்பியின் மனம் லயிக்கத் தான் செய்தது!

முன்னர் வந்த புகைப்படங்கள் போல், "மாப்பிள்ளை பார்ப்பதற்கு" என்றே எடுக்கப்பட்ட படமாய் இல்லாமல், இரு சிறுமிகளுடன் கருநீலக் கடல் அலைகளின் மத்தியில் கற்பக விண்மீனாய், மாயக் கண்ணனாய் சிரித்துக் கொண்டிருந்தான் கருப்பையா.

அதுவும், அச்சிறுமிகளுள் சிறியவளாய் இருந்த வளைப் பார்த்தமாத்... அதே சமயம் பாதுகாப்பாய் தூக்கி யிருந்தவனின் இடுப்பை மற்றொரு சிறுமி இறுகப் பிடித் திருக்க, மூவரும் அக்கடலின் விளையாட்டில் தங்களைத் தொலைத்து அலையென கடல் தாய் அள்ளித் தந்த சந்தோஷத்தை இன்பமாய் பருகிக் கொண்டிருந்த வேளையில், சாதுர்யமாய் பதிவு செய்யப்பட்ட படமாய் இருந்தது.

கூடவே, இதே சிரிப்பை... இதே கம்பீரத்தை... இதே மென்மையை எங்கோ கண்டிருக்கிறோமே என அவளது மூளையைத் தட்டி யோசித்தவளுக்கு விடை தான் கிடைக்கவில்லை.

அதுவே, சிலப்பியின் "குறை கூறும் படலத்திற்கு" ஆட்டுப் போட்டிருக்க, "கருப்பையா" என்ற பெயர் ஆட்டி ஆதிரு சீல் வைத்திருந்தது.

சிலப்பி ஆச்சி "கருப்பையா" என்ற பெயரைக் கூறிய தாமே, "இவனும் தன்னைப் போலவே பெயருக்கு ஏற்றது போலவே கறுப்பாய் இருப்பானா?" என சிலப்பியின் கற்பனைக் குதிரை கேள்வி கேட்டதுடன் நில்லாமல், அந்த அரை வினாடியில் காத தூரம் ஓடத் தயாராய் காத் திருந்தது.

அதற்கு ஃபுல் கொடுத்து ஓட வைக்க முடியாது. சிலப்பியின் மூளையே பெரும் மாப்பிற்கு உள்ளாகி யிருக்க "கருப்பையா" என்ற பெயரும், "கோயில் புளி குழி நின்றிருந்த கள்ளனின்" உருவமும் சிலப்பியின் நாக்கும் மாத்துப் போனது போலிருந்தது.

"என்னாத்த... புடுசாருக்கா?"

"நம்ம ஊரு த்தேன்... எங்க சின்னப்பச்சி பேரன். அப் பத்தாளுக்கு ஆத்தா வீடிருக்கில்ல..." எனத் தொடங்கி னார் பெரிய சிலப்பி ஆச்சி!

"அப்பத்தா... இவரு நம்ம ஊரா?"

"இவரு... சொல்லக்கூடாது ஆத்தா... இவுக..."

"ஹம்ம்... சரி! இவங்க நம்ம ஊரா? நான் இவங்களை எங்கேயோ பாத்திருக்கேன்."

"நீ எங்க ஊருக்கு வந்தல? ரெண்டு வருஷம் முன் னாடி வரைக்கும்... ஊரு பக்கம் வரதே அரிதா கிடந்துச்சு அப்புறமும், கோவில்ல காதிக்க (காத்திருக்க திருவிழா) எட்டூரு செல்லா (எட்டு ஊர்களுக்கும் சேர்த்து நடக்கும்

ஊர்த் திருவிழா) இதுக்கு வந்தது. அம்புட்டுத் தானே?''

''யுரேகா!'' அப்பத்தாவின் பேச்சில் ஏதோ கண்டு பிடித்த விஞ்ஞானி - சின்ன சிகப்பி, கூவினாள்!

''என்னது சொரக்காவா? நீ... எங்க சொரக்கா வாங்கப் போனே?''

''ஐயோ, அப்பத்தா! அது சொரக்கா இல்ல... யுரேகா! அதை விடுங்க... நம்ம கோட்டையூர் சிவன் கோவில்-ல கார்த்திகை உற்சவம் நடந்ததே? நல்ல... கட்டிக்கட்டியா சக்கரைப் பொங்கலும், புளியோதரையும் தந்தாங்களே... அங்க தான்... சாமியைத் தூக்கிட்டு வந்தாரே... நான் பார்த்திருக்கேன்!''

''ம்ம் சரி! அப்ப... இந்தப் புள்ளையைப் பிடிச் சிருக்கா?'' பேத்தியின் குதூகலக் குரல், சிகப்பி ஆச்சிக்கு கிரீன் சிக்னல் காட்டிற்று.

''ம்ம். அதெப்படி உடனே சொல்ல முடியும்? எல்லா விவரமும் சொல்லுங்க... அப்புறமா சொல்றேன்'' என்றபோது சிகப்பியின் குரல் மிடுக்காய் முறுக்கி னாலும், உள்ளுக்குள் உருகியே இருந்தது அவளுக்கும் அவளது குதிரைக்கும் மட்டுமே தெரிந்த உண்மைகள்!

''என்ன பெரிய விவரம்? எங்க ஆத்தா வீட்டில் பிறந்த புள்ள... கண்ண மூடிகிட்டு செய்துடலாம்'' எனப் பிறந்த வீட்டுப் பெருமையை இந்த வயதிலும் பேசியவர், பேத்தியின் பிடிவாத முகத்தில் தொடர்ந்து விவரம் கூறினார்.

''பையன் பொறந்தது - கோட்டையூர் வெள்ளைக் கல்லார் வீட்டில.''

''எங்காத்தா வீட்டு வளவுல இருக்க எங்க சின்னப்பச்சி மகன் வயுத்துப் பேரன்.''

அந்த விவரத்தில் எதையோ அரிதாய் உணர்ந்தவள் போல், ''ரொம்ப வயசானவரா? நீங்க சொல்றதைப் பார்த்தா... எனக்கு அவரு சித்தப்பா முறை வரணும் போலவே!'' மண்டையைத் தட்டிக் கேட்டாள் சின் னவள்.

''அடப் போடி இவளே! கூறு கெட்டக் கேனைச் சிறுக்கி மாதிரி உளறாதே! அவுக அப்பச்சி... உங்க அப்பச்சிக்கு அம்மான் முறை வரும்!''

''அப்ப எனக்கு என்ன முறை வரும்?''

''ம்ம். இப்ப அவுகளைச் செய்துக்கிட்டினா... அமித் தான் முறைவரும்''- சிகப்பி ஆச்சியின் பற்கள் நன்றா கவே கடிப்பட்டன.

''ஓகே. ஓகே! கூல் அப்பத்தா! கூல்! மேல சொல் லுங்க...''

''ஆத்தா இல்லாத புள்ள. அவுக அப்பத்தா த்தேன்... அதாவது எங்க சின்னத்தா த்தேன்... இந்தப் புள்ளையை யும் இதுக்கு மூப்பா இருந்த இரண்டு பொம்பளைப் புள்ளைகளையும் வளர்த்தாக. இன்னமும் வைரம் பாய்ஞ்ச உடம்பா... சீமைக்குச் சமத்தியா... கோட்டைக்கு அரசியா... நிறைஞ்ச வாவரசியா இருக்காக.''

''ஓகே... நீங்க இன்னும் பையனுக்கே வரல அப் பத்தா... சின்னப்பச்சி / சின்னத்தான்னு அவங்களுக்கே விழா எடுத்திட்டு இருக்கீங்க?''

''பொறுத்தார் பூமி ஆள்வார்... சோப்பி!''

''நமக்கு இந்த மானேஜ்மென்ட் ஸ்கில்ஸ்... அதாவது நிர்வாகத் திறமையெல்லாம் பத்தாது பெரிய சோப்பி! அதனால, என்னைக் கேட்காம பூமியை வாங்கிடா தீங்க...'' பெரிய சிகப்பியின் கைகளால் இரண்டு அடி வாங்கியதும் தான், சின்ன சிகப்பியின் சின்ன வாய் அடங்கியது.

''நிறைய சொத்து பத்திருக்கு... செட்டிங்க மாதிரி சொத்தை நம்பாம... இந்தப் புள்ள கண் டாக்டருக்குப் படிச்சிருக்காக. வெளிநாட்டுக்குப் போய் படிச்சிட்டு வந்திருக்காக... ஆனாலும், நம்ம நகரத்தாருக்கு சேவை செய்யணும்ன்னுட்டு காரைக்குடிலேயே கண் ஆஸ் பத்திரி வச்சிருக்காக.''

''உள்ளூர்-ல இருக்கிறதால... வருமானம் ஒண்ணும் குறைச்சலில்லை. ஒத்த ரூம்-ல தொடங்கின ஆஸ் பத்திரி... இன்னைக்கு மூணு மாடிக்கு உசந்து நிக்குது.''

''நல்ல வரும்படி... அதை விடவும் ஊர்-ல ரொம்ப நல்ல பேரு. திருச்சி/மருத ல இருந்தெல்லாம்... கண் ணுக்கு காட்ட-ன்னு நம்ம ஊருக்கு வர அளவுக்கு நல்லமொறைக்கா வளர்ந்திருக்காப்ல.''

''வீட்டிலேயும்... அதிகப்படியா அதிர்ந்து பேச மாட் டாங்களாம்!''

''ரெண்டு ஆச்சி மாரும்... எங்க கண்ணன் ரொம்ப சாதுன்னு வாய் ஓயாம சொல்லுறாக.''

''வாட்ட்ட்

''தெரியலடா சக்தி! எனக்குக் குழப்பமா இருக்கு... நான் யோசிச்சிட்டு இருக்கும் போதே அப்பத்தா ''சரி''ங்கிற மாதிரி எடுத்துக்கிட்டாங்க... இது சரியா வருமா?'' என்றபோது சிகப்பியின் கரங்கள் சக்தியின் கரங்களை இறுகப் பற்றி இருந்தது.

கேலி கிண்டலுடன் கூடிய யுத்தத்திற்கு ஆயத்தமாகி வந்த சக்திக்கு, என்ன பேசுவது என்றே புரியவில்லை.

''ஹே என்னக்கா? நீ.. எதுக்கு தேவையில்லாம குழப்பிக்கிற? அவரு தான்... இந்த சோப்பு டப்பாவைக் கல்யாணம் பண்ணிக்கப்போறோமே... நாம காலம் பூரா குளிக்க முடியுமான்னு வருத்தப்படணும்...'' தன் வம்பி னாலேயே தமக்கையை சரி செய்ய முயற்சி செய்தான், இளையவன்.

''டேய்... வேண்டாம்! நிஜமாவே... எனக்கு ரொம்ப பயமா இருக்குதுடா... ஏதோ ஒரு ஞாபகத்தில் சரின்னு சொல்லிட்டேன்... ஆனா...''

''நோ... ஆனா... ஆவன்னா! ஒன்லி ஏ, பி, சி, டி! ஓகே! எனக்கும் அவரைப் பிடிச்சிருக்கு சோப்பு... நம்ம போன முறை ஊருக்குப் போனப்ப, கோவில்ல பார்த் திருக்கிறேன். செம கட்டை... சட்டையைக் கழட்டிட்டு அவரு சாமி தூக்கினப்போ... செமையா இருந்தது!''

''டேய்... அவரு சொல்லாதே! அவங்க சொல்லு!'' இப்போது தனது ''அவுக''களுக்காக தம்பியை வைதது சிகப்பியே தான்!

சிகப்பியின் ஆனானப்பட்ட சம்மதம் கிடைத்ததும் வெகு ஜரூராய் நடந்தன வேலைகள்.

அந்த வாரத்தின் இறுதியிலேயே, பெண் பார்க்கும் நிகழ்வு குறித்தாகிவிட, சொக்கலிங்கத்தின் குடும்பம் கோட்டையூருக்குப் பயணப்பட்டது.

பெண் பார்க்க வருபவர்களுக்கு முறை தலைகளை சிகப்பி ஆச்சி சிறப்பாய் எடுத்துவைக்க, உமையாளோ வருவோருக்குப் படைக்கவிருக்கும் உணவிற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சென்றார்.

''பொண்ணு தானே அப்பத்தா பார்க்க வராங்க? அவங்களுக்கு இதுக்கு... எந்த வாளி...சட்டி... பணி யாரம்... இட்லி... ஸ்வீட் எல்லாம்! நம்ம சோப்பு டப் பாவை பார்த்து அவங்க பயந்து ஓடும்போது... இதை யெல்லாம் காட்டி அவங்களை மடக்கிவைக்கிறதுக்கா?'' முறையே உள்ளே புகுந்தான் சின்னவன்.

''சக்தி! பட்டாளையை கூட்டிட்டா... அங்க ஜமுக் காளத்தை விரிக்கிற வேலையைப் பாரு! இங்க... நின்னு வெட்டிப் பேச்சு பேசிக்கிட்டுத் திரியாதே!'' மகனின் பேச்சில் மகளின் முகம் லேசாய் மாறுவது கண்டு பயந்த சொக்கலிங்கத்தின் வார்த்தைகள் தான் இவை. (பட் டாளை - செட்டிநாட்டு வீடுகளின் மொகப்பு பகுதியில், நடை பாதையின் இரு பக்கமும் வந்தவர்கள் அமர்வ தற்காக விடப்பட்டிருக்கும் இடம்.

''இல்ல... தம்பி! பட்டாளையில் வேண்டாம். வளவு - லேயே விரிச்சிடலாம். வளவு வீட்டில வேண்டாம் னாக்க, வளவு பட்டாளையில விரிச்சிருவோம். என்ன சிவப்பி சொல்றே?'' அடுத்ததாய் பேசியது தலைமுறை களுள் மூத்த வைரவன் செட்டியார்.

''சரிங்கிறேன்! சக்தி... அங்கன விரி அப்பச்சி!''

''ராவு காலம் தாண்டி... நாலரைக்கா வந்திருவாக. சட்டுப்புட்டுன்னு வேலையைப் பாருங்க...''

''ஆத்தா சோப்பி! சீலையைக் கட்டிக்க ஆரம்பித்தா... அப்பத் த்தேன், அவுக வரதுக்கு நீ வெளிய வருவே.''

''உமையா... ஆத்தா உமையா! இட்லியை இப்பவே ஊத்தி வைக்க வேணாம். அவுக வந்து இறங்கினதும்... குடா ஊத்திக்குவோம்... நீயும் போயி சீலையை மாத் திக்க. பொண்ணுக்கு ஆத்தா... வண்ணாத்தி மாதிரியா திரிவே.''

''தம்பி... வறுவல் சீவல், பாக்கு, வெத்திலை எல்லாம் வாங்கியாந்தீகளே! அதை... இந்த வெத்திலைத் தட்டுல எடுத்து வைங்க... இல்லன்னா... உங்க அப்பச்சிட்ட கொடுத்திட்டு, உசரத்தில இருக்க சாமி படத்துக்கு பூவப் போடுங்க!''

ஆச்சியின் ஆணைகளில் வீடே ஆடிக் கொண்டிருக்க, சரியாக நாலரைக்கு மூன்று கார்களில் வந்திறங்கினர் - கருப்பையா வீட்டினர்!

சின்ன சிகப்பி தவிர்த்து, மற்ற அனைவரும் வாயி லுக்குச் சென்று வரவேற்க, சிகப்பிக்கு இங்கே இருப்பே கொள்ளவில்லை.

''பொண்ணை வரச் சொல்லுங்க'' என்ற சொல்லுக் காக அவள் காத்திருக்க,

''எங்க வீட்டு மருமகளை கூட்டி வாத்தா!'' என்றது ஓர் கம்பீரக் குரல்!

குரலிலேயே, ''அவுக''ளுடைய அப்பத்தா என்பது முடிவாகிவிட, சிகப்பிக்கு உதிரம் உச்சிக்குப் பாய்ந்தது.

தாய் வந்து அழைத்துச் செல்வதற்காக காத்திருக்க, ''சிகப்பி! வாம்மா!'' என்ற சொல்லுடன் வந்தார் முப்பத் தைந்து வயதை எட்டிய ஓர் பெண்மணி.

தன்னைக் கண்ணை விட்டு மறைந்த ஐந்தே நிமி டத்தில் அம்மாவிற்கு பத்து வயது குறைந்து விட்டதா? என்ற கேனைக் கற்பனைக்கு அவளது குதிரையை ஓட விடாமல்,

''நான் கண்ணனோட மூத்த ஆச்சி - பேரு மெய் யம்மை! வீட்டில - 'தேவி'ன்னு கூப்பிடுவாங்க! என்னை 'கண்டனூர்'ல கல்யாணம் செய்து கொடுத்தது... ஒரு பொண்ணு 'அடைக்கம்மை - வீட்டில் அகிலா', ஒரு பையன் - 'குமரப்பன் - கோகுல்ன்னு கூப்பிடுவோம்'' சென்னையில மேடவாக்கத்தில் இருக்கோம்... உங்க வீட்டுக்குப் பக்கம் தான்!'' எனத் தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டார் அவர்.

''வா...வா! எங்க கண்ணன்... உன்னை போட்டோ-ல பார்த்ததுமே 'சரி'ன்னு சொல்லிட்டான். உனக்கும் பிடிக் கணும்... பார்ப்போம்! எங்க பிராப்தம் எப்படின்னு...'' என்றவரை சிகப்பிக்குப் பிடித்தது. ''என் தம்பிக்குப் பிடித்திருக்கிறது. நீ... சம்மதம் சொன்னாலும் சொல்லா விட்டாலும் கல்யாணம் நடக்கும்'' என்ற ரீதியில் பேசாது, அவளுக்கும் விருப்பம் இருக்கவேண்டும் எனக் கூறியது மனதை வருடியது.

இரண்டாம் கட்டிலிருந்து வெளிப்பட்ட சிகப்பி, வளவு வாசல் தாண்டி பட்டாளையில் அமர்ந்திருந்த புகுந்த வீட்டார் முன்னே செல்ல சரியாக ஐந்தரை நிமிடங்கள் பிடித்தன! வீட்டின் அகன்று விரிந்த அளவுடன்,

சிகப்பியின் தடுமாற்றம் கூடிய நடையும் சேர்ந்து கொள்ள நேரம் அதிகம் பிடிக்கவே செய்தது.

இரு அமித்தான்களின் நடுவே வீற்றிருந்த கருப்பையாவின் பார்வை - செம்பவளப் பார்வையாய் நடந்து வந்தவளைத் தன் மனதினுள் சித்திரமாய் வடித்துக் கொண்டிருந்தது.

சிகப்பியாலும் கண்ணை அகற்ற முடியாமல், அவனது கள்ளச் சிரிப்பும், காந்தப் பார்வையும், கம்பீரத் தோற்றமும் கட்டித்தான் போட்டன! ஓர் ஆண் மகனைப் பார்த்து, இவ்வளவு தூரத்திற்கு மயங்கிப் போவாள் என்று சிகப்பி எண்ணியதே இல்லை எனும்போது, இன்றைய சந்திப்பு இன்பப் பரபரப்பாய் நெஞ்சில் பதிந்தது.

வளவு பட்டாளையை நெருங்கியதும், ''உட்காரு ஆத்தா!'' என வாஞ்சையாய் வரவேற்றது அதே கம்பீரக் குரல்!

சிகப்பியின் பார்வை அவளது அப்பத்தாவிடம் பாய்வதைக் கண்ட மெய்யம்மை ஆச்சி - ''சிவப்பி ஒண்ணும் சொல்ல மாட்டா! உட்காரு!'' என்றார்.

''விளக்கி வச்ச பித்தளை விளக்காட்டம்... இருக்கத்தா! எனக்கு மனசுக்குப் பிடிச்சிருக்கு... நீங்க என்ன அப்புச்சி சொல்றீக...'' அதே கம்பீரத்துடன் விழுந்தது அவரது நேரடி தாக்குதல்.

அவரது கணவரான ''கருப்பையா செட்டியார்''ரிடம் கேட்கிறாரோ என்றெண்ணியிருந்த சிகப்பிக்கு இன்ப அதிர்ச்சியாய் அமைந்தது ''எனக்குப் பிடிச்சிருக்கு அப்பத்தா! அவங்களுக்குப் பிடிச்சிருந்தா... மேக்கொண்டு பேசுங்க!'' என்ற ஆண்மைக்குரலின் பதில்.

''நானா... அந்த ''அவங்க...'' என்ற ரீதியில் சிகப்பியின் குதிரை வேகமெடுக்கும் போதே,

''என்ன சிவப்பி? உனக்கு... எம்ம கண்ணனைப் பிடிச்சிருக்கா? உருவி விட்டாப்ல இருக்கானேன்னு தயங்காத... நீ வந்து சமைச்சுப் போட்டா சதை போட்டிருவான்! என்ன சொல்லுதே!'' - லாவகமாய் லாடம் போட்டார் மெய்யம்மை ஆச்சி.

''நான் சமைக்கிறதா...'' என சிகப்பி முழித்துக் கொண்டிருக்கும் போதே, அவளைக் கிள்ளினார் உமையாள்.

''ஹான்... ஹான்! பிடிச்சிருக்கு.. அப்...அத்...'' கண்ட மேனிக்கும் தடுமாறியது சிகப்பிக்கு.

''அவனுக்கு அப்பத்தான்னா உனக்கு நான் ஆயா...'' என அவளது கன்னம் வழித்து திருஷ்டிக் கழித்தவர், ''ஆத்தா... வள்ளியம்மை! நாம கொண்டாந்த ஜாதிப் பூவை... சிவப்பி ஜடையில வையு...'' எனத் தன் சின்னப் பேத்தியை ஏவினார்.

நிறைந்த புன்னகையுடன் அவளருகே வந்த வள்ளியம்மை ''ஹை சிகப்பி! நான் தான் வள்ளியம்மை... எங்கப்பத்தா பேரை எனக்கு வைக்காததால் எனக்கு வீட்டில கூப்பிடுற பேருன்னு எதுவுமில்லை. சரியா? என்னை ''கானாடுகாத்தான்''-ல கல்யாணம் செஞ்சு கொடுத்திருக்கு. நானும் சென்னை-ல தான் இருக்கேன்... அடையார்-ல அங்க... கண்ணன் மடி-ல உட்கார்ந்திருக்கா பாரு... அவ தான் என்னோட வாலு! பேரு ''விசாலாக்ஷி'' பூ வைக்கும் ஓர் நிமிடத்திற்குள் பேசி முடித்திருந்தார் அவர்.

அடுத்ததாய், பெரியவர்கள், சிறியவர்கள் என்று மாறி மாறி பேச்சு சென்று கொண்டே இருக்க, சிகப்பியின் ''கருப்ஸ் உடன் தனியே பேசவேண்டும்'' என்ற எண்ணம் மட்டும் நிறைவேறவே இல்லை.

சாப்பாடு, பாக்கு மாற்றிக் கொள்ளுதல் என எல்லாம் அரங்கேற, சீர் என்று வருகையில் ''எங்க கண்ணப்பன்... நகை தொகைன்னு எதுவும் வாங்கக் கூடாதுன்னு சொல்லிட்டான். அதனால், நாங்க எதுவும் கேட்கலை'' என்றது தான் அன்றைய நாளின் பெரும் ஹைலைட்.

''நீங்க பெருந்தன்மையா இருக்கலாம்... ஆனா... எங்களுக்கு சிவப்பி ஒரே பொம்பளைப் புள்ள. அஞ்சு வைர நகையும்... பதினைஞ்சு லட்சம் ரொக்கமும் கொடுக்கிறோம். அப்புறம்... எனக்கு கொடுத்த சீரும், உமையாளுக்குக் கொடுத்த சீரும், அவுக ஆத்தா - அப்பச்சி சேர்த்த சாமானும் வெள்ளமா இருக்கு. அதெல்லாம் கொடுத்திடுறோம்!'' என சிகப்பி ஆச்சியும் பெருந்தன்மையின் திலகமாய் உருமாறியது அடுத்த ஹைலைட்.

இதை எல்லாத்தையும் தூக்கிச் சாப்பிடுவது போல், ''எங்களுக்கு வைகாசி-ல கலியாணம் வச்சாத்தான் ராசி! அதனால, இந்த மாசமே நல்ல முஹூர்த்தமா பார்ப் போம்... அப்புறம், கலியாணத்திற்கு இடைப்பட்ட நாளில பொண்ணும் புள்ளையும் இந்தச் செல்போன் பொட்டியில பேசிக்கிடக்கூடாது! எங்க தேவிக்குப் பார்த்தா... மொத சம்மந்தம் இந்தக் கருமம் பிடிச்ச செல்போன் பொட்டியால தான் கெட்டுப் போச்சு! அதனால, ரெண்டு பேரும்... கலியாணம் வரையிலும்

நறுவிசா பேசிக்கிடக்கூடாது!'' என்றார் மெய்யம்மை ஆச்சி, கண்டிப்பாக.



5

ஒரே மாதத்தில் திருமணம், அந்த இடைப்பட்ட நாட்களில் மாப்பிள்ளையும் பெண்ணும் பேசிக் கொள்ளக் கூடாது - என்ற இரண்டு பேரிடிகள் சிகப்பியை மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளாக்கியிருந்தன.

அவளது தற்போதைய அதிர்ச்சியை பின்னுக்குத் தள்ளுவது போல், தன் பேரனைப் பார்த்து ''என்ன கண்ணா? என்ன விவகாரம்? வள்ளியம்மை காதைக் கடிக்கிறவுக...'' என இழுத்தார் மெய்யம்மை ஆச்சி.

''அது ஒண்ணுமில்லை அப்பத்தா. அம்மா... மாதிரி சிகப்பியும் மூக்கு குத்திக்க முடியுமான்னு கேட்கிறான்'' என வள்ளியம்மை இழுக்க,

''அவங்களுக்கு சிரமம்ன்னா வேணாம், அப்பத்தா! நான் என் பக்க விருப்பத்தைத் தான் சொன்னேன்'' என உடனே இடைப்புகுந்தான் கருப்பையா.

''மூக்குத்தியா? இந்தக் காலத்துப் பிள்ளை... கண்ணப்பா?! அதுவும், வெளிநாட்டில வளர்ந்தது... நம்ம விருப்பத்தை அவுக மேல திணிக்கக் கூடாதுப்பா'' என்றதில் மெய்யம்மை ஆச்சியின் கண்டிப்பு மிளிர்ந்தது. சீமைச் சமத்தி... கோட்டைக்கு அரசின்னு சும்மாவா சொன்னாங்க!''

''பரவாயில்லை சின்னத்தா! அவுக விருப்பத்தை அவுக சொல்லிட்டாக... நா சிகப்பிகிட்ட பேசுறேன்'' இடையில் வந்து சமரசம் செய்தது சிகப்பி ஆச்சியே தான்.

அதன் பின்னர், அனைவரும் கிளம்ப எத்தனிக்க ''வைகாசி-லேயே கல்யாணத் தேதி குறிக்கிறதுன்னா... சீனுவை இப்பவே கூப்பிட்டு விடுவோமா? நல்ல முஹூர்த்த நாளா பார்த்து... உடனே சொல்லிடுவாப்ல'' என்றார் பெரிய வைரவன்.

அனைவருக்குமே, அது சரியான யோசனையாக படவே, பஞ்சாங்கம் பார்க்கும் சீனு ஐயர் வீட்டுக்கு ஆளும்... ஆளுடன் காரும் பறந்தது.

பத்தே நிமிடத்தில் அவர் வந்து, வைகாசியின் கடைசி முஹூர்த்த நாளான வைகாசி 28 கருப்பையா - சிகப்பி இருவரது நட்சத்திரத்திற்கும் பொருந்தி வருவதாகக் கூறவே, அங்கே சந்தோஷமும், கல்யாண வேலை பற்றிய மலைப்பும் ஒருங்கே வந்து சேர்ந்தது.

விடைபெற்றுச் சென்ற அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தது போல், விடை கொடுத்த அனைவருமே நிறைந்த மனதுடன் இருந்தனர்.

கருப்பையா வீட்டினரின் கடைசி வண்டி, தங்கள் வீட்டை விட்டுச் சென்றதும், ''நான் மூக்கு குத்திக்க மாட்டேன்'' என்றாள் சிகப்பி, மொகப்பு பட்டாளையில் சம்மணமனிட்டு அமர்ந்து கொண்டு,

''என்ன ஆத்தா... இது? அவுக எவ்வளவு தன்மையா பேசினாக? அதுபோல... நாமளும் இருக்க வேண்டாம்? வலுசாரா இருக்காத ஆத்தா!'' என்றார் பெரிய சிகப்பி.

''ஹய்யோ! அப்பத்தா... மூக்குத்தி எங்க தெரியுமா போடுவாங்க? மூக்குல! அங்க ஒட்டை போட்டா... எப்படி வலிக்கும் தெரியுமா? சும்மா...'' என்ற சிகப்பியின் மனதில் ''செல்போன்'' பின்னுக்குத் தள்ளப்பட்டு மூக்குத்தி முன்னுக்கு வந்திருந்தது.

அப்பத்தாளும் பேத்தியும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்க ''சரி... அதை அப்புறம் பார்க்கலாம்... நீ... உள்ள வா'' என்ற சொக்கலிங்கம்,

''நீங்க வாங்க ஆத்தா! அவ... தானா வருவா...'' என்றதோடு உள்ளே சென்று விட்டார்.

பெரியவர்கள் அனைவரும் உள்ளே சென்றுவிட, சிகப்பியின் முகத்தில் பயத்தை மீறி கோபம் சூழ்ந்து கொண்டது. அதைப் பார்த்திருந்த சக்தி, லேசாய் அவளது கையைத் தொட, ''எனக்கு எரிச்சலா வருதுடா... சக்தி!'' என்றாள் கால்களை உதைத்துக் கொண்டு.

''வீட்டுக்கு வந்த எல்லாருக்கும்... வெள்ளித்தட்டு... கட்டுக்கட்டாப் பணம்... எல்லாம் கொடுத்தாங்களே? நமக்கு கொடுக்கலையேன்னு தானே உனக்கு எரிச்சல்... எனக்கும் தான் சோப்பி'' என அவன் சோக கீதம் பாட, சிகப்பியின் எரிச்சல் இருந்த இடம் தெரியாமல் பறந்து, தம்பியைத் துரத்திக் கொண்டு ஓட வைத்தது.

பட்டாளையில் தொடங்கிய ஓட்டத்தை வளவு வாசல் வரையிலும் கூட அவர்கள் தொடரவில்லை.

''உனக்கு கல்யாணம் பேசியிருக்கோம்ங்கிறது உனக்கு நினைவில இருக்கா? அவுத்துவிட்ட கழுதை மாதிரி... வளவை சுத்தி வர?'' என்ற சொக்கலிங்கத்தின் அதட்டல் சிகப்பியை அடக்கிவைத்தது.

சாமி வீட்டின் முன்னே இருந்த பட்டியக்கல்லில் அமர்ந்து, மெய்யம்மை ஆச்சி கொண்டு வந்த முறைகளை எடுத்து வைத்துக் கொண்டிருந்த அப்பத்தாவின் மடியில் வந்து படுத்துக் கொண்ட சிகப்பி, 'அப்பத்தா... ஒரு மாசத்தில கல்யாணம்ன்னா எப்படி அப்பத்தா? இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமா? வைகாசில தான் கல்யாணம் பண்ணனும்னா... அடுத்த வைகாசில வச்சுக்கலாமா?'' என்றாள் சோர்ந்த குரலில்.

மகளின் வார்த்தைகளில் தொக்கி நின்ற அபசகுனம் உமையாளின் மனதில் பதிய, ''கிரகம் பிடிச்சவ மாதிரி... உளறாதே!'' என்றார் கோபமாக.

அதன் பின்னர், சிகப்பி எதுவும் பேசவில்லை. பெரிய சிகப்பி ஆச்சியின் மடியில் தஞ்சம் புகுந்திருந்த தலை நிமிரவுமில்லை.

திருமணத் தேதி குறிக்கப்பட்டதில் இருந்து, சிகப்பியின் முகத்தில் புதிதாய் பொலிவு இருந்ததோ இல்லையோ, உமையாள் ஆச்சிக்கும் சிகப்பி ஆச்சிக்கும் பெருமையில் முகம் பிரகாசமாய் இருந்தது.

அது... அவர்கள் மடமடவென திட்டமிட்டதில் வெளியே தெரியவும் செய்தது.

''சிகப்பிக்குக் கொடுக்க வேண்டிய சாமானைப் பிரிக்கணும். எங்க ரெண்டு பேரோடதையும்... எடுத்து, வகை வாரியா பிரிச்சு... பித்தளை சாமானுக்கு பாலிஷ் போட்டு... எல்லாத்துக்கும் பேர் வெட்டி... ஏகப்பட்ட வேலை குவிஞ்சு கிடக்குது. அதனால நாங்க மதராசுக்கு வரல... உங்க அப்பச்சி... எங்களுக்குத் துணையிருக்கட்டும். நீங்களும், சக்தியும் போயிட்டு வாங்க தம்பி''

என்று தன் மகனின் பயணத்தைப் பற்றி பேசிய சிகப்பி ஆச்சியிடம் பாய்ந்தாள் சின்னச் சிகப்பி.

''நான் எங்க இருக்கிறது? ரோட்டிலேயா? என்னை மட்டும் விட்டுட்டீங்க?'' என அவள் குதிக்க,

''நீ... இங்க தான் இருக்கப் போறே. சமையல்... செட்டியவீட்டுப் பழக்க வழக்கம்... வீட்டு வேலையெல்லாம் பழக வேண்டாம்?'' என உமையாள் பதில் கூற,

''முடியாது! முடியாது! முடியாது! நான் சென்னைக்குப் போவேன்... போயே தீருவேன்!'' எனப் பல்லைக் கடித்துக் கொண்டு கத்திய சிகப்பியின் கண்களில் கண்ணீர் சுரந்து விட்டது.

''எதுவுமே... என் விருப்பப்படி நடக்க விடமாட்டீங்களா? நான்... சென்னை போகணும்'' என அவள் கேவலின் ஊடே கெஞ்ச,

''அவ.... மதராசுக்குப் போகட்டும் சிகப்பி!'' என்று முடித்துவிட்டார் வீட்டின் பெரியவர்.

அதன்பின்னர், வளவு பட்டாளையில் அமைந்திருந்த தன் அறைக்குள் சென்ற சிகப்பி கதவைத் திறக்க, வெகு நேரம் பிடித்தது.

''ஹே சோப்பு டப்பா! எதுக்கு... இப்படி மூக்கை உறிஞ்சுகிட்டு இருக்கே? அத்தானோட பேச முடியலைன்னா... லூசு லூசு... செல்போன் மட்டும் தான் பேசுறதுக்கு இருக்கிற ஒரே வழியா?''

''எந்தக் காலத்தில இருக்கீங்க மேடம் நீங்க? இன்டர்நெட்... சாட்...ன்னு எவ்வளவு இருக்கு?''

''அதை விடு... கொஞ்சம் கற்காலத்திற்குப் போனாலும்... புறா விடு தூது... ஈரா விடு தூது.. அப்படி

THE LION KING

இப்படின்னு எவ்வளவு இருக்கு? இதுக்குப் போய்... இவ்வளவு ஃபீல் பண்ணுவாங்களா?''

''அடுத்ததா மூக்குத்தி! ஹே லூசு... எக்ஸ்ட்ராவா ஒரு நகை வருதேன்னு சந்தோஷப்படு... சிகப்ஸ்! மூக்குத்தி போட்டிருந்தா... கல்யாண டைம்-ல அஞ்சு பிஞ்சு வச்சு வைர மூக்குத்தி கொடுப்பாங்களாம்... இப்போ அதை வேற செய்யணும்னே அப்பா சொல்லிட்டு இருந்தாங்க!''

''கல்யாணத்துக்கு அப்புறமும், அத்தான்கிட்ட ''உங்களுக்காக தான் மூக்கு குத்திக்கிட்டேன்... அதுக்கு ரூபி மூக்குத்தி வேணும்... பிளாட்டினம் மூக்குத்தி வேணும்ன்னு கேட்டு வாங்கிக்கலாம்.''

''லூசு... லூசு...''

''அடுத்ததா? ஒரே மாசத்தில் கல்யாணம் தானே உன் பிரச்சனை? மூணு மாசம்... கழிச்சுக் கல்யாணம் வச்சிருந்தா... அந்த மூணு மாசமும் ''இதை சமை... இந்த வேலையைப் பாருன்னு...'' அம்மா உன்னை டிரில் வாங்கியிருப்பாங்க. ஆனா, இப்போ... ஜஸ்ட் இருபது நாள் தான்! கல்யாண பிஸில உன்னைக் கண்டுக்கவே மாட்டாங்க.''

''அப்புறம்... அத்தான் வீட்டுக்குப் போனதும் மெதுவா பழகிக்கலாம் சிகப்ஸ்!''

''அழாதே சோப்பி! ப்ளீஸ்!''

''உன்னோட நல்ல மூஞ்சியையே என்னால சகிச்சுக்க முடியாது. இதில அழுது வேற வடிஞ்சின்னா... அடுத்த வேளைக்கு எனக்கு சோறே இறங்காது'' என சக்தி, பெரிய மனிதனாய் பேசவும், சிகப்பியின் முகம் தெளிந்தது.

நேற்றிரவில் இருந்து நெஞ்சை அரித்துக் கொண்டிருந்த கேள்விகளுக்கு எல்லாம் விடை கிடைத்தது போல், நெஞ்சம் தெளிந்துவிட, உற்சாகமாகவே வளைய வந்தாள் இளையவள்.

மகளின் உற்சாக முகம் ஊக்கம் கொடுத்தபோதும், ''சிகப்பி... உனக்கு மாப்பிள்ளையைப் பிடிச்சிருக்குத் தானே! எங்களுக்காக சரின்னு சொல்லலையே?'' என மகளைத் தனியாக விசாரிக்க மறக்கவில்லை, சொக்கலிங்கம்.

''ஹ்ம்ம்... பிடிச்சிருக்க மாதிரியும் இருக்கு... பிடிக்காத மாதிரியும் இருக்கு...'' என அவள் அதற்கு இழுக்க,

''அப்ப... பிடிச்சிருக்கு! அவளோட பேசிட்டு இருந்தா... நேரம் வெட்டியா தான் கழியும். நீங்க வாங்க'' எனக் கணவனை அடக்கினார் உமையாள்.

அடுத்த நாள், தங்களது ஸ்தலக் கோவிலான மாத்தூரில் கல்யாணத் தேதியைப் பதிவு செய்துவிட்டு, மேளத்திற்கு எழுதிக் கொடுத்துவிட்டு, சொக்கலிங்கம் வந்ததும் அவரது மக்கள் இருவரின் துணையுடன் அவர் சென்னை செல்வதாய் முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, சென்னையில் நடக்க வேண்டிய வேலைகளுக்கான பட்டியல் தயார் செய்யப்பட்டு, சொக்கலிங்கத்திடம் கொடுக்கப்பட்டது.

வேறென்ன வேலைகளை முன்னரே செய்யவேண்டும் என்று ஆச்சியும் செட்டியாரும் பட்டியலிட்டுக் கொண்டிருக்கும் போதே, ''நான் அத்தான் வீட்டுக்குப் போயிட்டு வந்திடுறேன்'' என்றான் சக்தி.

THE LION KING

சிகப்பியின் முகத்தில் பரபரப்பு கூட, உமையாளோ ''இதென்ன பழக்கம்? கல்யாணத்திற்கு முன்னாடி... நீ அங்கெல்லாம் போகக் கூடாது.''

''ஹையே... இதென்னம்மா அநியாயமா இருக்கு? அக்கா தானே அவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறா... இப்ப நான் தானே போறேன்? ஒரு பிரண்ட் மாதிரி பார்த்திட்டு வரேன்மா'' என்றான் மகன் வம்படியாக.

''போகக் கூடாதுன்னா போகக் கூடாது, சக்தி!'' என சொக்கலிங்கம் முடித்துவிட, சிகப்பியின் முகம் தொங்கிப் போனது.

அதைக் கண்டதும், சக்தியின் கால்கள் வெளிவாசலை நோக்கி நடக்க, ''அப்பச்சி சொல்றதைக் கேளு, தம்பி! அவுக வீட்டுக்குப் போவாத ராசா'' என்றார் பெரிய வைரவன்.

''நான் அங்க போகலை... அய்யா! நம்ம ஊரு சிவன் கோவிலுக்குப் போறேன்'' என்றவன், பதிலை எதிர் பாராது வெளியே சென்று விட்டான்.

''அப்படியா தம்பி! ரொம்ப நல்லது... கோவில்ல காரியக்காரர் இருப்பார்... அவர்கிட்ட கல்யாண விவரத்தைச் சொல்லிட்டு, அன்னைக்கு வெள்ளி அங்கிக்கு குறிச்சிக்க சொல்லிட்டு வந்துடுங்க'' - பெண் மற்றும் பிள்ளை வீட்டாரின் முகவரி மற்றும் கல்யாணத் தேதி அடங்கிய சிறு காகிதத்தை நீட்டினார் பெரிய சிகப்பி ஆச்சி.

''சரி...'' என்ற முணகலுடன் அவன் வீதியில் நடக்க,

''அப்பச்சி... கல்யாணம் சொல்லையில... பாக்குப் பணம் கொடுக்கணும். பத்து ரூவா கொடுங்க...'' என்ற இரைச்சல் பின்னே வந்தது.

சரியாக இரண்டு மணிநேரம் கழித்து வந்த சக்தி, பெரியவர்கள் முன்னே எதையும் காட்டிக் கொள்ளாமல் நல்ல பிள்ளையாகவே இருந்துவிட்டு, அறையில் படுத்திருந்த தமக்கையிடம் ''ஹே சோப்ஸ்... இங்க பார்த்தியா...'' என்றான் ஓர் காகிதத்தை முன்னே நீட்டியவாறே.

''என்னடா? சொல்லித் தொலை... இருக்க எரிச்சலைக் கூட்டாதே!'' என சிகப்பி, முகத்தைச் சுளிக்க,

''ரொம்பத் தான் சலிச்சுக்கிறியே? உங்க அத்தானோட ஈமெயில் ஐ.டி.... வேணாம்னா போ...'' இளையவனும் முகத்தைச் சுருக்கினான்.

''ஹே... நிஜமாவாடா... ஹே தாடா... தாடா..''

''நோ...'' ''டா''... கால் மீ... ''மிஸ்டர் சக்தி வைரவன்!''

''டேய்...''

''அப்ப... உனக்கு இது கிடையாது... ஓடிப்போ!''

''சக்தி... ப்ளீஸ்... தா...''

''இது கொஞ்சம் பரவாயில்லை... சரி... பொழைச்சுப் போ'' ஒரு வழியாக கருப்பையாவின் ஈமெயில் ஐடி சிகப்பியின் கைக்கு வந்தது.

கோட்டையூரில் கணினி இல்லாததால், சென்னை செல்லும் வரை காத்திருந்து, அடுத்த நாள் காலையில் முதல் வேலையாக ஓர் ''நான்கு வரி'' மின்னஞ்சலைத் தட்டிவிட்டு விட்டுக் காத்திருந்தால்... அடுத்த மூன்று நாட்களுக்குப் பதிலே இல்லை.

கணினியே கதியென்று... அதன் முன் சிகப்பி தவமிருந்தது தான் மிச்சம்!

ஒரு வேலை அவனுக்குத் தன் மேல் கோபமோ?

அப்பத்தாவின் வார்த்தையை மீறித் தொடர்பு கொள்ள முயல்கிறாள் என்ற கோபமோ?

அல்லது மூக்குத்தி குத்திக் கொள்ளவில்லை என்ற வருத்தமா?

என்னவாக இருக்கும்? - என சிகப்பி மனம் குழம்பிப் போனாள்.

முடிவில், ஏதோ ஒன்று தோன்ற ''டேய்... சக்தி! என்னை ஏமாத்திட்டே தானே? அது தப்பான ஈமெயில் ஐடி தானே? ஒருவேளை... நீயே புதுசா ஒரு ஈமெயில் ஐடி க்ரீயேட் பண்ணி... நான் அனுப்புற ஈமெயில் எல்லாம் பார்த்துச் சிரிச்சிட்டு இருக்கியா?'' எனத் தன் கற்பனையை எடுத்துவிட்டாள், சௌந்தர்யா.

''ஹே லூசு நிஜமா... இது அத்தானோடது தான்! அவங்க ரெண்டாவது அக்கா தான் கொடுத்தாங்க... கோவில்-ல பார்த்து நான் கேட்டதும் உடனே கூட எழுதிக் கொடுக்கலை போன்ல அத்தான்கிட்ட ஒரு டைம் கேட்டுத் தெளிவு பண்ணிட்டுத் தான் கொடுத்தாங்க. ஆனா... அவரு... அடிக்கடி ஈமெயில் செக் பண்ண மாட்டார்ன்னு சொன்னாங்க'' என்றான் சக்தி சந்தேக மாய்.

''ப்ச்... அப்போ... ஈமெயில் பார்க்கலை போல...'' என்ற சோக கீதத்துடன், அசோக வன சீதையாய் மாறிப் போனாள் சிகப்பி.

அவளது சோர்ந்த முகம் பார்க்கப் பிடிக்காமல், ''சும்மா சும்மா... தீர்ந்துபோன கும்மாயத்தைப் பார்த்து முழிக்கிற கூமுட்டை மாதிரி போஸ் கொடுக்கக்கூடாது சோப்ஸ்!

இப்ப... என்ன அத்தான்கிட்டப் பேசணும்... அவ்வளவு தானே? நான் வழி பண்றேன்!'' என்றவன், அடுத்த மூன்று மணி நேரத்தில் கைப்பேசியுடன் தமக்கையின் அருகே அமர்ந்தான்.

''இப்போ... நான் யாருக்குத் தெரியுமா டயல் பண் றேன்? நம்ம கருப்ஸ்க்கு!''

''சக்தி... கருப்ஸ் சொல்லாதேடா ப்ளீஸ்!''

''எதுக்கு இப்படி கெஞ்சுற? ஹோ... மேடம் அப் படித்தான் அத்தானைக் கூப்பிடப் போறீங்களா?''

''அது... அது... அப்படியெல்லாம் இல்லை. நீ கூப் பிடாத... அவ்வளவு தான்!''

''சரி... விடு! ஆனாலும்... நீ ''அத்தான்...'' அப் படின்னு ராகமா கூப்பிடற மாதிரி நான் கற்பனை யெல்லாம் பண்ணினேன் தெரியுமா?''

''ஷ்... அவர் நம்பர் எப்படி கிடைச்சது? அவங்க அக்கா... தான் தரலையே?''

''அவங்க தரலைன்னா என்ன... நான் கண்டுபிடிக்க மாட்டேனா?''

''எப்படிடா?''

''நெட்-ல பார்த்துத்தான்!''

''நெட்லியா? அவர் நம்பர் எப்படி... நெட்ல வரும்? கால் கேர்ள்ஸ் மாதிரி...''

''ஹே... சீ...சீ... நிறுத்து! நீயும்... உன் கற்பனையும்... அவரோட ஹாஸ்பிடல் நண்பர்! சரியான கிராக்கு... சோப்ஸ்... நீ.''

''சாரிடா... பேசு... பேசு...''

இவர்களின் அவசரத்திற்கு, மருத்துவமனை எண் கிடைக்கவில்லை.

அரை மணி நேரத்திற்கும் மேலாக முயன்ற பின்னர், ஓர் பெண்மணி அழைப்பை எடுக்க, ''டாக்டர்கிட்டப் பேசணும்'' என்றான் சக்தி.

''நீங்கள் யார்?'', ''என்ன விஷயம்?'', ''சொந்தம் என்றால்... எப்படி சொந்தம்?'', ''நெருங்கிய சொந்தம் என்ற பட்சத்தில்... கைப்பேசியில் அழைக்க வேண்டியது தானே?'' என ஆயிரத்தெட்டுக் கேள்விகளின் முடிவில் அழைப்பு கருப்பையாவின் அறைக்குக் கொடுக்கப் பட்டது.

''இந்தாப் பேசு... பேசு...'' கைப்பேசியை சிகப்பியின் கையில் திணித்துவிட்டு, ஓட்டம் எடுத்தான் சக்தி.

சிகப்பி விழித்துக் கொண்டிருக்கும் போதே, ''ஹலோ! கருப்பையா ஸ்பீக்கிங்!'' என்றது அவனின் குரல்.

அதில் விதிர்த்து, கையிலிருந்த கைப்பேசியை நழுவ விட்டு, மீண்டும் அதை எடுத்துக் காதில் வைத்த சிகப்பியின் முகம் வேர்வையில் குளித்து விட்டிருந்தது.

அதற்குள், அவன் ''ஹலோ'' என்ற ஒரு சொல்லில் பல குரல் மாறுபாடுகளைக் கொண்டு வந்திருக்க, ஒரு வழியாக ''நான் சிகப்பி பேசுறேன்'' என்றாள் சிகப்பி.

அதல பாதாளத்திலிருந்து வெளிவருவது போல் உள்ளே போயிருந்த குரலை அவள் கடிந்து கொண்டிருக் கும் போதே, ''ஹே தக்காளி சூப்! நீயா?'' என்றான் கண்ணன் சிரிப்புடன்.



6

''தக்காளி சூப்'' என்ற கருப்பையாவின் அழைப்பில் சிகப்பி திக்குமுக்காடிப் போனாள்.

அதற்கு மேல் சிந்திக்க முடியாமல், குதிரையும் மூளையும் ஒருங்கே படுத்துவிட, ''என்ன... என்னை... என்னய்யா சொல்றீங்க?'' என்றபோது, அவளது குரலை வாடகைக்கு விட்டது போல், காத்து மட்டுமே வந்தது.

''உன்னையே தான்! தற்போதைய செல்வி. சிகப்பி சொக்கலிங்கத்தையே தான்! வருங்கால திருமதி. சிகப்பி கருப்பையாவையே தான்!'' - மேலும் கண்ணனின் மாயக் குரல் மென்னகை புரிந்தது.

அவன் ஒவ்வோர் வார்த்தைக்கும் கொடுத்த அழுத்தத் தில், தயக்கம் பறந்தோட ''ஹான்... நான் தக்காளி சூப்பா? ம்ஹூம்... எனக்கு தக்காளி சூப்பே பிடிக்காது... இனிக்கும்... உவ்வே!'' என மடாரென வந்து விழுந்தது சிகப்பியின் எதிர்ப்பு.

மடாரென என வந்த பந்தில் கிளீன் போல்ட் ஆகாமல், சற்றே இறங்கி... காற்றின் வேகத்தில் வந்த பந்தை லெப்ட் சைடில் அடித்தான் அந்த ஆட்டநாயகன்.

''ஆனா... எனக்குப் பிடிக்குமே? இனிப்பும் காரமும் சேர்ந்த மாதிரி... அதில மொறு மொறு பிரட் துண்டைப் போட்டா... இன்னும் அலாதி ருசி!'' என்றபோது, அதில்

பொதிந்திருந்த உள்குத்தில் பந்து மின்னல் வேகம் எடுத்தது.

''உங்களுக்குப் பிடிச்சா? என்னைத் தானே கூப் பிடுறீங்க? அதெல்லாம்... கூடாது!'' சிணுங்கிவிட்டது, சிகப்பியின் வெட்கம்!

சிகப்பியின் குரல் இயல்பு நிலைக்குத் திரும்பிக் கொண்டிருந்த அதே சமயம்,

''ஹே... தக்காளி... சாரி மா! இப்போ... உன் கூட சரிக்கு சரி பேச முடியாம... எனக்கு ஒரு லேசர் சர்ஜரி போஸ்ட் ஆகியிருக்கு. நான் அவசரமா போகணுமே? அப்புறம் கூப்பிடவா?'' என்றான் கருப்பையா லேசான கெஞ்சலுடன்.

என்ன சொல்வது என்று தெரியாமல், சிகப்பி திகைத் துப் போனாள்!

தனது பல நாள் தவிப்பு நிறைவேறிவிட்டது என்ற நிம்மதியில் ஓர் தடைக்கல் விழுந்தது போல் இருந்தது!

ஆனால், தன் பதிலுக்காக அவன் காத்திருப்பது புரிய ''ஹோ... சரி வச்சுடுறேன்'' என்றவள், அவனது பதிலைக் கூடக் கேட்காமல் அழைப்பை வைத்துவிட்டாள்.

ஏனோ மனம் வாடிப் போயிற்று!

அவனது குரலிலிருந்த உற்சாகம் கொடுத்த சந் தோஷத்தில் திளைத்திருந்த மனம் மீண்டும் சுணங்கிப் போனது!

''திரும்ப அழைக்கிறேன்'' என்ற அவனது வார்த்தை யில் லேசாய் நிம்மதி அடைந்தாலும் அவன் பாதியில் வைத்த சுணக்கத்திலேயே சுருண்டு போனது!

படுக்கையில் சோர்ந்து போய் படுத்திருந்த சிகப் பியை, அரை மணி நேரம் சென்று சந்தித்தான் அவளது தம்பி.

''ஹே... என்ன சோப்பி! ஒரே கொஞ்சல்ஸ் போல... என்ன சொன்னார் அத்தான்?''

''இப்போ ஹாப்பியா? ஒரே குஷி மூட்ல இருக்கியா? எனக்கு KFC-ல ட்ரீட் தா... சோப்பி... ப்ளீஸ்... ப்ளீஸ்!'' அரை மணி நேரத்தில் ஆச்சியும் அயித்தானும் குரு மணாலியில் குளுகுளு... கிளுகிளு டூயட் பாடியிருப் பார்கள் என்றெண்ணினான் போலும்!

''வேணாம்... நானே செம எரிச்சல்ல இருக்கேன். அப் படியே ஓடிப்போய்டு!'' எனப் பல்லைக் கடித்த சிகப் பியைப் பார்த்து, ஒரு நிமிடம் மிரண்டு போனவன், மெது மெதுவாக விவரம் கேட்டான்.

அவளும் ''தக்காளி சூப்'' தவிர்த்து விவரம் சொன்னாள்!

முடிவில், ''ஹே லூசு... இதுக்கே இப்படியா? அத் தான்... ஒரு பிஸியான டாக்டர்... சோப்ஸ்! அவரோட வேலை... தள்ளிப்போடக்கூடிய வேலையா சொல்லு? சர்ஜரி முடிந்தது... அவரே கூப்பிடுவார் பாரேன்'' என்று ஆறுதல் கூறியவனுக்குமே, கருப்பையாவின் அழைப்பு வர வேண்டுமே என்ற பிரார்த்தனை மனதிலிருந்தது.

ஆனால், தம்பியின் பிரார்த்தனையோ, தமக்கையின் எதிர்பார்ப்போ ஈடேறவில்லை! அடுத்த நாள் மாலை வரையிலும்!

''ஹே சோப்ஸ்! உன்னோட அயித்தான்... நம்மள மாதிரி ஜேம்ஸ்பான்ட் இல்லை போல...'' என்றான் சக்தி, திடீரென்று.

''என்டா படுத்துறே? எனக்கே... எதைப் பார்த்தாலும் எரிச்சலா வருது? நீ வேற...''

''எரிச்சல் வந்து வந்து... ஏற்கனவே மக்கா இருக்க உன் மூளை மரத்துப் போச்சு போல... லூசு... லூசு.''

''சும்மா... சும்மா... ''லூசு'' சொல்லாத சக்தி! எனக்கு அழுகை வருது!''

''எதுக்கு அழுகை வருது? சரியான கிராக்கு பண்டாரம் சோப்பி நீ! கல்யாணம் நிச்சயமானதிலிருந்து... ரொம் பவே தொட்டா சிணுங்கி ஆகிட்டே! நோ... சோப்பி! உன் உடம்புக்கும்... முக்கியமா என் வம்புக்கும் அது ஒத்தே வராது... சொல்லிட்டேன்!''

''சரி... என்னன்னு சொல்லித் தொலை!''

''ஓகே... விழுந்து கிழுந்து கடிச்சிடாதே! நான் நினைக் கிறேன்... நம்ம வீட்டு நம்பர் அத்தானுக்குத் தெரியா துன்னு. நம்மள மாதிரி... எல்லோ பேஜஸ்... அடியாள்! தொடர்பெல்லாம் இல்லாததால் தான் போன் பண்ணாம இருக்கார்'' ஒருவழியாக தன் மூளையைக் கசக்கிப் பிழிந்து ஓர் பதிலைச் சொன்னான் சக்தி.

''எதுனாலும்... போடா... என்னைக் கூப்பிடவே இல்லை!'' சலித்துக் கொள்ளத்தான் முடிந்தது சிகப்பி யால். கூடவே, தனக்குப் பிடித்தமான பவளமல்லி செடி யின் கீழே அமரவும்!

அந்த நேரம், வீட்டிற்கு வந்த சொக்கலிங்கம் ''சிகப்பி... சிகப்பிம்மா'' என்றவாறே தோட்டத்திற்கு வந்தார்.

சிகப்பியின் அருகே அமர்ந்தவர், ''நாளைக்கு மாப் பிள்ளையோட ஆச்சி... ரெண்டு பேரும் காஞ்சிபுரம்

போய்... உனக்கு சேலை எடுக்கப் போறாங்களாம். உன்னையும் கூட்டிப்போகட்டுமான்னு என்கிட்ட கேட் டாங்க... கட்டிக்கப் போறவ நீ... உனக்குப் பிடிச்ச மாதிரி இருந்தா எல்லாருக்குமே சந்தோஷமில்லையா? அதான் சரின்னு சொல்லிட்டேன்!'' என்றார் மகிழ்ச்சியுடன்.

தன் பெண்ணின் விருப்பத்தை முன்னிறுத்தி, அவர்கள் தன்னிடம் கேட்டதிலேயே தந்தையின் மனம் குளிர்ந்துவிட்டிருந்தது.

அதிலும், அவர்கள் மட்டுமாய் அழைக்காமல், அடுத்ததாய் மெய்யம்மை ஆச்சியும் அழைத்து ''தம்பி! பட்டுச் சீலை... போக மத்த சீலை எடுக்க... பொண் ணைக் கூட்டிக்கிட்டா போதும்ன்னு எல்லாரும் சொல் றாக. ஆனா, பட்டுச் சீலை தானே... அவ எங்க வீட்டு சீரா மொத அணியப் போறது? அது... அவ விருப்பமா இருக்கட்டும்ன்னு நான் நினைக்குதேன். தேவியோட... சிகப்பியை அனுப்பி வைக்கிறீகளா? ஆத்தா... அப்புச்சி... உமையா... எல்லார்கிட்டயும் ஒரு வார்த்தை கேட்டுக் கிட்டு... அனுப்பி வைங்க. நானும் சிகப்பியை (பெரிய சிகப்பி) ஊரில பார்த்தாக்க சொல்றேன்'' என்றார் கரி சனமாய்.

வீட்டினர் அனைவருக்கும் பெண்ணின் புகுந்த வீட் டார் சொன்னது பிடித்தமையால், சிகப்பியிடம் விஷ யத்தைக் கூறி போகுமாறு கூறினர்.

சிகப்பியோ ''தனியாவா அப்பா! நீங்களும் வரீங்களா?'' என்றாள் ஒருவிதப் பயத்துடன்.

''அப்பா... வந்தா நல்லா இருக்காது சிகப்பி! அவுக... வீட்டுப் பொம்பளைகளா வரது...''

''அப்போ... அம்மா?''

''அம்மா... அங்க வெள்ளிச் சாமான் பிரிச்சிட்டு இருக்கா, சிகப்பி! கூடக் குறைய இருக்கிறது பார்த்து... ஏதாவது செய்யக் கொடுக்கணும். ரொம்ப சுணங்க முடியாதே...''

''என்னப்பா...''

''சரி... சக்தியைக் கூட்டிட்டுப் போ! இப்போ சந் தோஷமா?''

''ஹ்ம்ம். சரி! அவங்க பக்கம் யாரு யாரு வருவா?''

''உங்க நாத்தனார் ரெண்டு பேரும் வருவாங்க. ஸ்கூல் லீவ்ங்கிறதால அவங்க பசங்களும் வருவாங்க போல. ஆம்பிளை துணைக்கு... வள்ளியம்மை வீட்டுச் செட்டி யார் வருவார்.''

''ஹோ! அவங்க அப்பத்தா?''

''ம்ஹூம். அவங்க வரலைம்மா. உங்களுக்குப் பிடிச் சதா... எடுக்கச் சொன்னதோட விட்டுட்டாங்க போல!''

''சரி... அப்பா! எத்தனை மணிக்கு?'' என்று விவரம் கேட்டு, அதன்படி அடுத்த நாள் காலையில் அழகாய் தயாராகிவிட்டாள் மகள்.

இளம் நீல வண்ண உடையில் வெண்ணிறத்தின் சாயல் பூக்களாய் அங்காங்கே தெளித்திருக்க, நடு முதுகு வரை படர்ந்தகூந்தலை இறுகப் பின்னி, வீட்டில் பூத்த ஜாதி மல்லிப்பூவை ஜடையில் நீளமாய் தொங்கவிட்டு, ஒற்றை வைரம் மின்னியதோடும், மெலிதாய் ஓர் சங் கிலியும், வலது கையில் சின்ன வைர ப்ரேஸ்லெட்டும், இடது கையில் பாஸ்ட்ட்ராக் வாட்ச் ஒன்றும் அணிந்து

வந்த மகளைப் பார்க்க சொக்கலிங்கத்திற்குப் பூரிப்பாய் இருந்தது. அதுவும், அதிகாலை ஆறு மணிக்கெல்லாம் தயாராகி கீழே வந்துவிட்டிருந்த மகளைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

இதுநாள் வரை, காலை ஏழரை மணிக்கு எழுவதற்கே ''சிகப்பி... எழுந்திரி!'' எழுந்திரு சிகப்பி!'' என்று ராகம் பாட வேண்டும்! அப்படியிருக்கையில் மகளின் திடீர் பொறுப்பு வியப்பாகவே இருந்தது!

ஆனால், வியப்பையும் மீறி அங்கே ஓர் யோசனை ஓடிக் கொண்டிருப்பதை உணர்ந்த சொக்கலிங்கம் ''என்னம்மா? ஏன் ஒரு மாதிரி இருக்கே? மாப்பிள்ளை வீட்டு ஆளுங்களோட... முதன்முதலா போறோமேன்னு பயமா இருக்கா?'' என்றார் வாஞ்சையாக.

''ஹ்ம்ம்... அதுப்பா... அது... வந்து... எனக்கு லைட்-டா பசிக்குது! காஞ்சிபுரம் போய் தான் சாப்பிட ணுமோ... அதுவரை எப்படி சமாளிக்கிறதுன்னு யோசனை!''

சட்டென சிரித்த சொக்கலிங்கம், ''அப்பா... பூஸ்ட் கலந்து தரேன்!'' என்றார். அதன்படி, அவர் கொடுத்த பூஸ்ட்டை ஒரே மூச்சில் குடித்தவள், ''தேங்க்ஸ்பா! ஒரே ஒரு... மில்க் பிகிஸ் பாக்கெட் இருக்கான்னு பாருங் கப்பா... இன்னும் பசிக்குது'' என மீண்டும் அவரையே ஏவினாள்.

ஒருவழியாக ஒரு டம்பளர் பூஸ்ட், ஒரு பாக்கெட் மில்க் பிகிஸ், ஒரு ஆப்பிள் ஆகியவற்றை அவள் சாப் பிட்டு முடித்திருந்தபோது, சக்தி கீழே வந்தான். அவன் வருவதற்காகவே காத்திருந்தார் போல், வள்ளியம் மையின் வண்டியும் வீட்டினுள் நுழைந்திருந்தது.

நல விசாரிப்பின் பின்னர், தேவி தேவியின் குழந்தைகள், வள்ளியம்மை, வள்ளியம்மையின் கணவர், அவளது வாண்டு, சிகப்பி மற்றும் சக்தியை ஏற்றிக் கொண்டு, அவர்களது Audi Q7 பறந்தது.

காஞ்சிபுரம் போகும் வரை, பிள்ளைகளின் அட்டூழியத்தில் Audi Q7 கொஞ்சம் ஆடித்தான் போனது!

அதன் நடுவே, ''அப்பத்தா பதினாறு பட்டுச் சேலை எடுக்கச் சொல்லியிருக்காங்க'' என்றார் தேவி.

''பதினாறா? எனக்கு ஒரு புடவையே கட்டத் தெரியாதே! எப்படி பதினாறைக் கட்டுவது?'' என சிகப்பியின் கற்பனை வேகமெடுக்க,

''காஞ்சீபுரத்தில் பத்தோ பதினொண்ணோ மட்டும் எடுத்துக்கலாம். மீதியை சென்னையில உனக்குப் பிடிச்ச மாதிரி எடுத்துக்குவோம்...'' இது வள்ளியம்மை.

''அப்புறம்... சில்க் காட்டன், ஜர்தொஷி வொர்க் பண்ணின டிசைனர் சாரீ, பெங்காலி காட்டன், சிந்தெடிக், வீட்டுக்குக் கட்டிக்கிற நூல் புடவை... எல்லாம் சென்னையிலேயே எடுத்துக்கலாம்... என்ன சிகப்பி?''

''ஆஹா! தினம் தினம் புடவை தானா? அதைக் கட்டி விடுறதுக்கு அம்மா வேணுமே? அவங்களால எப்படி... தினம் தினம்... சென்னையில இருந்து கோட்டையூருக்கு வர முடியும்... கட்டி விடுறது கூட ஓகே... ஆனா... எனக்கு சேலையை மடிக்கத் தெரியாதே? என்ன செய்றது? அதுக்கு... அப்பத்தா வருவாங்களா?'' - சிகப்பியின் கற்பனைக் குதிரை விண்ணை நோக்கி மின்னலென பாய்ந்து கொண்டிருந்தது.

அது அவள் முகத்தில் பிரதிபலித்ததன் விளைவாக, ''சுடிதாரும் வாங்குவோம், சிகப்பி! நீ... வீட்டில் சுடிதார் போட்டுக்கலாம்'' என்றார் வள்ளியம்மை சிரிப்புடன்.

''அப்பத்தா... அந்தக் கால மனுஷினாலும், மாறி வர பழக்கத்தை ஒத்துக்கிற மனப்பான்மை உண்டு. டெல்லி டூர் போயிட்டு வந்தப்போ... எனக்கே சுடிதார் வாங்கிட்டு வந்தாங்கன்னா பார்த்துக்கோ!'' என்ற தேவியின் குரல் சிகப்பியின் பயம் போக்கும் வண்ணமிருந்தது.

''நைட்டி மட்டும்... உங்க ரூம்-குள்ள போட்டுக்கோ! மத்தப்படி... நீ வீட்டில சுடிதார் போட்டுக்கலாம். ஒரு இருபத்தியொரு சுடிதார் போதுமா? இல்லை முப்பத்தியொண்ணா வாங்குவோமா?'' என்றார் வள்ளியம்மை.

''இவங்களுக்கு ஒண்ணு... ரெண்டுன்னு சின்ன அளவிலேயே யோசிக்கத் தெரியாதா?'' என்றிருந்தது சிகப்பிக்கு.

''மொத்தமா எத்தனை... டாஸ்... வாங்கணும்... அ...'' எனத் தடுமாறியவள், ''உங்களை எப்படி கூப்பிடறது?'' என்றாள் சிறு தயக்கத்துடன்.

''முறைப்படி ''அயித்தியாண்டி''ன்னு கூப்பிடணும்'' - தேவியின் வாக்கியம் பாதியைக் கடந்திருந்த போதே,

''என்னது? ஆண்டியா? ஆண்ட்டியைத் தான் அப்படி சொல்றாங்களா? ஆனா... அது இங்கிலீஷ்காரங்க கூப்பிடறதாச்சே? அதெப்படி... நம்ம பக்க முறையாகும்'' சிகப்பியின் குதிரை ரேசில் முந்திக் கொண்டிருந்தது.

''ஆனா... அப்படிக் கூப்பிட்டா ரொம்ப அந்நியமா இருக்கும். அதனால், ''அண்ணி''ன்னு கூப்பிடு! அப்பத்

தாவுக்குப் பிடிக்காது தான்... இருந்தாலும் நான் பேசிக் கிறேன்'' என்று முடித்தார் அவர்.

''ஆன்ட்டி'' ஆராய்ச்சியிலிருந்து விடுபட்ட உணர்வில், ''மொத்தமா எத்தனை... டிரஸ்... வாங்கணும் அண்ணி'' என்றாள் சிகப்பி மீண்டும்.

''நூற்றியொண்ணு கணக்கு... அதை நாம எப்படி வேணும்னாலும் பிரிச்சுக்கலாம். பட்டுச்சீலை மட்டும் கண்டிப்பா பதினாறு இருக்கணும். ஏன்னா... ஊரில இருக்கப் போற இல்லையா? பங்காளி வீட்டுக் கல்யாணம்... கோவில்... பூசைன்னு நிறைய இடத்திற்குக் கட்டிட்டுப் போக வேண்டியிருக்கும். மீதி கணக்குக்கு... உன் இஷ்டப்படி எடுத்துக்கலாம்'' என்றார் பெரிய நாத்தனார்.

அந்த மலைப்பிலேயே வந்த சிகப்பிக்கு, வள்ளியம்மையின் கைப்பேசியில் வந்த அழைப்போ, ''வந்துட்டே இருக்கோம்டா. உன் பெரிய ஆச்சி... அவ மக்களோட கிளம்ப லேட் ஆகிடுச்சு. நீ... அங்கனவே இரு... நாங்க வந்திடுவோம். ஏங்கிறேன்... இன்னும் அரை மணி நேரத்தில் போய்டுவோமா? ஹ்ம்ம்... சரி... இன்னும் இருபது நிமிஷத்தில் அங்க இருப்போம்'' என்ற அவளது பதிலோ மனதில் பதியவே இல்லை.

அவள்... சேலைகளின் பிரிவு எண்ணிக்கையிலேயே இருக்க, காஞ்சி காமாட்சி கோவிலில் வண்டி நின்றதை கூட அவளால் உணர முடியவில்லை.

''அக்கா...'' என சத்தமாய் அழைத்து, ''கண்ணைத் திறந்துட்டே தூங்காதே! இறங்கு!'' என அடிக்குரலில் சீரிய சக்தியின் குரலில் திகைத்து விழித்தவள், சட்டென இறங்கினாள்.

காரின் படியில் கால் வைக்கிறேன் பேர்வழி என்று, காற்றில் வைத்து அவள் இறங்கிய அழகில், லேசாய் தடுமாறியது சிகப்பியின் மேனி.

''பார்த்து... பார்த்து!'' என்ற குரலோடு அருகே வந்து, அவளது கைப்பற்றி நிறுத்தியவன், கருப்பையா!

''நீங்களா?'' என்ற சிகப்பியின் வாய் பிளந்த நிலையிலேயே இருக்க,

''நானே தான்! உன்னை ''ஆச்சி'' ஆக்கப் போகும் கருப்பையா பழனியப்பனே தான்!'' என்றான் அவன், அதே சிரிப்புடன்.

''பெரிய ரைமிங்! கூப்பிடறேன்னு சொல்லிட்டு ஏமாத்தின அதே... கண் டாக்டர் தான் என்பதையும் சேர்த்துக்கோங்க!'' என்றாள் சிகப்பி சிறு கோபத்துடன்.

''அடடே! தக்காளி சூப்-ல ஒரு கிலோ பெப்பரை கொட்டின பிரகஸ்பதி யாரோ?''

''வேற யாரு... நீங்களே தான்!''

''என்னை... ஒரே நாளில் ''பிரகஸ்பதி'' ஆக்கிட்டே! போகுது போ... இல்லைம்மா... அன்னைக்கு அந்த சர்ஜரி ரொம்ப சிக்கலா போச்சு. அது முடியவே... ராத்திரி ஒரு மணி ஆகிடுச்சு. அப்புறம் எப்படி? அடுத்தும், அப்பத்தா... நிறைய வேலை கொடுத்துட்டாங்க. அதான் நேரிலேயே வரோமே... எதுக்கு போன் பண்ணிக்கிட்டுன்னு விட்டுட்டேன்'' என்றான் கருப்பையா சமாதானமாய்.

''நீங்க... இங்க வந்தது அப்பத்தாவுக்குத் தெரியுமா?'' - சட்டென சூழ்ந்த பயத்தில் நடுங்கியது சிகப்பியின் குரல்.

''ஹே! அப்பத்தா... பார்க்கத் தான் ஸ்ட்ரிக்ட்! ஆனா... ரொம்ப ரொம்ப நல்லவங்க!'' என அவளது பயத்தை முதலில் போக்கிவிட்டு,

''அப்பத்தாக்கு... ஒரு கான்ஃபிரன்ஸ் விஷயமா சென்னை வரேன்னு தெரியும்... காஞ்சிபுரம் வரது தெரியாது!'' என்றான் அவன், அசால்டாக.

''ஹய்யையோ! தெரிஞ்சா... பெரிய பிரச்சனை ஆகிடும்... வேணாம்'' என சிகப்பி நடுங்க,

''இந்த த்ரில் கூட இல்லன்னா எப்படி... அப்பத்தா சொல்லை மீறி போன்ல பேசவா செய்றோம். இல்லையே? யாருக்கும் பாதிப்பில்லாத சின்னச் சின்ன அத்து மீறல்கள்... வாழ்க்கையில் அவசியம்'' என்றான் அந்த மருத்துவன்.

கைப்பேசியில் பேசிக் கொள்ளக் கூடாது என்ற அப்பத்தாவின் வரைமுறைகளை மதிப்பதன் அடையாளமாக, ''செல்போன் நம்பர் தரீங்களா?'' என்று சிகப்பி கேட்டதற்கு,

''வேண்டாம் சிகப்பி! அப்பத்தாவோட வார்த்தையை ஒட்டுமொத்தமா மீறினதா இருக்கவேண்டாம்... சின்ன அத்து மீறலோட நிறுத்திப்போம்'' என்று மென்மையாகவே மறுத்துவிட்டான் கண்ணன்.

அதற்குள் ''போதும்டா பேசினது... கோவில் போயிட்டு... கடைய எட்டிப் பார்த்தாத்தான்... ராத்திரி பன்னிரெண்டு மணிக்குள்ள வீடு திரும்ப முடியும்'' மூத்த ஆச்சியின் குரல் அதிகாரமாய் சத்தமிட்டது.

''இல்ல... தேவிக்கா! எல்லா கடையும்... ஒன்பதரைக்குத்தான் திறப்பாங்களாம்! மெதுவா போகலாம்!'' என்றான் சின்னவன்.

இருப்பினும், பெரியவளின் வார்த்தையை மதித்து, கோவிலுக்குள் நடந்தன அந்த தம்பியின் கால்கள்.

அதன் பின்னர், தெய்வ தரிசனம் நடந்தேற, மெல்ல சிகப்பியை தன்னுடன் நடத்திக் கொண்ட கருப்பையா,

''சிகப்பி! உன்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்'' எனத் தொடங்கினான்.

''ஆஹா... இவனுக்கு ஒரு ''காதலி'' இருப்பாளோ... வெளிநாட்டில் வேறு படித்திருக்கிறான்... கண்டிப்பாக ஒரு வெள்ளைக்காரியாக தான் இருக்க முடியும்... அவளைப் பற்றி... அவளிடம் காதலைச் சொன்னதைப் பற்றி...'' விஷயத்தைக் கேட்காமலே கற்பனை களைகட்டியது.

அவளது குறுக்குக் கற்பனையை உணராமல், ''நான் ஏன் தெரியுமா கண் டாக்டருக்குப் படிச்சேன்?'' என்றான் கண்ணன்.

''ஹான்! எதுக்காக இருக்கும்? மித்த பாகத்திற்குப் படித்திருந்தால்... நோயாளி எல்லாரும் கண் கொண்டு பார்க்க முடியுமே? கண்ணுக்கு வைத்தியம் பார்த்தால்... அவர்களால் இவன் செய்யும் தப்பைக் கண்டுபிடிக்க முடியாது என்று தானோ?'' - மீண்டும் லைட்-செட், மைக் - செட் போட்டு, கற்பனை ஏகத்திற்கும் கூத்தாடியது.

''எங்கம்மா... கண்ணில் ஏற்பட்ட ஒரு பிரச்சனையால் இறந்து போய்ட்டாங்க. அதனால தான்!''

''அந்தக் காலத்தில சரியான சிகிச்சை கொடுக்காம விட்டதில், சின்னதா வந்த கண் பிரச்சனை நரம்புகளை முடக்கி... அவங்க உயிரையும் எடுத்திருச்சு'' என்றான் மறையாத வலியுடன்.

''ஹய்யோ! எப்போ...'' அவன் வலியில் சிகப்பிக்கும் மனம் வலித்தது போலிருந்தது.

''என்னோட ஆறாவது வயசில... அந்த வயசில என்ன விவரம் தெரியும் சொல்லு... எங்கம்மாவோட முகமே என் மனசில அவ்வளவா பதியல... ஆனா... எப்பவும் அழியாத ஞாபகமா அவங்க போட்டிருந்த பெரிய மூக்குத்தி... என் மனசில பதிஞ்சு போச்சு... சின்ன வயசில நான் தூங்கும் போது, அந்த மூக்குத்தியைத் திருகிட்டே தூங்குவேனாம்!''

''குறிப்பா... ஏன் மூக்குத்தின்னு தெரியல... எங்க ஆயா... எங்க அப்பத்தா... எங்க ஆச்சி... யாருமே மூக்கு குத்திக்கிட்டது இல்லை... அம்மா மட்டும் தான்! அதனால... எனக்கு ''அம்மா''ன்னா... அது தான் ஞாபகம் வரும்.''

''எங்க அப்பத்தாகிட்ட கேட்டு... அந்த மூக்குத்தியை வாங்கி வச்சிருக்கேன்.''

''அதனால தான்... உன்னை மூக்குக் குத்திக்கச் சொன்னேன். உனக்கு சங்கடமா இருந்தா வேண்டாம்'' என்றவன், அவனது அயித்தான் அழைக்கவும், வேகமாய் சென்றுவிட்டான்.

அதன் பின்னர், அனைவருமாய் உணவுண்ண சென்று விட்டு, புடவை கடைக்குச் சென்றனர்.

தம்பியின் கல்யாணத்திற்கு என்று இரு ஆச்சிகளுக்கும், அப்பத்தாவுக்கும், சிகப்பிக்கும் ஒரே மாதிரியாக ஓர் புடவைக்கு ஆர்டர் கொடுத்துவிட்டு, சிகப்பியின் சேலை வேட்டையில் இறங்கியது குடும்பம்.

சக்தியும், வள்ளியம்மையின் கணவரும் சில நிமிடங்களில் கழண்டு கொள்ள, கருப்பையா மட்டுமே பொறுமையாக பெண்களுடன் இருந்தான்.

கூடவே, தன் அயித்தானையும் மச்சினனையும் கவனிக்கவும் மறுக்கவில்லை.

சக்திக்கு ஏற்ப அவனுடன் நட்பு உறவாடியவன், பிறர் அறியா வண்ணம் ''தக்காளி சூப்'' என்று சிகப்பியை சீண்டவும் மறக்கவில்லை.

மறக்க முடியாத நாளாய் அந்த நாள் கழிய, அடுத்த நாள் காலை தன் அன்னைக்கு அழைத்த சிகப்பி ''அம்மா! எனக்கு மூக்குத்தி வாங்கிட்டீங்களா? நான்... அங்க வந்தும் மூக்கு குத்திக்கப் போறேன்! அதனால, வாங்கலைன்னா வாங்கி வச்சிடுங்க. அஞ்சு பிஞ்சு வச்ச மாதிரி... கொஞ்சம் பெருசா இருக்கணும் சரியா? இல்லைன்னா விடுங்க... நானே வந்து செலக்ட் பண்றேன்'' என்றாள் ஏவலாக.



7

''மூக்குத்திப்பூ மேலே... காத்து உட்கார்ந்து பேசுதடி!'' என்று கருப்பையா பாடுவது போல் அமைந்த சிகப்பியின் கற்பனைக்கு மேலும் தீனி போடும் வண்ணம், அந்த வார இறுதியில் கோட்டையூர் சென்ற சிகப்பி மும்முரமாக மூக்குத்தித் தோவில் ஈடுபட்டிருந்தாள்.

காரைக்குடியில் இருக்கும் புகழ்பெற்ற வைர வியாபாரியான ராஜேந்திரன் சேட் என்பவர் ''ஒத்த வைரமா... ஒரு சின்ன மூக்குத்தி வச்சிருக்கேன். பார்க்கிறீங்களா... தங்கச்சி'' என்று கேட்கவும், சிகப்பியின் தலை வேகமாய் ஆடியது - இடம் வலமாக.

''இன்னும் சின்னதா வேணுமா தங்கச்சி? பொட்டு மாதிரி ஒண்ணு இருக்கு... அரை சென்ட்-ல பண்ணிடுவோமா?'' இதற்கும் பலமாய் ஓர் மறுப்பே வந்தது.

அவளது மறுப்பில் வேறு எண்ணி, ''தங்கச்சிக்கு வைரத்தில வேணாமா? ரூபி... மரகதம்... இப்படி பார்ப்போமா? ஆனா... எல்லா டிரஸ்க்கும் ஒத்து வராதே...'' என்றார் அவர்.

''ம்ஹூம். எனக்குப் பெருசா மூக்குத்தி வேணும். நடுல ஒரு பெரிய வைரம் வச்சு... அதை சுத்தி குட்டிக் குட்டியா இருக்குமே... அப்படி! அந்தக் காலத்து ஆச்சி-ங்க எல்லாம் போடுவாங்க இல்லை... அப்படி'' என்றாள் சின்னவள் அழுத்தமாய்.

கேட்டிருந்தவருக்குப் பெரும் ஆச்சரியம். இந்தக் காலத்தில் பெண்கள் மூக்குத்தி அணிவதே அரிதான ஒன்றாய் இருக்கையில், அதிலும் மூக்கு குத்தியிருக்கும் இளம்பெண்கள் சிலர் சிறியதாய்... பார்ப்பதற்கு பாந்தமாய் இருக்கும் ஒற்றை வைரத்தை விரும்பும் மனநிலை, நகை வியாபாரியான அவருக்கு நன்றாகவே தெரியும்.

அப்படியிருக்கையில், அணிந்திருக்கும் சுடிதாரிலேயே தன்னை நகரத்தில் வளர்ந்தவளாக காட்டிக் கொண்ட சிகப்பி, பெரிய வைரம் வைத்து மூக்குத்தி கேட்டது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

மேலும் இரு முறை உறுதி செய்துவிட்டு, இன்னும் இரண்டு நாட்களில் செய்து தருவதாய் கூறினார் அவர்.

தொடர்ந்து, ''வீட்டுக்குப் போட்டுக்க... சின்னதா ஒண்ணு செய்திடவா?'' என்று கேட்க,

''இது வீட்டுக்குப் போட்டுக்கத் தான்!'' என்றாள் சிகப்பி, சாதாரணமாக.

மகளின் வார்த்தைகளில் பெருமிதம் கொண்டாலும், வீட்டிற்கு வந்ததும் ராஜேந்திரன் சேட்-டை அழைத்து ''பெரிய வைரமா... ஒத்தை வைரம் வச்சு ஒரு மூக்குத்தியும், சின்ன வைரம் வச்சு ஒண்ணும் செய்துடுங்க அண்ணே!'' என்று கூற மறக்கவில்லை, உமையாள் ஆச்சி.

மூக்குத்தி வாங்கும் பரபரப்பில் சென்னையிலிருந்து கிளம்பி விட்டாலும், கோட்டையூர் வந்ததில் சிகப்பிக்கு சில பல சங்கடங்கள் அணிவகுத்தன.

முதலாவதாக, வீட்டுத் தொலைபேசி வளவு பட்டாளையில் இருக்கவே, யாருக்கும் அழைப்பது என்றாலும் அய்யா முன்னிலையில் தான் செய்ய வேண்டியிருந்தது.

அவளது கஷ்டக்காலத்தைக் கூட்டும் வகையில், அவளது கைப்பேசியில் டவர் என்பதை விளம்பரம் கொடுத்தே தேட வேண்டிய நிலை வேறு!

இந்த கஷ்டங்களுக்கு நடுவே, எங்கிருந்து கருப்பையாவிற்கு அழைப்பது?

அவனது கைப்பேசி என்றாலும், அவன் எடுத்ததும் யாராவது தோழியிடம் பேசுவது போல் பேசலாம்.

மருத்துவமனை எண் என்பதால், கண்டிப்பாக அவனது பேர் சொல்லித் தான் அழைக்க வேண்டியிருந்தது.

''போனில் பேச்சு என்பது கூடாது!'' என்று அப்பத்தாவின் கட்டளையை மீறி, அவனை அழைப்பது தெரிந்தால், அவனது அப்பத்தா அடிக்கிறார்களோ இல்லையோ... தனது அப்பத்தா அடி நொறுக்கி விடுவார்கள் என்ற பயமே சிகப்பியை தடுமாறித் திண்டாட வைத்தது!

இதையும் மீறி, அப்பத்தாவும் இரவு உணவு உண்டு கொண்டிருக்கையில் சாமர்த்தியமாக தப்பித்து வந்து, தொலைபேசியில் அழைத்தால், ''பீன்...பீன்'' என்ற ஒலியைத் தான் கால் மணி நேரம் ஒளிபரப்பியது தொலைப்பேசி!

எட்டிப் பார்த்த அழுகையின் காரணம் புரியாமல், மேலும் ஒரு முறை முயன்றவள், அங்கே மணி அடிக்கவும் சற்றே நிம்மதி அடைந்தாள்.

''டாக்டர்கிட்டப் பேசணும்'' என்று அவள் சொன்னவினாடி.

''சிகப்பி, நான் தான் பேசுறேன். இங்க ஒரு எமர்ஜென்சி. அப்புறம் பேசு!'' என்றதோடு வைத்து விட்டான் கருப்பையா.

''உன் ஆசைப்படி... மூக்குத்தி வாங்கியிருக்கிறேன். இன்னும் இரண்டு நாளில் மூக்குக் குத்திக் கொண்டு விடுவேன்'' என்ற நல்ல செய்தியை அவனிடம் சொல்வதற்காக மிகுந்த ஆவலுடன் காத்திருந்த சிகப்பியின் முகம் ஏமாற்றத்தில் தோய்ந்தது.

''ப்ச்...'' என்று காலை உதைத்துக் கொண்டு, இரண்டாம் கட்டு நோக்கி நடந்த மகளை, வளவு வாசலிலேயே வழிமறித்த உமையாள்.

''அவுக அப்பத்தா.... அம்புட்டுச் சொல்லியும்... எவ்வளவு நெஞ்சுரம் இருந்தா... இந்தக் காரியம் பண்ணுவே?''

''எங்கிருந்துடி.... இந்தத் திருகுதாளம் எல்லாம் படிச்சே?''

''பெரியவங்க வார்த்தையை மதிக்கத் தெரியாத வளாவா உன்னை நான் வளர்த்திருக்கேன்.''

''எல்லாத்திலயும்... சின்னப் புள்ளங்க மனசு கோணக் கூடாதுன்னு பெருந்தன்மையா நடந்துக்கிற ஆச்சி... இந்த விஷயத்தில இம்புட்டு கண்டிப்பு காட்றாக-ன்னா... அதில ஏதோ விஷயமிருக்குன்னு தெரிய வேண்டாம்?''

''இன்னும் கல்யாணத்திற்கு... நூறு நாளா இருக்கு? எண்ணிப்பார்த்தா... பன்னிரெண்டே நாள் தான். அதுக்குள்ள என்ன அவசரம்?''- உமையாளின் முகத்தில் கோபம் நர்த்தனமாடியது.

''அது... அதும்மா...'' - சிகப்பி திக்கிக் கொண்டிருக்கும் போதே,

''இனி ஒரு தடவை, மாப்பிள்ளை தம்பிக்கு... நீ போன் பண்றதைப் பார்த்தேன்?! கல்யாணமாகப் போற பொண்ணுன்னு கூட பார்க்காம... தோசைக்கரண்டில இரண்டு இழு இழுத்திடுவேன், ஜாக்கிரதை!'' என்ற மிரட்டலுடன்,

''ஒரே பொண்ணுன்னு உன்னை நானே கெடுத்துட்டேன் போல...'' என்ற புலம்பலும் இலவச இணைப்பாய் வந்து சேர்ந்தது.

அதன் பின்னர், சிகப்பி அம்மையார் தொலை பேசியின் பக்கம் மறந்து கூடச் சென்றாளில்லை! அவ் வளவு பயம்! அம்மாவின் மீதா... அல்லது தோசைக் கரண்டியின் மீதா என்பது அவளது குதிரைக்குத் தெரிந்த விஷயம்!

ஆனாலும், சும்மா இருக்க முடியாமல், காலையும் மாலையும் சிவன் தரிசனம் பெற கோட்டையூர் நகரச் சிவன் கோவிலுக்குச் சென்றார் ''ஆச்சி'' ஆகக் காத் திருக்கும் ''சிகப்பி தங்கச்சி.''

சிவன் தரிசனத்திற்கா? இல்லை முருகன் தரிசனத் திற்கா? முருகனின் ஆயிரம் நாமங்களுள் ஒன்று கருப் பையா என்பது உங்களுக்குத் தெரியும் தானே? இதுவும் சிகப்பியின் குதிரைக்கு மட்டுமே தெரிந்த விஷயம்!!

கோவில் கொண்ட பெருமான் கொடுத்த அருளை... தன் கோலம் மாற்றிய கோமான் கொடுக்கவில்லை என்பது சிகப்பியின் மனதை அலைக்கழிக்கவே செய்தது.

இந்தக் களேபரங்களின் நடுவே, சிகப்பிக்கு மூக்கு குத்த நாள் குறிக்கப்பட்டது.

ஆசாரியின் இடத்திற்கே சென்று, மூக்கு குத்திக் கொள்ளலாம் என்று கூறிய உமையாளை ''நம்ம வீட்டி லேயே வச்சுக் குத்தி விடட்டும்... உமையா! திரும்பி வாரையில.. புள்ள வலியோட வரவேண்டாமில'' என்று அடக்கினார் பெரிய சிகப்பி.

வீட்டிற்கு வந்த ஆசாரி, சுண்ணாம்பு தோய்த்த ஓர் குச்சியை எடுத்து வந்து, சிகப்பியின் வலது பக்க மூக்கில் சரியான இடம் பார்த்து ஓர் புள்ளி வைத்தார்.

''இந்த இடம்... சரியான்னு பார்த்துக்கோங்க, ஆச்சு'' என்று அவர் கேட்டதும், உமையாள் ஆச்சியும் சிகப்பி ஆச்சியும், சிகப்பியை சுற்றிச் சுற்றி வந்து பார்த்ததில் சிகப்பிக்கே சற்று திகில் உண்டாகியது.

அவர்கள் ''சரி'' என்ற வார்த்தையை முடிக்கக் காத் திருந்தவர் போல், மூக்குத்தியின் திருகாணியில் சிகப்பி யின் மூக்கைக் குத்தியே விட்டார்.

எதிர்பாராமல் ஏற்பட்ட வலியில் ''ஆ'' என்ற வீறிடல் வெளிப்பட, பெரியவர்கள் இருவரும் அவளது இரு கையையும் இறுகப் பிடித்துக் கொண்டனர்.

''வலிக்குது... வலிக்குது...'' எனத் துடித்த சிகப்பியின் கதறலைப் பொருட்படுத்தாமல், மூக்குத்தியை மாட் டியே விட்டார் ஆசாரி.

புதிதாய் முளைத்த மூக்குத்தி ஓர் கிரீடம் போல் காட்சியளிக்க, வலி வேறு அதை முள் கிரீடமாய் மாற் றியது.

''ஏதோ.... பெருசா மூக்கு மேல இருக்க மாதிரி இருக் கும்மா'' என்று அழுத சின்னவளை, சற்று நேரம் உறங் கும்படி அனுப்பி வைத்தார்.

அவளுக்குமே படுத்தால் நன்றாக இருக்குமோ என்று தோன்ற, படுக்கையில் விழுந்தவளுக்கு வேகமாய் முகத்தைத் திருப்பக் கூட பயமாக இருந்தது.

தொட்டுப் பார்த்தாலே வலி உயிர் போக, அசந்து மறந்து திரும்பிப் படுத்தால் வலி இருமடங்காய் மாறி யது.

அவன் பாட்டிற்கு செண்டிமெண்ட்டில் தாக்கி விட்டான்; இப்போது வலியைத் தாங்குவது அவனில்லையே?

அவனுக்காக... அவனது ஆசைக்காக என்று மூக்குத்தியை பெரிதாய் வேறு எடுத்தாகி விட்டது... பிள்ளையாரின் வயிறு போல் இவ்வளவு பெரிதாய் இருக்கிறதே?

இந்த நேரத்தில், கருப்பையா தன்னிடம் பேசாதது வேறு சிகப்பியை அநியாயத்திற்குத் தாக்கியது.

அவனது காரியம் - அதாவது அவள் மூக்குத்தி அணிவது மட்டும் சாத்தியமாகும் வரை தன்னிடம் பேசியவன், அடுத்ததாய் அவளைத் தொடர்பு கொள்ள முயலவே இல்லை என்பது பெரும் வருத்தத்தை உண்டு பண்ணியது.

நாத்தனார்களுடன் ஷாப்பிங் சென்ற போது கூட, தனக்குப் பிடித்த பிங்க் வண்ணத்தை விட அவனுக்குப் பிடித்த நீல வண்ணத்திலேயே புடவை, சுடிதார், ஏன் பொட்டு... தலைக்கு மாட்டும் கிளிப், ஹேர்பான்ட் என்று பார்த்துப் பார்த்து வாங்கியதற்கு எதிரொலியே இல்லாமல் போனது போல், அந்தப் புதுப் பெண்ணின் மனம் உடைந்தது.

மூக்கில் ஏற்பட்ட வலியை விட மனதில் வலி முகத்தில் அதிகமாய் தெரிய, சிகப்பியின் நடமாட்டம் வீட்டில் சுருங்கியது.

நெட்டி முறித்த கல்யாண வேலையில் பெரியவர்கள் இதை கவனிக்காமல் விட, அந்த வார இறுதியில் கோட்டையூர் வந்த சக்தியாலும் தமக்கையை தேற்ற முடியவில்லை.

அவனுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த வேலைகளில் அவன் தத்தளிக்க, மேலும் சிகப்பி ஒதுங்கினாள்.

இதனூடே, உமையாளின் தாயார் வீட்டில் கல்யாணம் சொல்வது, பங்காளி வீடுகளுக்குச் சென்று கல்யாணத்திற்கும் மாமாவேவிற்கும் அழைப்பு விடுப்பது என்று வேலைகள் முழு வீச்சில் நடந்தேறின.

திருமணத்திற்கு மூன்று நாள் முன்னர், முஹூர்த்தக்கால் நடும் நிகழ்விற்கு, நெருங்கிய சொந்தங்கள் வந்து விட, சிகப்பியும் வெளி வரத் துவங்கினாள்.

ஆனால், அவளது மாமன் மகள்கள் ''ஹே... இதென்ன பெரிய ஆச்சி மாதிரி.. மூக்கெல்லாம் குத்தியிருக்கே? மூக்கு குத்தினது கூட பரவாயில்லை.... அதில எதுக்கு இவ்வளவு பெரிய மூக்குத்தி?'' என்று கேட்டதும், மனம் வாடத் தான் செய்தது.

கூடவே, சக்தியும் ''அப்படியே, நம்ம... ஆயாவுக்கு ஆயாவுக்கு அப்பத்தா மாதிரி இருக்கா இல்லை?'' என்று கிண்டல் செய்தது வேறு, பெரும் எரிச்சலைக் கிளப்பியது.

அவளது எரிச்சலைப் பொருட்படுத்தாமல் நிமிடங்கள் களைய, சிகப்பியின் தாய் வீட்டுச் சீர் அடுக்கி முடிக்கப்பட்டது.

அடுக்கியிருந்த சாமானைப் பார்க்கையில் சிகப்பிக்கு மகிழ்ச்சி பொங்குவதை விட, ஒரு மாதிரி எரிச்சலே வந்தது.

இந்த சாமானிலும், சட்டியிலுமா நான் நன்றாக வாழப் போகிறேன்? தாலி கட்டப் போகும் புண்ணியவானுக்கு என் மேலிருக்கும் பிரியத்தில் அல்லவா நான் நன்றாக இருப்பது இருக்கிறது?

கல்யாணத்தைத் தான் இவர்கள் இஷ்டப்படி நடத்தினார்கள்! அதன் பின்னர், பெண்ணும் பிள்ளையும் புரிந்து கொள்ளும் வண்ணம் அவர்களைப் பேச வைப்பதை செய்தார்களா? இவர்கள் காலம் போல், பொண்ணும் பிள்ளையும் கல்யாணத்தன்று தான் பார்க்க வேண்டும் என்றால் எப்படி?

எனக்கென்று ஆசை இருக்காதா? பெரியவர்களான இவர்களுக்குத் தான் தெரியவில்லை... என் தம்பிக்கு... அவரது அக்காவிற்கு யாருக்குமேவா புரியாது... சை!

அவர்களை விடலாம், இந்தக் கருப்பையா யாருக்கும் பாதிப்பில்லாத அத்துமீறல்கள் செய்தால் தான் வாழ்வு ருசிக்கும் என்று வசனம் பேசி விட்டு, இவன் இருக்கும் அழகைப் பார்!

புதிதாய் திருமணமாகப் போகும் வாலிபன் மாதிரியா இருக்கிறான்? திருமணம் முடிந்து ஐந்து வருடமானது போல், பெண்டாட்டியோடு பேசக் கூட நேரமில்லாமல். சை!

இதில் ''தக்காளி சூப்'', ''வெங்காய பக்கோடா'' என்று வெறுப்பேற்றிக் கொண்டு.... சரியான ''தார் டின்!''

இவனுக்கு ''கண்ணன்'' என்று பேர் வைத்ததற்குப் பதிலாக ''ஹனுமான்'' என்று வைத்திருக்கலாம். இவனுக்கெல்லாம் ஒரு கல்யாணம்... சிகப்பியின் புகைச்சல் சரமாரியாய் தொடர, திருமணத்திற்கு முதல் நாளும் இனிதே விடிந்தது.

திருமணப் பெண்ணைத் தவிர அனைவருக்கும் வேலையிருக்க, உறவுகள் குவியத் தொடங்கினர்.

மதிய வேளையில் பங்காளிகளும், அய்யாக்கள் (பெரியப்பா - சித்தப்பா முறை வரும் தூரத்து சொந்தங்கள்) வீட்டு ஆட்களும் வந்து சேர, கல்யாண வீடுகளை கட்டியது.

மதிய உணவின் பின்னர், பங்காளி வீட்டுப் பெண்மணிகள் கோலமிடத் துவங்க, சிகப்பிக்கு அவர்கள் லாவகமாய் இட்டக் கோலத்தைப் பார்ப்பதில் பொழுது ஓடியது.

''மாப்பிள்ளை வீட்டில இருந்து... கழுத்திரு வாங்க வந்திருக்காங்க'' என்ற குரலில், ''மாப்பிள்ளை'' தான் வந்துவிட்டானோ என்று அலைபாய்ந்த கண்ணில், வெண்ணை விழாது சுண்ணாம்பு விழுந்தது போல் ''கருப்பையா'' வந்துவிடவில்லை.

அவனது சித்தப்பாவும், பங்காளி வீட்டுப் பெரியவர் ஒருவரும் வர, பெரிய வைரவன் செட்டியார் பெரிய வீட்டில் (சாமியறையில்) வைத்து கும்பிட்ட கழுத்திருவின் முப்பத்தியொரு உருப்படிகளை, ஓர் பட்டுத் துணியில் அழகாய் அடுக்கி, கூடவே எலுமிச்சம் பழம், பூ இரண்டு கன்னி வைத்து, தங்கள் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டு வந்த மாப்பிள்ளை வீட்டாரிடம் கொடுத்தார்.

அதன் பின்னர், மாப்பிள்ளை வீட்டிலிருந்து வந்த பெண்கள் சிகப்பிக்கு வாங்கிய பொருட்களை, அவளது சாமானோடு பரப்ப வந்தனர்.

அவர்களில் ஒருத்தியாய் வந்த வள்ளியம்மை - ''சிகப்பி, இதை கண்ணன் உன்கிட்ட கொடுக்கச் சொன்னான். தனியா போய்... படிப்பியாம்'' என்று காதுக்குள் குசுகுசுத்துவிட்டு, சேலை பரப்பச் சென்று விட்டாள்.

''ஏய், சிவப்பி! என்ன அம்சமா சேலை வாங்கி யிருக்காங்க... பாரேன்'' என்று உறவினர் கூறிய வார்த் தைகள் எல்லாம் காற்றில் பறக்க, கையிலிருந்த அந்த லெட்டரை எப்படா திறந்து பார்ப்போம் என்றிருந்தது, சிகப்பிக்கு.

சிகப்பியின் எதிர்பார்ப்பு மின்னல் வேகமெடுத்து அவ னது வார்த்தைகளைத் தேடிக் கொண்டிருக்க, தனிமை யில் அந்தக் காகிதத்தைப் பிரித்தால் - அந்தப் பெரிய வெள்ளைப் பேப்பரின் நடுவே இருந்தது ''தேங்க்ஸ்!'' என்ற வார்த்தை மட்டுமே!

அலைகடலென சீறி எழுந்த உணர்ச்சிகள் சட்டென வடிய, சிகப்பியின் மூளையில் மின்னல்!

அதன் விளைவாக, அந்தக் காகிதத்தைத் தண்ணீரில் நனைத்து, வேறேதாவது புதிதாய் தெரிகிறதா என்று அவள் பார்க்க, பேப்பர் நனைந்து பிய்ந்து போனது தான் மிஞ்சியது!

தன் செயலை எண்ணித் தானே நொந்து கொண் டிருந்த சிகப்பியை மேலும் நோகவிடாமல், ''சிகப்பி'' என்று அழைத்து விட்டனர், யாரோ!

அதன் பின்னர், பங்காளி வீட்டு ஆண்கள் மாற்று கட்டி, அரசாணிக் கால் நட, பங்காளி வீட்டு பெண்கள் திருமணம் நடக்கும் மணையிட்டு, தும்பு பிடித்துக் கோலம் போட்டு முடித்தனர்.

அவர்கள் செய்ததை கண்ணுக்குள் நிறைத்ததில், கருப்பையாவின் மேலிருந்த கோபம் சற்றே மட்டுப் பட்டுப் போனது.

அது மேலும் வளராமல், திருமண நாளும் விடிந்ததும் அதிகாலை மூன்று மணிக்கே சிகப்பியின் இனிமையான தூக்கம் களைய, திருமணக் கோலம் பூண்டாள் அவள்!

அதன் பின்னர், மின்னல் வேகத்தில் நேரம் பறக்க, கோட்டையூர் நகர சிவன் கோவிலில் இருந்த மாப்பிள் ளையை அழைக்க, சுற்றம் நட்பும் சென்றது.

தங்கள் வீட்டுப் பெண்ணரசியை மணம் முடிக்க வரும் கருப்பையாவை, மேளதாளத்தின் மத்தியில் ராஜாவைப் போல் அழைத்து வந்தனர் சிகப்பியின் தாய் விட்டார்.

மெய்யம்மை ஆச்சி - சடங்குத் தட்டை ஏந்திக் கொள்ள, தேவி பாலும் பானையும் எடுத்து வர, வள்ளியம்மையின் கையில் மிட்டாய்த்தட்டு இருக்க, சொந்தங்கள் சூழ சிகப்பியின் வீட்டை அடைந்தனர் மணமகன் வீட்டினர்.

மணமகள் வீட்டை அடைந்ததும், மணமகளின் தம்பி யான சக்தி தன் ஆயித்தானுக்குப் பூத்தூவி வரவேற்பு செய்ய, ''இருங்க... பெண் எடுக்கிக் காட்டணும்'' என் றனர் யாரோ.

கருப்பையா சற்றே தாமதித்து நிற்க, மெஜந்தா வண் ணத்தில் வெந்தய நிற பார்டர் போட்ட சேலையில் சிற்பமாய் கூட்டி வரப்பட்டாள், சிகப்பி.

பரபரப்புடன் காணப்பட்ட கருப்பையாவின் முகம், அவள் அணிந்திருந்த மூக்குத்தியைக் கண்டதும் சிற கின்றி வானில் பறந்தது.

மலர்ந்த அவனது முகத்தை நிமிர்ந்து பார்த்த சிகப் பிக்கும் மனம் நிம்மதி அடைந்த போதும், சட்டென

அவன் தன்னை நிராகரித்தது நினைவு வர, முகத்தைத் தாழ்த்தினாள்! அங்கே, கண்ணனின் முகத்தில் ஓர் முடிச்சும் விழுந்தது!



8

பெண் எடுக்கிக் காட்டியபோது நிகழ்ந்த ஓர் வினாடி பார்வை பரிமாறலில், கருப்பையாவும் சிகப்பியும் ஓர் ஊடல் நாடகத்தை நடத்தி முடித்திருக்க, கருப்பையா சுதாரிக்கும் முன்னர் சிகப்பியை உள்ளே அழைத்துச் சென்றனர் பெண் வீட்டினர்.

அவள் உள்ளே சென்றதும், தன் குடும்பத்தாருடன் வளவு வாயிலுக்கு வந்திருந்த கண்ணனை ஒரு நிமிடம் கூட ஆசுவாசமாய் அமரவிடவில்லை. அவனது அப்பத்தா!

''திருப்பூட்ட நேரமாச்சு. திருப்பூட்டுற தட்டை மாமக் காரகிட்ட கொடுங்க'' என்று அவர் குரல் கொடுக்க, அவர் எடுத்து வந்த திருப்பூட்டும் தட்டிலிருந்த புட வையை தேவி எடுத்துக் கொள்ள, மாலையுடன் மஞ்சள் குங்குமம் கழுத்திரு அடங்கிய தட்டு, சிகப்பியின் மாமன் மனைவியிடம் கொடுக்கப்பட்டது.

அதை எடுத்துக் கொண்டு, அவர் வளவில் அமர்ந் திருந்த பெண்ணரசிகளின் ஆசியைப் பெறத் துவங்க. அங்கே சிகப்பிக்கு கல்யாணப் புடவை கட்டப்பட்டது.

ஒரு வேளை, சுற்றப்பட்டது என்று சொல்ல வேண் டுமோ?

ஐந்து பெண்கள் சேர்ந்து சிகப்பியின் தளிர் மேனியை தடுமாறச் செய்து கொண்டிருக்க, அந்தக் களேபரத்திலும் நம் சிகப்பிக்குப் பசித்தது.

கோபம் என்றாலும், பயம் என்றாலும், படபடப்பு என்றாலும் சரி, இந்தப் பசி மட்டும் பஞ்சாய் பறக்கா திருந்தது சிகப்பிக்கே ஆச்சரியம் தான்.

கண்ணன் செய்த திருவிளையாடலுக்கு அவனைப் பார்வையிலேயே எரித்துவிட வேண்டும் என்ற நிலையி லிருந்த தன்னால், அவனை சரியாக முறைக்கக் கூட முடியவில்லையே என்ற ஆதங்கம் அவளுக்கு!

''பெரிய மன்மதன்னு நினைப்பு.... இவரு ஒரு சிரிப்பு சிரிச்சா... நாங்க உடனே எல்லாத்தையும் மறந்திட்டு இவரு பின்னாடியே போகணுமா... என்ன?''

''ஒரு போன் பண்ணத் துப்பில்லை... இதில சிரிப்பு வேற! இன்னைக்கு முழுசும்.... சிரிக்கவே கூடாது!''

''சிரிக்கிறது என்ன... அவர் பக்கம் பார்வையைத் திருப்பவே கூடாது!'' என்று கறுவிய நெஞ்சின் கோபத் தில், அவளுக்கு சாப்பாட்டின் மேல் ஆசை வராது என்று அவளாகவே முடிவு கட்டியிருந்தாள்.

ஆனால், ''என்னைக் கேளாமல் நீயாக எப்படி முடிவு செய்யலாம்'' என்று முரண்டிய அவளின் கற்பனைக் குதிரை, தன் வேலையை செவ்வனே செய்ததில், சிகப்பியின் பசி அவளது கோபத்தை வென்று விட் டிருந்தது.

சேலை கட்டி முடித்ததும், ''வா சௌந்து அங்க மாப்பிள்ளை மனைக்கு வந்தாச்சு... சீக்கிரம்'' என்ற குரலோடு உமையாள் வந்துவிட்டார்.

''அம்மா.... எனக்கு சாப்பிடறதுக்கு எதாவது தாங்க.... பசியோட என்னால அங்க நிக்க முடியாது'' என்ற சிகப்பி, அங்கேயே அமர்ந்துவிட,

''திருப்பூட்ற நேரத்தில வம்பு பண்ணாத சிகப்பி... எழுந்து வா.''

''என்னம்மா... காலையில இருந்து நான் ஒரே ஒரு டம்பளர் காபி தான் குடிச்சேன். இப்போ... டிபன் தர மாட்டேன்னு சொல்றீங்க? நீங்க... மட்டும் சாப்பிட்டீங்க... நான் பார்த்தேன்...''

''திருப்பூட்டினதும் எடுத்தாறேன்... சௌந்து. படுத்தாம வா'' என்ற உமையாள், கருப்பையாவின் சகோதரிகள் சிகப்பியின் அறையை நோக்கி வருவதைக் கண்டதும். வேகமாய் அவளை இழுத்துக் கொண்டு வெளியே வந்தார்.

அதன் பின்னர், கூடியிருந்த உறவினர்களின் ஜனத்திரளில் சிகப்பியின் பிடிவாதம் செல்லுபடியாகாமல் போக, சிகப்பியும் ஒருவாறாக மனைக்கு வந்து சேர்ந்தாள்.

சாமியறையில் சாமி கும்பிட்டு விட்டு வந்த சிகப்பியிடம், ''மனை மேல ஏறி நில்லு, சிவப்பி'' என்றார் சிகப்பி ஆச்சி.

மனைமேல் நின்றவளின் முன்னே, ஒரு சட்டியை நீட்டி, அதிலிருக்கும் அரிசியை இரண்டு கைகளாலும் அள்ளிக் கொள்ளச் சொன்னார் புரோகிதர்.

அவர் சொன்னதைக் கர்ம சிரத்தையாய் கேட்டிருந்தவள் போன்ற பாவனையைக் காட்டிய சிகப்பி, செய்த செயல் என்ன தெரியுமா?

இரண்டு கைகளையும் குவித்து அரிசியை எடுப்பதற்குப் பதிலாக, இரு கைகளிலும் தனித்தனியாக ஓரோர் பிடி அரிசியை எடுத்துக் கொண்டு நின்றது தான்!

அங்கிருந்த எல்லாரும் சட்டென சிரித்து விட, அந்த நேரம் பார்த்து அவளுக்கு நேர் எதிரே வந்து நின்ற கருப்பையாவிற்கு சிரிப்பை அடக்குவது வெகு சிரமமாய் இருந்தது.

''ரெண்டு கையாலையும் அரிசியை எடு. கையால... தண்ணி அள்ளி ஊத்துற மாதிரி'' என அவன் மெல்ல முணங்க, அதையே பெரிய வைரவன் செட்டியாரும் சற்றே உரத்தக் குரலில் சொல்லி முடித்தார்.

முகத்தில் அசடு வழிய, அவன் சொன்னது போல் எடுத்தவளுக்கு அவனை நிமிர்ந்து பார்க்கவே முடியவில்லை. ஆனால், பார்க்காமலும் இருக்க முடியவில்லை.

மனையில் நின்றிருந்த சிகப்பிக்கு, இன்னுமொரு வருத்தம் வேறு வந்து சேர்ந்திருந்து.

அது என்னவென்றால், மனையில் நின்றிருந்த சிகப்பியை விடவும் தரையில் நின்றிருந்த கருப்பையா உயரமாய் இருந்தது தான். ஹ்ம்ம்... இவன் உயரத்திற்கு வர வேண்டும் என்றால் இந்த மனை மாதிரி டபுள் மடங்கு பெருசா ஹீல்ஸ் வாங்கணும் என்ற முடிவில் தன்னை சமாதானப்படுத்திக் கொண்டு, தன் கையிலிருந்த அரிசியின் மேல் வைக்கப்பட்ட தேங்காய் மற்றும் வெற்றிலை பாக்கை கவனமாய் பிடித்துக் கொண்டாள்.

''கெட்டி மேளம்... கெட்டி மேளம்'' என்ற குரல் பறக்க,

''முதல்ல கழுத்திருவைக் கட்டுப்பா'' என்றவாறே அதை எடுத்து பேரனின் கையில் கொடுத்தார் கருப்பையாவின் அய்யா.

''மணமக்கள் நன்றாக வாழ வேண்டும்'' என்ற வேண்டுதல் அனைவரின் மனதிலும் இருக்க, கருப்பையாவின் வலிய கரங்கள் சிகப்பியின் கழுத்தைச் சுற்றி சென்றது.

''நல்லா இறுக்கக் கட்டு, தம்பி!'' என்ற தேவியின் ஆணைக்கு இணங்க, கருப்பையா சிகப்பியின் பின் கழுத்தின் மத்தியில் மாலைகள், நகைகள் மற்றும் ஜோடித்த ஜடையின் பின்னே மறைந்திருந்த முடிச்சைத் தேட, அவனுக்கு எதுவாக தலையைக் குனியாமல் நிமிர்ந்த நிலையிலேயே அவனது தடுமாற்றத்தை ரசித்துக் கொண்டிருந்தாள் சிகப்பி. அவனைப் பழி வாங்கிவிட்ட அசட்டுத் திருப்தி!

''சிகப்பி... கொஞ்சம் குனி யாத்தா! தம்பிக்கு... முடிச்சு தெரியட்டும்'' என்ற மெய்யம்மை ஆச்சியின் சொல்லுக்காக, குனிவது போல் பாவனை செய்த சிகப்பி குனிவதாய் இல்லை.

அவளது உதட்டில் பிறர் அறியாமல் தவழ்ந்த முறுவலைக் கண்டு கொண்ட கருப்பையா, முடிச்சை இறுக்கும் பாவனையில் அவள் காதோரம் குனிந்து ''ஏய் தக்காளி! படுத்தாதடி, கொஞ்சம் குனி! என்ன கோபம் னாலும்... இங்க வச்சுப் பழி வாங்கிடாதே'' என்றான் கெஞ்சல் கலந்த சிரிப்புடன்.

அவனது கெஞ்சலுடன், ''என்ன தம்பி சொல்றீங்க?'' என்ற மெய்யம்மை ஆச்சியின் விசாரணையும், தன் திருகுதாளத்தை அம்பலப்படுத்தி விடும் என்ற ஞானோதயம் வந்தமையால், சிகப்பியின் தலை குனிந்தது.

முதல் இரண்டு முடிச்சுக்களைப் போட்ட கருப்பையா, ''அடுத்த முடிச்சை... நீ போடறியா தேவிக்கா?'' என்றான் கேள்வியாக.

''அந்த சம்பிரதாயம் எல்லாம் நமக்கு இல்லை, அப்புச்சி! நீயே... உம் பொண்டாட்டிக்கு இறுகப் போட்டிரு!'' வேகமாய் வந்த மெய்யம்மை ஆச்சியின் ஆணை போலவே, அடுத்தும் வேலைகள் வேகமாய் நடந்தேறியது.

கழுத்திருவை கருப்பையாவின் ஐயா எடுத்துக் கொடுத்தமையால், வைரத்தாலியை சிகப்பியின் ஐயா பெரிய வைரவன் செட்டியார் எடுத்துக் கொடுக்க, திருப்பூட்டுதல் இனிதே தொடர்ந்தது.

அடுத்தக் கட்டமாய், பெரிய தாலியையும், சின்னத் தாலியையும் பங்காளி வீட்டுப் பெரியவர் ஒருவர் எடுத்துக் கொடுக்க, திருப்பூட்டும் படலம் நிறைவு பெற்றது.

அதற்கு அழகு சேர்ப்பது போல், திருப்பூட்டுச் சடங்கை மெய்யம்மை ஆச்சி கருப்பையாவின் தாயார் ஸ்தானத்திலிருந்து செய்து கொள்ள, அங்கே நெகிழ்ச்சி மட்டுமே நிறைந்திருந்தது.

சடங்கின் முடிவில், ''ஏதாவது இனிப்பு கொண்டு வாங்க...'' என்ற கருப்பையா செட்டியார், ஒன்றை

பேரனிடம் கொடுத்து அவனது மனைவிக்குக் கொடுக்கச் சொன்னார்.

அவனும் மறுக்காமல் சிகப்பியின் உதட்டருகே கொண்டு வந்து விட, சிகப்பியின் கண்கள் அது என்ன சாக்லேட் என்று கணக்குப் போட்டது.

''மில்கி பார் இல்லையா? டைரி மில்க் தானா? சரி... அட்ஜஸ்ட் பண்ணிக்கிறேன்'' என்று மனதிற்குள் சொல்லி விட்டு, ஒரே கடியில் முழு டைரி மில்க் பாரையும் உள்ளே தள்ளியிருந்தாள் சிகப்பி.

''அதில... நீ... எனக்குக் கொஞ்சம் கொடுக்கணும்'' என்று மெல்ல முணுமுணுத்த கருப்பையாவிற்கு, அவளைப் பார்க்கப் பார்க்க சிரிப்பை அட்க்க முடிய வில்லை.

''அய்யே, இப்பவும் சொதப்பிட்டோமா?'' என்று சிகப்பி முழித்துக் கொண்டிருக்கும் போதே, தன் தமக் கையின் குணம் தெரிந்த சக்தி வைரவன், இன்னொ மொரு சாக்லேட் கட்டியை அவளிடம் நீட்டினான்.

''ரொம்ப தேங்க்ஸ்டா'' என மனதார நன்றி சொல்லி விட்டு, அதை வேகவேகமாய் பிரித்து, கருப்பையா விற்குக் கொடுக்கத் திரும்பினால், இன்னமும் அவன் சிரிப்பை நிறுத்திய பாடாய் இல்லை.

''ரொம்பத் தான்!'' என்று மனதிற்குள் சலித்துக் கொண்டு, ''என்னங்க'' என்று மெல்ல அழைத்து, அவ னுக்கு அந்த இனிப்பைக் கொடுத்தாள் சிகப்பி.

அவளைப் போல் முழுதையும் கபளீகரம் செய்துவிடா மல், கொஞ்சத்தை மட்டும் கடித்துக் கொண்டு, ''நீ சாப்பிடு'' என்று மீண்டும் ஊட்டினான் கருப்பையா.

அந்தச் சின்ன ரொமன்ஸ் கூடப் பொறுக்க முடி யாமல்,

''அத்தான்... அத்தான்... பப்ளிக்.... பப்ளிக்'' என்று காதைக் கடித்துவிட்டுச் சென்றான் சக்தி.

சிரிப்புடன் கையை இழுத்துக் கொண்ட கருப் பையாவை ''பொண்ணு - மாப்பிள்ளையை பட்டாளை வரைக்கும் நடந்து போயிட்டு வரச் சொல்லுங்க'' என்ற குரல் கலைத்தது.

திருப்பூட்டுதலை மணமேடையின் அருகே இருந்து பார்க்க முடியாமல், வளவு வாசலிலும், பட்டாளை யிலும், முகப்பிலும் அமர்ந்திருந்த பெரியவர்களுக்குத் தாங்கள் தான் மணமக்கள் என்று அடையாளம் காட்டிக் கொள்வதற்காக, இருவரும் வாயில் வரைச் சென்று வந்தனர்.

வாயிலை அடைந்ததும், அதையும் தாண்டி வீதிக்குச் செல்ல முனைந்த சிகப்பியை, தன் கரங்களால் பிடித்து நிறுத்தியவன், அதன் பின்னர், மனைக்கு வந்து மண வறைச் சடங்கு செய்து கொள்ளும் வரை விடவில்லை.

மணவறைச் சடங்கை கருப்பையாவின் மூத்த சகோதரி மெய்யம்மை செய்து கொண்டதும், சிகப்பியை யும் கருப்பையாவையும் அமரவைத்தது, இரு பக்க ஆண்களும் பூ மனை இட்டனர்.

இதன் நடுவே, சொக்கலிங்கம் செட்டியாரும் பழனி யப்பன் செட்டியாரும் இசை குடி மனம் எழுதிக் கொள்ள, நகரத்தார் முறைப்படி சிகப்பி மற்றும் கருப்பையாவின் திருமணம் கோவிலில் பதிந்து கொள்ளப்பட்டது.

பூ மனையின் முடிவில், கருப்பையா சிகப்பியின் கரத்தைப் பிடித்துக் கொள்ள, இருவரது கையையும் சுற்றி ஓர் பட்டுத் துணி சுற்றப்பட்டது.

கருப்பையாவின் இடது கரத்தை அவனது மாமன் பிடித்துக் கொள்ள, சிகப்பியின் இடது கரம் அவளது மாமனால் பிடிக்கப்பட்டது. இரு மாமக்காரர்களுடன் கட்டியிருந்த அரசாணிக் காலை மூன்று முறை சுற்றி வந்ததும், ஒரு வழியாக மணமக்கள் மீண்டும் மனையில் அமர்த்தப்பட்டனர்.

அது பொறுக்காமல், ''மாப்பிள்ளைக்கு சோறு கட்டுங்க... கும்பிட்டுக் கட்டிக்க நேரமாச்சு'' என உமையாளுக்கு வேலை சொல்லியவாறே வந்தார் சிகப்பி ஆச்சி.

கருப்பையா மனையில் அமர்ந்திருக்க, அவனுக்கு வலது புறமிருந்த சிகப்பியை எழுந்து நிற்கச் சொன்ன உமையாள், ஓர் இலையைக் கொடுத்து கருப்பையாவின் முன்னே போடச் சொன்னார்.

இலையைப் போட்டதும், சாதம், பருப்பு, ஒரு காய், ஒரு கூட்டு, ஒரு குழம்பு, கொஞ்சம் பாயசம், ஒரு அப்பளம் ஆகியவற்றை சிறு சிறு கிண்ணங்களில் கொண்டு வந்து அவளைப் பரிமாறச் சொன்னவரை, ''அம்மா... நான் மெனு-ல போடச் சொன்ன... கட்லெட் எல்லாம் காணோமே? என்னை ஏமாத்திட்டீங்க தானே? நான் சொல்றதை மட்டும் போடாதீங்க... சக்தி சொன்ன பலாக்காய் பிரட்டலை மட்டும் போட்டிருக்கீங்க?'' எனக் கோபித்துக் கொண்டவள், அவரது மகளே தான்.

''ஷ், சௌந்து, இது சும்மா... சம்பிரதாயத்துக்கு! மாப்பிள்ளை... இங்கனவே முழு சாப்பாடு சாப்பிடமாட்டாக... பந்தி-ல வந்து பார்த்திட்டுப் பேசு!'' - மெல்லிய குரலே என்றாலும் அதில் ''உன்னையெல்லாம் கல்யாணம் செய்து கொடுத்து'' என்ற ராகமிருந்தது.

அதை சுருதி தப்பாமல் பிடித்துக் கொண்ட கருப்பையாவிற்கு வாயிலிருந்த ஒரு வாய் சோறை மெல்லவும் முடியவில்லை. அதை வைத்துக் கொண்டே சிரிக்கவும் முடியவில்லை.

ஒருவாறாக, வாயிலிருந்த சாதத்தை அவன் முழுங்கியிருந்த போது, உமையாளும் விளக்கு எடுப்பதற்காக உள்ளே சென்றுவிட, மணமக்கள் இருவருக்கும் சற்றே தனிமை கிடைத்தது.

''இவனுக்கு மட்டும் மத்தியான சாப்பாடே இரண்டு தடவையா? எனக்கு காலையில மதியம் ரெண்டுக்கும் சேர்த்துமே ஜீரோ வேளை சாப்பாடு தான்'' என நேராய் கணக்குப் போட்டு, குறுக்காய் ஓடியது சிகப்பியின் குதிரை.

அவளது குதிரையின் வேகம் புரியாமல், ''ஏய், தக்காளி! கொஞ்சம் குழம்பு ஊத்து...'' என அவளது காலை வருடினான் கருப்பையா.

அவன் கேட்ட விதத்தில் சிலிர்த்து, குழம்பிருந்த கிண்ணத்தை எடுத்த சிகப்பிக்கு, படாரென கை தட்டி விட்டது போல் பாவனை செய்து அவன் டர்பனில் கொட்டி விட்டால் என்ன என்று ஒரு நிமிடம் தோன்றி விட்டது.

அதன் போக்கிலேயே குதிரையும் ஓடத் தயாராய் இருக்கும் போது, ''இருக்கிற கடுப்பில... குழம்பைத்

தலையிலே ஊத்திடாதே. தாயே! அது வாடகைக்கு வாங்கின டர்பன்... எங்க ஐயா என்னைத் திட்டி நொறுக்கிடுவாங்க. கொஞ்சமா... சம்பிரதாயத்துக்கு இலையில ஊத்து!'' என்று அதற்கு கடிவாளம் போட்டான் கருப்பையா.

இவனுக்கு எப்படி நான் குழம்பைத் தலையில் ஊத்தப் போவது தெரியும்? ஒரு வேளை... தூக்கத்தில் நடக்கிற வியாதி மாதிரி, நின்னுட்டே பேசுற வியாதி வந்திருச்சோ என்று குதிரைக்கு வேறு மாதிரி உணவு கொடுத்தாள், சிகப்பி.

அவளது கற்பனைகள் வேறெங்கோ ஓடிக் கொண்டிருக்க, கருப்பையாவோ அவளது பட்டுச் சேலையின் தலைப்பை லேசாய் இழுத்து ''மூக்குத்தி சூப்பரா இருக்குடி... பெண்டாட்டி!'' என்றான் குறும்புடன்.

''இதான் உங்க 'டக்'கா?'' என்று கருணாஸ் பாணியில் கருப்பையாவைக் கேள்வி கேட்டவள், ''உங்க பையனுக்கு காது குத்தும் போது சொல்லியருக்க வேண்டியது தானே... ரெண்டு குத்துக்கும் பொருத்தமா இருந்திருக்கும்'' என்று தன் ஆதங்கத்தை முன் வைக்கவும் மறக்கவில்லை.

''ஏய் சாரிமா. நான்... ஏன் தெரியுமா பேசலை... அப்பத்தா காதுக்கு நாம காஞ்சிபுரத்தில் பார்த்த விஷயம் போய்...'' அவன் முடிப்பதற்குள், ''கும்பிட்டுக் கட்டிக்க நேரமாச்சு, கண்ணா! ரெண்டு பேரும் வாங்க!'' என அங்கிருந்து கிளப்பினார் அவனது இளைய சகோதரி.

பாதியில் நின்ற அவனது வாக்கியமே அவனுக்குப் பேராதரவு ஈட்டித் தந்ததில், சிகப்பியின் முகம் பிரகாச

மானது. அவன் தன்னிடம் பேசாமலிருந்ததற்கு வலுவான காரணமாய் அப்பத்தாவின் அதட்டல் இருந்திருக்கிறது என்பதே அவளை சாந்தப்படுத்தியது.

அகத்தின் மகிழ்வு முகத்தில் ஜொலிப்பை உண்டு பண்ணி, துள்ளலுடனே வளவு வாசலுக்குச் சென்று கருப்பையாவுடன் இணைந்து நின்றாள்.

அதன் பின்னர் தான், மணமக்கள் இருவருக்கும் பெண்டு நிமிர்ந்தது.

வந்திருந்த உறவினர்கள் அனைவரும் தங்கள் பரிசை கொடுக்க வர, வயது பார்த்து காலில் விழுவதும், பரஸ்பரம் அறிமுகம் செய்துவைப்பதும், புகைப்படத்திற்கு நிற்பதும் என்ற ஒரு ரோலர் கோஸ்டர் ரைட் நடந்து முடிந்தது.

முடிவில், இரு குடும்பங்களும் தனித்தனியாக குடும்பப் புகைப்படம் ஒன்றை மணமக்களுடன் எடுத்துக் கொள்ள, இரு குடும்பத்தையும் சேர்த்து ஒரு மெகா சைஸ் படம் ஒன்றும் எடுத்ததில் அந்த அன்றைய தினத்தின் முக்கியச் சடங்குகள் முடிந்தன.

''பொண்ணையும் மாப்பிள்ளையையும் சாப்பிட வரச் சொல்லுங்க. பொறவு... பொண்ணை அழைச்சு விட சுணங்கிடப் போகுது'' என்றார் வயதில் மூத்த அப்பத்தா ஒருவர்.

அவருக்கு ஆயிரம் கோடி நமஸ்காரங்களை உதிர்த்த சிகப்பி, கல்யாணப் பந்தி நடக்கும் கல்யாணக் கொட்டகைக்கு செல்லத் திரும்புகையில், ''ஏய் தக்காளி! எனக்கு... அவ்வளவா பசிக்கலை. வேறேதாவது சடங்கி

மிருந்தா அதை முடிச்சிட்டு... அப்புறம் போகலாமே?.. என்றான் கருப்பையா.

குரலில் கேலியோ குறும்போ இல்லாததால், அவன் உண்மையே சொல்கிறான் என்பதை ஊகித்த சிகப்பிக்கு அவனுடன் உடன்படத் தான் முடியவில்லை.

''நீங்க வராட்டி போங்க... எனக்குப் பசிக்குது. நான் சக்தி கூட சாப்பிடப் போறேன்'' என்றவள், அதற்குத் தோதாய் ''சக்தி... என்னோட...'' எனக் குரலெடுத்து தம்பியை அழைக்கவும் தொடங்கிவிட்டாள். அவளது பசியின் வேகம் அவளுக்கல்லவா தெரியும்!?!

''ஏய்... ஏய்... என்ன செய்றே? சரி... வா... நானும் வரேன்'' என்ற கருப்பையாவிற்கு, எங்கே நம்மை விட்டு இவள் மட்டும் சாப்பிடச் சென்று விடுவாளோ என்று ஒரு முறை கதி கலங்கிவிட்டது!

அந்த ஒரு சம்பவத்தின் விளைவாக, சிகப்பியின் குணம் அவனுக்குப் புரிந்தது என்றே சொல்ல வேண்டும். ''குமரி உடம்பினுள் குழந்தை மனது'' என்றெண்ணியிருந்தவன், ''இதுக்கு... உடம்பு முழுக்க உபயோகமில்லாத வெட்டி மூளை தான்'' என்ற சரியான முடிவிற்கு வராமல், ''இவள் முற்றிலும் குழந்தையே'' எனக் காதல் மிகுதியில் தப்பான முடிவிற்கு வந்திருந்தான்.

அந்த நினைப்பை ஒட்டி அதற்குரியவளிடம் பார்வையைத் திருப்பியவனிடமே ''இந்த மாலையைப் போட்டுக்கிட்டே தான் சாப்பிடணுமா? இதைத் தூக்கவே நான் நிறைய சாப்பிடணும்... அதுவும் இதைப் போட்டுக்கிட்டே சாப்பிடணும்னா பயமா இருக்கே?'' என்றாள் பாவமாக.

சிறு தலையசைப்புடன் அவளது மாலையை வாங்கி வைத்துவிட்டு, இருவருமாய் உணவு உண்ண சென்றனர்.

அதன் பின்னர், நேரத்திற்கு வேகம் வந்து இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது எனலாம்.

உணவிற்குப் பின்னர் நாணலை (பெண்ணின் தாயும் தந்தையும் பெண்ணைத் தாரை வார்த்துக் கொடுப்பது?, காப்பு கழட்டி காமொதரம் இடுதல், பிள்ளை கொடுத்து வாங்குதல், தன் பிறந்து வீட்டு மனிதர்களிடம் சொல்லிக் கொள்ளுதல், இதனடுவே மாமவேவு மற்றும் கல்யாண வேவு என்று நேரம் பறந்ததில், ராகு காலம் தொடங்குவதற்குள் கருப்பையாவையும் சிகப்பியையும் மாப்பிள்ளை வீட்டிற்கு அழைத்துவிட்டனர் பெண் வீட்டினர்.

கருப்பையாவின் வீட்டில் அடியெடுத்து வைத்த சிகப்பி ஆட்சிக்குக் குடியழைப்பு செய்வதற்கு, கருப்பையாவிற்கு அண்ணி இல்லாது போனதால் அவனது இளைய சகோதரியை செய்துக் கொள்ளச் சொன்னார் மெய்யம்மை ஆச்சி.

''வள்ளியம்மை... நம்ம வீட்டுப் பொம்பளைப் புள்ளையில்ல... அதெப்படி செய்யலாம்? இந்த வீட்டு மருமக தானே செய்யணும்?'' என யாரோ பூதத்தைக் கிளப்ப,

''அப்பத்தா... நீங்களே செய்துடுங்க. எனக்கு... செய்யவும் வராது'' என்று அப்பத்தாவிடம் நீட்டினாள் வள்ளியம்மை.

''இதென்னடி... கை முறுக்குச் சுத்துற பக்குவமா... வராம போறதுக்கு?'' என்றவாறே அவளிடமிருந்து வாங்கியவர்.

''மணவறைச் சடங்கை... தேவி செய்துகிட்டா நீ... எதுவும் செய்துக்கலையேன்னு கொடுத்தேன்'' என்றார் சற்று வருத்தத்துடன்.

''அதனால என்ன அப்பத்தா?! முறை செஞ்சுக்கிட்டா தான்... நான் கண்ணனுக்கு அக்கான்னு ஆகுமா என்ன?'' என இலகுவாய் எடுத்துக் கொண்ட இளைய தலை முறையைப் பார்த்துப் பெரியவருக்குப் பெருமையாகவே இருந்தது.

ஒருவாறாய் அன்றைய சடங்குகள் எல்லாம் முடிந்ததும், பெண் வீட்டினர் அனைவரும் கிளம்ப, சிகப்பியின் கண்களில் இப்பவா... அப்பவா என்று கண்ணீர் கரை கட்டி நின்றது.

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, அவளிடம் வந்தனர் வீட்டினர் அனைவரும்.

''உள்ளூர்-குள்ளேயே தான் ஆத்தா வீடு! அப்புறம் என்னடா... அழுகை? கண்ணைத் துடைச்சுக்கோ!'' என்றார் பெரிய வைரவன்.

''என்னமோ... கோட்டையூர்-லேயே குச்சி மிட்டாய் வியாபாரம் செய்ற மாதிரி பேசாதீங்க, ஐயா! நீங்க எல்லோரும் இன்னும் ஒரு வாரத்தில... சென்னை போய் டுவீங்க'' - இது சிகப்பியே தான்.

''சென்னை போனா... என்ன? அதென்ன கடல் கடந்தா இருக்கு? ராவுக்கு ஏறிப்படுத்தா... விடிஞ்சதும் எங்களைப் பார்த்துப்புடலாம்'' என்றார் சிகப்பி ஆச்சி, சமாதானம் போல்.

சிகப்பி தாய் - தந்தையின் முகத்தைப் பார்க்க, அவர்களோ ''நீ... இன்னும் சின்னப் பிள்ளை இல்லை. எல்லோரோடையும் அனுசரிச்சு... நல்ல பெண்ணா இருக்கணும்'' என்றனர் ஒரே குரலில்.

''ம்ம்'' என அவள் முணங்கும் போதே,

''அவளை... எம் பேத்தி மாதிரி பார்த்துக்கிடுதேன், அப்பச்சி! நீங்க... பயமில்லாம போங்க'' என்றார் மெய்யம்மை ஆச்சி, மூத்தவராக, அதற்கேற்ப, கருப்பையாவும் பேச அனைவரும் கிளம்பினர்.

தன் வீட்டினரது வண்டி கிளம்பும் வரை வாயிலிலேயே நின்றிருந்தது விட்டு, உள்ளே திரும்பிய சிகப்பியுடன் கருப்பையாவும் நடக்க, திடுமென பின்னே வந்த சக்தி, ''அத்தான்...'' என்றான் வேகமாக.

''என்னடா? நீ... இன்னும் போகலை'' என்று சிகப்பி கேட்கும் போதே,

''அத்தான்... சிகப்பி கொஞ்சம் Possessive கொஞ்சம் அடம்... கூடவே Sensitive. அவளைப் பார்த்துக்கோங்க! நீங்களும் பத்திரமா இருங்க!'' என்று தன் அத்தானிடம் மட்டும் பேசிவிட்டு, வேகமாய் சென்று மறைந்தான்.

''நான் ஒண்ணும் அப்படியெல்லாம் இல்லை... நான் நல்ல பொண்ணு'' என்று சிணுங்கிய சிகப்பியின் புறம் லேசாய் சரிந்த கருப்பையா, ''அதை நா... இன்னைக்கு ராத்திரிக்கு அப்புறம் சொல்றேன்'' என்றான் குறும்பு துள்ளி விளையாடிய குரலில்.

''அதென்ன... இன்னைக்கு ராத்திரி? ஒரு வேளை... ராத்திரி நேரத்தில் ஆவியுடன் பேசுவாங்களே... அது

மதில் உன் மனசோடும் பேசுவதோ? இவனுக்கு கண் கட்டு வித்தை தெரியும் போலவே? கொஞ்சம் ஜாக்கிரதையா இருக்கணும்...'' என்று சிகப்பியின் குழந்தை உள்ளம் குதிரையை விரட்டத் தொடங்க, குமரி உள்ளம் சட்டென விழித்ததில் முகமெங்கும் வெட்கம் படர்ந்தது.



9

கோவலனின் கள்ளப் பேச்சில், கண்ணகியின் கண்ணுக்குள் குடாக, இரவு நேரக் காற்றில் உல்லாசமாய் இசை பாடியது காதல்!

கண்களில் கனவும், நெஞ்சில் லேசான பயமும் நிழலாட, சிறு யோசனையுடன் வீட்டினுள் நுழைந்த சிகப்பியை, ''ஆத்தா... இங்க வா...'' என்ற மெய்யம்மை ஆச்சியின் குரல் கலைத்தது.

மெல்ல அவரிடம் சென்றவளை, சாமி வீட்டினுள் (பூஜை அறை) அழைத்துச் சென்றவர், தன் பேத்திகள் இருவரையும் அழைத்தார்.

அங்கிருந்த தெய்வங்களை மெய்யம்மை ஆச்சி வணங்க, அவரைப் பின்பற்றி இளைய தலைமுறை மூவரும் வழிபட்டு முடித்தனர்.

''தூங்கப் போகும் முன்னர்... சாமி கும்பிட்டு படுக்கணும் பேல...'' என்று எண்ணிக் கொண்டிருந்த சிகப்பியை அமர வைத்து, கருப்பையாவால் அன்று காலை

அவள் கழுத்தில் கட்டப்பட்ட கழுத்திருளை மெல்ல எழுப்பினார்.

''ஆஹா... இதென்ன தாலியை...'' என மனதிற்குள் பிரண்ட சிகப்பி, சட்டென அதை ஒரு கையால் அழுத்தப் பற்றிக் கொண்டாள். கட்டிய முதல் நாளே, தாலியைப் பிரிப்பது என்பது அவள் மனதைப் பாதித்தது! பெரிதாக இருக்கிறது தான்... அதன் பாரத்தினால் கழுத்து வலிக்கிறது தான்... அதற்காக... ம்ஹூம் கூடாது என்று சிகப்பியின் குமரி உள்ளம், சடசடவென சிந்திக்கத் தொடங்கியது.

அதைக் கண்டதும், கருப்பையாவின் இளைய சகோதரி ''அப்பத்தா... உங்களை மெகா சீரியல் வில்லி ரேஞ்சுக்குக் கொண்டு போய்ட்டா... உங்க பேத்தி'' எனக் கூறி, பக்கென சிரித்தாள்.

அதன் பிரதிபலிப்பாய், மெய்யம்மை ஆச்சியும் சிரிக்க, சிகப்பி குழம்பிப் போனாள்.

''அது... அது வந்து... ஆயா... காலையில் கட்டின... தாலியை...'' எனத் தடுமாறியவள், ''நீங்க செய்ததில் ஏதாவது அர்த்தமிருக்கும். அது தெரியாம... நான் பாட்டுக்கு... மன்னிச்சுக்கோங்க ஆயா!'' என்றாள் தாழ்ந்த குரலில்.

''அடடே... என் ராசாத்தி! உன்னை நான் தப்பாவே நினைக்கலை...'' என்று சிகப்பியின் கன்னம் தொட்டுக் கொஞ்சியவர்,

''புருஷனும் பொண்டாட்டியும் முத முதலா சேர முன்னாடி... கழுத்திருளைக் கழட்டி வச்சிடறது. அப்புறம்... மூணு நாள் கழிச்சு... குச்சி தும்பு சோத்துக்

கோர்க்கிறது எல்லாம் நம்ம வழக்கம் தான்! அது படி தான் செய்றேன்'' என்றார் விளக்கமாக.

''ஹோ... இதுவும் ஒரு வகை சடங்கு தான் போல'' என்று சிகப்பி, சமாதானம் அடையும் போதே.

''அப்பத்தா... வழக்கம், சடங்கு, முறைன்னு எதுக்கு சுத்தி வளைக்கிறீங்க... இன்னைக்கு ராத்திரி... நம்ம தம்பி தாராளமா சிகப்பியைக் கட்டிப்பிடிக்க வழி செய்றேன்னு நேரா சொல்ல வேண்டியது தானே?'' என சகோதரி களுள் இளையவள் சிரிக்க,

''கொஞ்சம் கூட வெட்கமே இல்லாம... என்ன பேச்சு இது?'' என்று கண்டித்த மெய்யம்மை ஆச்சியின் முகமும் சிரிப்பில் திளைத்திருந்தது.

வயதிலும், அனுபவத்திலும் மூத்தவரான அவரே இப்படி எனும் போது, சிகப்பியைப் பற்றிக் கேட்கவே வேண்டாம்! கன்னங்கள் இரண்டும், மாதுளம் முத்துக் களைக் கொட்டியது போல் சிவந்திருக்க, நெஞ்சம் மாதுளம் முத்துக்களைச் சுவைக்கும் பற்களைப் போல் தடதடவென சத்தமிட்டது!

''ஹே... சிகப்பியைப் பாருக்கா... காது மடல் வரைக் கும் சிவந்து போயிருக்கு...'' தொடர்ந்தது கிண்டல்.

''சும்மா இருடி... சும்மாவே ஆடு திருடின கள்ளன், நீதிபதி முன்னாடி நிக்கிற மாதிரி... பேய் முழி முழிக் கிறா... நீ வேற!'' - காப்பாற்றுகிறேன் பேர்வழி என்று மேலும் கேலியே பிரதானமாய் இருந்தது.

''போதும் உங்க கேலியும் கிண்டலும். சும்மாவே பயந்து போயிருக்க புள்ளயை மேலும் பயப்படுத்தா தீங்க!'' என அடக்கிய பெரியவர், ''தேவி... சிகப்பியோட

வைரத்தாலியைக் கழட்டி... அதுக்குள்ள டப்பாவில வை...'', ''வள்ளி... அவளோட வைரக் காப்பை (வளை யலை) மெதுவா கழட்டு, மொழில... உரசாம கழட்டு...'' என உத்தரவுகள் பறக்க, அடுத்த பத்தாவது நிமிடம் சிகப்பியின் கழுத்திலிருந்து முக்கால் வாசி சுமை இறங்கியிருந்தது.

அதன் பின்னர், ஓர் புது பருத்தி சேலையைக் கொடுத்து ''இதைக் கட்டிக்கிட்டு வாத்தா'' என்று அவளை ஓர் அறைக்குள் அனுப்பி வைத்தார், மெய் யம்மை ஆச்சி.

கடந்த ஒரு வாரமாக, தன் தாயிடம் எடுத்த ''சேலை கட்டும் பயிற்சி''க்கு, இன்று பரீட்சை வைத்த சிகப்பி, நல்ல வேளையாக பாஸ் மார்க் வாங்கிவிட்டிருந்தாள்.

ஒருவாறாக சேலையை சுற்றிக் கொண்டு, அந்த அறையிலேயே இரண்டு முறைக்கும் மேலாக நடந்து, கட்டியிருந்த சேலை அவிழாமல் இருப்பதையும், தான் புதையல் எடுக்காததையும் உறுதி செய்து கொண்டே வெளியே வந்தாள் அந்த முன் ஜாக்கிரதை முத்தாயி!

''அடேங்கப்பா... எவ்வளவு சீக்கிரம் புடவை கட் டிட்டே! சரியா... அரை மணி நேரம்... பத்து நிமிஷம் தான் ஆச்சு!'' என்று வள்ளியம்மை கேலி செய்ய,

''சும்மா இருடி! நான் முதமுதல்ல சேலை கட்டும் போது... ஒரு மணி நேரம் எடுத்துக்கிட்டேன். சிகப்பி... சீக்கிரமே கட்டிட்டா'' என்று தங்கையை அடக்கினாள்.

''நான் சும்மா விளையாட்டுக்குச் சொன்னேன். அழகா... பாந்தமா... அதே சமயம் சிக்குன்னு கட்டி யிருக்கே!'' தன் கேலியைக் கைவிட்டு, பாராட்டில்

இறங்கிய வள்ளியம்மையின் வார்த்தைகளில், சிகப்பியின் கண்கள் கண்ணாடியைத் தேடி அலைந்தன.

''என்னத்த... ஆத்தா தேடுறே? கண்ணாடியவா? வளவு பட்டாளையில இருக்குப் பாரு...'' என்று மெய்யம்மை ஆச்சி, கை காட்டவும், சிகப்பிக்குத் தூக்கிவாரிப் போட்டது!

''இவருக்குக் கூரிய கண்கள்! எதிரில் இருப்பவரின் முகத்தைப் பார்த்தே... அவர் மனதில் நினைப்பதைப் படித்து விடுகிறாரே!'' என்று சிகப்பிக்கு ஆச்சரியமாகவும் இருந்தது!

''இல்லை... இருக்கட்டும் ஆயா! ரூம்ல இருந்த கண்ணாடியில பார்த்துக்கிட்டேன்...''

''அந்த அறையில இருக்கக் கண்ணாடியா? இத்துனூண்டு இருக்கும்... முகம் கூட முழுசா தெரியாதே... சும்மா, இதில போய் பாரு!'' என அவளை அங்கே அனுப்பிய கையோடு, பெரிய பேத்தியின் காதுகளில் எதையோ முணுமுணுத்தார்.

பின்னர், தன் இளைய பேத்தியின் புறம் திரும்பி ''வள்ளி... உன் ஆம்படையான் ரெண்டு முறை... தண்ணி குடிக்க எழுந்திருச்சு வந்துட்டாக... என்னனு பாரு... வேணும்னா கொஞ்சம் பாலு சூடு பண்ணிக் கொடு'' என அவளை அங்கிருந்து கிளப்பினார். கூடவே, அவரும் தன் படுக்கை நோக்கிப் பயணப்பட்டார்.

வளவு பட்டாளையிலிருந்த ஆளுயரக் கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்துக் கொண்டிருந்த சிகப்பியின் தோளில் கைவைத்த தேவி, ''மேலறையிலும்... நிறைய கண்ணாடி இருக்கு... அங்க போய்... ஆசை தீரப் பார்த்துக்கோ!'' என்றாள் விஷமமான புன்னகையுடன்.

அவரது விஷமத்தை உணராமல் ''இதுவே நல்லாத் தானே தெரியுது...'' என ஓர் நிமிடம் யோசித்தவள், ''ஹோ... ஒரு வேளை... அடுத்த பட்டாளையில பசங்க எல்லாரும் படுத்திருக்கிறதால... மேல போகச் சொல்றாங்க போல'' எனத் தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொண்டு, அவரைப் பின் தொடர, வளவின் மறு கோடியிலிருந்த மாடிப்படியின் அருகே சென்றனர் இருவரும்.

''மேல போம்மா'' - தேவி அவளுக்கு வழி காட்டி விட்டு நகர முற்பட,

''ஹான்... இதிலையா... ஹய்யோ ரொம்ப இருட்டா இருக்கே?! நானா போக மாட்டேன். நீங்களும் துணைக்கு வரீங்களா... அண்ணி!'' - சிறுபிள்ளையின் பயத்துடன் அவரது கரங்களை இறுகப் பிடித்துக் கொண்டாள், சிகப்பி.

''துணையா... நானா'' - அடக்கமாட்டாமல் சிரித்த தேவி.

''உன்னோட துணை... ஏற்கனவே மேல போயாச்சு! பயப்படமா போ!'' என்றார் பூடகமாக.

''ம்ஹூம்... எனக்கு இருட்டுன்னா பயம்...''

''லைட் இருக்கும்மா...''

''இல்லையே... இங்க பாருங்க... படியே தெரியலை... மேல தான் கொஞ்சமா விளக்கு எரியுது!''

''அந்த வெளிச்சம் போதும்மா... உன்னால போக முடியும்..''

''ம்ஹூம்...'' பலமாய் அசைந்தது சிகப்பியின் தலை. அதற்கு ஏற்ப, குரலிலும் பிடிவாதம் தாண்டவமாடியது!

அடுத்து என்ன சொல்வது என்று தேவி யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ''தேவிக்கா! நீங்க போங்க... நான் அவளைக் கூட்டிட்டுப் போய்க்கிறேன்!'' என்ற குரல், அழுத்தமாய் அதே சமயம் சிறு சிரிப்புடன் வந்து சேர்ந்தது.

''அடக்கடவுளே!! மேலறையில தான் ஃபஸ்ட் நைட்டா... அது தெரியாம... இவங்களை வேற துணைக்குக் கூப்பிட்டோமே! என்னைப் பத்தி என்ன நினைச்சாங்களோ... சரியான மக்கு மடச் சாம்பிராணின்னு நினைச்சிருப்பாங்க... ஹய்யோ... இவங்க முகத்தை எப்படிப் பார்க்கிறது...'' - ''அசடு'' என்ற வார்த்தையை மொத்த குத்தகைக்கு எடுத்தது போல், விழித்துக் கொண்டிருந்தாள்.

நமட்டுச் சிரிப்புடன் நகர்ந்த தேவியைப் பார்ப்பதா இல்லை மரப்படிகளின் தடதடப்பிற்குக் காரணமாய் இருந்த கருப்பையாவைப் பார்ப்பதா என்று தடுமாறித் தான் போனாள், சிகப்பி!

தன்னை விட்டு விலகிச் செல்லும் நாத்தனாரை விட தன்னை நெருங்கிக் கொண்டிருக்கும் கணவனின் புறம், அவளை அறியாமலே பார்வை திரும்பிவிட, கால்களும் மாடிப்படியின் பக்கம் ஓர் எட்டு எடுத்து வைத்தது.

அச்சமயம் பார்த்து, தேவி தன் நடையை நிறுத்தி, சட்டென திரும்பிப் பார்க்க, சிகப்பியின் சிவந்த கன்னங்களில் மென்மேலும் செம்மை படர்ந்து சூடேறியது!

அந்த அரை இருட்டில், செம்பருத்தி மலராய் இதழ் விரித்துக் காத்திருந்த மனைவி, ஓர் மோகனத் தேவதையாய் காட்சி தர, சட்டென அவள் கைப்பற்றி இழுத்து, மாடிப்படியின் கதவைச் சாற்றினான் கருப்பையா.

தேவியின் சிரிப்பு தேய்ந்து மறைய, சிகப்பியின் நாணம் தேயாது வளர்ந்தது!

தன்னவளின் கைபிடித்து, மாடியறைக்கு இட்டுச் சென்ற கருப்பையா, பிடித்த கையை விடாமல் அவளை மஞ்சத்தில் அமர வைத்தான்.

அவனிடம் கேட்க வேண்டும் என சிகப்பி தொகுத்து வைத்திருந்த கேள்விகள் யாவையும், எக்ஸாம்மினரிடம் பிடிப்பட்ட பிட்டுகளாய் காணாமல் போக, மௌனமே அங்கே ஆட்சி செய்து கொண்டிருந்தது.

கட்டிலில் அமர்ந்திருந்த சிகப்பியின் முகத்தை மெல்ல நிமிர்த்திய கண்ணன் அடர்ந்த சிவப்பு ரோஜா வாய் சிவந்திருந்த இரு கன்னங்களுக்கும் இடையே இளம் சிவப்பு வண்ண ரோஜாவாய் பூத்திருந்த மூக்கின் மேல் வெண்முத்து மலரென வீற்றிருந்த வைர மூக்குத்தியை மெல்ல வருடிக் கொடுத்தான்.

அந்த ஸ்பரிசத்தின் விளைவாக, சிகப்பியின் மேனியில் மென்மையான அதிர்வு ஒன்று ஓடி மறைய, அவளது தலை, மேலும் தாழ்ந்தது.

மேலும் ''என்னோட ஆசையை மதிச்சு... மூக்குத்தி போட்டுக்கிட்டதுக்கு ரொம்ப தேங்க்ஸ்டா... அதுவும் பெரிய வைரமும் அழகான பிஞ்சுகளும்... பார்க்கவே கலக்கலா இருக்குடா... தேங்க்ஸ் தேங்க்ஸ் தேங்க்ஸ்'' என்று உருகித் தான் போனான், கணவன்.

அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல், வெறும் ''ம்ம்'' மட்டுமே வெளி வந்தது!

கைகளின் வருடலை நிறுத்திவிட்டு, மெல்ல குனிந்த கண்ணன், அவளது மூக்கின் மீது முகம் வைத்து

''தக்காளியை செடியில இருந்து பறிக்கும் போது ஒரு சின்னக் காம்பும்... கூடவே கொஞ்சம் இலையும் சேர்ந்து வந்தா... எப்படி இருக்கும்... அது மாதிரி அழகா இருக்கேடா, தக்காளி சூப்!'' என்றான் ஓர் தேர்ந்த ரசிகனைப் போல்.

''தக்காளி சூப்'' என்ற வார்த்தையில், சிகப்பியின் நாணம் எல்லாம் இருந்த இடம் தெரியாமல் ஓடியே போனது!

அதற்குப் பதிலாய், சிறு கோபமும், தெரிந்து கொள்ள வேண்டிய ஆர்வமும் சேர்ந்து கொள்ள, ''அதென்ன... எப்போ பார்த்தாலும் தக்காளி சூப்! வெங்காய பக்கோடா!ன்னு கூப்புடுறீங்க! எனக்கு முதல்ல காரணம் சொல்லுங்க'' என்றாள் சிறு வேகத்துடன்.

ஆனால், கருப்பையாவுக்கோ அந்த வேகம் சிறிதும் இருக்கவில்லை. மாறாக, அவளருகே அமர்ந்தவன் ''அது வாடி, என் செல்லத் தக்காளி'' என்றான் சாகவாசமாய்.

''தக்காளி... தக்காளி... சொல்லாதீங்க... எனக்கு கோபம் கோபமா வருது...''

''தக்காளியைத் தக்காளின்னு சொல்லலைன்னா... எனக்கு ஏக்கம் ஏக்கமா வருமே...''

''விளையாடாதீங்க... எனக்கு காரணம் சொல்லுங்க...''- இன்னும் கொஞ்ச நேரம் போனால் மேலே விழுந்து பிராண்டி விடுவேன் என்று பயமுறுத்தியது, சிகப்பியின் குரல்.

''சரி...சரி... சொல்றேன்...'' என ஆரம்பித்தவன், சிகப்பியின் கைகளைத் தன் கரங்களுக்குள் எடுத்துக் கொண்டான்.

''எங்க சொந்தத்தில... சிகப்பின்னு ஒரு பொண்ணு இருந்தா....'' என்ற அவனின் முதல் வாக்கியத்திலேயே, சிகப்பியின் கற்பனைக் குதிரை வேகமாய் முழித்துக் கொண்டது.

''ஆஹா...'' சிகப்பியா''... ஒரு வேளை இவருக்கு அந்தப் பொண்ணு மேல ஒரு இது இருந்திருக்குமோ... அவளுக்கும் இருந்திருக்குமோ... இவங்க மேட்டர் வீட்டுக்குத் தெரிஞ்சு வீட்டில சேர்த்து வைக்காம விட்டிருப்பாங்களோ... அந்த ஏக்கத்தில தான் ''அந்த சிகப்பி'' தான் கிடைக்கலை... அந்தப் பேரு வச்சிருக்க இந்தப் பொண்ணாவது கிடைச்சுதேன்னு என்னைக் கல்யாணம் செய்துக்கிட்டாரோ...''

குதிரை.... ச்சே... ச்சே... கற்பனை செல்லும் திசையை, சிகப்பியாலேயே சகிக்க முடியவில்லை.

அவளது கற்பனையின் வீச்சை உணராமல், கருப்பையா தன் பேச்சைத் தொடர்ந்தான்.

''சிகப்பிங்கிற அவளோட பேரு... சோப்பி... சோப்பின்னு மறுவி... ஒரு பாயிண்ட்ல சூபி ஆகிடுச்சி...''

''அடக்கடவுளே, சூப்பியா... சக்திக்கு மட்டும் தெரிஞ்சது... என்னை சூப் செஞ்சு சாப்பிடாம விட மாட்டானே...'' - சிகப்பியின் கற்பனைக் குதிரை சட்டென சடன் பிரேக் போட்டு வேறு திசையில் பயணமானது.

அவன் தொடர்ந்தான். ''உன் பேரைக் கேட்டதுமே.... எனக்கு ''சூப்பி'' தான் ஞாபகம் வந்ததுடா...''

''அப்புறம்... உன்னைப் பார்த்ததும், ஃபிரெஷ்ஷா பறிச்ச தக்காளிப் பழம் மாதிரி தளதளன்னு இருந்தியா...''

''கூடவே, எனக்கு சுப்பிலேயே தக்காளி சூப் தான் ரொம்பப் பிடிக்குமா...''

''சரி நமக்குப் பிடிச்ச... இந்த சிகப்பிக்கு ஏத்த பேரு ''தக்காளி சூப்''ன்னு முடிவே பண்ணிட்டேன்'' என்று தன் நீண்ட உரையை முடித்த கையோடு, சிகப்பியை நோக்கி லேசாய் சரியத் துவங்கினான்.

தன் தோள் மேல் விழுந்த அவனது கைகளைப் பிடித்து, அவனைத் தன்னிடமிருந்து தள்ளியவள் ''விளக்கமெல்லாம் சரி.... அந்த சிகப்பி... அதான் சூப்பி ஆனா சிகப்பி எங்க இருக்காங்க...'' என்றாள் சிறு சங்கடத்துடன்.

திருமணமான முதல் நாளே, தன்னைச் சந்தேகப் படுகிறாளே எனக் கணவன் நினைக்கக் கூடாதே என்று மனம் அடித்துக் கொண்ட போதும், அவளுக்குத் தன் கற்பனைக் குதிரையின் பாய்ச்சல் தப்பென்று நிரூபணம் ஆக வேண்டியிருந்தது.

கோபம் கொள்வானோ என்று அவள் தயங்கியதற்கு நேர் எதிராக,

''ஆஹா... பொறாமை!'' என வாய்விட்டுச் சிரித்தான், கண்ணன்!

''ஹான்.... பொறாமையா... அப்படியொண்ணும் இல்லை...'' என வாய் மழுப்பிய போதும், கண்கள் ''பொறாமை தான்'' என்று அடித்துச் சொல்லின.

அவளிடம் மேலும் வம்பு செய்யத் தோன்றிய போதும், அன்றைய முதலிரவை ஓர் சங்கடத்தில் ஆரம்பிக்க விரும்பவில்லை, சிகப்பியின் கணவன்

அதனாலேயே, தன்னருகே அமர்ந்து, தனது பதிலுக்காக தன் முகம் பார்த்து அமர்ந்திருந்த மனைவியை மெல்ல தன் மடிக்கு இடமாற்றினான்.

அவளது பின்னங்கழுத்தில் இதழ் பதித்து ''என் காதல் வாழ்க்கையில முதலும் கடைசியுமா வந்த பெண்.... நீ தான்! நீ மட்டுமே தான்!'' என்றான் உள்ளார்ந்த குரலில்.

அவனது இதழ்களின் தீண்டலில் தன்னில் பாதியைத் தொலைத்திருந்த சிகப்பி, அவனது வார்த்தைகளில் தன்னை முழுதாய் இழக்க, அங்கே ஓர் அழகிய தாம் பத்தியம், அதிகாலை சூரியனாய் உதயமானது!



10

சூரியனின் உதயம், இரவு நேரக் களியாட்டங்கள் முடிவுக் கொண்டு வர, மெல்ல கண் விழித்தான் கருப்பன்.

மென்கொடியாய் தன் மார்பில் துவண்டிருந்த பிசைப் பார்த்ததும், நேற்றைய இரவின் இன்ப அனைத்தும் கடல் அலையென அவனை மூழ்க

சிரிப்பும் - சிணுங்கலும், சண்டையும் - சமாதா முத்தமும் - அடியும், ஊடலும் - கூடலும் என மறக்க முடியாத முதல் அனுபவத்தில் திளை மனைவி என்ற பெயரில் தன் கைக்கு வந்திருக்கு தையை எண்ணித் தனக்குள்ளேயே சிரித்துக் கெ

அந்த சிரிப்பின் முடிவில், அவனது உதடு

கொண்டே இருந்தது. திருமணம் முடிந்ததும், அந்தக் கலக்கம் பன்மடங்காய் பல்கிப் பெருகிவிட்டிருந்தது என்றே சொல்ல வேண்டும்!

அதை மேலும் அதிகரிக்கும் வண்ணம், ''நீ... முதல்ல கீழ போ, சிகப்பி! இன்னும் வரலையேன்னு நினைக்கப் போறாங்க...'' எனக் கருப்பையா கூறவும், சிகப்பியின் முகத்தில் நிஜமான பீதி சூழ்ந்தது.

''லேட்டா எழுந்ததுக்குத் திட்டுவாங்களா?'' எனப் பரிதாபமாய் அவள் கேட்க, சட்டென சிரித்தான் கண்ணன்.

''சே...சே... திட்டவெல்லாம் மாட்டாங்க. காலையில ரொம்ப நேரம் தூங்கினா... அப்பத்தாவுக்குப் பிடிக்காது. அவ்வளவு தான்டா'' என்றான். சமாதானமாக. அப்பத்தாவிடம் கண்டிப்பு இருக்குமே தவிர, கோபமிருக்காது என்பதை உணர்ந்தவன் என்பதால் அவரது நடவடிக்கைகளை மிதமாகவே எடுத்துரைத்தான்.

அவன் கூறிய சேதியில், சிகப்பியின் தூக்கம் இருந்த இடம் தெரியாமல் பறந்தோடியது. கடகடவென, மாடிப்படி நோக்கி ஓடியவளை வேகமாய் கைப்பிடித்து நிறுத்திய கருப்பையா, ''ஹே.... இதென்ன நைட்டியோடவே கீழ போற... நேத்து கட்டிட்டு வந்த சேலையைக் கட்டிட்டுப்போ போ'' என்றான் அவசரமாக.

''கீழ போனதும்... குளிக்கத் தானே போறேன்... இதையே போட்டுக்கிறேனே! சேலை கட்டினா இன்னுமொரு அரை மணி நேரம் லேட்டாகும்'' - கை குவித்துக் கெஞ்சினாள் சிகப்பி.

''லேட்-டானாலும் பரவாயில்லை சிகப்பி. நைட்டி போட்டுக்கிட்டு ரூமை விட்டு வெளியப் போகாதே...

''அம்மா... அம்மா... ப்ளீஸ் மா... இன்னும் கொஞ்சமே கொஞ்சம் நேரம்... ஜஸ்ட் ஒரு ஒன் ஹவர்.... ப்ளீஸ்... ப்ளீஸ்'' என்றவள், தன்னருகே இருந்த கணவனின் மார்பில் இறுக்கமாய் ஒண்டிக் கொண்டாள்.

''எங்கே எழுப்பிவிடுவார்களோ'' என்ற பயத்தில் வார்த்தைகளைக் கோர்த்த அவளது வேகத்தைக் கண்டு, கருப்பையாவிற்கு சிரிப்புப் பொங்கியது. அதிலும், அவள் கேட்ட ''ஜஸ்ட் ஒன் ஹவர்'' பெர்மிஷனில் சிரிப்பு மேலும் பெருத்தது!

தன்னை ஒண்டியிருந்த மனைவியின் தூக்கத்தைக் கெடுக்காமல், அவளுடன் இன்னும் சற்று நேரம் உறங்கத் தான், அவனுக்கும் ஆசை! ஆனால்... மணி ஆறடித்து... அதற்கு மேலும் இருபது நிமிடங்கள் போய்விட்டனவே! ஆகையால், மெல்ல அவளை எழுப்பினான்!

''அம்மா... என்னம்மா... கொஞ்ச நேரம்மா'' என அவள் மீண்டும் சிணுங்க.

''டேய் தக்காளி... மணி ஆறாகிடுச்சுடா... அப்பத்தா நம்மளத் தேட ஆரம்பிச்சிருப்பாங்க, குட்டி!'' - என்றான் கண்ணன், அவளது கூந்தலைக் கோதிய வாறே!

''அப்பத்தா'' என்ற வார்த்தையில் சிகப்பி, துள்ளி எழுந்து விட்டாள்!

ஏற்கனவே அவர் மீது சிறு பயம்... அதுவும், நேற்று அவர் தனது மனதைப் படித்ததிலிருந்து, சிகப்பிக்கு உதறிக் கொண்டே இருந்தது!

புது இடம்... புது மனிதர்கள்... அதிலும் கண்டிப்பு நிறைந்த மெய்யம்மை ஆச்சியுடன், ஒரே வீட்டில் இருக்க வேண்டுமே என்ற கலக்கம் அவளுள் இருந்து

சேலையை மாத்திக்கோ...'' என்ற கருப்பையாவின் குரலில், அழுத்தமிருந்தது. முதல் நாள் இரவு, சேலையைக் களைந்து விட்டு நைட்டியை உடுத்திக் கொள்ளச் சொன்ன போது இருந்த கனிவு, முற்றிலுமாய் மறைந்து போயிருந்தது.

அவனது குரலில் ஓர் கட்டளை தொனிக்க, திகைத்து விழித்தாள் சிகப்பி.

முதன் முறையாக பள்ளிக்கூடம் செல்லும் சிறுமியைப் போல் நின்றிருந்த சிகப்பியைக் கண்டதும். ''இல்லைம்மா... இங்க யாரும் நைட்டி போட்டுட்டு ரூமை விட்டு வரமாட்டாங்க. தேவி அக்கா... வள்ளி அக்கா... ரெண்டு பேருமே... கல்யாணத்துக்கு முன்னாடியும் சரி, அப்புறமும் சரி நைட்டி போட்டுட்டு வீட்டு ஆம் பிளைங்க முன்னாடி வரதில்லை... அப்படியிருக்கும் போது, நீ இப்படிப் போனா... வித்தியாசமா தெரியு மேன்னு தான்...'' என அவன் இழுக்க, சிகப்பி சேலையை எடுத்துக் கொண்டு மறைவிடம் நோக்கிச் சென்றாள்.

அவளுக்குப் பழக்கமில்லாத செயல்களைச் செய்ய வைக்கிறோமே என்று ஏற்கனவே அவனுக்கு லேசாய் வருத்தமிருந்தது. அதை அதிகரிப்பது போல், பதினைந்து நிமிடம் சென்ற பின்னரும் சிகப்பி உடை மாற்றி வராமலிருக்கவே, பயம் சூழ்ந்து கொண்டது.

''சிகப்பிம்மா... சிகப்பி...'' என அவன் மெல்ல குரல் கொடுக்க,

''ம்ம்'' என்ற அவளது குரலில் அழுகையின் சாரல்.

அதுவே போதுமானதாய் இருக்க, வேகமாய் அவ ளிருக்கும் இடத்திற்குச் சென்றவனின் ''என்னம்மா...'' என்ற குரல் கேட்கவும்.

''இந்த சேலை கட்டவே வரமாட்டேங்குது... இருக்க டென்ஷன்ல கையிலேயே நிக்காம நழுவி நழுவி விழுது...'' என்றவளின் கைகள், அந்த அதிகாலை குளிரிலும் வேர்த்திருந்தன!

''ஹே! ரிலாக்ஸ்டா... ஒண்ணும் அவசரமில்லை... மெதுவா கட்டு! இன்னைக்கு உன்னை யாரும் திட்ட மாட்டாங்க...''

''நீங்க தானே... அப்பத்தாவுக்கு லேட்டா எழுந்தா பிடிக்காதுன்னு... ஹய்யோ முதல் நாளே அவங்களுக்குப் பிடிக்காத மாதிரி நடந்துக்கப் போறேன்... இந்த சேலை வேற... ச்சை....''

''சரி... சரி... மெதுவா... நான் ஹெல்ப் பண்றேன்.''

உதவி என்ற பெயரில், அவன் செய்த சில்மிஷங் களை உணரும் நிலையில் கூட இல்லாமல், இடுப்பில் சொருகிய சேலையுடன் வேகமாய் கீழே இறங்கினாள், சிகப்பி.

அவள் பயந்தது போலவே, மாடியறை வாசலையே பார்த்துக் கொண்டு வளவிலிருந்து இரண்டாங்கட்டு செல்லும் பாதையில் அமர்ந்திருந்தார் மெய்யம்மை.

அவர் வாய் திறந்து பேசும் முன்னர் ''சாரி ஆயா... கொஞ்சம் லேட் ஆகிடுச்சு...'' என்ற மன்னிப்புடன் அவரை நோக்கி விரைந்தாள் சிகப்பி.

''இரு... இரு... அங்கனவே இரு ஆத்தா! அப்படியே குளிக்கிற அறைக்குப் போய் தலைக்கு ஊத்திக்கிட்டு வந்திடு'' என்ற மெய்யம்மை ஆச்சியின் சொற்களும், கைகளும் சிகப்பியின் நடைக்குத் தடையிட்டன.

அவர் சொல்லை மீற முடியாமல் அவள் நிற்க, ''தேவி! வந்து... உன் தம்பியொண்டிக்கு (தம்பி மனைவிக்கு) குளிக்க எல்லாம் எடுத்துக் கொடு'' என்று முன்புறம் நோக்கிக் குரல் கொடுத்தார், பெரியவர்.

ஐந்து நிமிடம் கழித்தும் பதிலேதும் வராமல் போக, ''நான் வேணும்னா போய்... அண்ணியைக் கூட்டிட்டு வரட்டுமா. ஆயா'' என சிகப்பி கேட்டது தான் தாமதம். மெய்யம்மை ஆச்சியின் கூர் பார்வை அவளை சல்லடை போட்டது.

''குளிக்கிறதுக்கு முன்னாடி... நீ யாரையும்... எந்தப் பொருளையும் தொடக் கூடாது'' என்றவரின் குரலிலிருந்த கண்டிப்பை, ''கோபம்'' என்று தப்பாய் உணர்ந்து கொண்டாள், இளையவள். நெஞ்சம் துணுக்குற்றது.

''இல்லை... அண்ணி இன்னும் வரலையேன்னு தான் கேட்டேன்...'' - விளக்கம் போல் அவள் கூற,

''நீ... வந்ததும் சோப்பு, துண்டு, உடுப்பு எல்லாத்தையும் எடுத்துக் கொடுத்திடலாம்ன்னு அவ இம்புட்டு நேரம் இங்கன தான் இருந்தா... கொஞ்ச நேரம் முன்னாடி தான் ஊருக்குப் போற துணியை எடுத்து வைச்சிட்டு வரேன்னு போனா...'' - தேவி பதில் சொல்லாததற்கு, மெய்யம்மை ஆச்சியும் விளக்கம் கொடுத்தார்.

''தான் தாமதமாய் எழுந்து வந்ததைக் காரணம் காட்டுகிறார் போலும்... சை... எல்லாம் இந்த சேலையால்...'' என நொந்தது சிகப்பியின் மனம்.

''சாரி ஆயா! ரொம்ப நேரம் தூங்கிட்டேன்...''

''அதனால பரவாயில்லைத்தா... புதுசு தானே... போகப் போகப் பழகிக்கோ'' - என அவர் முடிக்கும்

போதே, தேவியும் வந்துவிட, ஒருவாறாய் சிகப்பிமின் பதட்டம் நிறைவு பெற்றது.

குளித்து முடித்து வெளியே வந்த சிகப்பியை, சாமி வீட்டிற்கு அழைத்துச் சென்று விளக்கேற்ற செய்தவள் சிகப்பி வணங்கி எழும் வரை பொறுத்திருந்தாள்.

பின்னர், ''சிகப்பி... நான் சொல்றதைக் கவனமா கேட்டுக்கோ!'' என்ற பீடிகையுடன் ஆரம்பித்து,

''தினமும், காலையில எழுந்து, குளிச்சு முடிச்சதும், சாமி வீட்டில இருக்க இந்த விளக்கை ஏத்திடணும்மா.''

''அப்புறம்... இங்க இருந்து பங்களாவுக்குப் போனதும் கூட, அங்க இருக்க சாமியறை விளக்கு, வெளியில இருக்க சின்னப் பிள்ளையார் விளக்கு, பின் வாசல்ல இருக்க துளசி மாடத்து விளக்கு எல்லாத்தையும் காலை யிலையும், சாயங்காலமும் மறக்காம ஏத்திடுமா...''

''ஹோ... இந்த வீட்டில இருக்க மாட்டோமா?'' - இடை வெட்டியது சிகப்பியின் குரல்.

''இன்னும் இரண்டு நாள் இருப்பீங்க. கல்யாணத்துக்கு வராதவங்க எல்லாரும்... கல்யாணம் விசாரிக்க வருவாங்க. அது வரைக்கும் இருந்திட்டு, அப்புறம் பங்களாவுக்குப் போய்டுவீங்க!''

''எல்லோருமேவா?'' - இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கக் கூடாது என்பதை சிகப்பி உணரவில்லை. தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் அவள் கேட்க, மற்றவளுக்கு வேறு மாதிரி பட்டது.

''ஹ்ம்ம் எல்லோரும் தான். அப்பத்தா, ஐயா, அப்பா, கண்ணன், நீ... எல்லோரும்...''

"அப்போ... இந்த வீடு? பூட்டியிருக்குமா?"

"ம்ம். பூட்டியிருக்கும். ஆனா, ஒரு சின்ன விசேஷம் னாலும்.... நீங்க எல்லோரும் இங்க வந்துடுவீங்க. ஒரு செட் சமையல் சாமான் இங்க இருந்துட்டே இருக்கும்..."

"சரி அண்ணி!"

"சில முக்கியமான விஷயங்கள்..."

"அப்பத்தாவுக்கு... சாமியறை வேலைகளை வேலைக் காரங்க செஞ்சா பிடிக்காது. வீட்டுப் பொம்பளைங்க தான் செய்யணும்ன்னு நினைப்பாங்க. முக்கியமா விளக்கேத் துறது... ஏழு மணிக்குள்ள ஏத்திட்டினா பரவாயில்லை... கொஞ்சம் சீக்கிரம் எழுந்து பழகிக்கோ."

"அப்பத்தா - ஐயா இருக்கும் போது நைட்டி போட வேண்டாம்... உங்க ரூம்-குள்ள எப்படி வேணும்னாலும் இருந்துக்கோ... ஆனா, வெளியில வேணாம். ப்ளீஸ்."

"அப்புறம்... சுடிதார்... ஸ்கர்ட்... ஜீன்ஸ்... இதெல்லாம் உங்க வீட்டில போட்டுப் பழகியிருப்பே... ஆனா... இங்க..."- தேவியின் குரல் லேசாய் இழுபட.

"சேலையே கட்டிக்கிறேன், அண்ணி!" - மென்குர லில் இடைப்புகுந்தாள், சிகப்பி.

"ச்சே... ச்சே... அப்பத்தா ரொம்பக் கட்டுப்பெட்டி இல் லைம்மா. கோவில், கல்யாணம், பங்காளி வீட்டு விசேஷம்... இப்படி எதுக்காவது போகும் போது சேலை கட்டினா போதும். மித்தப்படி, நீங்க ரெண்டு பேருமா வெளிய போகும் போது, உனக்குப் பிடிச்சதைப் போட்டுக்கோ..."

"ம்ம். சரி அண்ணி!"

"அடுத்து... ஐயாவுக்கு அதிகம் டி.வி. பார்த்தா பிடிக்காது. அதனால்... வெளி ரூம்ல உட்கார்ந்து ரொம்ப நேரம் டி.வி.பார்க்காதே. உங்க ரூம்-குள்ள என்ன வேணும்னாலும் செஞ்சுக்கோ..."

"அடுத்ததா.... எங்கப்பா... அவருக்கு சாப்பாட்டில சின்னதா ஒரு முடி இருந்தாக் கூட சுத்தமா பிடிக்காது. அதனால, நீ சமைக்கும் போதோ... இல்லை பரிமாறும் போதோ பார்த்து நடந்துக்கோ..."

"கடைசியா... கண்ணன்! அவனுக்குப் பிடிக்காத ஒரே விஷயம்.... வேலை நேரத்தில அவனைத் தொந்தரவு பண்றது தான். அதனால... முடிஞ்ச வரைக்கும் அப்படி எதுவும் பண்ணி... திட்டு வாங்கிக்காதே..." எனத் தன் நீண்ட அறிவுரைப் பட்டியலை வாசித்து முடித்தாள். சிகப்பியின் மூத்த நாத்தனார்.

பேசிய தேவிக்கு மூச்சு வாங்கியதோ இல்லையோ கேட்டிருந்த சிகப்பிக்கு மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங் கியது!

அவளது முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த தேவிக்கு மிதமாய் பரிதாபம் எழும்ப, "ரொம்பப் பயந் துக்காதே... சிகப்பி! இதெல்லாம் ஒரு முன்னெச்சரிக்கை தான். நீயே பார்த்துப் பக்குவமா நடந்துக்கோ!" என்றார் பரிவுடன்.

"சரி, அண்ணி!" - அவள் மண்டையை ஆட்டியதும், வெளியே செல்ல எத்தனித்த தேவி, ஓர் நிமிடம் தயங்கி நின்றார்.

தன் பின்னே நின்றிருந்த சிகப்பியிடம் மெல்ல திரும்பி, "நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதே!

எங்க பாட்டையா காலம் தொட்டு, பெரிய மரியாதை யோட வாழ்ற குடும்பம் இது... அப்படிப்பட்ட குடும் பத்தில இருந்து எங்க கண்ணனைத் தனியா கூட்டிட்டுப் போய். ஊர் வாய்க்கு அவல் கொடுத்துடாதே'' என்றார் மெது குரலில் அதில் சங்கடமும் கோபமும் சரி பாதி கலந்திருந்தன.

கேட்டிருந்த சிகப்பியோ, ''ஏன் இப்படிச் சொல் கிறார்?'' என ஓர் நிமிடம் திகைத்த போதும், மறு நிமிடமே அவரது பேச்சிற்கான காரணத்தை ஊகித்து விட்டாள்.

இந்த வீட்டிலிருந்து யார் யார் பங்களாவிற்குச் செல்கிறோம் என்ற ரீதியில் அவள் கேட்ட ''எல் லோருமா'' என்ற கேள்வி, இப்படியொரு கோணத்திலும் பார்க்கப் பட்டிருக்கிறது என்பது அவளைத் திகைக்க வைத்தது.

திகைத்துக் கொண்டிருக்க நேரமில்லாமல், தேவி பதிலுக்குக் காத்திருப்பது புரிய ''சாரி அண்ணி! உங் களுக்குள்ள இப்படியொரு எண்ணத்தை விதைச்ச என் பேச்சுக்காக... சாரி கேட்டுக்கிறேன்'' என்றாள் வருத்த மான குரலில்.

''ஹே...பரவாயில்லை...''

''ஒரு நிமிஷம்... இதையும் சொல்லிடுறேன். என் னால இந்தக் குடும்பத்துக்கு ஒரு தலைக்குனிவும் ஏற்படாது! கண்டிப்பா! என்னை நம்பலாம்!'' என்றாள் உறுதியான குரலில்.

''இது போதும்டா...'' என அவளை உச்சி முகர்ந்த தேவி, அந்தப் பெரிய வீட்டை சுற்றிக் காட்டினாள்.

அவளது பிள்ளைகளும், வள்ளியின் பிள்ளைகளும் சேர்ந்து கொள்ள, சற்று நேரம் இனிமையாய் கழிந்தது.

பின்னர், இருவரும் சமையற்கட்டிற்குள் நுழைய, அங்கிருந்த வேலையாட்கள் அனைவரையும் சிகப்பிக்கு அறிமுகம் செய்து வைத்தாள். இவர்களே, பங்களாவிலும் வேலை செய்பவர்கள் என்பதால், யார் யார் என்ன என்ன வேலை செய்கிறார்கள். யாரிடம் எப்படி வேலை வாங்க வேண்டும் என்பது வரை நீண்டது பேச்சு. தொடர்ந்த காலை உணவு நேரத்தின் பின்னர் கண்ண னின் இரு சகோதரிகளும் தத்தம் வீட்டிற்குக் கிளம்பினர்.

''என்ன அண்ணி.... இவ்வளவு சீக்கிரம் கிளம்பிட் டீங்க? இன்னும் ரெண்டு நாள் இருக்கலாமே...'' என சிகப்பி திகைக்க.

''நாளைக்கு செவ்வாய்க்கிழமையா இருக்கும்மா... அப்புறம் அடுத்த நாள் புதன்கிழமை அன்னைக்கு நாங்க வந்து எட்டு நாள் கணக்காகுது... அதனால தான், இன்னைக்கே சொல்லிக்கிட்டு கிளம்புறோம் '' என்றார் சகோதரிகள் இருவரும். தாய் வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்குச் செல்வதற்குக் கூட, இத்தனை கணக்குகளா என்றிருந்தது சிகப்பிக்கு!

தங்கள் வீட்டிற்கு விருந்துக்கு வருமாறு தம்பியையும் அவனது மனைவியையும் முறையே அழைத்துவிட்டு, அவர்கள் கிளம்ப, வீட்டினர் அனைவரும் அவர்களது குல தெய்வக் கோவிலான மூலங்குடிக்குச் சென்று, அங்கிருக்கும் பொன்னனை வழிபட்டுத் திரும்பினர்.

கோவில்களுக்குச் சென்று திரும்பியதும், சிகப்பியை யும் கருப்பையாவையும் சிகப்பியின் தாய் வீட்டு

அசைவ விருந்துக்கு அனுப்பி வைத்தார். (திருமணம் முடிந்த மறுநாள் என்பதால், அவர்கள் கோட்டையூரில் தான் இருந்தனர்.) அனுப்பி வைத்தார் என்பதை விட, கருப்பையாவின் தந்தையுடன் அவர்களைக் கூட்டி விட்டார் என்றே சொல்ல வேண்டும்.

இந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் நடந்த ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் - கருப்பையாவிற்கும் சிகப்பிக்கும் இடையே பெரிதாய் எந்த பேச்சு வார்த்தையும் இடம் பெறவில்லை - பெரிதாய் என்ன பெரிதாய் - பல நேரங்களில் கருப்பையாவே பேசிய போதும், அவனது சொற்கள் ஒற்றையாகவே முடிந்து போகும் அளவிற்குப் பேச்சு வார்த்தை சுருங்கியிருந்தது. அதிலும், அவனது அப்பத்தாவோ ஐயாவோ அப்பாவோ அருகே இருந்தால், பிடித்திருந்த கையைக் கூட மெதுவாய் உருவிக் கொண்டான். சிகப்பியின் கைகளைப் பிடிப்பதும், அவளிடம் பேசுவதும் இருவரும் தனித் திருந்த சில மணித் துளிகளில் தான்!

நேற்றிரவு தன்னிடம் உருகிய கருப்பையாவா இவன் என்றிருந்தது சிகப்பிக்கு!

தாங்கள் இருவரும் காஞ்சிபுரத்தில் சந்தித்ததை, அவனது மூத்த சகோதரியின் வாண்டு ஒன்று அப்பத்தாவிடம் போட்டுக் கொடுத்தமையால் அவரது கோபத்திற்கு ஆளாகி, அதன் விளைவாக திருமணத்திற்கு முன்னர் சிகப்பியிடம் பேசுவதை அவன் தவிர்த்தான் என்பதை அறிந்திருந்த சிகப்பிக்கு, இன்றைய அவனது "கஞ்சப் பேச்சு" புரிபடவில்லை.

இப்போது தான் திருமணம் முடிந்துவிட்டதே! பிறகு... ஏன் அவளிடம் சாதாரணமாய் பேசமாட்டேன் என்கிறான் என்பதை அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை!

இதிலேயே, உழன்று கொண்டிருந்தவளின் முகம் வாட்டத்தைக் காட்ட, மகளின் வரவுக்காக காத்திருந்த உமையாள் ஆச்சியும், பெரிய சிகப்பி ஆச்சியும் துணுக் குற்றனர்.

தங்கள் பயத்தை மறைத்துக் கொண்டு அவர்கள் நடத்திய விசாரணையில், தேவி சொன்ன "பிடிக்காத பட்டியல்" மற்றும் அப்பத்தாவின் "கூர் பார்வைகள்" மட்டுமே சிகப்பியின் வாய்மொழியாய் பகிரப் பட்டன.

கூடவே, "எனக்கு ரொம்பப் பயமா இருக்கும்மா... எனக்கு நம்ம செட்டிய வீட்டுப் பழக்கம் எதுவுமே தெரியல போல... ஆயாவுக்கு என்னைப் பிடிக்காம போய்டுமா அம்மா..." என அவள் கலங்க,

"இது தான் விஷயமா.... நாங்க என்னமோ ஏதோன்னு பதறிப் போய்ட்டோம்! இதெல்லாம்... புருஷன் வீட்டுக்குப் போற எல்லா பொண்ணுக்கும் வர பயம் தான். தெளந்து! போகப் போக... நீயே பழகிக்குவே!" என உமையாளும்,

"எது ஒண்ணு தெரியலைனாலும்... அவுகளையே கேளுத்தா. சங்கடப்படாதே.... மெய்யம்ம பெரியத்தா பார்க்கத் தான் கடுசா தெரிவாகளே ஒழிய... ரொம்ப நல்லவுக..." என்று சிகப்பி ஆச்சியும் அவள் கலக்கத் திற்கு முற்றுப் புள்ளி வைத்தனர்.

ஆனால், சிகப்பியின் முகம் தான் தெளிந்த பாடாய் இல்லை. அவளது கலங்கிய முகத்தைப் பார்த்துவிட்டு,

அவளிடம் வந்த சக்தியிடமும் அவள் இதே சோகக் கீதத்தைப் பாட, ''கவலையே படாதே, சோப்பு டப்பா! நீயும் அத்தானும் ஒரு வாரம் ஜாலியா இருக்க மாதிரி... நான் ஒரு ஐடியா வச்சிருக்கேன்...'' என்றவன், விருந்து முடிந்து அவர்கள் கிளம்பியபோது ''சிம்லா-டார்ஜிலிங் டூர் பாக்கேஜ்'' என்ற பெயருடன் ஓர் பரிசைக் கொடுத்து, அவர்களது தேனிலவுக்கு வழி செய்தான்.

தன் தாய் வீட்டு சொந்தங்களைப் பார்த்ததில், சற்றே தெளிந்திருந்த சிகப்பியின் முகம் மேலும் பிரகாசிக்கும் வண்ணம், அன்றைய இரவு அமைந்தது.

தன்னைக் கையணைப்பில் வைத்துக் கொண்டு ''இன்னைக்கு.. என் மேலே செம கோபமா இருக்கீங்களா, மேடம்? ம்ம்.. என்னோட தக்காளி மிளகா மாதிரி முறைச்சிட்டு இருந்தா எனக்குப் பிடிக்கலையே!'' என்ற கணவனின் கொஞ்சலை விடவும்,

''இன்னைக்குக் காலையில இருந்து உன்னோட சரியாவே பேச முடியலைடா... பெரியவங்க முன்னாடி உன்னோட இழையவும் முடியாம.. உன்னோட பேசாம இருக்கவும் முடியாம.. ரொம்பக் கஷ்டமா இருந்ததுடா..''

''இவன் என்னடா.. ரூம்-குள்ள மட்டும் இந்தக் கொஞ்சு கொஞ்சுறான்... வெளிய சரியா பேசக் கூட மாட்டேன்கிறான்னு நினைக்கிறியா!''

''ஹ்ம்ம்.. கண்டிப்பா உனக்குக் கஷ்டமா தான் இருந்திருக்கும்.. புது இடம்... புது மனுஷங்க.. அதில நான் வேற உன்னைக் கண்டுக்காம இருந்தா உனக்கு சங்கடமா தான் இருந்திருக்கும்...''

''ஆனா.. நான் என்ன பண்ணட்டும் சொல்லு... என்னால அப்பத்தா- ஐயா இருக்கும்போது உன்னோட சகஜமாவே இருக்க முடியல.. அவங்க ஒண்ணும் சொல்ல மாட்டாங்கதான்.. அதிலும் புதுசா கல்யாண மான நம்மளை கண்டிப்பா தப்பா நினைக்க மாட்டாங்க... ஆனாலும்... எனக்கு ஒரு மாதிரி இருக்குடா... உனக்குப் புரியுதுதானே? ப்ளீஸ் சிகப்பிமா....'' என அவன் தனது செயல்களுக்கான விளக்கம் கூறியபோது, அவளது கலக்கம் முற்றிலுமாய் மறைந்து விட்டிருந்தது.

இதையெல்லாம் தூக்கி சாப்பிடும் வண்ணம், ''சக்திக்குத் தான் கோடி தேங்க்ஸ் சொல்லணும்.. நான் மூணார் போற பிளான்-ல இருந்தேன்... அவன் அதைவிடவும் சூப்பர் இடமா பார்த்து..ஹனிமூனுக்கு ஏற்பாடு செய்துட்டான்.. எந்த விதமான தடையுமில்லாம ரெண்டு பேரும் ஜாலியா இருந்திட்டு வரலாம்...''

''ஒருத்தரை ஒருத்தர்ப் புரிஞ்சுக்க ஒரு நல்ல சந்தர்ப்பமா அமையும்! அந்த நாளுக்காக.. ரொம்ப ரொம்ப ஆவலா காத்திருக்கேன்'' என அவன் மகிழ்ந்ததும், சிகப்பியின் பழைய உற்சாகம் மீண்டு வந்திருந்தது.

இந்த சந்தோஷம் அடுத்த ஒரு வாரமும் நீடிக்க, அவர்கள் தேனிலவு செல்ல வேண்டிய நாளும் நெருங்கிக் கொண்டே இருந்தது!

ஆனால்... இருவரும் டார்ஜிலிங் செல்வதற்குப் பதிலாக, மருத்துவமனைக்கு அலைந்து கொண்டிருந்தனர்! ஏனென்றால், கோட்டையூரிலிருந்து காரைக்குடிக்கு காரில் சென்ற கருப்பையாவின் தந்தைக்கு விபத்து நேர்ந்து விட்டிருந்தது!



11

கருப்பையாவும் சிகப்பியும் தேனிலவு செல்வதை, சக்தியின் பரிசு கிடைத்த மறுநாளே வீட்டில் சொல்லி யிருந்தனர்.

வீட்டிலிருந்தவர்களும் ''நல்லா போயிட்டு வாங்க'' என்று சந்தோஷமாய் அனுமதியும் கொடுத்தனர்.

இனிமையாய் கழியப் போகும் தெவிட்டாத தேனி லவு நாட்களுக்காக சிகப்பியின் மனம் ஏங்கியிருக்க, அவனும் அவளும் கிளம்ப வேண்டிய நாளின் காலை யில் கருப்பையாவின் தந்தைக்கு விபத்து ஏற்பட் டிருந்தது!

தலை, கை, கால், முகம் என ஏகப்பட்டக் காயங் களுடன் இருந்த மாமனாரைப் பார்த்ததும் சிகப்பிக்கே நெஞ்சம் பதறியது என்றால், கருப்பையாவைப் பற் றியோ மெய்யம்மை ஆச்சியைப் பற்றியோ கேட்கவே வேண்டாம்.

இருவரும் பெரும் அதிர்ச்சியில் இருக்க, அதிலிருந்து முதலில் வெளி வந்த கருப்பையா தான், தந்தைக்குத் தேவையானவற்றை விரைந்து கவனித்தான்.

கன கம்பீரமாய் இருக்கும் மெய்யம்மை ஆச்சியின் கலங்கிய உருவம் மனதைப் பிசைய, ''கவலைப்படா தீங்க ஆயா! மாமாவுக்கு சரி ஆகிடும்.. நீங்க கும்பிடும்

வயல் நாச்சி அம்மனும், சொக்கட்டான் பிள்ளையாரும் அவருக்கு ஒண்ணும் வர விடமாட்டாங்க'' என்றாள் சிகப்பி, அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு.

''நல்ல வார்த்தையா சொன்னே, ஆத்தா! அவனுக்கு சரியானதும்.. வயல் நாச்சி கோவில்-ல 101 பிரகாரம் வரணும் (101 முறை கோவிலை சுத்தி வருவது)....'' என்ற மெய்யம்மை ஆச்சியின் உதடுகள், தெய்வங் களின் பெயரை விடாது உச்சரித்துக் கொண்டிருந்தது.

செய்தி கேள்விப்பட்டு, சிகப்பியின் பெற்றோரும், அவளது மாமனாரை வந்து பார்த்துவிட்டுச் சென்றனர்.

கருப்பையாவின் சகோதரிகளும் தத்தம் கணவன் மார்களுடன் வந்து சேர, அடுத்த ஒரு வாரம் முழுதும்- வீடு, மருத்துவமனை, கோவில் என்று வாழ்க்கை அதி வேகத்தில் சென்றது.

அதே வேகத்தில், கருப்பையாவின் தந்தையும் குணமடைய, சரியாக பத்து நாட்களில் வீடு வந்து சேர்ந்த பின்னர் தான், மனம் ஒரு நிலைப்பட்டது!

தந்தையின் முன்னேற்றத்தை அறிந்து கொண்ட பெண்கள் இருவரும், தத்தம் குடும்பத்தின் தேவை களைக் கவனிக்கச் சென்றுவிட, வீடு மீண்டும் பழைய நிலைக்கு வந்தது.

''தந்தைக்கு விபத்து'' என்ற செய்தியைக் கேட்ட நாளிலிருந்து, தன் இரவு நேரப் பொழுதுகள் யாவற் றையும் மருத்துவமனையிலேயே கழித்திருந்த கருப் பையா, அன்று தான் அவர்களது அறைக்குள் பிரவேசித் தான்.

தனக்காக காத்திருந்த மனைவியின் மோவாய் நிமிர்த்தி மெல்ல முத்தமிட்டவன், ''ரொம்ப டையர்டா இருக்குடா...'' என்ற வார்த்தையோடு, கட்டிலில் படுத்து, அடுத்த நிமிடமே உறங்கியும் போய்விட்டான்.

ஆனால், சிகப்பி எதிர்பார்த்ததே வேறு! போகாத தேனிலவைப் பற்றி ஏதாவது பேசுவான்! ஏக்கமாய் பேசித் தன்னைக் கொஞ்சுவான்! அடுத்ததாய், தேனில வுக்கு என்று தான் போட்டு வைத்திருக்கும் திட்டத்தைப் பற்றி ஏதாவது சொல்லுவான்! என்ற அவளது எதிர் பார்ப்பில் ஒன்றுகூட பூர்த்தி ஆகவில்லை!

நித்திரையின் முழுமையான தாக்குதலால் உறங்கிப் போயிருந்த கருப்பையாவிடம் எந்த அசைவுமில்லை சிகப்பி தான்... மனசைத் தேற்றிக் கொண்டு படுக்க வேண்டியதாய் இருந்தது!

அடுத்த நாளாவது ஏதாவது சொல்வான் என்று அவள் எதிர்பார்த்திருக்க, தந்தையின் உடல்நிலை முன் னேறியதால், இத்தனை நாட்கள் கவனிக்காமல் விட் டிருந்த தனது மருத்துவமனை பணிகளைப் பார்க்கச் சென்று விட்டான், கருப்பையா.

இதுவே, அந்த மாதம் முழுதும் வாடிக்கையானது!

இன்று.. நாளை... நாளன்று என்று சிகப்பி நாட்களை மெல்ல நகர்த்த, கருப்பையாவின் கவனம் அவள் மீது திரும்பும் பாடாய் இல்லை.

அதற்காக, அவளிடம் அவன் பாராமுகம் காட்டினான் என்று சொல்ல முடியாது! நேரம் கிடைக்கும் போது கொஞ்சினான்... கட்டியணைத்தான்... கண்ணே மணியே என்று கவி பாடினான்.. ஆனால் அதெல்லாம்

கொஞ்ச நேரமே தான். நள்ளிரவு தாண்டி வருபவன், பத்து நிமிடங்கள் அவளுக்கென ஒதுக்கிவிட்டு, உடனே படுத்துவிடுவான்.

வலுக்கட்டாயமாய் பிடித்து வைத்தால் ''சாரி சிகப்பி! உன்னோட உட்கார்ந்து மணிக்கணக்கா பேசணும்ன்னு தான் எனக்கும் ஆசை... ஆனா.. இப்ப முடியாதுடா... புதுசா புதுக்கோட்டையில ஒரு ஹாஸ்பிடல்-ல வேற கேஸ் இருக்குன்னு அப்பப்போ சொல்லி விடுறாங்க... அங்க வேற போக வேண்டியிருக்கு.. இங்க நம்ம ஹாஸ் பிடல்-ல வேற, ஜூனியர் டாக்டர், டியூட்டி டாக்டர் ரெண்டு பேரும் ஒரே நேரத்தில் வேலையை விட்டு நின்னுட்டாங்க.. அவங்க இடத்துக்கு வேற ஆளு போடற வரைக்கும் நான் தான் எல்லாம் பார்க்க வேண்டியதா இருக்கும்மா. டியூட்டி டாக்டர் இல்லாததால மிட்நைட் வரைக்கும் இருந்து பேஷண்ட்ஸ் கேஸ் சீட் பார்த்திட்டுத் தான் வர முடியுது! எனக்குமே.... கல்யாணமான புதுசில இப்படி உன்னை விட்டுட்டுப் போறோமேன்னு சங்கடமா தான் இருக்கு... ஆனா... சாரி சிகப்பி! இன்னும் கொஞ்ச நாள் இதைப் பொறுத்துக்கோ! ப்ளீஸ்!'' என்ற நீண்ட விளக்கத்தின் முடிவில் ஒரு கொட்டாவியையும் விட்டுவிடுவான்.

தூக்கத்தின் பிடியில் சிக்கிக் கொள்ளத் துடிப்பவனைத் தன் பிடியில் தக்க வைத்துக் கொள்ள முடியாமல், சிகப்பி மௌனமாய் இருந்துவிட, கருப்பையாவும் தூங்கிவிடு வான்.

பல வகைகளில் மெய்யம்மை ஆச்சியிடம் சிகப்பிக்கு பயம் இருந்தாலும், இந்த விஷயத்தில் புதிதாய் வந்த

மருமகள் பக்கம் அவர் வாதாடியது, அவர் மேல் அவள் வைத்திருந்த மரியாதையை அதிகரிக்கவே செய்தது.

ஏனென்றால், ''புதுசா கலியாணம் ஆன பொண்ணு... இப்படி அதை எங்கயும் கூட்டிட்டுப் போகாம வீட்டுக் குள்ளயே அடைச்சு வைக்கிறது தப்பு, கண்ணா! அதுக் கும்... உன்னோட வெளிய போகணும்.. நாலு இடத்தில ஒண்ணா தெரியணும்... ஆத்தா வீட்டுக்கு ஆம்படை யானோட போகணும்.. இரண்டு நாள் நாலு நாள் தங்க ணும்ன்னு ஆசை இருக்காது? நீ... உன் இஷ்டத்துக்கு இருக்கிறதுக்கு.. எதுக்கு கலியாணம் கட்டிக்கிறே? நான் கேட்டப்பவே வேணாம்ன்னு சொல்லி இருக்க வேண் டியது தானே? இப்போ பாரு.. ஒரு சின்னப் புள்ளையை மனசு சங்கடப்பட வைக்கிற'' என்ற அவரது வார்த்தை கள் தான்.

அவளுக்குத் தெரியப் பேசிய பேச்சுக்கள் மட்டு மல்ல, அவளுக்குத் தெரியாமல் பேரனிடம் அப்பத் தாவும்- ஐயாவும், கூடவே சிகப்பியின் மாமனாரும் புத்தி சொல்லி இருக்கின்றனர் என்பது சிகப்பிக்குத் தெரிய வந்தது.

ஒரு நாள், மருத்துவமனைக்குக் கிளம்பிக் கொண் டிருந்த கண்ணனிடம் பலகாரத்திற்குப் பின் அவன் குடிக்கும் காபியைக் கொடுத்துவிட்டு, அறையை விட்டு நகர்ந்த சிகப்பியின் கைபிடித்து நிறுத்தினான் அவன்.

''என் மேல கோபமா?'' என்றான் மெதுவாக.

பதில் சொல்லாமல் அவள் நிற்கவே, ''கோபம் தான்! எப்பவும் உன் முகத்தில இருக்க துள்ளல்... கிரிப்பு

சந்தோசம்... எதுவுமே இல்லை! உள்ளுக்குள்ள இருக்க வலியை வெளியக் காட்டிடக் கூடாதேங்கிற பதட்டம் தான் இருக்கு... அதுவும், என்னைப் பார்க்கும்போதெல் லாம் முகத்தை எப்படி திருப்பிக்கிறே... அதைக் கூடப் புரிஞ்சுக்கத் தெரியாத ஆளா நான்...'' என்றான் வருத்த மாக.

''உன் வேதனை புரிகிறது...புரிகிறது'' என்று அறை கூவுகிறானே ஒழிய, அதைப்போக்கும் எண்ணம் கொஞ்சம் கூட இல்லையே எனத் தோன்றியது, சிகப் பிக்கு!

இல்லை, எனக்கு அந்த எண்ணம் இருக்கிறது என்று நிரூபிக்கும் வண்ணம்- ''இந்த எக்ஸ்ட்ரா வேலை முடியிற வரைக்கும்.. நீ வேணும்னா உங்க அம்மா வீட்டுக்குப் போயிட்டு வரியா சிகப்பி? என்ன சொல்றே?'' என அவன் கேட்க, சிகப்பிக்கும் அது சரியென்றே பட்டது.

''சரி... ஆயாகிட்ட நீங்க சொல்றீங்களா?'' என அவள் மெதுவாய் கேட்க,

''அப்பத்தா ஒண்ணும் சொல்ல மாட்டாங்கடா. சொல்லப் போனா... ரொம்ப சந்தோஷப்படுவாங்க...''

''நிஜமாவா? நான் தனியா போறதுக்கு ஒண்ணும் சொல்ல மாட்டாங்களா?''- சிகப்பிக்கு இன்னமும் சந்தேகமாகவே இருந்தது. இந்த வீட்டுப் பெண்கள்- இந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்குச் செல்வதற்கே நல்ல நாள் பார்ப்பவர், முதன்முதலாக புகுந்த வீட்டி லிருந்து தாய் வீட்டிற்குச் செல்வதற்கு என்ன என்ன வழிமுறைகள் வைத்திருப்பாரோ என்றிருந்தது அவ

''நிஜம்! உன்னை நான் சரியா கவனிச்சுக்கிற தில்லைன்னு அவங்களுக்கு ரொம்ப கோபம். தினம் தினம் திட்டு தான் வாங்குறேன்...''

''என் மேல.. எல்லோரும் செம காண்டு-ல இருக் காங்கடா... அப்பத்தா-ஐயா மட்டுமில்லை... அப்பாவும் கூப்பிட்டு வச்சு செம அட்வைஸ். தேவிக்கா.... வள் ளிக்கா... எல்லோரும் போன் போட்டு, என்னைத் திட்டித் தீர்க்கிறாங்க!''

''எனக்குமே கில்ட்டியா இருக்குமா... கொஞ்ச நாள் உங்கம்மா வீட்டில இருந்திட்டு வந்தா உனக்கும் ஒரு மாறுதலா இருக்கும்...'' என முடித்தவன், மறக்காமல் அடுத்த நாள் உணவின் போது, எல்லோர் முன் னிலையிலும் சிகப்பி சென்னை செல்வதை அறிவித் தான்.

''என்னது? சிகப்பி மட்டும்... தனியா அவுக ஆத்தா வீட்டுக்குப் போறாளா? அதுவும், கல்யாணமான முதமுறை.. இது எந்த ஊரு பழக்கம்?'' - அப்பத்தாவின் கண்டிப்பான குரல், சட்டென தடை விதிக்கவும்.

சிகப்பியின் கண்கள் கருப்பையாவிடம் பாய்ந்து மீண்டன.

''இல்லை... அப்பத்தா! ஹாஸ்பிடல்-ல வேலை குறையிற வரைக்கும்...'' - என அவன் இழுக்க,

''கல்யாணத்துக்கு அப்புறம்....முதன் முதலா ஆத்தா வீட்டில போய் தங்கும்போது....புருஷனோட தான் போகணும். நீயும் போறதுன்னா தாராளமா எத்தனை நாள் வேணும்னாலும் தங்கிட்டு வாங்க... அவ மட்டும் தனியா போறதெல்லாம் எனக்குச் சரியாப் படலை....''

''அதான்.... கல்யாணத்துக்கு அடுத்த நாளே, விருந் துக்குன்னு அவங்க வீட்டுக்குப் போயிட்டு வந்துட் டோமே? அது... ஒண்ணா போன கணக்கு தானே?

இப்போ...இரண்டாவது முறை போறது தானே அப்பத்தா... அவ போகட்டுமே?'' கண்ணனும் முயன்று தான் பார்த்தான்.

ஆனால், இம்முறை அப்பத்தா பதில் சொல்வதற்குப் பதிலாக, அவனது தந்தை பேசினார்.

''கண்ணா! அவளும் நீயுமா சென்னை போறதுன்னா இப்பவே கூட கிளம்புங்க... அப்படி இல்லைன்னா, இந்தப் பேச்சு போதும்'' என்று அவர் முடிந்துவிட, சிகப்பிக்கு ஆயாசமாய் வந்தது.

''தன் தாய் வீட்டிற்குச் செல்வதற்குக் கூட.... இத்தனை பேரிடம் அனுமதி பெற வேண்டுமா? இதற் குத் தான் கல்யாணமே வேண்டாம் என்று பல பெண்கள் பயப்படுகிறார்களோ?'' என்ற சலிப்பும் யோசனையும் நெஞ்சில் குடி வந்தது.

அவளை மேலும் யோசிக்க விடாமல், பேச்சு வார்த்தை தொடர்ந்தது.

''இன்னும்... நீங்க ரெண்டு பேருமா நல்ல விசேஷம் எதுக்கும் போய் வரலை...அதுக்கான வழியை முதல்ல பாரு..''

''அடுத்த வாரம் மெ.நா வீட்டில சதாபிஷேகம் வருது.. பங்காளி வீட்டில எல்லோரையும் கூப்பிடுற முறை இல்லைனாலும், வீட்டுக்கு வந்து பத்திரிகை வச்சிட்டுப் போயிருக்காங்க. அந்த மரியாதைக்காகவாவது நாம எல்லோரும் போகணும்..''

''நீயும் சிகப்பியும் வந்திட்டு வந்தீங்கன்னா... அடுத்து வர விசேஷங்களுக்கு அவளை மட்டும் நான் கூட்டிப் போவேன்...''

''இப்போ... நீ எந்த விசேஷத்துக்கும் வராமா இழுத்தடிக்கிறதால தான், அவளையும் எங்கேயும் கூட்டிப் போக முடியலை...'' என்று நீளமாய் பேசி முடித்தார், மெய்யம்மை ஆச்சி.

அதன் பின்னர், சிகப்பி தன் தாய் வீட்டிற்குச் செல்லும் பேச்சை எடுக்கவே முடியாமல் போய்விட, அன்றிரவு அதற்கும் ஒரு ''சாரி'' வந்ததே தவிர வேறெதுவும் இல்லை!

மெய்யம்மை ஆச்சி தான் இப்படி என்றால், சிகப்பியின் தாய் அவருக்கு மேலிருந்தார்.

''என்னது... நீ மட்டும் தனியா வரியா? இதெல்லாம் என்ன பழக்கம்?''

''கல்யாணம்ங்கிறது வெறும் சந்தோசம் மட்டுமில்லை... கணவன் - மனைவி ரெண்டு பேரும் அடுத்தவங்களோட கஷ்டநஷ்டத்தை புரிஞ்சு நடந்துக்கிறதும் தான்.''

''அவர்....உன்னோட கஷ்டத்தைப் புரிஞ்சுகிட்டு உன்னை அம்மா வீட்டுக்கு அனுப்பி வைக்கும்போது...நீ அவரோட வேலை டென்ஷனைப் புரிஞ்சுகிட்டு அவரை சங்கடப்படுத்தாம இருக்க வேண்டாம்?''

''அது இல்லாம... அவர் மனசைக் கஷ்டப்படுத்திக்கிட்டு....''

''அப்படியென்ன உனக்கு ஊர் சுத்தணும்? மாப்பிள்ளைக்கு வேலை முடிஞ்சதும், எல்லா இடத்துக்கும் கூட்டிப் போகப் போறார்.. அதுக்குள்ளே என்ன?''

''பேசாம அங்கவே இரு! வேலை...வேலைன்னு அலையுற அவர் உடம்பை நல்லா பார்த்துக்கோ...'' - என உமையாள் முடித்தப்போது, சிகப்பிக்கு பெரிதாய் வருத்தம் வந்தது!

திருமணம் முடிந்த மகள் வீட்டுக்கு வரவில்லையே என்ற வருத்தம் சிறிதுமில்லாமல் மாப்பிள்ளையை சரியாய் கவனிக்கவில்லை என்று குற்றம் சாட்டுகிறாரே என்று தாய் மீது கோபம் கூட வந்தது.

அந்த வருத்தமும் மெல்ல மெல்ல மறைய, அடுத்த வாரத்தில் ஒரு நாள், ''இந்த சதாபிஷேகத்திற்கு நான் கண்டிப்பா வரப் பார்க்கிறேன், சிகப்பி! இதுக்கு மட்டும்... நான் வந்துட்டேன்னா அப்புறம் நீ அப்பத்தா கூட எல்லா விசேஷத்திற்கும் போயிட்டு வரலாம்'' என்றான் கருப்பையா.

சிகப்பிக்கு ஒரு மாதிரி சந்தோஷமாகவே இருந்தது! கணவனுடன் நாள் முழுவதும் இருக்கலாம் என்று அவள் மனம் சந்தோஷத்தில் திளைக்க, நடந்ததோ வேறு!

சதாபிஷேக வீட்டிற்குச் சென்றது என்னவோ தம்பதி சமேதராய் தான்! ஆனால், கருப்பையா ஆண்களுடன் பட்டாலையில் அமர்ந்திருக்க, சிகப்பி வளவு வாசலில் அப்பத்தாவுடன் அமர்ந்திருந்தாள்.

வந்திருந்தவர்கள் அனைவரும் ''இது தான் பேரம் படியா? அழகு பெத்த மகளா இருக்காளே?'' என்று சிகப்பியை விசாரிப்பதும், அப்பத்தாவின் முகம் பூரிப்பதும், சிகப்பி உதட்டை இழுத்து சிரித்து வைப்பதும் தான் நடந்தேறியது.

சாப்பிடும் போதாவது கணவன் அருகே அமரலாம் என்றால், ஆண்கள் பந்தி முடிஞ்சதும் தான் பெண்களைச் சாப்பிடவே அழைத்தனர்.

துபாயில் இருக்கும்போது, அம்மா-அப்பாவுடன் எந்த விசேஷத்திற்குச் சென்றாலும் ஆண்கள் தனியாய், பெண்கள் தனியாய் அவர்கள் இருந்ததில்லை. அனை வரும் கூடி இருந்து, அந்த விசேஷத்தில் சந்தோஷத் துடன் கலந்து கொண்டு வருவர்.

அப்படிப்பட்ட சூழலில் இருந்தவள் என்பதாலேயே, கணவனுடன் ஒரு நாள் முழுவதும் ஒன்றாய் இருக்கலாம் என்று எண்ணியிருந்தாள் சிகப்பி.

இங்கேயும் (அதாவது இந்தியாவிலும்), சிகப்பியை அவளது பெற்றோர் சொந்தங்களில் நடக்கும் திருமணத் திற்கு அழைத்துச் சென்றிருக்கின்றனர் தான். நெருங்கிய சொந்தங்களின் திருமணம் என்பதால், திருமண வீடு முழுவதும் சுற்றி அலைவர் அனைவரும்! அதனால், ஆண்-பெண் தனியாய் அமரும் பழக்கம் அவளுக்குப் பெரிதாய் பட்டதில்லை.

ஆனால், இந்த விசேஷ வீட்டிற்கு வந்த பின்னர் தான் தெரிந்தது. இது துபாய் திருமணமும் அல்ல... நெருங் கிய சொந்தத்தின் திருமண விழாவும் அல்ல என்று!

தன் விதியை நொந்து கொண்டு வீடு வந்து சேர்ந்த வளுக்கு ஓர் யோசனை தோன்றியது.

அதாகப்பட்டது- ''கணவனுடன் அவனது ஹாஸ்பிட லுக்கு செல்வது'' என்பது தான்.

அதை நடைமுறைப்படுத்துவதற்கு முதலில் கணவ னிடம் பேச வேண்டுமே?! அவனைப் பிடிப்பதற்கே,

அவள் இரவு பன்னிரெண்டு மணி வரை விழித்திருக்க, ஒரு வழியாய் வந்தவனிடம் தன் யோசனையைக் கூறி, அனுமதி கேட்டாள் சிகப்பி.

அவனோ ''ஹாஸ்பிடலுக்கா? நீயா? எதுக்கு?'' என்று எங்கோ எப்ஃபெக்ட் கொடுத்து, வாயைப் பிளந்தான்.

''ஏன்.. நான் வரக் கூடாதா?''

''.....''

''எனக்கு இங்க ரொம்ப போர் அடிக்குது...''

''ஏன் மா? வீட்டில வேலை இருந்துட்டே இருக்குமே? அப்பத்தா சொல்வாங்களே?''

''வேலையா? காலையில ஆறு மணிக்கு எழுந்து குளிச்சு, சாமி விளக்கு ஏத்துறது தவிர வேற ஒண்ணும் வேலையே இல்லை... சமையலுக்கு ஆள் இருக்கு... துணி துவைக்க ஆள் இருக்கு... வீடு பெருக்க ஆள் இருக்கு... சாமான் கழுவ ஆள் இருக்கு.. அப்படியே ஏதாவது வேலை வந்தாலும் அப்பத்தா என்னை எதுவுமே செய்யவிட மாட்டாங்க.. பரிமாறும் வேலை கூட இல்லை... அவங்க அவங்க தான் எடுத்துப் போட் டுச் சாப்பிடறோம்... என்ன தான் பண்றது....டி.வி.யே எவ்வளவு நேரம் பார்க்கிறது.. நான் உங்க கூட ஹாஸ் பிடலுக்கு வருவேன்!''

''இல்லை... அங்க எனக்கு நிறைய வேலையிருக்கும். நீ... வந்தாலும் சும்மா தான் இருக்கணும்....''

''பரவாயில்லை... சும்மா வந்து வேடிக்கை பார்க் கிறேன்.''

''என்னத்த வேடிக்கை பார்ப்பே? வர பேஷண்ட்ஸ் முகத்தையா? இல்லை... கண் டெஸ்ட் பண்ற மெஷி னையா?''

''எதையோ பார்க்கிறேன்....உங்களுக்கு என்ன? என்னைக் கூட்டிப் போங்க..''

''நான் பாதி நேரம் ஆபரேஷன் தியேட்டர்-ல இருப்பேன் சிகப்பி.''

''இருங்களேன்...யாரு வேண்டாம்னா?''

''ஒரொரு சமயம்.... திருச்சி, புதுக்கோட்டை, மதுரைன்னு வெளியூர் கூடபோக வேண்டி வரும்...''

''அந்த நாளில... நான் வீட்டில இருந்திட்டுப் போறேன்....''

தான் என்ன சொன்னாலும் அதற்கொரு பதில் சொல்லிக் கொண்டிருந்த மனைவியிடம் வேறென்ன சொல்வது என்று தெரியாமல், ஒரு நிமிடம் மௌனமாய் இருந்தவன், அவள் ''என்ன வரட்டுமா? ப்ளீஸ்? எனக்கு ரொம்ப ரொம்ப போர் அடிக்குதுப்பா..'' என்றாள் கெஞ்சுதலாக.

''இல்லை....சிகப்பிம்மா! வேண்டாம்! நீ ஹாஸ்பிடல் வரது.... எனக்குப் பிடிக்கலை. நீ வீட்டிலேயே இரு'' என்றவன், அதற்கு மேல் அவளிடம் பேசவில்லை.

அவளும் பேசவில்லை. மௌனமாய் படுக்கையில் விழுந்து, இறுக்கமாய் கண்களை மூடிக் கொண்டாள்.

அவள் படுத்ததும், அவளருகே நின்று அவளையே பார்த்துக் கொண்டிருந்த கருப்பையாவின் அரவத்தை உணர்ந்தபோதும், சற்றும் அசையாமல் படுத்திருந்தாள், அவனது மனைவி.

பத்து நிமிடங்களுக்கு மேல் முயன்று பார்த்துவிட்டு, கருப்பையாவும் கட்டிலின் மறு புறம் படுத்தான்.

தன் முதல் யோசனை நிறைவேறாமல் முற்று பெற்று விட, அடுத்த யோசனை - ''மேலே படிப்பது'' என்ற யோசனையுடன் சிகப்பி காத்திருக்க, கருப்பையாவுக்கு அந்த நாட்களில் வேலை அதிகமாய் இருந்தது. ஒரு வகையில் துரதிர்ஷ்டம் தானோ?

அன்றைய தினம் எப்படியாவது கருப்பையாவுடன் பேசிவிட வேண்டும் என்று முடிவு செய்தாள், சிகப்பி.

பகல் முழுவதும் இரவு இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் சிகப்பி இருக்க, கருப்பையாவின் நாள் முடியும் போதே, சூரியன் அடுத்த நாளின் உதயத்தைத் தொட்டு விட்டிருந்தான். ஆம், அவன் வீட்டுக்கு வரும்போதே அதிகாலை நான்கு மணி ஆகிவிட்டிருந்தது.

பன்னிரெண்டு மணி வரை அவனது வரவிற்காக காத்திருந்துவிட்டு, அயர்ந்து உறங்கியிருந்த சிகப்பியின் கன்னங்களில் இதழ் பதித்து, ''சாரிடா... எனக்காக ரொம்ப நேரம் காத்திட்டு இருந்தியா?'' என்று கொஞ்சிய அவனின் வார்த்தைகள், சிகப்பியின் காதுகளை எட்டவில்லை.

அடுத்த நாள், சிகப்பியின் அலாரம் ஐந்தரையை எட்டியதும் தன் ''சத்தமிடும்'' வேலையை செவ்வனே செய்ய, அதன் முதல் அலறலிலேயே விழித்திருந்தாள் சிகப்பி.

ஆனால் அவளை நகர விடாமல், கருப்பையாவின் கரங்கள் இறுக்கமாய் தழுவியிருக்க, ஏனோ சிகப்பிக்கு எரிச்சலாய் வந்தது!

திருமணமானதும் தனது சுதந்திரம்- அதாவது காலை எட்டு மணி வரை தூங்கும் சுதந்திரம், வீட்டில் தனக்குப்

பிடித்தமான உடையில் வலம் வரும் சுதந்திரம், நினைத்த நேரத்தில் உணவுண்ணும் சுதந்திரம், பிடித்த பாட்டை சத்தமாய் வைத்துக் கேட்கும் சுதந்திரம், தன் நண்பர்களை வீட்டிற்கு அழைத்து அரட்டை அடிக்கும் சுதந்திரம், அம்மாவிடம் வம்பு செய்யும் சுதந்திரம், சக்தியுடன் சண்டையிடும் சுதந்திரம், அப்பத்தா - ஐயாவுடன் கொஞ்சி மகிழும் சுதந்திரம் - என எல்லாமே மறுக்கப்பட்டது போல், நெஞ்சம் எரிச்சலில் மண்டியது.

இதையெல்லாம் எதற்காக அவள் சகித்தாள்? இவனுக்காக அல்லவா? ஆனால்....இவன்..தன்னைப் பற்றி சிறிதும் கவலை இல்லாமல் அவனது வேலை களை மட்டுமே செய்து கொண்டிருக்கிறானே? நான் தான் இவன் மேல் பைத்தியமா இருக்கிறேன்.... போலும்... இவனுக்கு ஒன்றுமே இல்லை...இவனுக்காக மூக்கில் ஒட்டைப் போட்டுக் கொண்டு..அறிந்தவர் தெரிந்தவர் என்று அனைவரது கேலிக்கும் ஆளாகி... ஆனால்... இவன்... எனக்கென என்ன செய்தான்? புது மனைவி யுடன் தேனிலவுக்குக் கூட வரவில்லையே . ..சரி.... அப்பாவுக்கு முடியவில்லை என்று முதல் தேனிலவு பாழாய் போனது என்னவோ சரி தான்....ஆனால் அதன் பிறகாவது எங்கேயாவது அழைத்துச் சென்றிருக்க லாமே... தன் தாய் வீட்டிற்குக் கூட அழைத்துச் செல்ல வில்லையே.... என் தாய் வீடு வேண்டாம், அவனது சகோதரிகள் வீட்டிற்குக் கூட அழைத்துச் செல்ல வில்லை... ஏன் அவ்வளவு தூரம்...ஒரு சினிமா....ஒரு ஹோட்டல்... ஏன் ''தக்காளி சூப்'' என்ற அவனது அழைப்பு.... ப்ச்.. ஒன்றுமே இல்லாமல் போய்விட்டதே!



12

கணவனின் செயல்களில் காயப்பட்டிருந்த அவளது மனம், சட்டென அவனது கைகளை விலக்கிவிட்டு எழுந்து கொள்ள வைத்தது.

''ஹே...தக்காளி...'' என அவன் அழைத்ததைக் கூட கவனியாமல், குளியலறைக்குள் புகுந்து கொண்டாள்.

அதன் பின்னரும், அவன் இருக்கும் திசை பக்கம் கூட அவள் நின்றாளில்லை.

அவன் பலகாரம் உண்ணும்போது, தோட்டக்கார னிடம் அதி முக்கியமாய் பேசிக் கொண்டிருந்தாள்.

அவன் காபி கேட்டபோது, வேலை இருப்பவள் போல் ''அப்பத்தா.... இதை உங்க பேரன்கிட்ட கொடுத்துடுறீங்களா?'' என மெய்யம்மை ஆச்சியிடம் கொடுத்துவிட்டு, அடுப்படிக்குள் புகுந்து கொண்டாள்.

அவன் வேலைக்குக் கிளம்பியபோது, இவள் தட்டைப் போட்டுக் கொண்டு சாப்பிட அமர்ந்துவிட்டாள்.

கார் வரை சென்றவன், அப்போதும் சிகப்பி வராமலே இருக்கவும், அவளைத் தேடிக் கொண்டு பின்புறம் வந்தான்.

சிகப்பியின் பின்புறம் நின்று கொண்டு ''சிகப்பி...'' என அவன் அழைத்தது காதில் விழாதது போல் அவள் இருக்க,

''நான் ஹாஸ்பிடல் கிளம்புறேன்...சிகப்பி'' என்றான் அவன், மீண்டும் தானாகவே.

''ம்ம்'' என்பது தவிர பதிலேதுமில்லை.

அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் அவன் மௌனமாய் இருக்க, அவன் போய் விட்டான் என்ற நினைப்பில் ''இவருக்குக் கண்ணன்னு பேர் வச்சதுக்குப் பதிலா....கடமை கண்ணாயிரம்ன்னு வச்சிருக்கலாம். பொருத்தமா இருந்திருக்கும்'' என முணுமுணுத்தாள் அவனது மனையாள்.

கூடவே ''அதோட நிறுத்தியிருக்கக் கூடாது...எந்த மேடையிலாவது ஏத்திவிட்டு ''கடமை... கண்ணியம்.... கட்டுப்பாடு- இது தான் என் உயிர் மூச்சு''ன்னு மைக் போட்டு கத்த வச்சிருந்தா...இன்னும் பொருத்தமா இருந்திருக்கும்'' என்ற வார்த்தைகளும் வந்து விழுந்தன.

பக்கென சிரித்துவிட்டான் கருப்பையா. அவனது சிரிப்பு சத்தம் கேட்டதும், அதிர்ந்து போன சிகப்பி வேகமாய் எழுந்து, அவன் புறம் திரும்பினாள்.

அப்போதும் அவனது சிரிப்பு நிற்கவில்லை!

ஆனால், சிகப்பிக்கு அவனது சிரிப்பு சற்றும் ரசிக்க வில்லை!

தட்டை எடுத்துக் கொண்டு அங்கிருந்து நகர முற்பட்டவளின், கை பிடித்து நிறுத்தி ''இன்னையிலிருந்து நான் சீக்கிரம் வந்திடுவேன், சிகப்பி! டியூட்டி டாக்டர் ஜாயின் பண்ணிட்டாங்க..நைட் லேட் ஆகாதுடா....ஐ ப்ராமிஸ்'' என்றான் தன்மையாக.

''அடடே, இன்னைக்கு அப்பத்தா உப்புக்கண்டம் போடணும்ன்னு சொன்னாங்களே..மழை வந்தா

எல்லாம் பாழா போய்டுமே...பரவாயில்லை....நீங்க லேட்டாவே வாங்க...'' என்றவள், அவனது கையை விலக்கப் பார்த்தாள்.

''ஹே.. என்ன சிகப்பி! இட்ஸ் அ ப்ராமிஸ்! சீக்கிரம் வந்துடுறேன்.... எங்கயாவது வெளிய போகலாம்..'' என்றான் அவன் மீண்டும்.

''முதல்ல... நீங்க சீக்கிரம் வாங்க. அப்புறம் வெளிய போறதைப் பார்ப்போம்...'' என்றவள், அவனை விட்டு விலகிச் சென்றே விட்டாள்.

அவளது பாரா முகத்திற்காகவாவது சீக்கிரம் வீடு திரும்பி, அவளை வெளியே அழைத்துச் சென்றுவிட வேண்டும் என அவன் எண்ணியிருக்க, நடந்ததோ வேறு!!

மருத்துவமனைக்குச் சென்றதுமே, இன்று மாலை ஆறு மணிக்கு மேல் நோயாளிகளுக்கு எந்த அப்பாயின்ட்மென்ட்டும் கொடுக்கவேண்டாம் என்று கூறியவன், அன்று குறிக்கப்பட்டிருந்த வேலைகளில் தன்னை வேகமாய் ஈடுபடுத்திக் கொண்டான்.

மூன்று மணியளவில், வீட்டிலிருந்து கொடுத்துவிடப் பட்ட உணவில் கை வைத்தபோது, ''உங்களுக்கு மதிய சாப்பாடாவது நான் எடுத்திட்டு வந்து தரட்டுமா? சாப்பாட்டைக் கொடுத்திட்டு... உடனே போய்டுறேன்.. ப்ளீஸ். உங்களைத் தொந்தரவு செய்யமாட்டேன்.... ப்ளீஸ் ப்ளீஸ் வரட்டுமா?'' என்ற சிகப்பியின் கெஞ்சல் மனதைப் பிசைய, கை பிசைந்த சாதத்தை வாய்க்குக் கொடுக்க மறுத்தது.

அவள் மருத்துவமனைக்கு வருவது ஏனோ கருப்பையாவுக்குப் பிடிக்கவில்லை. அவனது சொந்த

மருத்துவமனை தான் என்றபோதும், ஏனோ சிகப்பி அங்கு ஒட்டாது தனித்து நிற்பது போலிருக்குமே என்று தான் அவன் தயங்கியதே! ஆனால், மதிய உணவை யாவது அவளை எடுத்துவரச் சொல்லி உண்டிருக்க லாமோ... தன் காலவரை தெரியாத வேலை நேரங்களை முன்னிறுத்தி, அவளது ஆசையை மறுத்தது தவறோ என்று இப்போது தோன்றியது!

புத்தம் புது மலராய் இருந்த சிகப்பியின் முகம், வெயிலில் வாடிய வாடாமலர் மொட்டாய் சுருங்கிப் போனதில், அவனது பங்கு பெரிதாய் இருப்பது புரிய, அதை அதிவிரைவில் மாற்றிவிட வேண்டும் என்ற உறுதி நெஞ்சினில் உதிக்க, வேகமாய் உணவை முடித்துக் கொண்டு, அன்றைய தினத்தின் இரண்டாவது மற்றும் கடைசியுமான லேசர் அறுவை சிகிச்சையை செய்து முடித்தான்.

அன்றைய நாளின் குறிப்பின் படி, வேலைகள் அனைத்தும் முடிந்திருக்க, பெருத்த நிம்மதியுடனும், இன்றைக்கு சிகப்பியின் முகத்தில் சிரிப்பின் சாயலைக் கண்டுவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அவன் வீடு நோக்கிச் செல்ல, முன்புறமிருந்த தோட்டத்தில் நின்றிருந்த அவனது தந்தைக்கே பெருத்த ஆச்சரியம்!

காதல் பாடல் ஒன்றை 'ஹம்' பண்ணிக் கொண்டு, காரை விட்டிறங்கிய மகனை, விநோதமாய் பார்த்தவர், ஏதோ சொல்லத் தொடங்கிவிட்டு, வாயை மூடிக் கொண்டார்.

வீட்டினுள் நுழைந்தவனுக்கு, அங்கே நிலவிய அமைதி சற்று வித்தியாசமாய் இருந்தது! அவர்களது

வீடு- சந்தைக் கடை மாதிரி இருக்காது என்றாலும், அமைதியாகவும் இருக்காது - வேலையாட்களை விரட்டி வேலை வாங்கும் அப்பத்தாவின் குரலோ அல்லது சாமியறையிலிருந்து வரும் ஐயாவின் தேவாரப் பாடலோ அல்லது சிகப்பி கேட்டுக் கொண்டிருக்கும் பாட்டின் மெல்லிய சத்தமோ அல்லது விருந்தினர்களின் பேச்சு சத்தமோ - ஏதோ ஒன்று கேட்டுக் கொண்டே இருக்கும்! அதனாலேயே, இன்றைய அமைதி, கருப்பையாவுக்கு வித்தியாசமாய் பட்டது!

ஒருவேளை- பல நாட்கள் சென்று, இன்றைக்கு மாலையில் வருவதால் தனக்கு வித்தியாசமாய் தெரிகிறதோ என்று எண்ணியவன், மனைவியைத் தேடி அவர்களது அறைக்குச் சென்றான்.

அங்கே சிகப்பியைக் காணாமல், வெளியே வந்து அவளையும் அப்பத்தாவையும் அவன் தேடிக்கொண் டிருக்கும் போதே, அவனது தந்தை வந்து சேர்ந்தார்.

''என்ன கண்ணா..''

''அப்பத்தா, சிகப்பி, ஐயா...யாரையும் காணோமே? எங்கப்பா?''

'சீனி அண்ணே வீட்டில, அவுக பேரன் விஷயமா ஏதோ பஞ்சாயத்தாம்...ஐயாவைக் கூப்பிட்டு விட்டிருந்த தாக.... அதேன் அங்கன போயிருக்காக.''

கருப்பையாவின் நண்பன் தான் - அவன் தந்தை குறிப்பிடும் சீனி அண்ணனின் பேரன் - முத்துப் பழனியப்பன். அவனுக்கும் அவனது மனைவிக்கும் ஏற்பட்ட சின்ன மனஸ்தாபம், அவர்களாலேயே ஊதிப் பெருசாக்கப்பட்டு, அதன் விளைவாய் அவனது

மனைவி அவர்களது ஒன்றரை வயது மகனை அழைத்துக் கொண்டு, தாய் வீடு சென்று விட்டிருந்தாள். முத்து சென்று அழைத்தும்/கெஞ்சியும் வராதவள், அவனை மட்டுமல்லாது அவனது குடும்பத்தில் இருந்த அனைவரின் மேலும் பழி சொல்ல, அவனும் எவ்வளவு தான் பொறுப்பான்- விவாகரத்து பத்திரத்தை அனுப்பி விட்டான்- அதுவும் தன் தாய்- தந்தைக்குத் தெரியாமல். இந்த விஷயம், சம்பந்தி வீட்டிலிருந்து பெரும் பிரச்சனையாய் கிளம்பிவிட, அதற்கான பஞ்சாயத்து தான் இப்போது நடக்கிறது. ஊரிலும்/ அவர்களது பங்காளிகள் மத்தியிலும் பெரியவர் என்பதால், கருப்பையாவின் ஐயாவை அழைத்திருக்கிறார்கள்.

ஒரு வேளை, அப்பத்தாவும் ஐயாவுடன் சென்றிருக்கிறாரோ என்றெண்ணிய கருப்பையாவின் கண்கள் சிகப்பியைத் தேடி அலைந்தன.

தன் தேடலைக் கண்டுகொண்டு, தந்தையாகவே ஏதாவது சொல்வார் என்று அவன் எதிர்பார்த்திருக்க, அவரோ அவனைத் தாண்டி பின்புறம் நோக்கி நடக்க ஆரம்பித்திருந்தார்.

வேக எட்டுக்களுடன் அவரை நெருங்கியவன், ''அப்பத்தாவும் சிகப்பியும் எங்கப்பா?'' என்றான் கண்களை அலையவிட்டபடியே.

''உனக்குத் தெரியாதா?'' - கண்ணனின் தந்தைக்கு ஏகத்துக்கும் அதிர்ச்சி.

''என்னது? தெரியாதா?''- இப்போது மகனுக்குக் குழப்பம்.

''ஆத்தாவும், சிகப்பியும் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்காக....''

''ஆஸ்பத்திரிக்கா? யாருக்கு என்ன? அப்பத்தாவுக்கு உடம்புக்கு எதுவுமா? ஏன் எனக்கு போன் பண்ணலை? எந்த ஹாஸ்பிடல்? எப்போ போனாங்க?''- கண்ணனின் கேள்விகள் அனுமார் வால் போல் நீண்டு, கேட்டிருந்தவரை மூச்சு வாங்கச் செய்தது.

அவர் பதில் சொல்லாமல் பார்த்துக் கொண்டிருக்க, ''என்னாச்சுப்பா? யாருக்கு என்ன? சிகப்பிக்கா?'' என மேலும் துளைத்தெடுத்தான்.

''சிகப்பிக்கு... ஹ்ம்ம்...அவ உன்கிட்ட சொல்லலையா... ஹ்ம்ம்.... அது.... அது வந்து....எதுவும் நல்ல சேதியோன்னு பார்க்கப் போயிருக்காங்க...''

''என்னது... நல்ல சேதி?''- ஒரு நிமிடம் தான் குழம்பினான், மகன்.

''ஹோ...அதுவா....ஆனா அவளுக்கு எப்பவும், சரியா முப்பது நாளில்....'' எனத் தொடங்கியவன், சட்டென பேச்சை நிறுத்தி, ''பொம்மி டாக்டர் வீட்டுக்கா?'' என்றான் தந்தையைப் பார்த்து.

''ம்ம். ஆமா!'' என்றவர், அவன் வாயில் பக்கம் திரும்பவும், ''கண்ணா, ஒரு நிமிஷம்'' என்று அவனை நிறுத்தினார்.

தந்தையின் குரலிலிருந்த தீவிரம் திகைக்க வைக்க, முகத்தில் கேள்வியுடன் நின்றவனின் தோளில் தட்டி

''புருஷன்- பொண்டாட்டிக்கு நடுவில...அது அப்பாவே ஆனாலும் தலையிடக்கூடாதுன்னு நினைக்கிற [illegible]ஆனாலும்....'' அவர் லேசாய் தயங்க,

''சொல்லுங்கப்பா''- மகன் ஊக்கினான். உள்ளுக்குள் வேர்க்கத் தான் செய்தது.

''ஹ்ம்ம்...நீ...புத்தி சொல்ற வயசெல்லாம் தாண்டிட்டே.... நீயே புரிஞ்சு நடந்துப்பேன்னு நினைச்சேன்.... ஆனா, இன்னும் நீ சின்னப் பிள்ளையாவே இருக்க கண்ணா!''

''ஒரு மனுஷனுக்கு வேலை முக்கியம் தான்.... அதுக்காக குடும்பம் முக்கியமில்லைன்னு இல்லை.''- அவர் லேசாய் இடைவெளி விட,

''இல்லைப்பா....டியூட்டி டாக்டர்...''

''எல்லா வேலையிலையும் பிரச்சனைகள் வரத் தான் செய்யும், கண்ணா! வேலையில இருக்க பிரச்சனையைக் காரணம் காட்டி, வீட்டில பிரச்சனையை உருவாக்கி விடக்கூடாது.''

''வீட்டில பிரச்சனையா? என்னப்பா... நான் என்னமோ கொலை குத்தம் செஞ்ச மாதிரி பேசுறீங்க?!''

''கொலை செய்றது தான் தப்பா? பொண்டாட்டியை... அழ வைக்கிறது கூட தப்பு தான்.....''

''அழவா? சிகப்பி... அழுதாளா?'' - அதிர்ந்து போனான், கருப்பையா. தன் நடத்தையால் அவளுக்கு வருத்தமிருக்கிறது என்பது அவன் அறிந்ததே என்ற போதிலும், இது நாள் வரை சிகப்பி அழுது அவன் பார்த்ததில்லை. அப்படியிருக்கும் போது, அந்த அழுகைக்குத் தானே காரணம் என்பதை அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. உடனே அவளைப் பார்க்க வேண்டும்போல் தோன்ற, காரை நோக்கி ஏறக்குறைய ஓடினான், கருப்பையா.

ஆனால், அவனை ஓடவிடாமல் நிறுத்திய அவனது தந்தை ''முத்து (சீனி அண்ணனின் பேரன்) மாதிரி... நீ அவசரக்காரன் இல்லைன்னு எனக்குத் தெரியும்'' எனக் கூறி, சிறு இடைவேளை விட்டார்.

அவர் சொல்ல வருவது புரிய, கருப்பையா வேகமாய் பதில் சொல்லத் துவங்கினான். அவனைத் தடுத்து ''குடும்ப மானம்.. மரியாதை...கவுரவம்....இப்படி எதையும் நான் பேசப் போறதில்லை. நான் சொல்லப் போறதெல்லாம் - சிகப்பியை நல்லா வச்சுக்கோங்கிறது தான்'' என்று தீர்க்கமாய் முடித்தார், அவர்.

பெரிய மனுஷனின் அடையாளமாய் தெரிந்த அப்பேச்சிற்குப் பதில் சொல்ல முடியாமல், வெறுமே தலையசைத்துவிட்டு, வேகமாய் பொம்மி டாக்டரின் ஆஸ்பத்திரிக்குச் சென்றான்.

ஐந்தே நிமிடத்தில், அந்த இடத்தை அடைந்தவன், உள்ளே செல்வதற்கும், அப்பத்தாவும்- சிகப்பியும் வெளியே வருவதற்கும் சரியாக இருந்தது.

''அடடே! கண்ணா! என்ன இம்புட்டு சீக்கிரம் வந்துட்டீக அப்பச்சி...'' - அப்பத்தா தடபுடலாய் வரவேற்ற போதும், அவர் பின்னே நின்றிருந்த சிகப்பியின் கண்களில் அடக்கப்பட்ட ஆத்திரம் தெரியவும், துணுக்குற்றான் கருப்பையா.

''வேலை சீக்கிரம் முடிஞ்சிடுச்சு... அப்பத்தா. அதான்.... சிகப்பியும் நானுமா முத்துமாரியம்மன் கோவிலுக்குப் போய்ட்டு வரலாம்ன்னு பார்த்தேன்...''- மனைவியிடம் கண்ணை வைத்துக் கொண்டே, அவன் பேச, அவளோ அவன் முகம் பார்க்காமல் தொலை தூரத்தை வெறித்திருந்தாள்.

"நல்லது தேன்... டாக்டர் அம்மாவைப் பார்த்ததில இருந்து பிள்ள முகமே சரியில்லை... கூட்டிப் போய்ட்டுவா..." என உடனே அனுமதி கொடுத்தவர், சிகப்பியும் அவருமாய் வந்திருந்த காரில் தான் மட்டுமாய் ஏறிச் சென்றுவிட்டார்.

புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்த அவரது வாகனத்தையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த மனைவியின் கையை மெல்லத் தொட்டு, "வா போகலாம்...." என்றான் கணவன்.

"இல்ல... நான் வரலை. என்னை வீட்டில விட்டுடுங்க..."

"ப்ளீஸ் சிகப்பி! தனியா போய், கொஞ்சம் பேசலாம்...."

"எனக்கு இப்போ உங்க கூட பேசப்பிடிக்கலை. என்னை வீட்டில விட்டுடுங்க...."

"உன்னோட மனசில என்ன இருக்குன்னு எனக்குப் புரியுதும்மா."

"உங்களுக்குப் புரிஞ்சதோ...புரியலையோ.... எனக்கு உங்க கூட வெளிய வரப்பிடிக்கலை. என்னை வீட்டில விட்டுடுங்க..."

"அதில்லைம்மா...."

"என்னை வீட்டில விட்டுடுங்க..."

"சிகப்பி போதும்! என் பொறுமையை சோதிக்காத... வந்து கார்ல ஏறு... வெளிய போறோம்ன்னு சொல்லிட்டு, வீட்டுக்கே திரும்பிப் போனா, அப்பத்தா என்ன என்னனு கேட்ப்பாங்க...சிகப்பி!"

"அப்பத்தா...அப்பத்தா.....அப்பத்தா....சை.....எனக்கு எரிச்சலா வருது...என்னோட வாழ்க்கையைத் தீர்மானிக்க அவங்க யாரு?" - உச்சக்கட்ட எரிச்சலில் வந்து விழுந்தன வார்த்தைகள்.

அந்த மகப்பேறு மருத்துவரின் சிறு கிளினிக்கில் கூடியிருந்த நோயாளிகள் அனைவரும், ஒரு சேர திரும்பிப் பார்க்க, கருப்பையாவின் முகத்தில் கடுமை பரவியது.

அதே நேரத்தில், தன் நண்பன் முத்துவிற்கும் அவன் மனைவிக்கும் ஏற்பட்டப் பிரச்சனையால், அக்குடும்பத்தின் நற்பெயர் ஊர் முழுதும் அடிபடுவதும், அதனால் அக்குடும்பத்தில் உலவும் நிம்மதியில்லா தன்மையும் நினைவு வர, சிகப்பியின் கையை அழுந்தப் பற்றி, ஏறக்குறைய அவளைக் காரிற்கு இழுத்துச் சென்றான், கருப்பையா!

அந்த நேரத்தில்- தந்தை "சிகப்பியின் மனது" பற்றி சொன்ன வார்த்தைகள் சுத்தமாய் நினைவில் வராதது, அவனது தப்பா அல்லது இறைவனின் விளையாட்டா?! ஊரார் முன்னிலையில் கத்திக் கூச்சல்போடும் மனைவியை அங்கிருந்து அகற்றிவிட வேண்டும் என்ற உந்துதல் மட்டுமே இருந்ததே ஒழிய, அவளது மனநிலையை ஆராயும் ஓர் மருத்துவனின் மனது அங்கே நிலைபடவில்லை!

தரதரவென அவளை இழுத்துக் கொண்டு, வண்டியில் ஏற்றியவன், அதே வேகத்துடன் வண்டியை காரைக்குடி நோக்கிச் செலுத்தினான்.

"இப்போ...எதுக்கு என்னை இழுத்திட்டு வரீங்க?"

''இன்னொரு டாக்டர்கிட்டப் போய்... இவ உண்டாகியிருக்காளான்னு பார்த்துச் சொல்லுங்கன்னு கேட்கப் போறீங்களா?''

''பேசாம வா, சிகப்பி!''

''இல்ல... நான் பேசுவேன்! அவங்களும் இப்போ பார்த்த டாக்டரம்மா சொன்னமாதிரி...இந்த நாள் தள்ளிப் போயிருக்க கணக்கை வச்சு குழந்தைன்னு முடிவு பண்ணாதீங்க... அவ வயித்தில புள்ள என்ன ஒரு புழு கூட இல்லைன்னு சொல்லிட்டா என்ன பண்ணுவீங்க?''

''பேசாதேன்னு சொன்னேன்! வாயை மூடிட்டு வா!''

''மூட முடியாது!! நான் பேசுவேன்!! என்ன பண்ணுவீங்கன்னு சொல்லுங்க.. அவங்ககிட்டையே.... இவளுக்கு எப்போ குழந்தை பிறக்கும்..இவளுக்குக் குழந்தை பெத்துக்கிற பாக்கியம் இருக்கில்ல...இல்லை இவ மலடியா....''

சிகப்பியின் வார்த்தைகள் முடியவில்லை - கருப்பையாவின் கைகளில் கார் ஒரு முறை ஆடி நின்றது! வண்டியை ஓரமாய் நிறுத்தியவன், ஓர் அதிர்ந்த பார்வையை அவள் புறம் வீசி ''என்ன பேசறோம்ன்னு யோசிச்சுப் பேசு! கிறுக்கு மாதிரி...ஏதாவது உளறாதே!'' என்றான் கடித்தப் பற்களின் இடையே!

அவளது வார்த்தைகளால் உண்டான அதிகப்பட்ச கோபத்தை அவன் மிகவும் கஷ்டப்பட்டு அடக்குவது, ஸ்டீரிங்கில் பதிந்திருந்த அவனது இறுகிய கரங்களில் தெரிந்தது.

''யாரு...யாரு கிறுக்கு... நானா? இல்லை நானான்னு கேட்கிறேன்? கல்யாணமாகி ஒரே மாசத்தில...எப்போ

பிள்ளை பிறக்கும்ன்னு கேட்கிற உங்க அப்பத்தா கிறுக்குன்னா.. அப்போ நானும் கிறுக்கு தான்!''

''ஏய், இப்போ எதுக்கு அப்பத்தாவை இழுக்கிற?''

''அடேங்கப்பா! பெரிய கோபம் தான்...இதை உங்க அப்பத்தா கிட்ட காட்டுங்க...அவங்க தான் என்னை டாக்டர் வீட்டுக்குக் கூட்டிட்டுப் போய்...இந்தக் கேள்வியெல்லாம் கேட்டாங்க...''

''உன்னை யாரு... அவங்க கூட போகச் சொன்னது! நான் வர வரை வெயிட் பண்ண வேண்டியது தானே?''

''நைட் ஒரு மணி வரைக்குமா?''

''சும்மா சும்மா.... என்ன இது? வேலைன்னா...அதுவும் டாக்டர்ன்னா வர நேரம்....போற நேரம் எல்லாம் குறிச்சு வச்ச மாதிரி இருக்காது, சிகப்பி!''

''ஹூக்கும்.''

''இப்போ என்ன நடந்தது...எதுக்கு டாக்டர் வீட்டுக்குப் போனீங்க? எனக்கு ஒரு போன் பண்ணியிருக்கலாமே?''

''என்ன நடந்தது.... என் வாழ்க்கையில் சனி தான் ஹை ஸ்பீட்-ல நடக்கிறார். சை...''

புகுந்த வீட்டிற்கு வந்து, ஒரு மாதத்திற்கும் மேலாகி விட்ட நிலையில், சிகப்பியின் மாதவிடாய் பற்றி விசாரித்த மெய்யம்மை ஆச்சி, ஐம்பது நாட்களுக்கும் மேலாய் சிகப்பி 'குளிக்காமல்' இருப்பதை உணர்ந்து, பயங்கரமாய் மகிழ்ந்து போனார்.

அவள் சொன்ன ''எப்பவுமே எனக்கு ஐம்பது நாள்.... அறுபது நாளுக்கு ஒரு வாட்டி தான்...தூரம் வரும்'' என்ற வாதத்தை அவர் ஏற்றுக் கொள்ளவே இல்லை.

தனக்குப் பிடிக்கவில்லை என்பதை முகபாவனை யிலும், லேசான கண்ணீராகவும் அவள் வெளியிட்டதை, மெய்யம்மை ஆச்சி பயம் என்று எடுத்துக் கொண்டு, அவளை அழைத்துச் சென்றுவிட்டார்.

அவளை வம்படியாய் இழுத்துக் கொண்டு, கோட்டை யூரிலிருக்கும் மகப்பேறு மருத்துவரிடம் வந்தவர், அதற்கான சோதனைகளையும் மருத்துவரைச் செய்ய வைத்தார்.

முடிவில், சிகப்பியின் வாதமே உண்மையென நிரூ பிக்கப்பட, குழந்தை பெற்றுக் கொள்வதில் சிகப்பிக்கு ஏதும் கோளாறுகள் உள்ளதா என்ற ரீதியில் மெய்யம்மை ஆச்சி பேசிய ஒரு மணிநேரப் பேச்சு வார்த்தை தான், சிகப்பியின் ஆத்திரத்திற்குக் காரணம்!!

உடுத்திக் கொள்ளும் உடை தொடங்கி- தாய் வீட் டிற்குச் செல்லும் சுதந்திரம் வரை- அப்பத்தாவின் வார்த்தைகளுக்கு ஏற்ப நடப்பதில் ஏற்பட்டிருந்த சிறு சுணக்கம், இன்றைய மருத்துவமனை வாசத்தினால் பெரும் கோபமாய் மட்டுமல்லாது அடக்க முடியாத ஆத்திரமாய் உருமாறி விட்டிருந்தது.

எப்போதுமே சிகப்பிக்குப் பிடிக்காத விஷயங்களை அவள் மீது திணிப்பது என்பது அவளது வீட்டில் நடந்திராத ஒன்று. அவளது படிப்பு விஷயத்தில் கூட- ''நல்ல மதிப்பெண் இருக்கிறது. பொறியியல் படியேன்'' என்று கூறிய தந்தை, அவளது கலை ஆர்வத்தைப் புரிந்து கொண்டு, ஜூவல்லரி டிசைன் படிக்கவைத்தார். அதுபோலவே, அவளது கல்யாண விஷயத்திலும், அவளாய் ''சரி'' என்று சொல்லும்வரைக்கும் அவளை

யாருமே வற்புறுத்தவில்லையே. கருப்பையாவின் புகைப்படத்தைப் பார்த்துவிட்டு, அவள் ''சரி'' என்றதும் தான் திருமண ஏற்பாடுகளில் ஈடுபட்டார்கள்.

அப்படிப்பட்ட வீட்டிலிருந்து வந்துவிட்டு, அனைத்து விஷயங்களிலும் மற்றவரை- குறிப்பாக மெய்யம்மை ஆச்சியின் பிடித்ததற்கு உட்பட்டு இருந்தது மனதை வாட்டியது தான்!

மற்றைய விஷயங்களில் மெய்யம்மை ஆச்சியின் சொல்படி நடப்பதில் சிகப்பிக்கு, சிறு வருத்தமிருந்த போதும் பெரிதாய் பிரச்சனை ஏதும் இருக்கவில்லை. சொல்லப் போனால், அவரிடம் திட்டு வாங்கிவிடக் கூடாது என்ற காரணத்திற்காகவே, அவருக்குப் பிடித்த மாதிரி நடந்து கொண்டாள் அவள். ஏனென்றால், வீட்டிலுள்ள அனைவரும்- அவரது கணவர் உட்பட- அவர் மீது வைத்திருந்த மரியாதை.

ஆனால், ''குழந்தை'' விஷயத்தில் அவர் நடந்து கொண்ட முறை, சிகப்பிக்கு சுத்தமாய் பிடிக்கவில்லை! தன் கணவனும் தானுமாய் முடிவு எடுக்க வேண்டிய விஷயத்தில் அவர் மூக்கை நுழைத்து, அவளது அந்தரங்கத்தை அறியமுற்பட்டது அவளுக்குள்ளிருந்த வருத்தத்தைக் கோபமாய் உருமாற்றியிருந்தது.

அதுவும் ஒரு அந்நிய பெண்- அது மருத்துவரே என்றாலும், அவர் முன்னிலையில் தன் ''தாய்மை'' பற்றிய அவரது ஆயிரமாயிரம் துழாவல்கள், அவளுக்குப் பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியதோடு நில்லாமல், அவளிக்கிருந்த மாதவிடாய் பிரச்சனையால் குழந்தை பிறக்க எத்தனை நாட்கள்/மாதங்கள் ஆகும் என்று கேட்டு, அவர் குறைந்தது மூன்று மாதங்கள் மாத்திரை

சாப்பிடவேண்டும்: அதன் பின்னர் தான் எதுவும் சொல்ல முடியும் என்று சொன்னதற்கு, ஊரிலிருக்கும் அனைத்து தெய்வங்களையும் துணைக்கு அழைத்து, அனைத்துப் பிரார்த்தனைகளையும் அவர் முன் வைத்ததும், தனக்குப் பெரிதாய் நிகழ்ந்து விட்டது போலவும், அதற்குக் காரணம் இத்திருமணம் என்றும் சிகப்பியின் மனம் நொந்து போனது!

நொந்த மனதின் வடிகாலாய் கணவன் அமைந்துவிட, அவனிடம் அனைத்தையும் கொட்டி முடித்தாள் சிகப்பி!

சிவந்த கண்களில் மேலும் ரத்தம் பாய, ஆத்திரத்தின் விளிம்பில் தொக்கி நின்ற சிகப்பியின் வார்த்தைகளைக் கேட்ட கருப்பையா, பெரிதாய் திகைத்துப் போனான்.

இந்த நேரத்தில் என்ன பேசுவது என்று அவனுக்குத் தெரியவில்லை. அப்பத்தாவிற்குச் சாதகமாக பேசினால் சிகப்பியின் கோபம் எகிறும் என்று புரிந்தபோதும், இரண்டு தலைமுறை மூத்தவரான அப்பத்தாவின் எண்ணங்களையும் அவனால் குறை சொல்லமுடிய வில்லை.

அதற்காக, அவரது செயலை அவன் நியாயப்படுத்த விரும்பவில்லை.

பெரியவரான அவருக்கு ''கொள்ளுப் பேரன்'' ஆசை இருப்பது நியாயம் தான் என்றாலும், அதை இவ்வளவு வெளிப்படையாக... அதுவும் திருமணம் முடிந்து சில நாட்களே ஆகியிருந்த இந்த நிலையில் வெளிப்படுத்தி யிருக்க வேண்டாம் என்றே எண்ணினான் அவன்.

பேரனின் குடும்பத்தில் சீக்கிரமே குழந்தை தவழ்ந்து விட வேண்டும் என்ற அவரது ஆசையை, ''தேவையற்ற

தலைமீடாய்'' சிகப்பி நினைத்தபோதும், ''அதீத அக்கறை'' என்ற அர்த்தத்தில் எடுத்துக் கொண்டான், அவரைத் தாயாய் எண்ணி வளர்ந்தவன்.

அதனால், அவரைப் பற்றிய பேச்சு சிகப்பியின் கோபத்தை மேலும் கிளறக் கூடும் என்பதால், சற்று நேரம் மௌனமாய் இருந்தவன், சிகப்பியை மெல்ல இழுத்துத் தன் தோள் மேல் சாய்த்துக் கொண்டான்.

முதலில் கோபம் கொண்ட சிகப்பியும், அந்த அன்பு அணைப்பில் உடைந்தாள். மடை திறந்த வெள்ளமாய் கண்கள் மாறிவிட, கண்ணீர் நிற்காமல் கொட்டியதில் கருப்பையாவின் சட்டையைத் தாண்டி, நெஞ்சம் நனைந்து போனது.

அவனது அனைத்து சமாதானங்களையும் மீறி, சிகப்பி யின் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க, அவளாய் நிறுத்தட்டும் என்றெண்ணியவன் போல் அவளது தலையை மெல்ல வருடிக் கொடுத்தான்.



13

அழுது ஓய்ந்திருந்தவளை, வேறு எங்கு அழைத்துச் சென்றாலும் மனம் ஒட்டாது என்று தோன்றிவிட, வீட்டிற்கே அழைத்து வந்தான்.

பெரியவர்கள் மூவரும் தத்தம் வேலையில் கவன மாய் இருக்க, சிகப்பியைத் தங்கள் அறைக்கு அழைத்துச்

செல்வது என்பது பெரிய காரியமாய் இருக்கவில்லை. உடுத்தியிருந்த உடையைக் கூட கலையாமல், படுக்கையில் விழுந்த சிகப்பியின் இமைகள், அதி விரைவிலேயே மூடிக் கொண்டன.

அவள் உறங்கிய பின்னரும், தலையை வருடிக் கொண்டிருந்தவன், நெற்றியில் பதித்த ஓர் மென்மையான முத்தத்துடன் எழுந்து கொண்டான்.

வெளியே வந்தவனை உணவிற்கு அழைத்த மெய்யம்மை ஆச்சி, சிகப்பியை எழுப்புமாறு கூறவே, அவள் உறங்கிவிட்டாள் என்பதோடு முடித்துக் கொண்டான் பேரன்.

''இன்னைக்கு.. பொம்மிகிட்ட கூட்டிப் போனதில இருந்து புள்ள வாடித் தெரியுது! அவ சொன்ன விஷயத்தில வாடினத்தை விட.. இந்த அப்பத்தா அடாவடியா கூட்டிப் போய்ட்டேனேன்னு மறுகுச்சுப் போல.... என்ன இருந்தாலும் குழந்தை விஷயத்தில எப்படி அப்பாச்சி சுணங்க முடியும்....'' என அவர் கூறியபோது, சிகப்பியின் மனப் போராட்டங்களை அவரும் அறிந்திருந்தபோதும், அந்த வீட்டு வாரிசிற்கான நடவடிக்கையை அவரால் நிறுத்தி வைக்க முடியவில்லை என்பது அவனுக்குப் புரிந்தது.

''பரவாயில்லை....அப்பத்தா! நாளைக்குக் காலையில எழுந்ததும் சரி ஆகிடுவா....'' என்ற பேரன், தன் உணவை முடித்துக் கொண்டு, மனைவிக்கும் இரண்டு இட்லிகளை எடுத்துக் கொண்டு, அறைக்குச் சென்றான்.

அவன் கொண்டு வந்த உணவு வீணாய் போக, சிகப்பி அசைந்து கூட கொடுக்கவில்லை. அடித்துப்

போட்டது போல் அவள் உறங்கியது. அவனை உலுக்கியது!

அடுத்த நாள் முழுதும் அவளுடனே இருக்க வேண்டும் என்று துடித்த நெஞ்சத்தை, மருத்துவமனை கயிறு கட்டி இழுக்க, அவனால் மறுக்க முடியவில்லை. சரி, சீக்கிரமாய் வீடு திரும்பிவிடலாம் என்றால், அன்றைக்கு என்று பார்த்து, இரண்டு கண் தானங்கள் நிகழ்ந்தன. அதாகப்பட்டது- கண்களைத் தானம் செய்த இரு பெரிய உள்ளங்கள், அன்றைக்குத் தங்கள் உயிரை விட, அவர்கள் கண் தானம் செய்வதற்குக் காரணமாய் இருந்த கருப்பையாவே அவர்களின் கண்களை எடுக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டான்.

மனைவியின் துயர் துடைக்க முடியாமல் போனதற்கு, இறந்தவர்களைக் குற்றம் சொல்லும் சுயநலத்தன்மை இல்லாது போகவே, நிதானம் தவறாமல் தன் பணியை முடித்தப்போது, மணி எட்டை நெருங்கியிருந்தது.

நேற்று நடந்த பிரச்சனையின் விளைவாக மிகவும் சோர்ந்திருக்கும் மனைவியிடம் அடிக்கடி பேசிக் கொள்ள வேண்டும் (தொலைபேசியின் மூலமாக) என்று தான் எண்ணியிருந்தது முற்றிலுமாய் நடக்காமல் போகவே, கிளம்புவதற்கு முன்னதாக போனில் அழைத்தான்.

அவன் எடுத்ததும், ''சிகப்பி... எப்படி இருக்கேமா?'' என அவன் தொடங்க,

''ஹ்ம்ம். நாங்க பெரிய வீட்டுக்கு வந்திருக்கோம்... நீங்களும் இங்க வந்திடுங்க....'' என்றவள், சிறு

இடைவெளிவிட்டு ''அப்பத்தா சொல்லச் சொன்னாங்க'' என்றாள்.

''அங்கே எதுக்கு?'' என்று யோசித்தவனுக்கு, அடுத்த நாள் தன் தாயின் திதி என்பது நினைவு வந்தது. அதனால், ''சரி'' என்றதோடு முடித்துக் கொண்டு, வீடு நோக்கிச் சென்றான்.

உடம்பு கழுவி, இரவு உணவுக்கு அனைவருடனும் அமரும் வரையிலும் கூட சிகப்பி அவன் முன்னே வரவில்லை. நேற்றைய அழுகைக்குப் பிறகு, கணவன் தன்னிடம் கூடுதல் கரிசனம் காட்டுவான் என்று எதிர்பார்த்திருந்த சிகப்பி, அவன் எப்போதும் போல் இருக்கவும், உள்ளுக்குள் உடைந்து போனாள். இந்த வீட்டில், தன் உணர்வுகளை மதிக்கவென்று யாருமே இல்லை என்று அந்த சிறு பெண்ணின் மனம் சுக்கலாய் நொறுங்கியது. வேலையைக் காரணம் காட்டி, தன்னிடமிருந்து அவன் ஒதுங்கி நிற்பது போன்ற பிரம்மை தோன்ற, சிகப்பி உள்ளுக்குள் சுருங்கி, வெளியில் விலகினாள்!!

மாமியாரின் திதிக்கென்று பெரிய வீட்டிற்கு வந்தது ஒரு வகையில் உதவ, கருப்பையாவின் கண் முன்னே நடமாடுவதை சுருக்குவதும் பெரிய விஷயமாய் இருக்கவில்லை.

உணவின் போது, ஆண்கள் மூவரும் இலையில் முன்னே அமர்ந்திருக்க, மெய்யம்மை ஆச்சி அவர்கட்கு பரிமாறிக் கொண்டிருந்தார்.

அவரது வேலையில் தலையிடாமல், ஒதுங்கி அமர்ந்திருந்த சிகப்பி, கவனமாய் கருப்பையாவின் பார்வை வட்டத்துள் விழுகாதபடி அமர்ந்து கொண்டாள்.

அவளது மோன நிலையைக் கலைப்பது போல், ''ஆத்தா சிகப்பி....இரண்டாங்கட்டில இருக்க உக்கிராண அறையில....ஒரு மர அலமாரி இருக்கும்....அதுல அடித்தட்டில ஒரு எண்ணைச் செம்பிருக்கும். அதுக்குப் பின்னாடி, பீங்கான் ஜாடி ஒண்ணுல பொடி இருக்கு ஆத்தா....அதை எடுத்துட்டு வரியா?'' என அவளிடம் வேலை சொன்னார், மெய்யம்மை ஆச்சி.

''ம்ம்....சரி....ஆயா'' என்றதோடு பின்புறம் நோக்கி நடக்க ஆரம்பித்தவள், வளவு முடிந்து இரண்டாங்கட்டு ஆரம்பிக்கும்போது, சட்டென நின்றாள்.

வேகமாய் திரும்பி, ''ஆயா... இங்க ஒரே இருட்டா இருக்கே...எனக்கு....எனக்கு...கொஞ்சம் பயமா இருக்கு....ஆயா'' என அவள் இழுக்க,

''போற வழி பூராவும் விளக்கு இருக்கும்.... ஆத்தா.... பார்த்து மெல்லமா போ'' என்றவர், பேரனின் இலையில் காலியாகியிருந்த இட்லியில் கவனத்தைச் செலுத்த, சிகப்பி தான் திரும்பி நடக்க வேண்டியதாய் இருந்தது.

அப்போதும், சிகப்பியின் பார்வை கருப்பையாவின் மேல் பாய்ந்து மீண்டது!

அவனது கெட்ட நேரமாக, அப்போது பார்த்து இலையிலிருந்த சாம்பார் தரையைப் பார்த்து ஓட, அது சிந்திவிடாமல் இருக்க, இலையிலேயே கவனமாய் இருந்தான் அவன்.

அவனது அச்செயல்- சிகப்பியைத் தாக்கிவிட, வேகமாய் பின்புறம் சென்று, எடுக்க வேண்டியதை எடுத்துக் கொண்டு முன்புறம் நடந்தாள்.

போகும்போது, ஒரோர் விளக்காய் போட்டுச் சென்றதில் இருட்டு பயமுறுத்தாமல் இருக்க, வரும் போது எரிந்து கொண்டிருந்த விளக்குகளை ஒவ்வொன் றாய் அணைத்ததும், இருட்டு பயங்கரமாய் பயமுறுத் தியது.

கடைசி விளக்கை அணைத்துவிட்டு, வளவிற்குள் வேகமாய் காலடி எடுத்து வைத்தவளை, அங்கிருந்த பட்டியக்கல் தட்டிவிட, சிகப்பியின் முழு உருவமும் தரையில் மோதி விழுந்தது!!

விழுந்த வேகத்தில் தலையில் பலமாய் அடிபட் டிருக்க, தாடை மேல் உதட்டுடன் மோதியதில் மேல் உதடு கிழிந்து போனது. கூடவே, பொடி இருந்த பீங்கான் சாடியும் அவள் விழுந்த வேகத்தில் கீழே விழுந்து நொறுங்கி, அதன் துண்டுகள் சிகப்பியின் கன்னத் தையும், கையையும் ஒருங்கே பதம் பார்த்திருந்தன. அது மட்டுமில்லாமல், ஜாடியிலிருந்த இட்லி மிளகாய் பொடி அவளது கண்களில் பட்டுவிட, வலியில் உயிர் போனது சிகப்பிக்கு!!

''அம்மாமாமாமாமாமாமாமாமாமா...'' என்ற அவளது அலறலின் தொடர்ச்சியாக,

''சிகப்பிபிபிபிபிபிபிபிபிபிபிபி.....'' என்ற கணவ னின் கூவலும்,

''ஆத்தாடி....'' என்ற மெய்யம்மை ஆச்சியின் அதிர்ச் சியும் காதில் விழுந்தபோதும், சிகப்பியால் தலை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

கண்ணைச் சுழற்றிக் கொண்டு மயக்கம் வருவது போலிருக்க, எழுந்து கொள்ளும் முயற்சியைக் கைவிட்டு,

அவளது தலை மெல்லத் தோயும் முன்னர், கண்ணன் அங்கே ஓடி வந்துவிட்டிருந்தான்.

அவளைத் தாங்கி அவன் தூக்கி நிறுத்தும் போதே, வீட்டோடு இருக்கும் பணியாளை காரை எடுக்கச் சொல்லியிருந்தார் கருப்பையா செட்டியார்.

மயங்கிக் கொண்டிருந்த சிகப்பியின் முகத்தில் தண்ணியைத் தெளித்து, கை நிறைய சக்கரையை எடுத்து அவள் வாயில் போட்டார் மெய்யம்மை ஆச்சி.

''பொம்மி அம்மாவுக்கு போன் பண்ணிட்டேன்... நேரா அவங்க வீட்டுக்கே போய்டு.... சீக்கிரம்.... சீக்கிரம்... ரத்தம் ஊத்துது பாரு.....சீக்கிரம் நட கண்ணா..... இல்லைன்னா ரெண்டு பேருமா அவளைத் தூக்கு வோம்....'' என்று மகனை விரட்டினார் கண்ணனின் தந்தை.

அடுத்த ஐந்து நிமிடத்தில், மருத்துவரின் வீட்டில் இருந்தனர் கண்ணனின் குடும்பத்தினர்.

ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடந்தேறிய சிகிச்சை யின் முடிவில், சிகப்பியின் கண்களில் வற்றாது கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. மெய்யம்மை ஆச்சியின் கைகள் அதைத் துடைத்துக் கொண்டே இருந்தன!

அவரது கைகளைப் பிடித்துக் கொண்டு ''ரொம்ப வலிக்குது...ஆயா'' என அவள் சிறுபிள்ளையாய் அழுதபோது, அந்தப் பெரிய மனுஷியின் மனம் பாகாய் உருகிப்போனது.

தன் கண்ணீரை மறைத்துக் கொண்டு ''சின்னப் புள்ள மாதிரி மறுகக் கூடாது! எல்லாம் சரியாப் போய்டும்!''

என்று சற்று அழுத்திச் சொன்னவர், அவளை அழைத்துக் கொண்டு, பெரிய வீட்டுக்குப் போகாமல் பங்களா வீட்டிற்கு வந்து சேர்ந்தார்.

''ஏன்?'' என்பது போல் பார்த்த பேரனிடம் எதுவும் சொல்லாமல், ''அவளோட இரு'' என்றுவிட்டுச் சென்றார் அவர்.

உடம்பு முடியாமல் இருக்கும் சமயத்தில், எந்த ஒரு மனைவியும் கணவனின் அருகாமையையும், அவனது அன்பு வார்த்தைகளையும் எதிர்பார்ப்பாள் என்பது அவர் அறியாததா?! அதனாலேயே, அவர் பங்களா வீட்டிற்கு வந்தது.

பெரிய வீட்டிலிருந்தால், தனிமை வேண்டுமெனில் அவர்கள் மேலறைக்குச் செல்ல வேண்டும்; ஆனால் சிகப்பி இப்போதிருக்கும் நிலையில் அவள் மாடி ஏறுவது என்பது சிரமம் கொடுக்கும் விஷயமாய் இருக்கும் என்பதாலேயே அவர் இந்த ஏற்பாட்டைச் செய்தது.

அதைப் புரிந்துகொண்ட பேரனும், தன் மனைவியை விட்டு அங்கே இங்கே நகரவில்லை.

ஏற்பட்டிருந்த வலியாலோ அல்லது கொடுக்கப்பட்டிருந்த தூக்க மருந்தின் வேகத்தினாலோ, சிகப்பியிடம் அசைவில்லாத போதும், கருப்பையாவின் இமைகள் சற்றும் மூடவில்லை.

அதே போல், அவனது கைகளும் அவள் மேனியில் பட்டிருந்த காயங்களை வருடாமல் இருக்கவில்லை.

மருந்தின் வேகம் குறையக் குறைய, சிகப்பியின் நினைவுகள் மெல்ல மெல்ல மேல் எழும்பின.

உடலில் ஏற்பட்டிருந்த காயங்கள் உண்டு பண்ணிய வலியுடன், மனதின் தவிப்புகளும் சேர்ந்து கொள்ள, திருமணமான நாள் தொடங்கி தன் வாழ்க்கை திசை மாறிப்போனதை எண்ணி நொந்து கொள்ள ஆரம்பித்தது சிகப்பியின் மனது.

திருமணம் முடிந்த நிமிடம் முதல், கொஞ்சம் கொஞ்சமாய் பறிபோன தனது சந்தோசம், நேற்றைய நிகழ்வால் (குழந்தைக்கான பரிசோதனையால்) முற்றிலுமாய் தொலைந்து போனது போலிருந்தது, சிகப்பிக்கு.

இவை அனைத்திற்கும், தன் கணவனையே காரணக் கர்த்தவாக்கி, அவனது செயல்களை எதிர்த்தே தன் சிந்தனையை ஓட்டினாள், அந்த 'அன்பு' மனைவி.

சிகப்பிக்கு இருட்டைக் கண்டு பயம் என்று தெரிந்திருந்தும், பின்புறம் அனுப்பிய அப்பத்தாவிடம் எதுவும் சொல்லாமல் இருந்தது. அவன் செய்த குற்றங்களில் பெரும் பகுதியை வகித்தது.

அடுத்ததாய் அவன் செய்த குற்றம் என்று சிகப்பி எண்ணியது - உதவிக்கென்று அவனைத் தான் பார்த்தப்போதும், தனது பயத்தை அலட்சியம் செய்து, உணவிலேயே கவனமாய் இருந்தான் என்பது தான்! மனைவியின் பயத்தை விட அவனுக்கு அப்பத்தாவின் சொல்லிற்குக் கீழ்ப்படிவதும், உணவு உண்ணுதலும் தான் முக்கியமாய் இருந்திருக்கிறது என்ற முடிவிற்கு சிகப்பி வந்துவிட்டிருந்தாள்.

அந்த எண்ணம் மேலெழும்பியதும், கண்கள் கண்ணீரைப் பொழியத் துவங்க, கண்மூடிப் படுத்திருந்தாள் அவள்.

மனைவியின் வெண்பட்டுக் கன்னத்தில் ஏற்பட்டிருந்த ஆழமான வெட்டை மெல்ல வருடிக் கொடுத்துக் கொண்டிருந்த கருப்பையாவின் கைகளில் ஈரம் படியவும், சட்டென நிமிர்ந்து பார்த்தான் அவன்.

''வலிக்குதாடா'' என அவன் உருக,

உடலும் மனமும் சோர்ந்து போயிருந்த அந்த நேரத்தில், அந்த அன்பு வார்த்தைகளும் சிகப்பிக்கு எரிச்சலையே கிளப்பின.

பிள்ளையையும் கிள்ளிவிட்டு....தொட்டிலையும் ஆட்டும் செயலாய் அவனது உருகல் தோன்ற, அவனைப் பெரும் கிராதகனாக்கி, அவனைத் தூர விலக்கி நிறுத்தினாள் மனைவி.

''அப்புறம் வலிக்காமா...பூவை வச்சுத் தடவுற மாதிரி இருக்குமா....'' என்று குதர்க்கமாய் பேசத் தான் நினைத்தாள்! ஆனால், உதட்டில் போட்டிருந்த தையல், பேச்சை சுருக்கி விட்டிருந்ததே!

கணவனையே குற்றவாளி ஆக்கியிருந்தவளுக்கு, அவனது குடும்பத்தாரிடம் எங்கனம் ஒட்டுதல் வரும்?! அதனாலேயே, உலக வழக்கப்படி, பெண்ணின் மனது அவளது தாய் வீட்டு வாசத்திற்கு ஏங்கத் தொடங்கியது.

கூடவே, அப்பத்தா-ஐயா, தந்தை-தமையன் என்று அனைவரது அரவணைப்பிற்கும் மனம் ஏங்க, மிகுந்த சிரமத்துடன் வாய் திறந்தவள்,

''இப்பவாவது.... என்னை... எங்க அம்... அம்மா வீ... வீட்டுக்கு

அனுப்பு...அனுப்புவீங்களா?'' என்றாள் மெல்லிய குரலில்.

கைகளை ஏந்திய நிலையில் வைத்து அவள் பேசியது, கண்ணனின் மனதை கத்தி கொண்டு அறுத்துத் தான் பார்த்தது! அவள் மனம் படும் பாடு புரிய, தவித்துப் போனான் அவன்!

ஏந்தியிருந்த அவளது கைகளைப் பற்றி முத்தமிட்டவனின் வார்த்தைகள் வெளியே வரும் முன்னர், சிகப்பி மீண்டும் பேசினாள்.

''ப்ளீஸ்... என்னை எங்கம்மா வீட்டுக்கு அனுப்புங்களேன்.. எனக்கு அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு.... அப்பத்தா மடில படுத்துக்கணும் போல ஆசையா.... ஏக்கமா....ப்ளீஸ்...அனுப்புங்க...'' - வார்த்தைகளுக்கு ஈடாய் கண்களும் கண்ணீரால் அவனைக் கெஞ்சின.

''என்னடா சிகப்பி....இது! அழாதே கண்ணம்மா!''

''அம்மா வீட்டுக்கு...''

''கண்டிப்பா போகலாம்.....ஆனா அழாதே...தையல் பிரிஞ்சுக்கும்....''

''நிஜமா?''

''நிஜம்!''

''இன்னைக்கே போகட்டுமா?''

''ம்ம். போகலாம்.''

''இப்போவே....''

''இப்போவேவா....அம்மாக்கு இன்னைக்குத் திதி மா...அதை முடிச்சிட்டு, நானே உன்னை மெட்ராஸ் கூட்டிப் போறேன். என்ன சரியா?''

''ம்ம். கண்டிப்பா கூட்டிப் போவீங்க தானே? அப்பத்தா... எதுவும் சொன்னா....என்ன செய்றது...'' சிகப்பிக்கு இன்னமும் சந்தேகம் தான்.

''இல்ல. எதுவும் சொல்ல மாட்டாங்க. நான் பார்த்துக்கிறேன். இன்னைக்கு நைட்-க்குள்ள... நாம உங்க அம்மா வீட்டில இருப்போம். சரியா?''

''ம்ம்.''

''மனசைப் போட்டு கஷ்டப்படுத்திக்காம...தூங்கு'' என்றவன், அவளது புருவங்களை நீவிவிட, சிகப்பியின் கண்களும் மெல்ல மெல்ல நித்திரையின் பிடிக்குச் சென்றன.



14

மனைவிக்குக் கொடுத்த வாக்கிலிருந்து சற்றும் மாறாமல், தாயின் திதி காரியங்கள் முடிந்ததும், அவளை அழைத்துக் கொண்டு சென்னை செல்ல ஆயத்தமானான், கண்ணன்.

''இந்த நிலைமையிலா?'' என்று முதலில் தயங்கினாலும், பேரன் மனைவியின் 'ஏக்கம்' புரிந்தவர் போல், இருவரையும் அனுப்பிவைத்தார், மெய்யம்மை ஆச்சி.

அவர்கள் சென்னை செல்வதற்கு ஒத்துக் கொண்ட போதும், பெரியவர்கள் யாருமே காரில் சென்னை செல்வதற்கு ஒப்பவில்லை.

''ட்ரெயின்-ல போயேன்....கண்ணா'' என்று அவனது தந்தை எவ்வளவோ சொன்னபோதும்,

''இல்லைப்பா....டிக்கெட் கிடைக்கிறது ரொம்பக் கஷ்டம். அது மட்டுமில்லாம, கார்லன்னா நடுல ஏதாவது எமர்ஜென்சின்னாலும் டக்குன்னு இறங்கிப் பார்த்துக் கலாம். அதான் காலையிலேயே போயிடலாம்ன்னு பார்க்கிறேன்...'' என்றான் மகன், முடிவாக. வெளிப் பார்வைக்கு ஏதேதோ காரணங்கள் சொல்லியபோதும், ''இரவிற்குள் உன் அம்மா வீட்டில் இருப்போம்'' என்று மனைவிக்குக் கொடுத்த வாக்கை அவன் மீறுவதாய் இல்லை. மேலும் ஒரு ஏமாற்றத்தை மனைவியின் மனம் தாங்காது என்று எண்ணியவன், அவளை அப்போதே அழைத்துச் செல்வதில் உறுதியாய் இருந்து, அதை நடத்தியும் காட்டினான்.

தாய் வீட்டிற்குக் கிளம்பிய சிகப்பிக்கு, கணவன் மேல் தனக்கிருந்த கோபத்தை சரிவர காட்டாமல் போவது போன்ற எண்ணம் எழுந்தது. அதன் தொடர்ச்சியாக, அவனது ஆசைக்காக/வேண்டுகோளுக்காக சிகப்பி போட்டுக்கொண்ட பெரிய மூக்குத்தியைக் கழற்றிவிட்டு, சின்னதாய் ஒரு தங்க மூக்குத்தியை எடுத்து அணிந்து கொண்டாள்!

ஆனால், யாருக்குத் தன் கோபம் புரியவேண்டும் என்றெண்ணி, மூக்குத்தியை மாற்றினாளோ, அவன் அதை கவனித்ததாகவே தெரியவில்லை!

திடீரென ஊருக்குக் கிளம்ப நேர்ந்ததால், தான் இல்லாத நேரத்தில் மருத்துவமனையிலும் வீட்டிலும் நடக்க வேண்டிய வேலைகளுக்கான அறிவுரைகளைத்

தன் கீழே வேலை பார்ப்பவர்களுக்குக் கொடுப்பதிலேயே கவனமாய் இருந்த கண்ணனுக்கு, மனைவியின் முகத்தில் இருந்த மாற்றம் பதியவில்லை!

இதுவும், கண்ணனின் குற்றங்களில் மறக்காமல் இடம்பிடித்தது! ஆம், மனைவியிடம் தெரியும் சிறு மாறுதலைக் கூட உணரவில்லை...அதுவும் அவனுக்குப் பிடித்த ஒன்றை அவள் துறந்திருக்கும் போது அதை கவனிக்கவில்லை என்றால் கணவனுக்குத் தன் மேல் அக்கறையில்லை என்று தானே நினைப்பாள், மனைவி!

ஆயிரத்தெட்டு குற்றங்கள் நிரம்பிய குற்றப் பத்திரிகையோடு, புகுந்த வீட்டிலிருந்து கிளம்பிய சிகப்பியிடம், பெரியவர்கள் மூவருமே பரிவுடன் பேசினர்.

அவர்களது பரிவில் சிறிதும் பொய் இல்லை என்பதை சிகப்பியின் மனம் உணர்ந்தபோதும், அவளால் முழு மனதுடன் அவர்களுடன் இசைய முடியவில்லை. தன் கற்பனைகளின் தாக்கத்திலிருந்ததும் அவள் வெளி வருவதாய் இல்லை. அதனாலேயே, பாசத்துடன் பேசியவர்களிடம் ஒரு சின்ன ''ம்ம்'' உடன் காரில் ஏறிக் கொண்டாள்.

காரை டிரைவர் ஓட்டியதால், பயணம் முழுவதும் கண்ணன் சிகப்பியை விட்டு அகலவில்லை.

அவளுக்குப் பசிக்கும் முன்னரே உணவு கொடுப்பதும், நேரத்திற்கு மருந்து கொடுப்பதும், அவளது காயங்களை மிருதுவாய் வருடிக்கொடுப்பதும், அவள் கால் நீட்டி உறங்குவதற்கு ஏதுவாக ஓரத்தில் ஒதுங்கி அமர்ந்து கொள்வதுமாய் தன் அக்கறையைக் காட்டினான், அவன்.

பயணத்தின் முக்கால் வாசி நேரம் தூங்கியதால், சிகப்பியால் இந்த இதத்தை முழுதாக உணர முடியவில்லை. முழித்திருந்த நேரத்தில், அவன் காட்டிய பரிவு - செய்த தப்பிற்குப் பிராயச்சித்தம் போல் அவளுக்குத் தோன்றியது அவளது தப்பா? அல்லது அவள் உடலில் தோன்றியிருக்கும் பலவீனத்தின் விளைவா? எந்தவித முன் அறிப்புமில்லாமல், இரவு பதினோரு மணியளவில், மகளும் மாப்பிள்ளையும் வீட்டு வாசலில் வந்து நிற்கவும், சொக்கலிங்கம் ஆடிப் போனார்!

அதுவும் முகத்தில் பலத்த காயங்களுடன் நின்றிருந்த மகளைப் பார்த்ததும், நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது.

''என்னாச்சு மாப்பிள்ளை..சிகப்பி என்னடா...காயமா இருக்கு...'' என அவர் ஆரம்பிக்கும்போதே, ''உள்ள போய் பேசலாம் மாமா'' என்றான் மருமகன்.

நடந்த விஷயங்களை சுருக்கமாய் சொன்னவன், ''சிகப்பியோட உடம்பு சரியாகுற வரைக்கும்...இங்க இருக்கட்டுமேன்னு கூட்டிட்டு வந்தேன். அவளுக்கும் ஒரு மாறுதலா இருக்கும் இல்லையா?'' என்று முடித்தான்.

அதற்குள் பெரிய வைரவன் செட்டியார் தவிர்த்து அனைவரும் விழித்து விட, வீட்டு மாப்பிள்ளைக்கான வரவேற்பும், கூடவே மகளின் உடல்நிலையைப் பற்றிய அதிர்ச்சியுமாய் அரை மணி நேரம் கழிந்தது.

''உமையா... அவங்க சாப்பிட ஏற்பாடு பண்ணு. உடம்பு முடியாததோட கார்-ல வேற வந்தது, சிகப்பிக்குப் பசி எடுத்திருக்கும். மாப்பிள்ளையும் களைச்சுப் போய்

மனைவி திட்டு வாங்குவது பொறுக்கமுடியாமல், கண்ணன் இடைப்புக முற்பட்ட போது, சிகப்பியின் குரல் மேலிருந்து ஓங்கி ஒலித்தது.

''உடம்பு சரியில்லாம இருக்கும்போது கூட திட்டணுமா? நான் என்ன... பிரண்ட்சோட ஊர் சுத்திட்டு வந்து சாப்பாடு வேண்டாம்ன்னு சொல்றேன்னா என்ன? முடியலைன்னு தானே சொல்றேன்....அதைக் கூடப் புரிஞ்சுக்காம..சை....'' என அவள் கத்தியபோது, அதில் அப்பட்டமான எரிச்சல் தான் இருந்தது.

''சரி...விடு உமையா! அவளுக்கு வேண்டாம்ன்னு மனசில தோணிட்டா.... என்ன பேசினாலும் அவளைச் சம்மதிக்க வைக்க முடியாதுங்கிறது தெரியும் தானே? விடு...'' என்று முடித்தார் பெரிய சிகப்பி!

இந்த இடத்தில், கண்ணனின் மனம் - சிகப்பி தங்கள் வீட்டிலிருந்த முறையை அலசி ஆராயத் துவங்கியது.

திருமணம் முடிந்த நாள் தொட்டு, சிகப்பி அதிர்ந்து பேசி, அவன் கேட்டதில்லை! ஹ்ம்ம்... இல்லை.... இல்லை கேட்டிருக்கிறான்.. இரு தினங்களுக்கு முன்னர் என்னமாய் வெடித்தாள்?! ஆனால், அது அனைத்தும் தன்னிடம் மட்டும் தான்... தன் வீட்டினரிடம் அவள் கூச்சலிட்டு அவன் பார்த்ததில்லையே! அவளது விருப்ப மின்மையை லேசான முக வாட்டத்தில் வெளியிட்டிருக் கிறாளே ஒழிய, அவர்களிடம் கத்தியதில்லை...சண்டை போட்டதில்லை... ''நான் இப்படித் தான் இருப்பேன். உங்களுக்காக என்னை மாற்றிக் கொள்ள முடியாது'' என்று பிடிவாதம் பிடித்ததில்லை...அவள் தாய் வீட்டில் இருந்ததற்கும், தன் வீட்டிலிருந்ததற்கும் எத்தனை

தெரியுறார்'' என்று வீட்டு மாநாட்டை ஒருவழியாய் கலைத்தார், சொக்கலிங்கம்.

வேகவேகமாய் மிளகாய் சட்னி அரைத்து, சூடாக தோசை ஊற்றியபடியே, மருமகனையும் மகளையும் உணவுண்ண அழைத்தார், உமையாள் ஆச்சி.

கண்ணன் உணவு மேசையின் புறம் நடக்க, சிகப் பியோ மாடிப்படி நோக்கி நடந்தாள்.

'ஏய், சௌந்து! வந்து.. ரெண்டு தோசை சாப்பிட்டுப் போ!'' என்று உமையாள் ஆச்சி அவளை நிறுத்தியபோது,

''ப்ச். வேண்டாம்மா. எனக்குத் தூக்கமா வருது.. நான் தூங்கப் போறேன்...'' என்றவாறே மாடி ஏறிக் கொண்டே இருந்தாள் மகள்.

''உடம்பு சரியில்லாதப்ப.. நேரத்துக்கு சாப்பிடணும் ஆத்தா! இல்லைன்னா மருந்து ஒட்டாது!'' என்று பெரிய சிகப்பி ஆச்சி தன் பங்கிற்கு தடுக்க,

''வேண்டாம்ன்னா விடுங்க...அப்பத்தா! சும்மா.... சும்மா... நான் மேல போறேன்'' என்றவள், தன் அறைக் குள் சென்று மறைந்தே விட்டாள்.

''என்ன புள்ளை இது? தன் உடம்பைக் கூட பார்த்துக்காம...'' - பெரிய சிகப்பி ஆச்சி சலித்துக் கொள்ள,

''துப்புகத்தவ....முதமுதலா மாப்பிள்ளை நம்ம வீட்டுக்கு வந்திருக்காக..அவுகளோட ஒண்ணா உட் காந்து உம்பாளா... அதை விட்டுட்டு...இவ பாட்டுக்கு விருட்டுன்னு ரூம்-குள்ள போறா...வயசு தான் ஏறிப் போச்சே ஒழிய, இதுக்கு ஒரு சமத்தும் பத்தாது''- உமையாள் ஆச்சியின் வார்த்தைகளில் பெரும் கோபம்.

''அடடே! பொண்டாட்டிக்கு சப்போர்ட்டா? இல்லை
பயமா?'' என சக்தி கண்ணை உருட்ட,

''பயமா? எனக்கா?'' என்று அவனுக்கு மேலாய்
கண்ணை உருட்டினான், கண்ணன்.

மேலும் சில நிமிடங்கள் கேலியும் கிண்டலுமாய்
கழிய, சிகப்பிக்கான பாலை எடுத்துக் கொண்டு அவளது
அறைக்குச் சென்றான், கணவன்.

''மாப்பிள்ளையை பால் கொண்டு வர வச்சிட்டு....
இது சட்டமா படுத்திருக்கு பாருங்களேன், அயித்தை!
திமிரும், திண்ணக்கமும் குறையவே இல்லை....'' என்ற
உமையாளின் வசவுகளை,

''அவ...இத்தனை நாள் செய்யலையா? அவளுக்கு
உடம்புக்கு முடியாம இருக்க நேரத்தில நான் செய்றதில
என்ன அத்தை தப்பிருக்கு! விடுங்க! நீங்க போய்
படுங்க!'' என்ற சமாதானத்தில் சரிகட்டிவிட்டு, மனை
வியைப் பார்க்கச் சென்றவன், ஆழ்ந்த உறக்கத்தி
லிருந்தவளை எழுப்பி, பாலைப் புகட்டிவிட்டு படுக்கச்
செய்தான்.

அவள் உடனே உறங்கிவிட, அவனால் தான்
உறங்கமுடியவில்லை. நீண்ட நேரப் பயணம் உண்டு
பண்ணிய களைப்பைக் கூட அவனால் தூக்கத்தில்
களைய முடியாமல், புதிய இடம் அவனது தூக்கத்தைப்
பறித்துக் கொண்டது.

சற்று நேரம் படுத்திருந்தவன், மெல்ல எழுந்து, அந்த
அறையை வலம் வரத் துவங்கினான். அங்கிருந்த
பொருட்களின் மேல் அவனது கவனம் பதிய, அவனது
கரு[illegible]ம் அது பாதித்தது.

மனைவியின் துயில் படிந்த தூய முகத்தை ரசித்துக் கொண்டே அறையில் நடையிட்டவனின் கண்களில், ஓரமாய் வீற்றிருந்த சிகப்பியின் மேஜை கவனத்தைக் கவர்ந்தது.

மேசையை அலங்கரித்துக் கொண்டிருந்த சில பொம்மைகளில், மனைவியின் குழந்தை மனம் வெளிப்பட, கணவனின் ரசிக மனமும் அதில் லயித்தது!

அடுத்ததாய், அவனது பார்வை வட்டத்தினுள் சில புகைப்பட ஆல்பங்கள் விழ, அதை மெல்ல புரட்டினான். அதில் முக்கால்வாசி, துபாயில் எடுத்தப் படங்களாய் இருக்க, கண்ணனின் ஆர்வம் கூடியது.

அவனது ஆர்வத்தை ஆச்சரியத்தால் தோற்கடிக்கும் வண்ணம், புகைப்படங்களில் சிரித்துக் கொண்டிருந்த சிகப்பியின் மேனியை மருத்துக்குக் கூட ஒரு பொட்டுத் தங்கம் அலங்கரிக்கவில்லை. வண்ண வண்ணமாய் மின்னிய தொங்கட்டான்களில் தொடங்கி, கழுத்தில் தொங்கிய சிறு பாசி, கைகளில் மோதிரம் என அனைத்துமே தங்கத்தின் சாயல் கூட படாதவையாக இருந்தன!

இப்படி இருந்தவளா...தனக்காக அவ்வளவு பெரிய மூக்குத்தியைப் போட்டுக் கொண்டாள்....அதுவும் வைரத்தில்.... பெரிய வைரமும் ஐந்து பிஞ்சுகளும்.. எப்படி மனசு வந்தது? எதனால் போட்டுக் கொண்டாள்? தன் விருப்பத்தை மட்டும் மனதில் வைத்து,அவளுக்குப் பழக்கமில்லாத/ பிடிக்காத ஒன்றை செய்திருக்கிறாள் என்றால் தன்னை அவளுக்கு அளவுக்கு அதிகமாய் பிடித்திருக்கிறது என்று தானே அர்த்தம்!? கூடவே,

பெரிதாய் ஓர் மியூசிக் பிளேயர், நூற்றுக்கும் மேற்பட்ட இசைத் தட்டுகள், வீடியோ கேம்கள் என்று அறையே நவீனமயமாய் இருந்தது.

அறையின் மறுபுறத்தில், அவளது பாடப்புத்தகங்களின் நடுவில் அவள் வரைந்த நகை டிசைன்கள் ஒரு குவியலாய் இருந்தன.

அறையின் நடுநாயகமாய் வீற்றிருந்த உடை அலமாரியைத் திறந்த கண்ணன், மலைத்துப் போனான்!

எத்தனை விதமான உடைகள்- சுடிதார், கார்ராசோளி, லாங் ஸ்கர்ட், ஜீன்ஸ், டீ-ஷர்ட், குர்தா, நைட்டி, நைட் பேண்ட், ஃபார்மல் பேண்ட் என்று அளவில்லாமல் இருந்த உடைகளில் ஒரு சேலையைக் கூட அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏன் பாவாடை-தாவணி கூட அங்கே இருக்கவில்லை!

இவளா...தன் வீட்டில் நாள் முழுதும் சேலை கட்டிக் கொண்டிருக்கிறாள்!! என்று கண்ணனுக்குப் பெரும் வியப்பாய் இருந்தது.

அதுவும், முதல் நாள் அன்று சேலை கட்டுவதற்கு அழுதவள்!? அப்பத்தாவின் விருப்பத்திற்காக அல்லவா மாறியிருக்கிறாள்!?

வேகமாய் சென்று மனைவியை இழுத்து அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது கண்ணனுக்கு! மனம் நெகிழ்ந்திருக்கவே, வந்து கொண்டிருந்த கொஞ்சம் உறக்கமும் சுத்தமாய் நின்று போனது!

கண்களில் உறக்கம் படியாது போகவே, மீண்டும் எழுந்து அறையினுள் உலாவ ஆரம்பித்தான் கண்ணன்.

அவளுக்குப் பிடிக்காத ஒன்றை செய்ய வைக்கவே முடியாது என்ற அவளது அப்பத்தாவின் வார்த்தையும் சேர்ந்து கொள்ள, கொள்ளிடக் காவிரியாய் மனைவியிடம் பாய்ந்தது மனம்.

காதல் மிகவுற, சிகப்பியின் அருகே அமர்ந்து அவளது நெற்றியில் இதழ் பதித்து நிமிர்ந்தவன், வழக்கம் போல் அவளது மூக்கில் இதழ் பதிக்கக் குனிந்தபோது தான், சிகப்பி மூக்குத்தியை மாற்றி விட்டது உறைத்தது!

''ஆஹா...இதை எப்போது மாற்றினாள்? இத்தனை நாள் கவனிக்காமல் இருந்தோமே? இல்லையே..அன்று பொம்மி டாக்டர் வீட்டில், தாடையில் தையல் போடும் போது கூட, மூக்குத்தியைப் பார்த்த ஞாபகம் இருக்கிறதே! ஹ்ம்ம்...அதன் பின்னர் மாற்றியிருக்கிறாள்!? என் மேலிருக்கும் கோபத்தை இப்படி காட்டினார்கள் போல! செல்லத் தக்காளி!'' என்று மனதினுள் சீராட்டிக் கொண்டவனுக்கு, மனைவியின் கோபத்தின் தாக்கம் புரியாமல் இல்லை.

அதன் விளைவாய், நெஞ்சில் ஓர் உறுதியும் அழுத்தமாய் புகுந்தது- அதாகப்பட்டது- இதன் பின்னர் மனைவி எதற்காகவும் வருந்தக் கூடாது என்பது தான்!

அருகே படுத்திருந்த மனையவள் உறக்கத்தைப் புகுத்தினாளோ அல்லது நெஞ்சத்தின் உறுதி நிம்மதியைக் கொடுத்ததோ, கண்ணனின் கண்கள் மெல்ல நித்திரையின் வாசற்படியைத் தொட்டன.

வெகு நேரம் சென்று உறங்கியதால், காலை எட்டு மணியளவில் தான் கண்ணனுக்கு விழிப்பே தட்டியது.

ஜன்னல் வழியாக வந்த சூரிய வெளிச்சம் கண்ணை உறுத்த, இந்நேரம் சிகப்பி எழுந்து, குளித்து முடித்து, சாமி விளக்கேற்றியிருப்பாள் என்ற எண்ணத்துடனே அவன் கண் திறக்க, அவனது அன்பு மனையாள் இன்னமும் துயிலின் பிடியில் தான் இருந்தாள்!

தன் வீட்டில் ஐந்தரை மணிக்கெல்லாம் உருட்டிப் பிரட்டி எழுந்து கொள்பவள், இன்று இழுத்துப் போர்த்திக் கொண்டு உறங்கிக் கொண்டிருந்தது மனதில் அப்பட்டமான வித்தியாசமாய் பதிய, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தான்.

கதவு திறப்பதற்காக காத்திருந்தவன் போல், ''குட் மார்னிங் அத்தான்! எங்க உங்க அருமை பொண்டாட்டி? ஆழ்ந்த நித்திரையில் நீந்திக்கிட்டு இருக்காளா?'' என்ற அலறலுடன், கண்ணனை இடித்துக் கொண்டு உள்ளே சென்றான் சக்தி.

சிறு சிரிப்புடன் கண்ணன் கீழே வர, அங்கே வீடு பரபரப்பானது.

வீட்டிற்கு வந்த மாப்பிள்ளைக்கு காபி கொடுக்கவும், படிக்க பேப்பர் கொடுக்கவும் ஆளாளுக்கு விரைந்து செயல்பட்டதைப் பார்த்துவிட்டு, ''என்னை....ஏதோ பெரியாள் மாதிரி நடத்தாதீங்க மாமா! ரொம்ப சங்கோஜமா இருக்கு...சிகப்பி...சக்திகிட்ட இருக்க மாதிரி சாதாரணமா இருங்க....'' என்றான் கண்ணன், உரிமையுடன்.

''பேரன் சொல்றதைக் கேட்டியாங்கிறேன்... சிவப்பி.. சக்திகிட்ட இருக்கிறாப்ல இருக்கிறதாம். நம்ம சொக்கு தடிக் கம்போட வீட்டைச் சுத்தி வரதைப் பார்க்க

ஆசைப்படுதாக போல...'' என்று வைரவன் செட்டியார் சொல்லிச் சிரிக்க, மாப்பிள்ளையின் வருகை ஏற் படுத்தியிருந்த இறுக்கம் மெல்லத் தகர்ந்தது!

அதற்கு எதிரொலியாய், சக்தியும் சிகப்பியும் அடித்துக் கொண்டு நாறும் சத்தம் மேலிருந்து கேட்டது!

''கூறு கெட்ட எருமைங்க....ஏழு கழுத வயசாகுது... இன்னும் எட்டூருக்குக் கேட்கிற மாதிரி கத்துதுங்க...'' என்ற உமையாளின் திட்டின் நடுவே,

சிகப்பியின் ''டேய்! உன்னைக் கொலை பண்ணப் போறேன்....நானே மூணு மாசம் கழிச்சு இன்னைக்குத் தான் நிம்மதியா தூங்குறேன்...அதையும் கெடுக்க வந்துட்டான்....போடா...'' என்ற அதட்டல் காதைப் பிளக்க,

''சிகப்பி, சத்தத்தைத் குறை!'' என்று ஓங்கி ஓர் அதட்டல் போட்டார் சொக்கலிங்கம்.

மந்திரம் போட்டது போல், அவர்களது சண்டை முடிந்துவிட, கண்ணன் வாய் விட்டுச் சிரித்தான்.

''தடிக் கம்பே தேவையில்லை போல...உங்களோட வார்த்தையிலேயே கப்பு சிப்புன்னு அடங்கிடுறாங்க.... இந்த வித்தையை எனக்கும் சொல்லித் தாங்க மாமா....'' என அவன் பவ்யமாய் கேட்க, சொக்கலிங்கம் வாய் விட்டு நகைத்தார்.

''நம்பாதீக மாப்பிள்ள! நம்ம சத்தம் போடற வரைக் கும் தான் ரெண்டும் எலியும் பூனையுமா திரியும்...ஒரு அதட்டல் விழுந்த நிமிஷம், ரெண்டும் கூட்டுச் சேந் திரும்! சரியான கூட்டு களவாணிங்க!'' என்றார் கண் களை உருட்டி.

அதே சந்தோசம் தொடர்ந்து நிலவிய போதும், வீட்டின் ஒரே மாப்பிள்ளையான கண்ணனைக் கவனிப் பதை யாரும் கைவிடவில்லை.

இந்தக் கவனிப்பில் திளைத்திருந்த கண்ணனையும், அவனைக் கவனித்த பெரியவங்களையும் திகைப்பில் ஆழ்த்தும் வண்ணம், மதிய உணவு நேரத்தில் ''நானும் வந்ததில இருந்து பார்க்கிறேன்...முகம் முழுசும் காயத் தோட வந்திருக்க என்னைக் கவனிக்காம.... அவங் களையே தாங்குறீங்க? நான் இல்லாம..இந்த மாப் பிள்ளை தொரை எங்கிருந்து வந்தாராம்? ரொம்பத் தான்! எனக்கு சாப்பாடும் வேணாம்....ஒரு மண்ணும் வேணாம்.... எல்லாத்தையும் உங்க அருமை மாப்பிள் ளைக்கும், அருமை பெருமையா பெத்து வச்சிருக்கீங் களே ஒத்த பையன்...அந்த லூசுக்குமே போடுங்க..நான் போறேன்...'' அழுகை கலந்த ஆதங்கக் கத்தலுடன், உணவு மேசையிலிருந்து எழுந்தாள், சிகப்பி!



15

''என்ன பேச்சு இது, சிகப்பு!'' என்று பெரிய வைரவன் செட்டியாரே தன் செல்லப் பேத்தியைக் கடிந்து கொண்ட போது, பிறரைப் பற்றி கேட்கவும் வேண் டுமா!? வசவுகளின் மழையால் அவளை நனைத்துக் கொண்டிருந்தவர்களை,

''உடம்பு முடியாம இருக்கும்போது...இப்படி தான் எல்லாமே தப்பா தெரியும்...புரியாம கோபமும் வரும்...

அதைப் பெருசா எடுத்துக்காதீங்க...விடுங்க'' என்ற வார்த்தைகளில் அடக்கிய கண்ணனுக்கு, காலி வயிறுடன் மாடியேறும் மனைவியிடமே கவனமிருந்தது.

தட்டிலிருக்கும் உணவை முடித்துக் கொண்டு, மனை விக்கு உணவு கொண்டு செல்லலாம் என்று கண்ணன் எண்ணியிருக்க, அவனது மச்சினன் உடனே எழுந்து விட்டான்.

தமக்கைக்குப் பரிமாறப் பட்ட உணவை எடுத்துக் கொண்டு, மாடி ஏறியவனின் முகம் யோசனையில் சுருங்கியிருந்தது.

கதவைத் தட்டும் நாகரீகம் எல்லாம் அப்போது அவசியமற்று போய்விட, சிகப்பியின் அறைக்குள் நுழைந்தவனை அவளது அழுகை உலுக்கியது.

''ஹே சிகப்ஸ்! என்ன இது?''- தமக்கையின் அருகே அமர்ந்து தலையை வருடினான்.

''போடா! போய்...நல்லா கொட்டிக்கோ!''

''ச்சீ லூசு! எதுக்கு இப்போ அழற? அம்மா.... உன்னைக் கவனிக்கலைன்னா? அத்தான் நம்ம வீட்டுக்கு முதன்முதலா வந்திருக்காங்க சிகப்ஸ்... அவங்களை நல்லா கவனிச்சா தானே, அவங்களுக்கும் மரியாதை, உனக்கும் மரியாதை...இது புரியாம இப்படி பேசுறியே?''

''பெரிய்ய்ய்ய மரியாதை! எனக்கு ஒரு மண்ணும் வேணாம்....''

''கிராக்கு மாதிரிப் பேசக் கூடாது! அத்தானைக் கவனிக் கிறதில ஒரு சின்னக் குறையிருந்தாலும்... பின்னாடி ஒரு

தடவை இல்லாட்டியும் இன்னொரு தடவை.... உன்னைக் குத்திப் பேச வாய்ப்பிருக்கு இல்லையா? அத்தான் அப்படிப் பட்டவங்க இல்லைன்னாலும், நம்ம பக்கத்திலிருந்து அதுக்கு எதுக்கு வாய்ப்புக் கொடுக் கணும்?''

''பெரிய குறை?!! அவங்க நம்ம வீட்டைப் பத்தி குறை சொல்லும்போது... எனக்கு மட்டும் அவங்க வீட்டைப் பத்தி குறை சொல்ல விஷயமே இருக்கா தாக்கும். அதெல்லாம் ஆயிரம் இருக்கு! அப்படி மட்டும்... ஏதாவது குறை சொல்லிப் பார்க்கட்டும்... அப்புறம் பேசிக்கிறேன்!'' - அழுகை மாறி ஆத்திரம் வந்து சேர்ந்திருந்தது.

சக்தி பதில் பேசத் தொடங்கும் முன்னர், சிகப்பி மீண்டும் பேசினாள்.

''ஹுக்கும்! அப்படியே குறை சொல்லிட்டாலும்... முதல்ல குறை சொல்றதுக்கு என்ன... பேசுறதுக்கே... வீட்டுக்கு வரணும் இல்லையா? ஆஸ்பத்திரியே கதின்னு இருக்கும்போது... பேச்சாவது ஒரு மண் ணாவது... இதுல குறையாம்? அப்படி ஏதாவது வாய் திறக்கட்டும்....'' - பற்கள் நறநறவென கடிபட்டன.

''அடிப்பாவி, கடிச்சுக் கிடிச்சு வச்சிராதே!''- அவளை விட்டு இரண்டடி தள்ளி அமர்ந்து கொண்டான் இளை யவன்.

திருமணத்திற்கு முன்பிருந்த சிகப்பி என்றால், சக்தியின் இச்செயலுக்கு அவனை உண்டு இல்லை என்று செய்திருப்பாள்!? ஆனால், இன்றிருந்த பாவையோ ''பச்'' என்ற சலிப்புடன், குப்பறப்படுத்து, கண்ணீர் வடித் தாள்!

''சிகப்ஸ்! இதென்ன கெட்டப் பழக்கம்... அழறது? ப்ளீஸ், ஸ்டாப் கிரையிங்!

''உன்னோட கோபத்துக்குக் காரணம்.... அம்மா உன்னைக் கவனிக்காததா? இல்ல அத்தான் வீட்டுக்கு லேட்டா வரதா?

''நான் நினைக்கிறேன்... அத்தான் வீட்டுக்கு வராதது தான் உன்னோட பெரிய பிரச்சனை!

''அதோட தொடர்ச்சியா.... எல்லோரையும் போட்டு கடிகடின்னு கடிச்சிட்டு இருக்கே!

''ஆனா... அத்தான் மேல உனக்கிருக்க கோபமும் சுத்த ஹம்பக், சிகப்ப்ஸ்!'' - உறுதியாய் பேசி முடித்த சக்தியை யோசனையும் கேள்வியுமாய் நிமிர்ந்து பார்த்தாள், சிகப்பி! கண்களில் இருந்த கோபம் மட்டும் அப்படியே தான் இருந்தது!

''ஆமா சோப்பி! அத்தானுக்கு அதிகமான வேலை மிருக்குன்னா என்ன அர்த்தம்? அவருக்கு நிறைய பேஷண்ட்ஸ் வராங்கன்னு அர்த்தம்.... நிறைய பேஷண்ட்ஸ் வந்தா, நிறைய பணம் வரும். நிறைய பணம் வந்தா.... உனக்கு நிறைய நகை வரும்... சொத்து வரும்....''

''நகை... சொத்து.... இதெல்லாத்தையும் விடு. நிறைய பேஷண்ட்ஸ் பார்க்கப் பார்க்க, அத்தானுக்கு எவ்வளவு நல்ல பேரு கிடைக்கும்?!''

''கைராசியான டாக்டர்ங்கிறதால தானே அத்தானைத் தேடி இவ்வளவு பேர் வர்றாங்க?! அதை யோசிக்க மாட்டீங்கிறியே?''

சிகப்பியின் முகத்தில் கோபத்தின் இடத்தை யோசனை மெல்ல மெல்ல ஆக்ரமிக்கத் துவங்கியது.

தமக்கையின் முகத்தைப் பார்த்துக் கொண்டே தம்பியப்பனும் பேசாதிருக்க, ''கண் டாக்டர்ருக்குக் கூட நிறைய பேஷண்ட்ஸ் வருவாங்களாடா? குழந்தைங் களுக்கு பார்க்கிற டாக்டருக்குத் தானே நிறைய கூட்டம் வரும்... நம்ம ஏரியா-ல கூட நீலகண்டன்(குழந்தை நல மருத்துவர்) அங்கிள் தானே டா பிஸியா இருப்பார்?'' என்றாள் பலத்த யோசனையின் ஊடே.

''நீயெல்லாம்... என்னதான் படிச்சுக் கிழிச்சியோ!'' என்று அலுத்துக் கொண்ட சக்தி, மேலும் தாமதிக்காமல் பேச ஆரம்பித்தான்.

''காரைக்குடி.... சென்னை மாதிரி பெரிய ஊர் கிடை யாது சிகப்ஸ்!''

''அதாண்டா நானும் சொல்றேன்... இத்துனூண்டு ஊர்-ல இருக்க ஆஸ்பத்திரிக்கு.... அதுவும் கண் ஆஸ் பத்திரிக்கு.... எப்படி இவ்வளவு கூட்டம் வரும்?''

தம்பியின் வார்த்தைகளிலேயே தனக்கான ஓர் வழியைத் தேடினாள் சிகப்பி.

''பேக்கு... பேக்கு..! காரைக்குடியைச் சுத்தி எவ்வளவு கிராமம் இருக்கு? எனக்குத் தெரிஞ்சே ஒரு இருபது.... இருபத்தி நாலு கிராமம் இருக்கும்.... எனக்குத் தெரியாத கணக்குல ஒரு பத்து கிராமம்ம்ன்னு வச்சுப்போம். கிட்டத்தட்ட முப்பத்தஞ்சு கிராமத்தில இருக்க எல்லாருக் கும் காரைக்குடி தான் டவுன் மாதிரி... அப்படியிருக்கும் போது, அங்க இருக்க ஒரேயொரு கண் ஆஸ்பத்திரிக்குத் தானே எல்லோரும் வருவாங்க?'' - நீளமாய் விளக்கினான் தம்பி! தான் சொல்லும் கூற்றில் நூற்றுக்கு நூறு உண்மை இருப்பதால், திடமாகவே இருந்தது அவனது குரல்.

சிகப்பியின் முகம் அளவிற்கு அதிகமாய் சுருங்கியது. ''நான் இந்த மாதிரி யோசிக்கவே இல்லைடா...'' என்றாள் மெதுவாய்.

அவளது மூக்கைப் பிடித்து மெல்ல ஆட்டியவன், ''இந்த நாட்டாமை படத்தில சொல்வாங்களே- சுத்துப் பட்டு பதினெட்டுப் பட்டி கிராமத்துக்கும் ஒரே நாட்டாமைன்னு.... அது மாதிரி.... நம்ம அத்தான் சுத்துப்பட்டு முப்பது கிராமத்துக்கும் ''கண்ணாமை''யா இருக்கும் போது, அந்த ''கண்ணாமை'' யோட பொண்டாட்டி ''கண்முயல்''.... இப்படி கண்ணீர் வடிக்கலாமா?'' - சக்தி ராகம் பாடியதில்,

சிகப்பியின் கண்ணீர் மறைந்து, சிரிப்பு புகுந்து, முடிவில் ஞானோதயம் கொடுத்த தம்பியப்பனையே ''ஏய், என் வீட்டுக்காரரையா கிண்டல் பண்றே, ராஸ்கல்?! அடி வைக்கப்போறேன்!'' என அடிப்பதற்குக் கை ஓங்க வைத்தது.

தமக்கையின் சிரித்த முகத்தில் தானும் மகிழ்ந்து ''அடடே! புருஷன் மேல என்ன ஒரு பாசம்... அவருக்கு சோறு போடக் கூடாதுன்னு போர்க்கொடி தூக்கின பொற்செல்வியாரா நீவீர்?'' என்று கிண்டலில் இறங்கினான் சக்தியும்.

''அது.... அது... போன மாசம்.... இது இந்த மாசம்!'' என்று சளைக்காமல் அவனுக்குத் திருப்பிக் கொடுத்த சிகப்பி,

''இப்போ... நான் அவரைக் கவனிக்கிற கவனிப்பில... அவர் மட்டுமில்லாம, நம்ம அம்மாவே அசந்து போகப்

போறாங்க பாரு...'' என்ற சூளுரையுடன், கதவைத் திறக்க, கண்களில் சிரிப்புடன் கலியுகக் கண்ணனாய் அவளது கணவன் நின்றிருந்தான்.

முழுதாய் மூடாதிருந்த கதவு மனதை உறுத்த, ''எல்லாம் கேட்டீங்களா?'' என்றாள் சிகப்பி, ஓர் திகைத்தப் பார்வையின் வழியாக,

''கண்ணாமை - கண்முயல் காம்பினேஷன் வரைக்கும்!'' என்றவன், உரக்கச் சிரித்தான்.

''ஞே!'' சிகப்பியின் வட்ட விழிகளில், சிறு வட்டத்திலிருந்து பெரும் வட்டத்திற்கு மாறியது!

''ஆனாலும்... நான் ''ஆமை''... நீ ''முயலா''... ரெண்டு பேருக்கும் ரொம்பத்தான் கொழுப்பு! அத்தான்கிற பயம் கொஞ்சமாவது இருக்கா...'' மிரட்டல் போல் சொல்ல எண்ணியவனால், ஓர் சதவீதம் கூட குரலில் கோபத்தைக் கொண்டு வரமுடியவில்லை. மாறாக, சிரிப்பில் அவனது அதரங்கள் துடித்தன.

''பயமா... எங்களுக்கா...'' - அவனது மிரட்டலில் சற்றும் பயப்படாமல், சவாலாய் வெளிவந்த வார்த்தைகள் சிகப்பியினது மட்டுமல்ல, அவளது தம்பியுடையதும் தான். அவனும் சிரித்த முகத்துடன் அத்தானுடன் மல்லுக்கு நின்றான்.

''மாமா... சொன்னது சரி தான்! ரெண்டு பேரும்... சரியான கூட்டுக் களவாணிங்க!'' என்றவன், மனைவியின் காதை வலிக்காது திருகினான்.

''ஹய்யோ!'' என்று சிகப்பி கத்துவதற்குப் பதிலாக சக்தி கத்தினான்.

''இன்னும் கொஞ்ச நேரம் இங்க இருந்தா... என் காது அத்தான் கையில இருக்கும் போலவே! நான் போறேன்பா... வயிறு வேற பசியில அழுகுது!'' என்று மாடிப்படியின் பக்கம் திரும்பியவன்,

''ஏய், சோப்பு டப்பா! உன் புருஷன் மேல இருக்க லவ்-ல, தட்டில இருக்க சாப்பாட்டை மறந்திராத... ஒழுங்கா சாப்பிடு'' என்ற கட்டளையுடன் கீழே இறங்கினான். கூடவே, தன் தமக்கை கணவனையும் கண்களால் கேலி செய்தான்.

அவன் கண்கள் செய்த கேலியில் மேலும் சிரித்து ''போடா.. போடா... எனக்கு என் பொண்டாட்டியைப் பார்த்துக்கத் தெரியும்!'' என்றான் கண்ணன்.

* * *

கணவனின் வசமிருந்த தன் காதைப் பற்றி சிறிதும் கவலையில்லாமல், ''உங்களுக்குக் கோபமில்லையே!'' என்றாள் சிகப்பி லேசான பயத்துடன்.

''தன்னைப் பற்றி சரியாக தெரிந்து கொள்ளாததால் அல்லவா இந்த பயம்?!'' என்று அதுவும் கண்ணனின் மனதில் பதிய, இக்குறையை தீர்ப்பதும் தன் கடமையே என்பதை உணர்ந்தான், அந்த அன்பு கணவன்.

அதன் முதல் படியாய் ''கோபமா? உன் மேலயா? எனக்கா? கண்டிப்பா இல்லை! நீ..... சாப்பிடாம எழுந்து வந்த வருத்தம் தவிர, நான் இப்போ ரொம்ப சந்தோஷமா இருக்கேன்!'' என்றவன், அவளைக் கைப்பற்றி உள்ளே அழைத்துச் சென்றான்.

உள்ளே சென்றதும் மனைவியை இறுக அணைத்தவன், அடுத்த சிலபல மணித் துளிகளுக்கு

அணைப்பை மேலும் மேலும் இறுக்கினானே ஒழிய பிடியைத் தளர்த்தவில்லை.

நீண்ட நாட்களுக்குப் பின்னர், இருவரும் தத்தம் நெருக்கத்தைத் துளித்துளியாய் அனுபவித்தனர்.

இதுநாள் வரை, வேலையின் காரணமாக சற்றே தளர்ந்து போயிருந்த அவர்களது உறவு, புதிதாய் மலர்ந்தது.

கண்ணனின் வேலை பற்றி சக்தி விளக்கியதில், கணவன் தன்னைத் தவிர்க்கிறானோ என்ற சிகப்பின் வருத்தம் அர்த்தமற்றதாய் மாறிப் போனது.

அவளது அர்த்தமற்ற வருத்தம் வடிந்ததிலேயே, பாதி பிரச்சனை தீர்ந்தது போல் மனம் லேசாகிப் பறக்க, அவளும் சந்தோஷமாகவே அவனுள் அடங்கினாள்.

வேலையைக் காரணம் காட்டி, தன்னுடன் செலவழிக்கும் நேரத்தைக் குறுக்கிக் கொள்கிறான் என்ற அவளது குற்றச்சாட்டு, இப்போது அவளுக்கே சரியாகப் படவில்லை. அவனது வேலையின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ளாமல், அவன் மேல் வீணாய் பழி சொன்னோம் என்பது உறுத்த, அந்த உறுத்தலை முற்றிலும் போக்கிவிடும் வண்ணம், கணவனின் மார்பை முத்துச் சிப்பியாய் எண்ணி, தன் வெண்முத்து முகத்திற்கு அதனுள் ஓர் இடம் தேடினாள் கண்ணனின் ராதை!

பல நாட்களாய் மலர்ச்சியே இல்லாமல் கூம்பிப் போயிருந்த சூரிய காந்தி மலர் ஒன்று, சூரியனின் கதிர் பட்டு, சந்தோஷமாய் இதழ் விரித்து, மலர்ச்சி கொடுத்த சூரியனையே தன் பக்கம் வசீகரிப்பது போல், கணவனும் மனைவியும் கட்டுண்டு இருந்தனர்.

முதலில் அந்த மயக்கத்திலிருந்து மீண்டவள் சிகப்பி தான். கணவனின் மார்பிலிருந்த முகத்தை மெல்ல நிமிர்த்தி ''என்னங்க...'' என்றாள் மென்குரலில்.

''ஷ்... கொஞ்ச நேரம் பேசாதே சிகப்பி!'' என்றவன், அவளைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான், இன்னும் இறுக்கமாய்!!

கணவனின் சொல்லுக்குக் கட்டுப்பட்ட மனைவியாய் சிகப்பியும் கண்மூடி, அந்தத் தருணத்தில் லயித்தாள்.

நிமிடங்கள் நொடிகளின் வேகத்தில் கழிய, அணைப்பை லேசாய் தளர்த்திய கண்ணனின் பிடிக்குள் சிகப்பியின் முகம் சிக்கிக் கொண்டது. மனைவியின் முகத்தைப் பூவென எண்ணி, இரு கைகளிலும் ஏந்தியவன், ஓர் வேக மூச்சுடன் அந்த மலர்முகம் நோக்கிக் குனிந்தான்.

அதன் பின்னர், இருவரும் நிமிர்ந்தபோது, இருவரிடமும் வெளிப்பட்ட மூச்சும், ரேஸ் வைத்திருந்தால் ஒரே இடத்தைப் பிடித்திருக்கும்! முத்தத்தின் தாக்கம் அப்படி!?

மேல் உதட்டில் போட்டிருந்த தையலை வருடிக் கொடுத்துக் கொண்ட சிகப்பி, 'ஷ். வலிக்குதுப்பா...'' என்று லேசாய் சிணுங்க,

''சாரிடா! ரொம்ப நாள் ஆச்சா... அதான் ஒரு வேகத்தில... ஆனாலும்.... காயத்தில படாம மெதுவா தானே....'' என அவன் இழுக்க,

''ஐயோ! போங்கப்பா!'' என்று அவனிடம் மீண்டும் சரணடைந்தாள் மனையாள். பன்னீர் ரோஜாவாய்

பூத்திருந்த உதட்டிற்கு ஈடுகட்டும் வண்ணம், அடர் ஊட்டி ரோஜாவாய் சிவந்திருந்த முகம், முடி படர்ந்த மார்பில் மலர்ந்தது.

ஆனால், மலரை மலரச் செய்த மன்னவனுக்கு அதன் மலர்ச்சி பிடித்திருந்த போதும், மலர் கொண்ட தேனைப் பருகும் வண்டின் குணம் மேலோங்கி, மனைவியின் முகத்தைப் பிடித்து நிமிர்த்தியது.

அவளது முகம் நோக்கி மீண்டும் குனிந்தவன், உடனேயே நிமிர்ந்து, அவளை அள்ளிக் கொண்டு படுக்கைக்குச் சென்றான்.

சிகப்பியின் அடிப்பட்ட தேகம், சிறு தயக்கத்தைப் புகுத்தியிருந்த நிலையிலும், கணவனின் அணைப்பில் என்றுமில்லா ஓர் வேகத்தைக் கண்டாள் சிகப்பி. சில பல நிமிடங்கள், அவளது தேகம் அவளின் கட்டுப்பாட்டில் இல்லாமல் போக, கண்ணன் தாபத்தில் திளைத்திருந்தான்.

திருமணம் முடிந்த முதல் ஒரு வாரம், கட்டியணைத்தார்கள், கொஞ்சினார்கள், முத்தமிட்டார்கள் தான்! ஆனால், அதில் வாழ்வினுள் புதிதாய் புகுந்திருக்கும் தாம்பத்தியத்தை அனுபவிக்கும் வேகம் மட்டுமே இருந்தது! அதன் பின்னர் தொடர்ந்த நாட்களில், வீட்டுப் பொறுப்பு, வேலை என்று இருவருக்கும் அமர்ந்து பேசவே நேரமில்லாமல் போன நிலையில், இருவருக்கும் இருந்த நெருக்கம் வடியத் துவங்கியிருந்தது.

கணவன்-மனைவி இடையே நிலவிய பனிப்போரில் சண்டை வலுக்காமல், சமாதானத்தின் சாயல் லேசாய் படர்ந்ததில், விட்டுப் போயிருந்த நெருக்கம் பல மடங்கு தாக்கத்துடன் மீண்டு வந்தது.

சிகப்பிக்கு கணவனின் மேல் ஒன்றுக்கும் மேற்பட்ட வருத்தங்கள் இருந்தபோதும், அதில் முக்கிய இடம் பிடித்த ''கணவனின் விலகல்'' சுக்கு நூறாய் உடைந்ததில், சிகப்பியின் மனதில் இறுக்கம் தளர்ந்தது. அதனால், அவள் பங்காய், கணவனைத் தன் அன்பு முத்தங்களால் திணறடித்தாள்!

காதலின் பிடியில் நொடிகள் தத்தளிக்க, இருவருமே தங்களது துணையிடம் ஒன்றிப் போயினர்.

அரைமணி நேரமோ, ஒரு மணி நேரமோ தொடர்ந்த காதல் யுத்தத்தை முடிவுக்கு இட்டு வந்த பெருமை சிகப்பியையே சாரும். இறுக்கமாய் இருந்த கணவனின் கையணைப்பிலிருந்து வலுக்கட்டாயமாய் விலகியவள், அவன் மீண்டும் இழுக்கவும் ''ஷ்,,, விடுங்கப்பா... எனக்கு ரொம்பப் பசிக்குது..... சாப்பிடணும்'' என்றாள் முகத்தைச் சுருக்கி.

அவளது பாவனையில் சிரித்த போதும், மனமின்றியே எழுந்து கொண்ட கண்ணன், அவளை உண்ணச் செய்தான்.

மெதுவாய் உள்ளே சென்ற உணவின் போது, நிமிடங்கள் மௌனமாய் கழிய, சிகப்பியின் பார்வை மட்டும் கண்ணனின் மேல் ஓயாமல் படிந்து மீண்டது. அதை உணர்ந்து ''என்னடா....'' என்று அவன் உருக, ''அது....அது.. வந்து.... நீங்க எப்போ ஊருக்குப் போகணும்? ஹாஸ்பிடல்-ல நிறைய வேலை இருக்குமே?'' என்றாள் அவனது மனைவி, மேலிட்ட வருத்தத்துடன்.



16

''சக்தியின் பேச்சால் தன் வேலையைப் பற்றிய தெளிவு அவளுக்கு ஏற்பட்டிருக்கும். இதனால், அவளது சில சந்தேகங்கள்/பயங்கள் நீங்கி இருக்கும்'' என்றெண்ணியிருந்த கண்ணனுக்கு, மனைவியின் சிந்தனை சென்றிருந்த பாதையை எண்ணி, லேசாய் வியப்பு ஏற்பட்டது.

அவளது இக்கேள்வியின் சாரம் - ''தன்னைப் பிரிந்திருக்க வேண்டிய வருத்தம்'' என்பதும் மனதை வருட, ''ஹ்ம்ம், ஊருக்குப் போகணும் தான்.... ஆனா உன்னை விட்டுப் போக மனசே வரலையே!'' என்று ராகத்துடன் தாபத்தைக் கலந்து இழுத்தான் அவன்.

''அப்போ.... இங்கேயே இருக்கீங்களா?'' - அவனது தாபத்தைத் தன் ஆயுதமாக்கிக் கொண்டாள் மனையாள்.

''ஹ்ம்ம்.... இன்னும் ரெண்டு நாள் இருக்கேன்டா... அப்புறம் காரைக்குடி போயிட்டு, வேலையை ஒரு சுத்து பார்த்திட்டு... எப்போ நேரம் கிடைக்குதோ அப்போ ஓடி வந்துடுறேன்!'' என்றான் அவன், தாபத்திலிருந்து சற்றே பாதை மாறி.

''பச். நேரம் கிடைக்கிறதா.... உங்களுக்கா? போங்கப்பா...'' என அவள் அலுத்துக் கொள்ள,

''நிஜம்டா. ஜஸ்ட் ஒரு நாள் ரெஸ்ட் கிடைச்சாலும்.... [illegible] சூப் வச்சுக் குடிக்க.... ஓடி

சிகப்பிக்கு கணவனின் மேல் ஒன்றுக்கும் மேற்பட்ட வருத்தங்கள் இருந்தபோதும், அதில் முக்கிய இடம் பிடித்த ''கணவனின் விலகல்'' சுக்கு நூறாய் உடைந்ததில், சிகப்பியின் மனதில் இறுக்கம் தளர்ந்தது. அதனால், அவள் பங்காய், கணவனைத் தன் அன்பு முத்தங்களால் திணறடித்தாள்!

காதலின் பிடியில் நொடிகள் தத்தளிக்க, இருவருமே தங்களது துணையிடம் ஒன்றிப் போயினர்.

அரைமணி நேரமோ, ஒரு மணி நேரமோ தொடர்ந்த காதல் யுத்தத்தை முடிவுக்கு இட்டு வந்த பெருமை சிகப்பியையே சாரும். இறுக்கமாய் இருந்த கணவனின் கையணைப்பிலிருந்து வலுக்கட்டாயமாய் விலகியவள், அவன் மீண்டும் இழுக்கவும் ''ஷ்,,, விடுங்கப்பா... எனக்கு ரொம்பப் பசிக்குது..... சாப்பிடணும்'' என்றாள் முகத்தைச் சுருக்கி.

அவளது பாவனையில் சிரித்த போதும், மனமின்றியே எழுந்து கொண்ட கண்ணன், அவளை உண்ணச் செய்தான்.

மெதுவாய் உள்ளே சென்ற உணவின் போது, நிமிடங்கள் மௌனமாய் கழிய, சிகப்பியின் பார்வை மட்டும் கண்ணனின் மேல் ஓயாமல் படிந்து மீண்டது. அதை உணர்ந்து ''என்னடா....'' என்று அவன் உருக,

''அது....அது.. வந்து.... நீங்க எப்போ ஊருக்குப் போகணும்? ஹாஸ்பிடல்-ல நிறைய வேலை இருக்குமே?'' என்றாள் அவனது மனைவி, மேலிட்ட வருத்தத்துடன்.



16

''சக்தியின் பேச்சால் தன் வேலையைப் பற்றிய தெளிவு அவளுக்கு ஏற்பட்டிருக்கும். இதனால், அவளது சில சந்தேகங்கள்/பயங்கள் நீங்கி இருக்கும்'' என்றெண்ணியிருந்த கண்ணனுக்கு, மனைவியின் சிந்தனை சென்றிருந்த பாதையை எண்ணி, லேசாய் வியப்பு ஏற்பட்டது.

அவளது இக்கேள்வியின் சாரம் - ''தன்னைப் பிரிந்திருக்க வேண்டிய வருத்தம்'' என்பதும் மனதை வருட, ''ஹ்ம்ம், ஊருக்குப் போகணும் தான்.... ஆனா உன்னை விட்டுப் போக மனசே வரலையே!'' என்று ராகத்துடன் தாபத்தைக் கலந்து இழுத்தான் அவன்.

''அப்போ.... இங்கேயே இருக்கீங்களா?'' - அவனது தாபத்தைத் தன் ஆயுதமாக்கிக் கொண்டாள் மனையாள்.

''ஹ்ம்ம்.... இன்னும் ரெண்டு நாள் இருக்கேன்டா... அப்புறம் காரைக்குடி போயிட்டு, வேலையை ஒரு சுத்து பார்த்திட்டு... எப்போ நேரம் கிடைக்குதோ அப்போ ஓடி வந்துடுறேன்!'' என்றான் அவன், தாபத்திலிருந்து சற்றே பாதை மாறி.

''பச். நேரம் கிடைக்கிறதா.... உங்களுக்கா? போங்கப்பா...'' என அவள் அலுத்துக் கொள்ள,

''நிஜம்டா. ஜஸ்ட் ஒரு நாள் ரெஸ்ட் கிடைச்சாலும்.... என்னோட தக்காளியை சூப் வச்சுக் குடிக்க.... ஓடி

வந்துடுறேன்.. கண்டிப்பா கண்ணம்மா!'' என்றவன், அழுத்தமாய் ஓர் முத்தத்தை வைத்து, தன் வார்த்தையை உறுதி செய்தான்.

அதில் மகிழ்வதற்குப் பதிலா ''அய்யயோ!'' என்று அலறினாள், சிகப்பி!

''என்னம்மா? மெதுவா... உதட்டில போட்டிருக்க தையல் விட்டுக்கப் போகுது!'' என்றவன், பரங்கிக் காயாய் பிளந்திருந்த அவளது வாயை, மெல்ல மூடி, வருடிக் கொடுத்தான்.

''இந்த தக்காளி சூப்... ஐயோ.... அதை தயவு செய்து சக்திகிட்ட சொல்லிக் கொடுத்துடாதீங்க. என்னை ரொம்பக் கேலி பண்ணுவான்... ப்ளீஸ்...ப்ளீஸ்...'' - முதலில் பதற்றமும், பின்னர் கெஞ்சலும் என்றிருந்த அவளது குரலில், கண்ணன் நகைத்தான்.

''அடடா! இது நல்ல ஐடியா-வா இருக்கே? இனிமேல்... இதை வச்சே உன்னை ப்ளாக்மெயில் பண்ணுறேன்...'' சக்தியின் கிண்டலே மேல் என்று சிகப்பி எண்ணும் அளவிற்கு, அவளது கணவன் அவளை ப்ளாக்மெயில் செய்தான். அப்போது மட்டுமல்ல.... அடுத்து வந்த நாட்களிலும்!

ஆனால், அன்றைய தினம் சிகப்பி அந்த ப்ளாக் மெயிலைப் பற்றி பெரிதாய் எண்ணவில்லை. தன்னிடம் ப்ளாக்மெயில் செய்வதற்கு என்ன இருக்கிறது என்ற எண்ணத்தில் மிதப்பாய் தான் இருந்தாள்!

மிதப்பினூடே உணவை முடித்தவளுக்கு, உணவுண்ட தட்டை எடுத்துக் கொண்டு கீழே செல்லக் கூடப் பயமாய் இருந்தது.

தட்டுடன் கதவு வரை சென்றவள், மீண்டும் அறைக்குள்ளே வரவும், ''என்ன சிகப்பி? பசிக்குதா? நான் போய்.... சாதம் போட்டுட்டு வரேன்'' என்று தட்டிற்காக கை நீட்டினான், கண்ணன்.

''அய்யயோ! வேணாம் சாமி! உள்ளதே... நான் உங்களைப் பேசின பேச்சுக்கு அம்மாகிட்ட என்ன திட்டு வாங்கணுமோன்னு பயந்துட்டு இருக்கேன்... இப்போ, நீங்க போய் எனக்காக சாதம் போட்டு வந்தா,. ரெண்டு வாரத்துக்கு மேடை போட்டு என்னை ''ஆசீர்வாதம்'' பண்ணிடுவாங்க'' என்று ஒரேடியாய் மிரண்டு போனாள், சிகப்பி.

அவளது பாவனையில் சிரிப்பு வந்தபோதும், ''அதெல்லாம், ஒண்ணும் சொல்ல மாட்டாங்க'' என்று உறுதி கொடுத்தவன், அவளது நம்பாத பாவனையைப் போக்கும் வண்ணம் அன்றைய தினம் மட்டுமில்லாமல் அவன் காரைக்குடி செல்லும் வரையிலும், அவளுடனே இருந்தான்.

உடனிருந்தது மட்டுமன்றி, உமையாளோ சொக்கலிங்கமோ திட்டும் பாவனையில் தொடங்கினாலே நடுவே புகுந்து மனைவிக்கு அரணாகிப் போனான் அந்தக் கடமை கணவன்.

மாப்பிள்ளையே மகளின் பேச்சைப் பெரிதாய் எண்ணாத போது, அதுவும் அவளைத் தங்கத் தட்டில் வைத்துத் தாங்காத குறையாக தாங்கும் போது, சிகப்பியின் பெற்றோருக்கும் கோபம் குறைந்து, மறைந்தே போனது.

அதுவும், கணவன் காரைக்குடிக்குக் கிளம்பிச் சென்றதும், அநியாயத்திற்கு வாடித் தெரிந்த மகளின்

முகத்தைப் பார்த்ததும், உமையாளின் மனம் நிம்மதி யடைந்தது.

மகளுக்கும் மாப்பிள்ளைக்கும் நடுவே ஏதும் மனஸ் தாபம் இருக்குமோ? சென்னை வந்ததிலிருந்து கடுகடு வென இருந்த மகளின் முகமும், அவள் மாப்பிள் ளையைத் தூக்கி எறிந்து பேசிய விதமும் அந்தத் தாயாரை மிகுந்த கவலையில் ஆழ்த்தியிருந்தது. ஆனால், மருமகனும் மகளும் பரஸ்பரம் காட்டிய பிரியம் - அவரது துக்கத்தைத் தகர்த்தி, அவருக்கு ஏற்பட்டிருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகத்தையும் மறையச் செய்தது.

காரைக்குடி சென்றிருந்த கண்ணனுக்கு, அங்கே இருப்பே கொள்ளவில்லை. வேலையின் உந்துதலால், மருத்துவமனைக்குச் சென்றபோதும், மனம் மனைவி யிடமே இருந்தது.

அதுவும், மூக்குத்தி போட்டு வரும் யாரைப் பார்த் தாலும், சிகப்பியின் பெரிய மூக்குத்தி சிறியதாய் சுருங்கியதே மனதை உறுத்த, அதைப்பற்றி அவர்கள் பேசிய தருணத்திற்கு சென்று மீண்டது மனம்.

அவன் ''கண்ணாமை'' ஆன தினத்தில், இரவு படுக்கைக்கு வந்த மனைவியைத் தன் கை அணைப்பில் வைத்துக் கொண்ட கண்ணன்,

''இன்னைக்குத் தான் மேடமோட முகம்... சிரிச்சாப்ல இருக்கு! சக்தி பேசி, என்னோட நிலைமையைப் புரிய வைக்கிற வரைக்கும்... பயங்கர கோபத்தில இருந்தீங்க இல்லையா?'' என்றான் அவளது மூக்கைப் பிடித்து செல்லமாய் ஆட்டி...

''ம்ம்....''

''இந்த சக்தி பயலை.... நம்ம கூடவே கூட்டிப் போயிடலாமான்னு இருக்கு... பல நேரம் என்னைக் கிண்டல் செஞ்சாலும், இந்த மாதிரி சில நல்லது செய்றானே?'' - அவன் இழுக்க,

''ஹூக்கும்! அவன் எடுத்துச் சொன்னான் தான்... ஆனா, அதைப் புரிஞ்சுக்கவும் எனக்கு மனசு இருக்கணும் இல்லையா?'' - கணவன், தன்னை விட்டுத் தன் தம்பியை உயர்த்திப் பேசியதில், சண்டைக்கோழியாய் சிலிர்த்தாள் சிகப்பி.

''ஆமாமா... பெரிய மனசு தான்!'' என்று ஏகத்துக்கும் வியந்த கண்ணன்,

''ஏகத்துக்கும் பெரிய மனசு வச்சிருக்கவங்க... இன்னும் இந்தச் சின்ன மூக்குத்தியையே போட்டிருக் காங்களே? புருஷனுக்குப் பிடிச்ச பெரிய மூக்குத்திக்கு மாற மாட்டேங்கிறாங்களே!?''- சந்தடி சாக்கில் தன் கோரிக்கையை முன் வைத்தான்., அந்தக் காரியக்காரன்.

ஆனால், அவனுடன் இழைந்தபோதும் சிகப்பி அவனது கோரிக்கையை சட்டென ஏற்கவில்லை. அவனது வேலை பற்றிய தெளிவு ஏற்பட்டிருந்த போதும், அவளை ஏதோ ஒன்று தடுத்தது. அது என்ன வென்று சரியாக சொல்ல முடியாத நிலையில், அவளால் மூக்குத்தியை மாற்றிக் கொள்ள முடியவில்லை. ஆதலால், மௌனம் காத்தாள் மங்கை.

அந்த மௌனத்தைத் தவறாய் எடுத்துக் கொள்ளாமல், ''ஹ்ம்ம்... தக்காளிக்கு இன்னும் மனசு முழுசா சரி யாகலை... இல்லையா? அதனால பரவாயில்லை... நான் காத்துட்டு இருப்பேன்'' என்று மனைவியின் அடிப்பட்ட தாடையில் மெல்லிய முத்தம் ஒன்றை பதித்தான்.

கணவனின் வார்த்தைகளைத் தாங்கமாட்டாமல் ''இல்லங்க... அது....அது... வந்து... நான் அப்புறம்....'' என்று இழுத்தவள், அவனை சங்கடமாய் பார்த்தாள்.

''அதான் சொல்லிட்டேனே... தக்காளி! சின்ன உறுத்தல் கூட இல்லாம... நீ இந்த மூக்குத்தியைப் போட்டுக்கணும். அதான் எனக்கும் சந்தோசம்'' என்று முடித்தவன், அந்த நாளுக்காக காத்திருப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்த நாளை வெகு சீக்கிரத்தில் பார்க்க வேண்டும் என்ற ஆவலில் சில பல செயல்களை செய்யத் துவங்கினான். ஆனால், அது ஒரு கட்டாயத்தின் பெயரில் அல்லாமல், இத்தனை நாள் செய்யத் தவறியதை செய்வதாகவே எண்ணியே செய்தான். அதுவும் சந்தோஷமாகவே!

மனைவியிடம் பேசிய வார்த்தைகள் மனதை வருட, பார்த்துக் கொண்டிருந்த நோயாளி எழுந்து போனதும், தன் கைப்பேசியை எடுத்தவன் மனைவியின் எண்களை அழுத்தினான்.

கைப்பேசியின் திரையில் - ''Dr'' என்ற அடையாளத்துடன் கணவனின் எண்கள் மின்னவும், விரைந்து சென்று அதை எடுத்தவள்,

''ஹலோ....'' என்றாள் ஆசையாக.

''ஹே தக்காளி! என்னடா பண்றே?'' என்றான் அவனும் ஆசை மேலோங்க.

''நான் பண்றது இருக்கட்டும்.... இதென்ன வேலை நேரத்தில போன்? என்னாச்சு சாருக்கு? காத்து கருப்பு எதுவும் அடிச்சுடுச்சா?'' என்றாள் மனையாள் கிண்டல் குரலில்.

''காத்து கருப்பு அடிக்கலை... என்னோட தக்காளிமின் நியாபகம் தான் மனசைத் தூள் தூளா நொறுக்குது!''

''அய்யே! ரொம்பத்தான்!''

''ஆமா.... ரொம்பத்தான்.... ரொம்பக் காதல்... ரொம்ப ஏக்கம்.... ரொம்ப ஆசை... எல்லாமே.... ரொம்ப ரொம்ப...''

அர்த்தமற்ற பேச்சுக்களாய் இருந்தபோதும், கணவன் - மனைவியிடையே இப்பேச்சுக்கள் என்றைக்குமில்லா நெருக்கத்தை உண்டு பண்ணின.

''சாப்பிட்டாயா? என்ன சாப்பிட்டாய்? துக்கம் வருதா? ஹ்ம்ம் எனக்குத் தூக்கம் வரலையே... இன்னும் கொஞ்சம் பேசேன்!'' போன்ற அன்றாட விசாரணைகளின் நடுவே, இருவரும் தத்தம் விருப்பங்களை தங்கு தடையின்றி பகிர்ந்து கொண்டனர்.

திருமணத்திற்கு முன்னர் பேசியிருக்க வேண்டிய பேச்சுக்கள் எல்லாம், இப்போது வெளிவரவே, அங்கே காதல் கூடியது!

ஏற்கனவே, கண்ணனின் மேல் கொண்ட காதலுக்காக, தன் வாழ்க்கை முறையையே மாற்றிக் கொள்ளத் தயாராய் இருந்த சிகப்பிக்கு, இப்போது கணவன் தனக்குக் கொடுத்த முக்கியத்துவம் தேனாய் இனித்தது.

கண்ணன் காரைக்குடியில் இருந்த நாட்களில், தொலை பேசி அல்லல் பட்டது என்றால் கண்ணன் சென்னை வந்த நாட்களில், அவர்களது கார் அல்லல் பட்டது.

ஆம், மனைவியிடம் சொன்னது போல் ஒரு நாள் விடு முறை கிடைத்தாலும், சென்னைக்குப் பறந்து வந்தான் சிகப்பியின் மணாளன்.

வந்த நிமிடமில்லாமல் குளித்துக் கிளம்பி, மனை
வியை எங்கேயாவது அழைத்துச் சென்றான்.

முதல் இருதடவைகள், அவளது வைத்தியத்திற்கென மருத்துவமனை சென்றது போக, அடுத்து வந்த நாட்கள் எல்லாம் உல்லாசப் பறவைகளாய் சுற்றி திரிந்தனர் இருவரும்.

அவளது துணி அலமாரியின் முன்னே நின்று கொண்டு, ஒரோர் உடையையும் அவன் ஆராய, அவனது தோள் வளைவில் நின்று கொண்டு அதை ரசித்திருந்தாள் மனைவி.

''இந்த காக்ரா சோளியைப் போட்டுக்கோடா தக்காளி... நல்ல ஆரஞ்சு கலர் இல்லையா? உன் கலரை சூப்பரா தூக்கிக் காட்டும்...'' அவள் பொன் மேனியை ரசிப்பான்.

''இந்த முக்கா பேண்ட்டுக்குப் பேரு என்னமோ சொன்னியே? ஹான்... காப்ரி... காப்ரி...'' - உடையின் பெயர் கூடத் தெரியாதவன் போல் நடித்துவிட்டு, ''இந்த ப்ளாக் காப்ரியும், இந்த பேபி பிங்க் டீ-ஷர்ட்டும் போட்டுக்கோ....'' என்றான்.

''பிரவுன் லெக்கிங்க்சும், சந்தனக் கலர் டாப்ப்சும் நல்லா இருக்கு... இன்னைக்கு இதைப் போட்டுக்கோ!''

''இந்த ஜர்தோசி சுடிதார் செம கிராண்ட்! ஏற்கனவே நீ... தங்க நிறம்... இதைப் போட்டா நகைக்கடை விளம் பரம் மாதிரி இருப்பே'' என்று கூசாமல் ஐஸ் வைத்தான்.

''இந்த சில்க் காட்டன் புடவை... உனக்காக வாங் கிட்டு வந்தேன். இன்னைக்குக் கட்டிக்கிறியா?'' என்று தான் வாங்கிய உடைகளாலும் மனைவியை அழகு பார்த்தான்.


அவன் ஜீன்ஸ், காப்ரி என்று அணியச் சொல்லும் போதெல்லாம், சிகப்பிக்கு சிறிதாய் தயக்கம் ஏற்படும். அதை சரியாய் படித்த அவளது கணவன், ''கோட்டையூர் வீட்டில இருக்கும்போது தான் சேலை கட்டிக்கணும், தக்காளி! நம்ம ரெண்டு பேருமா இருக்கும்போது... அந்த நிர்பந்த மெல்லாம் தேவையில்லை ஃப்ரீயா இருக்கலாம்!'' என்றான்.

கூடவே, ''அப்பத்தா... அந்தக் காலத்து மனுஷி, சிகப்பி! அவங்களோட வாழ்க்கை முறைப்படி நாம இருக்க ணும்ன்னு ஆசைப்படறாங்க. பெரிய மனுஷங்க... முக் கியமா நாம நல்லா இருக்கணும்ன்னு நினைக்கிறவங்க... மறந்து கூட நமக்கு கெடுதல் நினைக்காதவங்க... அவங்க காலம் வரைக்குமாவது அவங்க இஷ்டப்படி நடக்கலாமே?'' என்று தன் தந்தையைப் பெற்றவளைத் தாங்கியும் பேசி, முடிவில் மனைவியிடமே முடிவையும் விட்டான்.

''ம்ம். கரெக்ட் தான்!''

சிகப்பியின் ஆமோதிப்பிற்கு அவளது கணவனின் பேச்சு மட்டுமே காரணமில்லை. அவளாகவுமே அதை உணர்ந்திருந்தாள்.

ஏனென்றால், மெய்யம்மை ஆச்சியைப் பற்றிய அவளது எண்ணங்கள் மாறியிருந்தன.



17

சிகப்பி சென்னைக்கு வந்திறங்கிய முதல் நாளே, மெய்யம்மை ஆச்சி தொலைபேசி மூலமாக அவர் வந்திறங் கியதை விசாரித்திருந்தார்.

அன்று மட்டுமில்லாமல், தினமும் இரு வேளைகள் போன் செய்தவர், அவளது உடல்நிலையைப் பற்றி அக்கறையாய் விசாரித்தார்.

மெய்யம்மை ஆச்சி மட்டுமல்லாது, கண்ணனின் ஐயா மற்றும் தந்தையும் சிகப்பியின் நலனை அவ்வப் போது விசாரித்துக் கொண்டிருந்தனர்.

ஊரிலிருந்தவர்கள் தொலைபேசியில் விசாரணை நடத்தினால், சென்னையிலேயே இருந்த கண்ணனின் தமக்கைமார்கள் சிகப்பியின் தாய் வீடு தேடி வந்து, தம்பி மனைவியின் உடல்நிலை பற்றி கவலை கொண்டனர்.

தம்பி சென்னை வந்திருக்கும் நாட்களாய் பார்த்து வந்தவர்கள், தம்பி மனைவியின் காயங்களுக்கு தம்பியைச் சாடியதோடு நில்லாமல்,

''அவளுக்கு இருட்டுன்னா பயம்ன்னு உங்க எல்லோருக்கும் தெரியும் தானே? வந்த முத நாளே, லேசா வெளிச்சமிருந்த மாடிப்படியவே ஏறமாட்டேன்னு என் கையைப் பிடிச்சுக்கிட்டா. அப்படியிருக்கும்போது, அவளை எதுக்கு இரண்டாங்கட்டுக்கு அனுப்புறீங்க? அப்பத்தாவுக்குத் தான் மறந்து போச்சுன்னா... நீ சொல்ல வேண்டியது தானே? அப்பத்தா என்ன சொல்வாங் களோன்னு யோசிச்சிட்டு இருந்தியாக்கும்.... அப்பத்தா சொல்ற எல்லாத்தையும் செஞ்சே ஆகணும்ன்னு இல்லை, சிகப்பி! நமக்கு அதில கஷ்டமிருந்தா வாய் விட்டுச் சொல்லிடணும், அப்பத்தா புரிஞ்சுக்கிற ரகம் தான்! இந்த விஷயம் மட்டுமில்லை.... எல்லா விஷ யத்திலும்'' என்று தம்பியிடமும், தம்பி மனைவியிடமும் மாறி மாறி பேசி, இருவருக்கும் பாடம் எடுத்தனர்.

''எல்லா விஷயத்திலும்'' என்ற வார்த்தையில் கொடுக் கப்பட்ட அழுத்தம், அவர்களுக்கும் சில முக்கியமான விஷயங்கள் பகிரப்பட்டிருகின்றன என்பதை செவ்வனே எடுத்துரைத்தது. அந்த முக்கியமான விஷயங்களில், ''குழந்தைக்கான மருத்துவ ஆலோசனைகளும்'' அடங்கி மிருந்ததை சிகப்பியும் உணர்ந்தாள்.

அந்த விஷயத்தில் மனம் லேசாய் சுணங்கிய போதும், ''தங்கள் அப்பத்தா ஒன்று செய்தால்... அதில் தப்பே இருக்காது'' என்பது போல் பேசாமல் ''அவர்கள் செய்யும் விஷயம் பிடிக்கவில்லை என்றால் நேருக்கு நேர் சொல்லிவிடு'' என்று சொல்லும் நாத்தனார்களின் மீது அவளுக்கு மதிப்பு கூடவே செய்தது.

அவர்கள் வந்து சென்ற இரண்டு நாட்களிலேயே, மெய்யம்மை ஆச்சியும் கருப்பையா செட்டியாரும் சென்னை வந்தனர்.

வந்தவர்கள், பெரிய பேத்தியின் வீட்டில் குளித்து விட்டு, நேரே சிகப்பியின் தாய் வீட்டிற்கு வந்தவர்களின் கைகள் கொள்ளாமல் பழமும், தங்கள் பேரன் மனைவிக் கென வாங்கியிருந்த பொருட்களும் நிரம்பியிருந்தன.

சிகப்பிக்கு மட்டும் வாங்கிவராமல், சக்திக்கும் வாங்கி வந்திருந்தது சிகப்பியின் பெற்றோரை மட்டுமல்லாமல் அவளையுமே மகிழ்வித்தது.

பழம், ஹார்லிக்ஸ், சத்து மாவு என்று பேத்தியின் நலம் பேணும் பொருட்கள் மட்டுமல்லாது சிகப்பியின் வெண்முத்து மேனியை எடுத்துக் காட்டுவது போல் ஐந்து சேலைகளும் அந்தப் பொருட்களில் அணிவகுத் திருந்தது.

''ஆர்.எம்.ஆருக்கு(காரைக்குடியிலிருக்கும் ஓர் துணிக்கடை) போனேன்., உனக்கு எடுப்பா இருக்கும்ன்னு எடுத்தாந்தேன்'', என்று கொடுத்தவரின் தேர்வு, சிகப்பிக்கும் பிடித்தே இருந்தது.

அவளருகே அமர்ந்த பெரியவர், மெல்ல அவளது முகத்தை வருடி ''இந்த ஆயாவை மன்னிச்சிடு ராசாத்தி! பயந்து வருதுன்னு நீ சொன்னதைக் கேட்டுக்காம, இருட்டுல அனுப்பிப்புட்டேன். பயத்தில.... இப்படி விழுந்துட்டியே! புளிபோட்டு விளக்கி வச்ச பித்தளை விளக்காட்டம் இருந்த புள்ள... கூறுகெட்டத் தனமா அதை இப்படி வாட்டிப்புட்டேனே?! எனக்கு மனசே ஆறலை.... சொக்கட்டான் பிள்ளையாருக்கு மாவிளக்கு வச்சதுக்கு அப்புறம் தான் கொஞ்சமானும் மனசுக்கு நிம்மதியாச்சு. எல்லா காயமும் ஆறி, திடமான ஆரோக்கியத்தோட நீ நம்ம வீட்டுக்கு வந்ததும், கோட்டை நாச்சிக் கோவிலுக்குப் போயிட்டு வரணும்டா ராசாத்தி!'' என்றார் உள்ளார்ந்த குரலில்.

அவர் குரலிலிருந்த வருத்தம் மனதை வருத்த, ''உங்க மேல எந்தத் தப்புமில்லை, ஆயா! நான் தான்... பின்னாடி பார்த்துக்கிட்டே வந்து பட்டியைக்கல்லுல விழுந்துட்டேன்!'' என்றாள் சிகப்பி சமாதானமாக.

அப்போதும் மெய்யம்மை ஆச்சியின் முகம் தெளியவில்லை.

''பட்டியக்கல்லு தட்டி ஒரு காயம்ன்னா.... அந்தப் பொடியிருந்த ஜாடி இப்படி முகத்தைக் கூறு போட்டிருச்சே?!'' என்று வருந்தியவர்,

''நீ கிளம்பினதும், எல்லா ஜாடியையும் தூக்கிப் போட்டுட்டு, வேற டப்பாவுக்கு மாத்திட்டேன்'' அதற்குத்தான் எடுத்த நடவடிக்கையையும் சேர்த்து விளக்கினார்.

''ஐயோ, ஏன் ஆயா? புளி... உப்பு.. இதெல்லாம் சில்வர் டப்பா-ல இருந்தா டப்பா கெட்டுப் போய்டும்ன்னு தானே பீங்கான் ஜாடியில வச்சிருந்தீங்க? இப்போ எதுக்கு ஆயா மாத்தினீங்க?'' சிகப்பிக்குப் பெருத்த ஆச்சரியம்.

''புளி... உப்பு... ரெண்டையும் பிளாஸ்டிக் டப்பாவுக்கு மாத்திட்டேன் ஆத்தா!''

''பிளாஸ்டிக்-கா? உங்களுக்கு பிளாஸ்டிக் சாமானே சுத்தமா பிடிக்காதே?''

''பிளாஸ்டிக் சாமான் பிடிக்காது தான்! ஆனா, என் பேத்தியைப் பிடிக்குமே?!'' விளையாட்டுப் போல் கூறினாலும், அவரது வார்த்தைகளில் சிகப்பியின் மனம் லேசானது.

தொடர்ச்சியாக, விடை பெற்று கிளம்பும் போது ''நீ இல்லாம...வீடே வெறிச்சுன்னு இருக்கு ஆத்தா! சீக்கிரம் வந்திரு!'' என்றார் மெய்யம்மை ஆச்சி, அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு.

''கண்டிப்பா, ஆயா! என்று அவருக்குப் பதில் சொன்ன குரல் தன்னது தானா என்று சிகப்பிக்கே சந்தேகமாய் இருந்தது என்னமோ உண்மை! ஏனென்றால், அக்குரலில் அத்தனை ஊறுதி!

அந்த உறுதியின் காரணமாகவும், மெய்யம்மை ஆச்சியின் கண்டிப்பை விலக்கி அவரது பாசத்தை உணரத் துவங்கியிருந்த பக்குவத்தினாலும், கண்ணன் தன்

அப்பத்தாவைத் தாங்கிப் பேசிய போது, சிகப்பியால் அதை ஒத்துக் கொள்ள முடிந்தது.

மனைவியின் ஆமோதிப்பில் மகிழ்ந்த போதும், கண்ணன் தொடர்ந்து அப்பத்தாவைப் பற்றி பேச வில்லை. சட்டென, வேறு விஷயங்களுக்குத் தாவி விட்டிருந்தான்.

''இன்னைக்கு பீச்சுக்குப் போயிட்டு, அப்படியே வெளிய சாப்பிட்டு வரலாம்டா'' என அவன் கூற,

அவனது மனைவியோ ''ஹ்ம்ம். தேவி அண்ணி வீட்டுக்குப் போவோமா? அவங்களும்.... ரொம்ப நாளா கூப்பிட்டுக்கிட்டே இருக்காங்களே?'' என்றாள், சிறு வேண்டுதலுடன்.

கண்ணனுக்கு வானத்தில் பறப்பது போலிருந்தது. சென்னை வந்த இத்தனை நாட்களில், சிகப்பியாய் அவனது சகோதரிகள் பற்றி பேசியதே இல்லை. அவன் பேசினாலும், மேம்போக்காய் கேட்பாளே ஒழிய, முழு ஈடுபாடு இருக்காது.

இதற்கு முன்னர், கண்ணனே தன் தமக்கைகளின் வீட்டிற்குச் சென்று வரலாமா என்று கேட்டிருக்கிறான் தான். அப்போதெல்லாம், தன் முகத்திலிருந்த காயங்களைக் காரணம் காட்டியோ அல்லது வேறு ஏதாவது உப்புச் சப்பில்லா காரணங்களைக் கூறியோ அதைத் தட்டிக் கழித்தவள், சிகப்பி தான். அவளே இப்போது தேவியின் வீட்டிற்குச் செல்வோம் என்று கூறும்போது, கண்ணனின் மனம் பறக்கத் தானே செய்யும்?!

குதூகலித்த மனதுடன், மனைவியை அழைத்துக் கொண்டு சகோதரியின் வீட்டிற்குச் சென்றான் கண்ணன்.

தேவியின் கணவரிடம் நலம் விசாரித்த முறையாகட்டும், அவர்களது குழந்தைகளுக்கு சிகப்பி வாங்கி வந்திருந்த பொருட்கள் ஆகட்டும், தேவியுடன் சேர்ந்து சமையலுக்கு உதவி செய்த பாங்காகட்டும்-எதிலுமே, சிகப்பியிடம் சின்னதாய் கூட விலகல் இருக்கவில்லை. மாறாய், பாந்தமாய் பொருந்திய ஓர் பாசமே வெளிப் பட்டது!

இதுவே, அவனது இளைய சகோதரியின் வீட்டிலும் தொடர, மனைவியின் மனம் தன் குடும்பத்துடன் முழுதாய் ஒன்றும் நாள் வெகு தூரத்தில் இல்லை என சர்வ நிச்சயமாய் நம்பினான் கண்ணன்.

அந்த நம்பிக்கை கொடுத்த உந்துதலில், தன் வேலைகளை ஒதுக்கிக் கொண்டு, மனைவியை தேனிலவுக்கென காஷ்மீருக்கு அழைத்துச் சென்றான்.

''காஷ்மீருக்கா? உங்களால வர முடியுமா? வேலையிருந்தா வேண்டாம்பா!''

''எனக்காக கூட்டிப் போறீங்களா? ஹ்ம்ம்... வேணாம்... உங்க வேலையைப் பத்தி எனக்கு ஓரளவுக்குப் புரியும். உங்களோட பிரசன்ஸ் எத்தனை பேருக்குத் தேவைன்னு என்னால புரிஞ்சுக்க முடியுது. அப்படியிருக்கும் போது, எனக்காக எல்லாத்தையும் ஒதுக்கி வச்சிட்டு வர வேண்டாம்.''

''இப்போ.... என்ன ஹனிமூன் போனா தான் நாம நெருக்கமாக முடியுமா என்ன? வீட்டில இல்லாத பிரைவசியா நமக்கு அங்க கிடைச்சிடப் போகுது? இங்கயும் சரி, நம்ம வீட்டிலையும் சரி, யாருமே நம்மை தொந்தரவு செய்றதில்லை. அதனால், வீணா அலைய

''அடடா.... இப்போவே காஷ்மீர் குளிருக்காக மனசு கிடந்து ஏங்குதே!!'' என்று கணவனாய் மனைவியிடம் சில்மிஷங்களில் ஈடுபட்டவன், காஷ்மீர் பயணத்தின் போது ''கண்ணன்'' என்ற பேருக்கு ஏற்றார் போல் நடந்து கொண்டான்.

ஏற்கனவே, ஊட்டி ஆப்பிள் போல் சிவந்திருந்த சிகப்பி, காஷ்மீர் குளிரிலும், கணவனின் கொஞ்சலிலும், நாள் முழுதும் அவனை ஒண்டிக் கொண்டே அலைந்த மயக்கத்திலும், அவன் காட்டிய அக்கறையிலும் காஷ்மீர் ஆப்பிளாய் செக்கச் சிவந்து போனாள்.

அன்றலர்ந்த மலராய் இருந்த மனைவி, புத்தம் புது பனி மலராய் மாறியிருக்க, அவளது காதல் கணவன் வண்டாய் மாறி, இன்பம் பருகி, மலருக்கும் இன்பத்தை இடமாற்றினான்.

மின்னல் வேகத்தில் கழிந்த தேனிலவுக்குப் பின்னர், கண்ணனுக்கு மருத்துவமனையில் வேலை நெட்டி முறித்தது!

ஆனால் முன்னர் போல் கணவனிடம் குறை காணாமல், அவனது நிலையை உணர்ந்து, அவனைத் தொந்தரவு செய்யாமலிருந்தாள் சிகப்பி! மனைவியின் அனுசரணையான அணுகுமுறை, கணவனையும் ஒரு வேகத்துடன் வேலையைச் செய்ய வைத்து, சீக்கிரமே அவளைப் பார்க்க அழைத்து வந்தது! முன்னரும், வேகத்துடன் வேலை செய்வான் தான்... ஆனால் அதில் ''நேரம் சென்று சென்றால் மனைவி முகம் திருப்பி நிற்பாளே?'' என்ற பதட்டமிருக்கும். அந்தப் பதட்டம் இப்போதில்லாத காரணத்தினால், வேலையும் விரைந்து நடந்தது, சிகப்பியும் சந்தோஷமாய் இருந்தாள்.

பிடல்ல என்ன ஆச்சோ... ஏதாச்சோன்னு உறுத்தலா இருக்கும்'' - படு தீவிரமாய் பேசி, கணவனிடம் மறுத்தாள் மனைவி.

அவளது கன்னத்தை மெல்ல தட்டியவன் ''வேலை இருந்துட்டே இருக்கும் தான். அதுக்காக, அதையே பார்த்திட்டு இருக்க முடியாது சிகப்பி! நம்ம பர்சனல் வாழ்க்கையையும் பார்க்கத் தான் வேணும்'' எனக் கூறவும்.

''இருந்தாலும்..''

''இதைத் தானேடா.... நான் கல்யாணமான முதல் நாள் தொட்டு சொல்றேன்... நீ கேட்ட பாடா இல்லை.... இப்போ என்னடான்னா நீயே இதைச் சொல்றியேன்னு நினைக்கிறியா?'' - கேலி போல் கூறியவன்.

''அந்த நேரத்தில.... என்னோட பிரசன்ஸ் ஹாஸ்பிடல்-ல ரொம்ப அவசியமா இருந்தது, சிகப்பி! அங்க விட்டுட்டு வந்தா.... நிறைய பொருள் இழப்புமட்டுமில்லாம இதுநாள் வரை சம்பாரிச்சு வச்சிருந்த பேரும் பாழாகியிருக்கும். ஆனா... இப்போ அப்படியில்லை. நான் இல்லாத நேரத்தில், ஹாஸ்பிட்டலை கவனிக்க தகுந்த ஒரு ஆளை ஏற்பாடு பண்ணிட்டுத் தான் வந்திருக்கேன். என்ன சரியா?'' என்று முடித்தான்.

''ம்ம்... சரி!'' என்ற சிகப்பியின் குரல், பலமாய் ஒலித்தது. அதன் தொடர்ச்சியாய், பலமான முத்தம் ஒன்றும், இறுக்கமான அணைப்பு ஒன்றும் நடந்தேற, அங்கே காதலும் காமமும் போட்டிப் போட்டுக் கொண்டு வென்றும், தோற்றும் விளையாடின.

என்னதான் மனதில் சந்தோசம் குடி கொண்டிருந்த போதும், சிகப்பி ''குழந்தை விஷயம்'' பற்றிய தனது வருத்தத்திலிருந்து வெளி வரவில்லை. அவளுக்கிருந்த பிற சங்கடங்கள், புகுந்த வீட்டினர் காட்டிய பாசத்தினால் மறைந்திருந்தபோதும், அவளுள் சிறு உறுத்தல் இருந்து கொண்டே இருந்தது.

இந்த உறுத்தலை முற்றிலுமாய் துடைத்தெறியும் வண்ணம், அன்று ஓர் நிகழ்வு நடந்தேறியது.

சிகப்பியின் காயங்கள் மெல்ல ஆறி, சிறு தழும்பு களாய் மாறி இருந்த சமயம், உமையாளும் பெரிய சிகப்பி ஆச்சியும், ஓர் பெண் மருத்துவர் பேரைச் சொல்லி அங்கே சிகப்பியை அழைத்துச் செல்ல வேண்டும் என்றனர்.

''என்ன விஷயம்... அப்பத்தா? எனக்குத்தான்.... காயமெல்லாம் ஆறிடுச்சே? உலகத்திலேயே பெரிய டாக்டரான உங்க பேரனே சர்டிபிகேட் கொடுக்காத குறையா... நல்லா ஆகிடுச்சுன்னு சொல்லிட்டாங்க... அப்புறம் என்ன?''- சிகப்பிக்கு திகைப்புத்தான்! ஏனென்றால், அந்த முறை வந்திருந்த கண்ணனிடம், சிகப்பியின் உடல்நிலைப் பற்றி பெரிய சிகப்பி ஆச்சி ஓர் நீயா-நானாவே நடத்தி முடித்திருந்தார்.

''ஆறிப் போன காயத்தைக் காட்டவா... சங்கரிகிட்ட (பெண்கள் நல மருத்துவர்) போறோம்? உனக்கு ஒரு செக்-கப்புக்கு போறோம்...''

''என்ன செக்-கப்?''

மாமியாரைக் கை அமர்த்திவிட்டு, உமையாள் இடைப் புகுந்தார் ''அதுவா... உனக்கு பீரியட்ஸ் சரியா வரதில்லை

இல்லையா? அம்பது நாள்... அறுபது நாள்ன்னு மாறி மாறி வருதில்லையா... அப்படி வரும்போது, வலியும் வேதனையும் ஜாஸ்தியாவில்ல இருக்கு. முன்னாடி காட்டினப்ப, கல்யாணம் முடிஞ்சதும் கூட்டிவாங்கன்னு டாக்டர் சொல்லியிருந்தாங்க. அதான் போலாம்ன்னு. இப்ப நீயும் இங்க இருக்க. அவங்ககிட்டயும் அப் பாயிண்ட்மெண்ட் இருக்காம்... எல்லாம் தோதா வருது.... வா போயிட்டு வந்திருவோம்!'' என்றவரின் குரல், ஒரு இடத்தில கூட பிசிர் தட்டவில்லை.

நேர்த்தியாய் அவர் பேசியதில், சிகப்பிக்கும் எதுவும் வித்தியாசமாய் தெரியவில்லை. 'அந்த' நாட்களில் அவள் அனுபவிக்கும் வலியையும் வேதனையையும் வேறு உமையாள் நினைவு படுத்தியதால், மறுக்காமல், முக்கியமாய் சிறு சந்தேகமுமில்லாமல், தாயாருடன் பெண் மருத்துவரிடம் சென்றாள்.

மருத்துவரைப் பார்க்கக் காத்திருந்த நேரம் முழுவதும், உமையாள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அவரது அந்த மௌனம் சிகப்பியை பாதிக்கவும் இல்லை. அவள் தான், தன் நாத்தனாரிடம் அவர் புதிதாய் வாங்கியிருந்த பொமரேனியன் நாய்க்குட்டியைப் பற்றி பேசிக் கொண்டிருந்தாளே!

பேச்சு மும்முரத்தில் அவளிருக்க, சிகப்பியின் பெயர் அறிவிக்கப்பட்டதும், உமையாள் பரபரப்பானார்.

''வா..... வா..... நம்மளைக் கூப்பிட்டாங்க! வள்ளி தானே பேசுறது.... டாக்டர்-கிட்டப் போயிட்டு வந்து பேசு றேன்னு சொல்லிட்டு போனை வச்சுட்டு எழுந்துவா சௌந்து! நேரத்தைக் கடத்தாதேடி'' என்று அவளை

விரட்டோ விரட்டென்று விரட்டி, மருத்துவரின் அறைக்குள் இட்டுச் சென்றார்.

நெடு நாள் பழக்கம் உடையவர் என்பதால், பரஸ்பரம் நலம் விசாரித்துவிட்டு, உமையாள் நேரடியாய் விஷயத்திற்கு வந்துவிட்டார்.

''மேடம், இவளுக்கிருக்க பிரச்சனை பத்தி உங்களுக்குத்தான் தெரியுமே?! அந்தப் பிரச்சனையால, குழந்தை பிறக்கிறதுக்கு ஏதாவது தடையிருக்குமா?'' என்ற அவரது முதல் கேள்வியில் சிகப்பி, அதிர்ந்து போனாள்.

'அந்த' நாட்களில் தான் படும் வேதனையைக் குறைக்கவென கூட்டி வந்திருக்கிறார் என்று அவள் எண்ணியிருக்க, அவரோ ''குழந்தை'' பிறப்பதைப் பற்றி கேட்கவும் சிகப்பிக்குப் பெரும் திகைப்பு!

''என்னம்மா இது? கல்யாணமாகி.... மூணு மாசம் கூட முழுசா முடியலை.... அதுக்குள்ளே என்னம்மா?'' - அவள் பல்லைக் கடிக்க,

'''சும்மா இருடி!'' என அவரை அடக்கியவர்,

''ஏதாவது டெஸ்ட் எடுக்கணும்ன்னா எடுத்துப் பார்த்திடுங்க மேடம். எங்களுக்கு சீக்கிரமா ஒரு பேரனோ.... பேத்தியோ வேணும்...'' என்றார் மருத்துவரிடம்.

சிகப்பியின் கோப முகத்தைப் பார்த்திருந்த அந்த மருத்துவர், ''என்ன சிகப்பி... எதுக்கு இவ்வளவு கோபம்? கல்யாணமானதும், ''குழந்தை'' என்ற பேச்சு இயல்புதானேமா.... அதுக்கு எதுக்கு இவ்வளவு கோபப்படுறே!? என்னைப் பொறுத்தவரை, தாய்மையை எந்தக் காரணத்திற்காகவும் தள்ளிப் போடக்கூடாது... வயசு ஏற, ஏற எலும்பு பலப்பட்டிடும். அப்புறம் பிரசவம் ரொம்ப

சிரமமா போய்டும். சரியா? அதனால, தேவையில்லாத காரணங்களால் குழந்தை பிறப்பைத் தள்ளி போடுற எண்ணத்தை விட்டுடு. உங்க ஃபாமிலி டாக்டர்ங்கிற உரிமையில சொல்றேன்'' என்றார் தன் பங்கிற்கு.

மறுத்து ஏதும் பேசாமல், அவருடன் எழுந்து சென்றவள், அவர் செய்த சோதனைகளை மௌனமாய் ஏற்றாள்.

அதை முடித்து வெளியே வந்ததும், பொம்மி டாக்டர் (கோட்டையூர் மருத்துவர்) சொன்னது போலவே, இவரும் - மூன்று மாதங்கள் மருந்து சாப்பிட வேண்டும், அதன் பின்னர் கண்டிப்பாக குழந்தை பாக்கியம் உண்டு என்றார்.

மருத்துவர் கொடுத்த உறுதிக்குப் பின்னரும், குழந்தை பிறப்பைப் பற்றிய ஆயிரத்தெட்டு கேள்விகள் உமையாள் ஆச்சிக்கு அணிவகுத்து நின்றன.

அவரது கேள்விகளின் படையெடுப்பை மருத்துவர் லாவகமாய் சமாளிக்க, சிகப்பியோ அவரது கேள்விகளை மெய்யம்மை ஆச்சியின் கேள்விகளோட ஒப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

தன் தாயே இத்தனை சந்தேகங்கள் எழுப்பும் வேளையில், அவரை விட இரண்டு தலைமுறைகள் மூத்தவரான மெய்யம்மை ஆச்சியின் ''கொள்ளுப் பேரன்'' ஆசை, இப்போது சரியாகவே பட்டது.(தன் அப்பத்தா மெய்யம்மை ஆச்சியை ''சின்னத்தா'' என்று அழைத்ததை வைத்து, தன்னை விட மூன்று தலைமுறை... தன்தாயை விட இரண்டு தலைமுறை என்ற கணக்கிற்கு வந்திருந்தாள் சிகப்பி)

அவள் தனது யோசனையிலிருக்க, கிட்டத்தட்ட அரை மணி நேரக் கேள்வி-பதில் நேரத்திற்குப் பின்னர் உமையாள் ஆச்சி ஒருவாறாய் எழுந்து வந்தார்.

மருத்துவரிடம் பேசியது பத்தாது என்று வீடு திரும்பும் வழியாவும், சிகப்பியைக் கேள்வியால் குடைந்து எடுத்து விட்டார்.

மெய்யம்மை ஆச்சியே மேல் என்று சிகப்பி எண்ணும் அளவிற்கு, உமையாள் ஆச்சிக்கு ஆயிரத்தெட்டு சந்தேகங்கள் இருந்தன.

''இந்த மாசம் எத்தனாம் தேதி குளிச்சே?''

''போன தடவை... எப்போ வீட்டுக்குத் தூரமான?''

''மாப்பிள்ளையோட சந்தோஷமா தானே இருக்கே?'' என்று அவர் குடைந்த குடைச்சலில்,

''என்னம்மா இது? இதெல்லாம் போய்... கேட்டுக்கிட்டு! எனக்கு எரிச்சலா வருது!''என்று அஷ்டக் கோணலாய் முகம் சுளித்தாள் மகள்.

''என்னடி எரிச்சல் வருது? கல்யாணமாகி... மூணு மாசமாச்சு!

எல்லாருக்குமே... பேரன்.. பேத்தின்னு ஆசை இருக்காதா? அதுவும், எங்களுக்கு நீ ஒரே பொண்ணு.... உன்னைக் கட்டிக் கொடுத்திட்டு, பேரனுக்கு நாங்க தவமிருக்க மாட்டோம்... அது புரியாம...'' என்று கடிந்து கொண்டவர்,

''மாப்பிள்ளையும் நீயும்...ஃபாமிலி பிளானிங் எதுவும் திட்டமிட்டு இருக்கீங்களா? அதெல்லாம்... வேணாம் சௌந்து! காலாகாலத்தில எங்களுக்கு ஒரு பேரனைப் பெத்துக் கொடுக்கிற வழியைப் பாருங்க...'' என்றார் கட்டளை போல்.

அதற்குப் பதிலாக, சிகப்பி தான் ''பிளானிங் எல்லாம் இல்லை...'' என்று முணங்க வேண்டியிருந்தது.

இந்த நிகழ்வின் தொடர்ச்சியாக, மெய்யம்மை ஆச்சியின் ''குழந்தை பற்றிய அத்துமீறலில்'' குமுறியிருந்த சிகப்பியின் மனம் குளிர்ந்து போனது.

''பெண்ணைப் பெற்றவர்களுக்கே பேரனைப் பற்றிய எதிர்பார்ப்பு இருக்கும் போது, தன் குலம் விளங்க வேண்டும் என்று மெய்யம்மை ஆச்சி எண்ணியதில் தப்பேதுமில்லை'' என்ற முடிவுக்கு அவள் வந்து விட்டிருந்தாள்.

தெளிந்த மனது கொடுத்த உந்துதலின் பெயரில், அடுத்த வாரம் கண்ணன் சென்னைக்கு வந்தபோது, சிகப்பி பெட்டி படுக்கையுடன் தயாராய் இருந்தாள்!

முக்கியமாக, கல்யாண சமயத்தில் அணிந்திருந்த ஐந்து பிஞ்சு வைத்த பெரிய மூக்குத்தியை அணிந்து கொண்டு!



18

அந்த வார இறுதியில் சென்னைக்கு வந்த கண்ணன், தானே காரை ஓட்டிக் கொண்டு வந்தான். நள்ளிரவுக்கு மேல் கிளம்பியதால், காலை பத்து மணியளவில் மாமியார் வீட்டை அடைந்தவன், போர்ட்டிகோவில் வண்டியை நிறுத்தும் போதே, சக்தியும் சிகப்பியும் சண்டையிடும் சத்தம் காதைப் பிளந்தது.

''ரெண்டுக்கும்.... வேற வேலையே இல்லை! அடுத்த அரை மணி நேரத்துக்கு... இவங்களுக்குப் பஞ்சாயத்து பண்ணியே நேரம் சரியா போய்டும்'' என்று முதலில் அலுத்துக் கொண்டவன், தொடர்ந்து மாமனார்-மாமியாருக்காக பரிதாபப்பட்டான்.

''ஒரு மாசத்துக்கே நமக்கு இப்படி இருக்கே.... பத்தொம்பது இருபது வருஷமா அத்தையும் மாமாவும் என்ன பாடு பட்டிருப்பாங்க... ஹ்ம்ம்.''

''இந்த சக்தியாவது பரவாயில்லை. நம்ம தக்காளி இருக்கே... அவனை அநியாயத்துக்குக் கிண்டல் பண்ணுது... எருமைமாடுன்னு சொன்னா கூடப் பரவாயில்லை... ''கறுப்பு எருமைமாடு... கறுப்பு உருமை மாடுன்னு'' அழுத்தி அழுத்திச் சொல்லி... அவனை ஏத்தி விடுது, கழுதை! இவ... சிவப்பா இருக்கா தான்... அதுக்காக... அந்தப் பையனை இந்தப்பாடு படுத்தக் கூடாது.....'' என்று மனதிற்குள் எண்ணியவாறே, வீட்டினுள் நுழைந்தான், கண்ணன். சக்திக்காக பரிதாபப் படுவது போல் தோன்றினாலும், கார் மேகக்கண்ணன் போலிருந்த தனக்காகவும் பரிதாபப்பட்டான் போலும்!!

''பெரியவர்கள் யாரும் வீட்டில் இல்லை... போல'' என்ற எண்ணத்துடன், அவன் உள்ளே நுழைய, ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவை சுத்தி ஓடிக் கொண்டிருந்த சக்தியை ''ஏய்... நில்லுடா! அந்த பாக்சை தந்திடுடா சக்தி.... அது உனக்குத் தேவையில்லாத விஷயம்... ப்ளீஸ் கொடுத்திடு.... அது என்னோட பர்சனல்'' என்று கத்திக் கொண்டே துரத்திக் கொண்டிருந்தாள் அவனது மனைவி.

தம்பியிடம் சண்டையிடும் பரபரப்பில், உள்ளே நுழைந்த கணவனைக் கவனிக்கத் தவறிய சிகப்பி,

வாயில் பக்கம் வந்து கொண்டிருந்த கணவனின் மேல் வேகமாய் மோதினாள்!

அவள் மோதிய வேகத்தில், இருவரும் கீழே விழும் அபாயம் அதிகமாய் இருந்தபோதும், கண்ணன் சாமர்த்தியமாக அவளையும் தாங்கி, தன்னையும் நிலைநிறுத்திக் கொண்டான்.

''என்ன சிகப்பி.... இது? இப்போ... தான் கீழ விழுந்து அடிப்பட்டு, உடம்பு சரியாகியிருக்கு. அதுக்குள்ளே... இன்னொரு தடவையா?'' என்று கடிந்து கொண்டவன், அவளைத் தோளோடு சேர்த்து இறுக்கினான்.

தொடர்ந்து ''இன்னொரு முப்பது... நாற்பது நாள் உன்னை இங்க விட்டுட்டு... அங்கயும் இங்கயுமா அல்லாடறதுன்னா நம்மளால முடியாதுப்பா! இப்பவே, கண்ணைக் கட்டுது!'' என்றான் மெல்லிய குரலில்.

அக்காள் கணவனை வரவேற்ற சக்தி, ''என்னத்தான் சொன்னீங்க? எனக்கு சரியா... கேட்கலை'' என்றவாறே காதைத் தேய்த்துவிட்டுக் கொண்டான்.

அதற்கு கண்ணன் பதில் சொல்வதற்கு முன்னர், சிகப்பி முந்திக் கொண்டாள். ''கேட்க வேண்டியவங்களுக்குக் கேட்டா போதும்! உனக்குக் கேட்கணும்ன்னு அவசியமில்லை...'' என்று உரக்கக் கூறியவள்,

''கண் டாக்டரோட கண்ணைப் பாதுகாக்க அவரோட கண்ணான பொண்டாட்டி, ஊருக்குக் கிளம்பிட்டா... பெட்டிப் படுக்கை கூட ரெடி! கண்ணன் சார் அவளைக் கூட்டிப் போக வேண்டியது தான் பாக்கி'' என்று கணவனுக்கு மட்டும் எட்டும் குரலில் சொல்லி முடித்தாள்.

''ஆஹா!!'' என்று ஆனந்த அதிர்ச்சிக்கு ஆளானான் கண்ணன்! அவனுக்கு இது புதிய செய்தி! நேற்றைய

தினம். மூன்று மணி நேரத்திற்கும் மேலாக கைப் பேசியில் பேசியபோது கூட சிகப்பி இதைப் பற்றி வாய் திறக்கவே இல்லை.

சட்டென குனிந்து மனைவியின் முகத்தைப் பார்த் தான். வைர மூக்குத்தி அவனைப் பார்த்து அட்டகாசமாய் சிரித்தது.

''ஹே'' என்ற கூவலுடன், சட்டென மனைவியைத் தூக்கி, தட்டாமாலை சுற்றினான் கண்ணன். எதிரே நின்றிருந்த மச்சினன், வேற்று கிரக மனுஷனாய் தோன்றினான் போலும்.

''ஹய்யோ.... என்னது இது! விடுங்கப்பா!'' என்று சிகப்பி வெட்கத்தில் நெளிய,

''அத்தான்... பப்ளிக்.. பப்ளிக்..'' என்று கத்தினான் சக்தி.

''நீ கிளம்பிட்டா.... இந்த இடம் பிரைவேட் ஆகிடும்டா'' என்ற கண்ணனின் கண்கள், கைகளுக்குள் இருந்த மனைவியிடமே இருந்தது.

''இது உனக்குத் தேவையா டா, சக்தி!?'' என்று தன் சுட்டு விரலைத் தன்னை நோக்கியே காட்டிக் கொண்டு பேசிய சக்தி, சிறு சிரிப்புடன் தன்னறைக்குள் நுழைந் தான்.

அவன் நகர்ந்த நிமிடமில்லாமல், கண்ணன் மனைவி யுடன் தனியறைக்குள் நுழைய அவளோ ''ஹய்யோ விடுங்கப்பா! அந்த சக்தி எருமைமாடு... என்னோட பாக்ஸ் ஒண்ணை வச்சிருக்கான்... அதை முதல்ல வாங்கணும்... இல்லைன்னா பிரிச்சுப் பார்த்திடுவான்'' என்று அழாத குறையாக கெஞ்சினாள்.

''பிரிச்சா பிரிச்சிட்டுப் போறான்... அதென்ன மலை நாட்டு ரகசியமா? இல்லை நீயும் தான் மலைநாட்டு

இளவரசியா? செட்டிநாட்டு இளவரசிடி.....'' கைக்குள் இருந்த மனைவியை மெல்ல இறக்கிவிட்டவாறே, காதல் வசனம் பேசினான் கண்ணன்.

''அய்யே! வழியுது.... துடைச்சுக்கோங்க! செட்டி நாட்டுக்கு இளவரசியாமே... ஊர் பக்கம் யாராவது கேட்டா... உதைக்கப் போறாங்க!'' என்று பழிப்புக் காட் டிய சிகப்பி.

''ஆமா.... அதென்ன என்னை இளவரசின்னு சொல்றீங்க? எனக்கு ஏற்கனவே கல்யாணமாகி... ஒரு புருஷனும் கிடைச்சு... அவருக்கு கோட்டை மாதிரி ஒரு வீடும் இருந்து.... அந்த வீட்டில நான் மகராணி ஆகி மாசங்கள் மூணுக்கு மேல ஒடிப்போச்சு தெரியுமா?'' என்று கண் சிமிட்டாள், அழகாக!

''ஆனா.... மகராணியை ரெண்டு மாசத்துக்கும் மேலா அரண்மனையில காணாம.... மகாராஜா அந்தப்புரம் செட் பண்ற ஐடியா-ல இருக்காறாமே? உனக்குத் தெரியுமா?'' - பகவான் கிருஷ்ணனின் லீலைகளைத் தானும் ஆடிப் பார்க்க எண்ணினான், கண்ணன்.

''அடிங்க! அந்தப்புரம் வேணுமா அந்தப்புரம்? பெரிய ராணிகிட்ட போட்டுக் கொடுத்தா.... அந்தப்புறம் என்ன இந்தப்புறமும் ரெண்டு அடி வைப்பாங்க....'' என்றவள், கணவன் என்றும் பாராமல் அடிகளால் அவனைப் பின்னி எடுத்துவிட்டாள்.

''ஏய் ..... தக்காளி... விடுடி... ஆ... வலிக்குது... தெரியாம சொல்லிட்டேன்... அய்யோ.... அம்மா... பாவி, கிராதகி... என்னமா அடிக்கிறே? உடம்பு சரியில்

லாம இருந்தவ மாதிரியா இருக்கே? அடி ஒண்ணு ஒண்ணும் கின்னுன்னு இறங்குது... அம்மா... விடு...'' என அவனை விடாது புலம்பவிட்டப் பின்னரே, சிகப்பியின் கைகள் அடிப்பதை நிறுத்தின.

''அந்த பயம் இருக்கட்டும்!'' என்றவாறே, கைகளைத் தேய்த்துவிட்டுக் கொண்டவளை, வேகமாய் இழுத்தவன், உதடுகளால் அவளைச் சிறை பிடித்தான்.

நொடிகளோ நிமிடங்களோ கூடலில் கழிய, மிக மெதுவாக நிமிர்ந்தவன்'' எங்கிருந்து வந்தது இந்த திடீர் ஞானோதயம்?'' என்றான் மூக்குத்தியை லேசாய் சுண்டிவிட்டவாறே.

''ஞானோதயம் வரதுக்கு..... நான் ஏதாவது தப்பு செய்திருக்கணுமே! அப்படி எதுவும் செய்த மாதிரி எனக்கு ஞாபகம் இல்லையே?'' - தலை சரித்து, அவனைக் கேள்வியாய்- கேலியாய் நோக்கினாள் மனைவி.

''ஓஹோ! நீங்க தப்பு செய்யலை... நான் தான் தப்பு செஞ்சேன்.... அதுக்கான தண்டனையை நீங்க எனக்குக் கொடுத்திருக்கீங்க? அப்படியா மகாராணியம்மா?'' என அவன் புருவம் உயர்த்தி சிரிக்க,

''க..க...க...போ!'' என்று இம்சை அரசன் பாணியில் சொல்லிவிட்டுச் சிரித்தாள், சிகப்பி.

''கொழுப்பெடுத்த கழுதை!'' என்று அவளைத் துரத்திய கண்ணனின் கைகளில் அகப்படாமல் அழகு காட்டிய அழகரசி, தானாகவே அவனது கைகளுக்குள் சிறைபட்டாள்.

அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டு, ''என் மேலிருந்த கோபமெல்லாம் போயாச்சா?'' அவன் இழைய,

''ஹ்ம்ம். சர்ஃப் எக்செல் கொண்டு துடைச்ச மாதிரி... கிளீன் கட்-டா போய்டுச்சு!'' அவளும் இழைந்தாள்.

சற்று நேர சரசத்துக்குப் பின்னர், ''நாம.... இன்னைக்கே நம்ம வீட்டுக்குப் போலாமா? அப்பத்தாக்கு நான் இல்லாம வீடே வெறிச்சுன்னு இருக்க மாதிரி இருக்காம்... சீக்கிரம் வந்திடு... சீக்கிரம் வந்திடு சொன்னாங்க'' என்று கொஞ்சினாள் மனையாள்.

''இன்னைக்கேவா? நைட் முழுசும் கார் ஓட்டிட்டு வந்தது உடம்பு வலிக்குதுடா.... இன்னைக்கு ரெஸ்ட் எடுத்திட்டுப் போகலாமே?''- லேசாய் தயங்கினான் கண்ணன். ஊருக்குக் கிளம்பும் முன்னர், சென்னையில் இருக்கும் கடைகளில் மனைவிக்குச் சில பொருட்கள் வாங்க வேண்டுமென அவசரத் திட்டம் தீட்டியிருந்தான் அவன்.

''ம்ஹூம். உங்களுக்கு டையர்டா இருந்தா... டிரைவர் வச்சுப் போய்க்கலாம்... ஆனா, இன்னைக்கே போகலாம்'' என வேகமாய் மறுத்தாள், மனைவி.

''இல்லைடா...'' என்று மறுக்கத் துவங்கிய கண்ணனை,

''ம்ஹூம்... இன்னைக்கே போகணும்... இன்னைக்கே போகணும்...'' என்று விடாது பாட்டுப்பாடி, அடாது அடம் பிடித்து, சடாரென சம்மதிக்க வைத்தாள், சிகப்பி.

ஒரு கிரகப்பிரவேச விழாவிற்குச் சென்றுவிட்டு, வீடு திரும்பிய சிகப்பியின் தாய் வீட்டினர், ஹாலில் அணிவகுத்திருந்த சிகப்பியின் பெட்டிப் படுக்கைகளில் திகைத்துப் போயினர்.

''என்ன மாப்பிள்ளை இது? இப்பவே கிளம்புறீங்களா?'' - சொக்கலிங்கம் திகைக்க,

புதையல் கிடைக்க வாய்ப்பிருக்கு!'' என்று வம்பு செய்து கொண்டிருந்தான்.

''சோதனை போடற மூஞ்சியைப் பாரு... முதல்ல, என்கிட்டே இருந்து சுட்ட அந்த கிப்ட் பாக்ஸை தாடா.... எருமைமாடு... சரியான கருப்பு எருமைமாடுடா நீ....'' என்று கணவனுக்கும். தம்பிக்கும் இடையே புகுந்து, தம்பியுடன் சண்டையிட்டு, கணவனுக்கென தான் வாங்கியிருந்த பொருளைத் தன் கைப்பையினுள் பத்திரப்படுத்திக் கொண்டாள், சிகப்பி.

அதனடுவே, புகுந்த வீட்டிற்குச் செல்லும் மகளிற்கென செய்து வைத்திருந்த பலகாரங்களை உமையாள் எடுத்து வைக்க, கார் டிக்கி மட்டுமில்லாமல் பின் சீட்டிலும் பாதிக்கு பொருட்கள் நிரம்பி வழிந்தன.

''இங்க உட்காருதுக்கே இடமில்லை.... இதில நான் தூங்கிட்டே வரதாம்... என்ன கொடுமைடா சக்தி இது....'' என்ற கண்ணனின் கேலியைக் காற்றில் பறக்கவிட்டு, பிறந்த வீட்டினரிடம் விடைப்பெற்றாள் சிகப்பி.

''எங்களுக்கு சீக்கிரமே நல்ல சேதி சொல்லணும்..'' என்று பெரிய சிகப்பி ஆச்சியும், வைரவன் செட்டியாரும் ஆசீர்வாதம் செய்து அனுப்ப, சிகப்பியின் தாயும் தந்தையும் ஓர் நீண்ட அறிவுரைப் பட்டியல் வாசித்து, மகளை வழியனுப்பினர்.

''எல்லோரும்... எங்க வீட்டுக்குக் கண்டிப்பா வரணும்'' என்று வீட்டரசியாய் அழைப்பு வைத்துவிட்டு, புகுந்த வீடு நோக்கிப் பயணப்பட்டாள் சிகப்பி.

இரவு எட்டு மணியளவில் கோட்டையூர் வீட்டை அடைந்தவர்களை, ஆலம் சுற்றி உள்ளே அழைத்துச் சென்றார் மெய்யம்மை ஆச்சி.

''என்னடி இது? மாப்பிள்ளை வந்ததும் வராததுமா... அவரைத் திரும்பவும் இழுத்தடிக்கிற? நாளைக்குப் போகலாம்.... சிகப்பி. இல்லைன்னா சாயந்திரமாவாவது கிளம்புங்க...'' என்றார் கண்டிப்புடன்.

''இல்லைம்மா... இப்போ கிளம்பினா தான் ராத்திரிக்குள்ள கோட்டையூர் போக முடியும். அப்போ தான்... தூங்கி எழுந்து நாளைக்கு ஃப்ரிஷ்ஷா இருக்கும்... இப்பவே கிளம்புறோம். அப்புறம், உங்க மாப்பிள்ளை வண்டி ஓட்டப் போறதில்லை... நம்ம சண்முகம் அண்ணனைக் கூட்டிட்டுப் போறோம்... அதனால, உங்க மாப்பிள்ளை நல்லா தூங்கிட்டே வரலாம்.'' என்று முடித்துவிட்டாள் சிகப்பி.

பெண்ணின் குரலிலிருந்த பிடிவாதத்தால், அவள் கிளம்புவதற்கான வேலைகளைப் பார்க்கத் துவங்கினார்கள் அனைவரும்.

ஏற்கனவே, ஹாலில் குவிக்கப்பட்டிருந்த சாமான்களைப் பார்த்துவிட்டு, ''சக்தி... எதுக்கும் ஒரு தடவை வீட்டை சுத்திப் பார்த்துக்கோடா... எனக்கென்னமோ இவ உங்க வீட்டையே காலி பண்ணி, பெட்டிப் படுக்கை கட்டிட்ட மாதிரி இருக்கு!'' என்று மச்சினனிடம் கூறிக் கண் சிமிட்டியிருந்தான், கண்ணன்.

அவனும் ''ஆமா... அத்தான். வீட்டிலிருந்த ஒரு ஃபிரிட்ஜு, ரெண்டு கட்டில், மூணு பீரோ, நாலு சோபா....அப்புறம் வாசல் பக்கம் போட்டிருந்த டோர் மாட் உட்பட பல பொருட்களைக் காணோம்.... பேசாம... பத்மநாபசாமி கோவில்-ல சோதனை போட்ட ஆளுங்களைக் கூப்பிட்டு, சிகப்பியோட பாக் எல்லாத்தையும் செக் பண்ண சொல்ல வேண்டியதுதான். பெரும்

உணவும், உறக்கமும் அதிகப் பேச்சின்றி கழிய, அடுத்த நாள் அதிவேகமாய் மலர்ந்தது.

எல்லா நாட்களையும் போல் அன்றைய தினமும் கழிவது போலிருந்தாலும், கண்ணனுக்கு மனைவி வீட்டினுள்... தன்னறையினுள் அழகோவியமாய் வளையவருவதே பெருத்த சந்தோஷத்தைக் கொடுத்தது!

திருமணத்திற்கு முன்னர் தனியாக வசித்த அறை தான் என்றாலும், சிகப்பி வந்ததிலிருந்து அவளது வாசத்தை சுமந்து நின்ற அறை, கடந்த சில நாட்களாய் களையிழந்து காட்சி அளித்துக் கொண்டிருந்தது கண்ணனுக்கு.

அவளது தலையணை.... அவள் படுத்திருக்கும் கட்டிலின் மறுபுறம்... அவள் போர்த்தியிருந்த போர்வை.... அவள் சூடியிருக்கும் ஜாதி மலரின் வாசனை... தூக்கத்தில் தன் மேல் அவள் போட்டிருக்கும் கரம்... அவள் அவிழ்த்துப் போடும் சேலை.... மாற்றிக் கொள்ளும் நைட்டி... அவள் கொடுத்த பால் டம்பளர்.... அவள் உண்ட மிச்ச ஆப்பிள்.. என்று பலவற்றையும் தொலைத்தது போலிருந்த கண்ணனுக்கு, இன்று அவளது வருகை பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது.

அந்த சந்தோசத்தை மேலும் கூட்டும் வண்ணம், ஆண்கள் அனைவரும் உணவுண்டு கொண்டிருக்கும் போது, அங்கே ஓர் பெட்டியுடன் வந்தாள் சிகப்பி.

உணவு பரிமாறிக் கொண்டிருந்த மெய்யம்மை ஆச்சியின் கைகளைப் பற்றி, உணவு மேசையை விட்டு சற்றே விளக்கி நிறுத்தியவள், ''பிறந்த நாள் வாழ்த்துக்கள், ஆயா!'' எனக் கூறி, அவரது கைகளில் தான் வைத்திருந்த நகைப் பெட்டியைத் திணித்தாள்.

மெய்யம்மை ஆச்சி உட்பட அனைவரும் திகைப்பில் இருக்க, அவரது கால்களில் விழுந்த சிகப்பியைக் கண்டதும் முதலில் சுதாரித்தவர் கண்ணனின் அய்யா தான்.

''மெய்யம்ம.... நல்ல வார்த்தை சொல்லி... புள்ளைய ஆசீர்வாதம் பண்ணு. காலில விழுந்திருக்குப் பாரு...'' என்றவரின் வார்த்தைகளைத் தொடர்ந்து,

''பூவும் பொட்டுமா....நூறு வருஷத்துக்கு நல்லா இருக்கணும்டா ராசாத்தி!'' எனக் கூறி, அவளைத் தூக்கி அணைத்துக் கொண்டார் மெய்யம்மை ஆச்சி.

தொடர்ந்து ''அடியே.... என் ராசாத்தி! எம் பொறந்தநாள் உனக்கு எப்படி தெரியும்? உங்க அய்யாவுக்குக் கூட சரியா தெரியாதே?'' என அவர் வியக்க,

''தேவி அண்ணி வீட்டில, உங்க எல்லோரோட ஜாதகமும் இருந்ததா.... அதில பார்த்தேன்!'' என்ற சிகப்பி,

''நட்சத்திரப்படி..... இன்னைக்குத் தான் உங்க பிறந்தநாள்... அதான், நேத்தே அம்மா வீட்டிலிருந்து கிளம்பி வந்துட்டேன். நேத்து நைட் கிளம்பினாலும்.... இன்னைக்கு காலையில வர லேட் ஆகிடுச்சுன்னா.... அதான், உங்க பேரனைப் படுத்தி எடுத்து, நேத்தே வந்துட்டேனே'' என்றாள் கணவனிடம் பார்வையை வைத்துக் கொண்டே.

கணவனுக்கு விளக்கம் கொடுத்தது போலும் ஆயிற்று, ஆயாவை ஐஸ் வைத்தது போலும் ஆயிற்று! ஒரே கல்லில் இரு மாங்காய்களை அலுங்காமல் குலுங்காமல் தட்டினாள், அப்பெண்ணரசி!

''என்னது?'' என்று எல்லோரும் வியக்க,

''ஆமா... நான் படிச்சது நகை டிசைன்னிங் பத்தி தானே? சோ... இது நான் போட்ட டிசைன் தான்... ஆசாரி கிட்ட கொடுத்து தங்கத்தில பண்ணச் சொன்னேன்'' என்ற சிகப்பிக்கு ஓர் பாராட்டு விழாவே அரங்கேறியது.

முடிவில், சிகப்பியின் கன்னம் வலித்துக் கொஞ்சி ''அடுத்தப் பொறந்தநாளுக்கு.... என் கொள்ளுப் பேரன் என் கையில தவக்கணும். அது தான் இருக்கிறதிலேயே பெரிய பரிசு'' என்றார் மெய்யம்மை ஆச்சி, வாஞ்சை யாக.

''ஆஹா.... இப்போது தான், மனமும் உடலும் சரியாகி வந்திருக்கிறாள். திரும்பவும் ஆரம்பிக்கிறார்களே?!'' என்று பீதிக்கு ஆளாகிய கண்ணன், பதட்டத்துடன் மனைவியின் முகம் பார்த்தான்.

அவனது முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவளும், அவனது கண்களைச் சந்தித்ததும் சின்னதாய் கண் சிமிட்டிவிட்டு, ''கண்டிப்பா ஆயா! அடுத்த வருஷம்.... உங்க கொள்ளுப் பேரன் வந்து... நீங்க வச்சிருக்க சாமானையெல்லாம் உருட்டு....உருட்டுன்னு உருட்டி.... உங்களையும் ஐயாவையும் அவன் பின்னாடி ஓட வச்சு....அவங்க ஐயாவை(அதாவது கண்ணனின் தந்தையை) தூக்கச் சொல்லிப் படுத்தி.... அவங்க அப்பாவை ஹாஸ்பிடல் போக விடாம படுத்தி.... எல்லாம் பண்ணப் போறான் பாருங்க!'' என்றாள் சிகப்பி, சந்தோஷமும் உறுதியுமாக.

அப்பத்தாவின் ''கொள்ளுப் பேரன்'' பேச்சு அவளை மீண்டும் கோபத்திற்கு ஆளாக்கும் என்று அவன்

''அப்படியா? எனக்காக வந்தியா...'' என்று சந் தோஷித்த மெய்யம்மை ஆச்சி,

''பார்த்தீகளா ங்கிறேன்... இம்புட்டு வருஷமா நீங்க கூட நினைவு வச்சுக்காத என் பொறந்தநாளை... எம் பேத்தி ஞாபகம் வச்சிருக்கா...'' என்று தன் கணவரையும் குறை கூறி, மகிழ்ந்தார்.

அவரது மலர்ந்த முகத்திலிருந்த சந்தோசம் மனதை நிறைக்க, ''நான் கொடுத்த பரிசைத் திறந்து பாருங்க... ஆயா! உங்களுக்குப் பிடிச்சிருக்கான்னு சொல்லுங்க...'' என்றாள் ஆர்வத்துடன்.

''நீ கொடுத்ததே என் மனசை நிறைப்பிடுச்சு, ராசாத்தி! அதனால.... அது என்னவா இருந்தாலும் எனக்குப் பிடிக்கும்'' என்றவாறே, அதைப் பிரித்தவர் அசந்து போனார். ஏனென்றால், அங்கே இருந்தது ஓர் தங்க வளையல்!

அதன் நேர்த்தியான வெளிப்பாடை... நாகரீகம் என்றும் ரகம் பிரிக்க முடியாமல், பழைய கால டிசைன் என்றும் ஒதுக்க முடியாமல், மிக அழகாய் இருந்தது அதன் வடிவமைப்பு.

சிகப்பியின் எதிர்பார்ப்பு நிறைந்த முகத்தை மெல்ல வருடியவர், ''ரொம்ப அழகா இருக்குத்தா...'' என்றார்.

''நிஜமா?!'' என அவள் ஒரு விரல் நீட்ட,

''அதில உனக்கென்ன சந்தேகம்.... பார்த்துப் பார்த்து வாங்கியிருப்பேன்னு நினைக்கிறேன்... ரொம்ப நேர்த் தியா இருக்குது'' என்றார் அவர் அழுத்தமாய்.

''பார்த்துப் பார்த்து வாங்கலை.... ஆயா! பார்த்து பார்த்து டிசைன் பண்ணினேன்!'' என்றாள் சிகப்பி, பெருமையாக.

எண்ணியிருக்க, அவளோ அதை சந்தோஷமாய் எடுத்துக் கொண்டது, கண்ணனின் மனதிலிருந்த சிறு உறுத் தலையும் துணி கொண்டு துடைத்தெறிந்தது.

கவலைகள் இல்லா நெஞ்சம் சிறகின்றி பறக்க, மனைவியுடன் ஏற்படும் தனிமைக்காக ஏங்கியபடி மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றான், அந்த அன்புக் கணவன்.

சிகப்பி தனக்கு நகை பரிசளித்த விஷயத்தை, தன் பேத்திகள் இருவருக்கும் போன் செய்து சொல்லியவர், சிகப்பியின் தாய் வீட்டிலும் இந்நற்செய்தியைக் கூற மறக்கவில்லை.

சிகப்பியின் அப்பத்தாவிடம் பேசிவிட்டு வைத்தவர், ''உன் அப்பத்தா... ஆத்தா... எல்லாருக்கும் இது போல் செஞ்சு கொடுத்திருக்கியா ஆத்தா? ரொம்பவும் சந்தோஷப்பட்டிருப்பாங்களே?!'' என்றார் சிகப்பியிடம்.

''தங்கள் வீட்டுப் பெண், தங்களுக்குக் கொடுக்காமல், புகுந்த வீட்டு உறவுக்குக் கொடுத்திருக்கிறாளே'' என்ற சிறு சங்கடம் கூட அவர்கட்கு இருக்கக் கூடாது என்ற அவரது எண்ணத்தை, சரியான கோணத்திலேயே புரிந்து கொண்ட சிகப்பி,

''அப்பத்தாவுக்கு அவங்க பர்த்டே அப்போ செஞ்சு கொடுத்தேன்... ஆயா! அம்மாக்கும் அப்பாக்கும் அவங்க கல்யாண நாளுக்கு ஒரு நகை செட் கிப்ட் பண்ணி னேன்....'' என்று கூறிய சிகப்பி,

''இதுக்கெல்லாம் இவளுக்கு ஏது காசுன்னு தானே யோசிக்கிறீங்க? சரியான ''ஆச்சி'' மூளை!'' என்று அவர் எண்ணவே செய்யாத ஒரு கேள்வியை இவளே எழுப்பி,

''எல்லாம்... செட்டியாருங்க பணம் தான்! முன்னாடி.... அப்பா! இப்போ.... உங்க பேரன்!'' என்று விஷமமாய் சிமிட்டினாள் பேத்தி.

இது நாள் வரை, தன்னிடம் பேசக் கூடத் தயக்கம் காட்டிக் கொண்டிருந்த வீட்டு மருமகள், தற்போது செய்யும் குறும்பில் அந்தப் பெரியவர் லயிக்கவே செய்தார். கொள்ளுப் பேரன் வருவதற்கு முன்னரே, வீட் டில் குதூகலம் நிரம்பி வழிவது போன்ற ஓர் சந்தோஷம்!

இதே சந்தோஷத்தை, மாலையில் வீடு திரும்பிய பேரனிடமும் அவர் பகிர்ந்து கொள்ள, அவனுக்கும் மனம் நிறைந்தது.

துள்ளிய மனதுடன் மனைவியின் வரவிற்காக அவன் காத்திருக்க, மனையாளும் அதே துள்ளலுடன் அவனிடம் சரண் புகுந்தாள்.

''அப்பத்தாவை இவ்வளவு சந்தோஷமா நான் பார்த்ததே இல்லை... சிகப்பிமா!''

''ஹம்ம்.''

''ஒரு லாரி ஐஸைத் தூக்கி ஒரேடியா வச்சுட்டே... போல! அது வடியவே வருஷக் கணக்கு ஆகும் போலவே!''

சட்டென தலை சிலுப்பி, அவனிடமிருந்து வில கியவள் ''ஐஸா? நான் எதுக்கு ஐஸ் வைக்கணும்? எங்க அப்பத்தா மாதிரி தானே அவங்களும்... அவங்களோட எப்படி இருப்பேனோ அப்படித் தான் இருக்கேன்'' என்றாள் ரோசத்துடன்.

''ஓகே...ஓகே... அதை விடு! நம்ம பிரச்சனைக்கு வா... உங்க ஆயாவுக்கு மட்டும் தான் கிப்ட் கொடுப்பியா? எனக்கில்லையா?'' - தன் விஷயத்திற்குத் தாவினான் கணவன்.

''உங்களுக்கு எதுக்கு? ஆயாவுக்கு பர்த்டே.... சோ அவங்களுக்கு கிப்ட்! உங்களுக்கு இன்னைக்கா பர்த்டே.... கிப்ட் கொடுக்கிறதுக்கு? உங்க பர்த்டே வரும் போது..... பாப்போம்..'' என்று அலட்சியமாய் பேச முயன்றாள் சிகப்பி.

''ரொம்ப நடிக்காதேடி.... நீ எனக்கு கிப்ட் வாங்கியிருக்கேன்னு தெரியும்... அதுக்குத் தான் நீயும் சக்தியும் அடிச்சுக்கிட்டீங்கன்னும் தெரியும்.... சும்மா பிகு பண்ணாம கொடுப்பியா...'' என்று அவன் சீண்ட,

''அது..... உங்களுக்கு வாங்கின கிப்ட்ன்னு யாரு சொன்னா? அதெல்லாம் இல்லை!''

''எனக்குத் தெரியும்! மரியாதையா கொடு... சரி விடு... நானே எடுத்துக்கிறேன்...'' என்றவன், அவளது கைப்பையைக் குடைய,

''ஹே.... இருங்க இருங்க .....நானே எடுத்துத் தரேன். சரியான அடாவடி டாக்டர்!'' என்று செல்லமாய் சலித்துக் கொண்டவள், தான் வாங்கியிருந்த உயர் ரக வாட்ச் ஒன்றை கணவனின் கைகளில் கட்டிவிட்டு, அவனது மணிக்கட்டில் முத்தமிட்டாள்.

அந்த நேரம், மணி பத்தை நெருங்க, '''someone is missing you'' என்ற ராகம் அதிலிருந்து வந்தது.

கடிகாரத்திலிருந்த எண்கள் ஒவ்வொன்றிலும், ''சிகப்பி கருப்பையா'' என்ற பெயர்கள் ஆங்கிலத்தில், மிக சின்ன எழுத்துக்களாய் பொறிக்கப்பட்டிருந்தது.

கடிகாரத்தின் நடுவே, ஓர் மிகச் சிறிய புகைப்படம் ஒன்றிருக்க, அதை கூர்ந்து பார்த்தான் கண்ணன், சிகப்பியும் கருப்பையாவும் கன்னத்தோடு கன்னம் வைத்திருக்கும் படம் ஒன்று, ஓர் பெரிய.... சிவந்த தக் காளியின் நடுவே மின்னியது!

''ஹே....சூப்பர்!'' என்று வியந்தவன், ''எப்படி செய்தே?'' என்றான் அதே வியப்புடன்.

''கஸ்டமைசடு வாட்ச் டிசைன்னிங் சென்டர் இருக்கு... அங்க தான்! உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்றாள் மனைவியும், சந்தோஷத்துடன்.

''ரொம்ப ரொம்ப ரொம்ப'' என்றவன், தன் சந்தோஷத் தின் அளவை அன்றைய இரவு முழுதும் மனைவியிடம் காட்டி,அவளைத் திணறடித்து மகிழ்வித்தான்.

அந்த சந்தோஷம் பன்மடங்காய் மாறி அனைவரை யும் சந்தோஷத்தில் ஆழ்த்தும் வகையில், சிகப்பியிடம் மிக நல்ல மாற்றங்கள் தெரிந்தன.

முன்னர் போல், கண்ணன் மருத்துவமனைக்குக் கிளம்பிச் சென்றதும் அறைக்குள் அடைந்து கொள்ளா மல், மெய்யம்மை ஆச்சியை வால் பிடித்துக்கொண்டு, வீட்டை வளைய வந்தாள்.

கண்ணன் வர நேரமாகும் என்று தெரிந்ததால், அப்பத்தாவை அழைத்துக் கொண்டு,அருகிலிருக்கும் கோவில்களுக்குச் சென்று வந்தாள்.

சமையலுக்கு ஆள் இருந்த போதும், அப்பத்தாவிடம் பக்குவம் கேட்டுக் கொண்டு, சில பதார்த்தங்களை முயன்று பார்த்தாள், அவற்றுள் பலதுமிக கொடுமையாக

வந்தபோது, மெய்யம்மை ஆச்சியின் உந்துதலால் மீண்டும் மீண்டும் செய்து பழகிக்கொண்டாள்.

அவள் அப்பத்தாவின் மனநிலைக்கு ஏற்ப மாறிய தோடு அல்லாமல் அவரையும் தன் அலைவரிசைக்கு மாற்ற முயற்சி செய்தாள்.

மனதை உறுத்தாத சிறு சிறு கிண்டல்களால் அவரிடம் வம்புசெய்தவள், அவரை அழைத்துக் கொண்டு சினிமாவிற்குச் செல்லும் அளவிற்கு அவர்களது நெருக்கம் பலப்பட்டது.

''அப்பத்தாவோடவா? சினிமாவுக்கா?'' என்று கண்ணன் வாய் பிளக்க,

''நீங்க .... இந்த வாரம் முழுசும் எட்டு மணிக்குத் தானே வருவேன்னு சொன்னீங்க? வந்ததும் குப்பறப்படுத்து தூங்கிடுறீங்க? எனக்கு போர் அடிக்காதா? அதான்... அப்பத்தாவும் நானும் படத்துக்குப் போறோம்!'' என்றவள், மாதம் ஒரு முறை அப்பத்தாவுடன் படத்திற்குச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டாள்.

மெய்யம்மை ஆச்சியுடன் மட்டுமல்லாமல், தன் ஐயாவுடனும் அவள் நல்லபடியாக பேசிப் பழகுகிறாள் என்பதை ஒரு நாள் சீக்கிரம் வீடு திரும்பிய கண்ணன் கண்டறிந்தான்.

ஐயாவின் ஏ.சி சேர் அருகே அமர்ந்திருந்தவள், இலக்கியப் புத்தகம் ஒன்றை வைத்துக் கொண்டு, அவரிடம் மிக தீவிரமாய் விவாதித்துக் கொண்டிருக்க, கண்ணனும் அங்கே அமர்ந்தான்.

சிகப்பி தீவிரமான முகபாவத்துடன் எதையோ பேசிக் கொண்டிருக்க, கருப்பையா செட்டியார் சட்டென வாய் விட்டுச் சிரித்தார்.

கண்ணன் புரியாமல் பார்த்துக் கொண்டிருக்க, சிகப்பி ஓர் நமட்டுச் சிரிப்புடன் அமர்ந்திருந்தாள்.

''முழு புஸ்தகத்தையும் படிச்சவ மாதிரி.... உம் பொண்டாட்டி பேசுற பேச்சிருக்கே?'' என்றவர்,

''ஏன்த்தா.... கடைசி பத்து பக்கம் படிச்சியா? இல்லை அதுவுமில்லையா? ரெண்டு தான் படிச்சியோ?'' என்றார் சிகப்பியிடம் திரும்பி.

''எவ்வ்வ்வ்வ்வ்வளவு சீக்கிரம் கண்டுபிடிச்சுட்டீங்க? ஜகஜால கில்லாடி தான் போங்க!'' என்று வாய் பொத்திச் சிரித்தாள், சின்னவள்.

அவள் செய்த கேலியைத் தப்பாக எடுத்துக் கொள்ளாமல் ''கில்லாடியா இல்லாட்டினா.... உங்க ஆயாளோட செக்குத் தள்ள முடியுமா?'' என்றார் அவரும் கேலியாகவே.

''இந்த கில்லாடி தனத்தோட தள்ளியிருந்தா.... செக்கு எப்பவோ சுண்ணாம்பு ஆகியிருக்கும். அப்படி ஆக விடாம காத்தது எங்க ஆயாவோட சாமர்த்தியமாக்கும்...'' என்று அதற்கும் அவரைக் கேலி செய்தவள், ஆயாவைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

அதற்குப் பதிலாய், அங்கே சிரிப்பே நிறையப் பெற்றது! சிரித்தப் பெருந்தலைகளுள் கண்ணனின் தந்தையும் அடங்கியிருக்க, அவரையும்தன் மனையாள் வசப்படுத்திவிட்டாள் என்ற சந்தோஷத்தில் அக மகிழ்ந்து போனான் கண்ணன்.

வெறுமே வம்பு தும்புமாய் இல்லாமல், தன் மனையாள் உருப்படியான ஒரு வேலை செய்திருக்கிறாள் என்பதும் அவனுக்கு சில நாட்களில் புலப்பட்டது.

ஓர் நாள் இரவு, ''உங்ககிட்ட ஒண்ணு கேட்கணும்...'' என்ற புதிருடன் அவன் மார்பில் படுத்துக் கொண்டாள் சிகப்பி.

தன் மேல் படர்ந்திருந்தவளின் தலையை மென்மையாய் வருடிக் கொடுத்தவன், ''என்னடா?'' எனவும்

''எனக்கு வீட்டில ரொம்ப போர் அடிக்குதுப்பா.... என்னதான் அப்பத்தாவோட சுத்தி வந்தாலும், பெருசா எதுவுமே வேலை இல்லை... அதனால....''

''அதனால... ஹாஸ்பிடல் வரேன்னு திருப்பி ஆரம்பிக்கக் கூடாது, சிகப்பிம்மா.''

''அய்யே, உங்க டெட்டால் நாத்தம் பிடிச்ச ஆஸ்பத்திரிக்கு யாரு வருவா? மத்தியானம் சாப்பாடு கொண்டு வரதே பெரிய்ய்ய்ய விஷயம்...'' - கழுத்தை ஒடித்த வளை வலிக்காது ஓர் அடி வைத்துவிட்டு, அவள் பேசுவதற்காக காத்திருந்தான் கணவன்.

''இன்னைக்கு மாமா தான் சொன்னாங்க... நீ தான் ஜூவல்லரி டிசைன் படிச்சிருக்கியேமா... நமக்குத் தெரிஞ்ச ஸ்வர் வியாபாரிகிட்ட அதையெல்லாம் காட்டி, அவரோட வேலை பார்க்க ஒப்பந்தம் போடலாம்.... உனக்கும் ஒரு வருமானம் வந்த மாதிரி இருக்கும்... வீட்டில போர் அடிச்சிட்டு இல்லாமலும் இருக்கும்ன்னு சொன்னாங்க'' - என்று தன் மாமனாரின் கருத்தை எடுத்துரைத்தாள்.

''நல்ல ஐடியா தான்! அப்பத்தாகிட்ட சொல்லிட்டியா?''

''ஹோ! சொல்லியாச்சே! அப்பத்தா கூட.... உன் நகை டிசைன் எல்லாருக்கும் பிடிச்ச மாதிரி இருந்தா, பெரிய அளவில நாமளே நகை செய்ற ஆட்களை வேலைக்கு எடுத்து, நகை செய்து கொடுக்கலாம்ன்னு சொன்னாங்க....''

''ஆஹா! அப்பத்தா..... பெரிய லெவல்-ல யோசிக்கிறாங்களே!''

''உங்களுக்கு என் பொறாமை?'' என்று அவனது தாடையில் ஒங்கி ஓர் குத்து விட்டவள்,

''என்ன செய்யட்டுமா?'' என்றாள் கடமை மனைவியாய்.

''இந்த குத்துக்கு அப்புறமும்... நான் வேணாம்ன்னு சொல்லிட்டு, இங்க படுத்திருக்க முடியுமா? அடி பின்னி எடுத்திட மாட்டே?'' என்று பயந்தவன் போல் நடித்தவன்,

சட்டென அதை விடுத்து ''உனக்கு மனசுக்குப் பிடிச்சிருந்தா.... நல்லா பண்ணு! என்னால முடிஞ்சா உதவியை நான் செய்றேன்!'' என்று நல்ல கணவனாய் உறுதி கொடுத்தான், கண்ணன்.

தனக்கு மட்டுமல்லாது புகுந்த வீட்டினருக்கும் பிடித்த வேலையைச் செய்வதால், சிகப்பியும் மிகுந்த ஈடுபாட்டுடன் செய்ய, தொழிலும் மெல்ல மெல்ல என்றாலும் ஓரளவிற்கு கூடு பிடிக்க ஆரம்பித்தது.

சிகப்பி மெல்ல மெல்ல... தன் குழந்தை உள்ளத்திலிருந்து விடுபட்டு குமரியாய்... மனைவியாய்....

மருமகளாய்... பேத்தியாய்.... குடும்பத் தலைவியாய்..... தொழில் வித்தகியாய்... தன்னை நிலைநிறுத்திக் கொண்டாள்!

அவளது குறும்பும் கேலியும் தொடர்ந்த போதும், அதில் சிறு பிள்ளைத் தனம் தூர எறியப்பட்டு, இறைவன் தனக்கென கொடுத்த வாழ்க்கையை முதிர்ச்சியுடன் கூடிய குதூகலத்துடன் எதிர்கொள்ளும் பக்குவம் கை சேர்ந்தது!

தொழில் வாழ்வில் மெல்ல உதிக்கத் தொடங்கிய சூரியன், சொந்த வாழ்வில் மிக வேகமாய் உதித்தான்! ஆம், திருமணம் முடிந்த ஆறே மாதத்தில் சிகப்பியின் வயிற்றில் சின்னக் கண்ணன்.... அவர்களது செல்வப் புதல்வன் உதித்து விட்டிருந்தான்!

தாய் வீட்டு உறவுகளும், கணவன் பக்கத்துக்கு சொந்தங்களும் அவளைத் தங்கத் தட்டில் தாங்க, அந்தப் பூ மலர் தனக்கு விதித்த பாதையை... முள் பாதையாய் எண்ணாமல் பொன் பாதையாய் எண்ணி வெற்றி நடைபோட்டாள்!!